பரமசிவன் பள்ளிவாழ்க்கை

227

O-,3NVBI,P
N52
104517
25 JUL 1952

றுமை ஆபீஸ்

227
3-52

பரமசிவன் : :

: பள்ளி வாழ்க்கை

ஆசிரியர்: எம். இ. வீரபாகு பிள்ளை பி. ஏ. எல். டி.

★

ஒற்றுமை ஆபீஸ்:

தியாகராயநகர், மதராஸ்-17.

காப்பிரைட்] 1952 [விலை ரூ. 3·

முன்னுரை

'பரமசிவன் பள்ளி வாழ்க்கை' என்னும் பெயரிய இப்புத்தகம், எளிய குடும்ப வாழ்க்கையில் வறுமை நோயால் துன்புற்ற, வாய்மையும், ஒழுக்கமும், உழைப்பும் பெற்ற ஒரு வேளாளன், தன் ஒரே மகன் மீது காட்டிய தனி அன்பையும், அவனுக்குக் கல்வி அளித்த மனவுறுதி யையும் விளக்கும். ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த ஓர் உத்தம புத்திரனுக்கு, தலை சிறந்த செல்வமும், சிறப்பும், புகழும், அவன் உண்மை உழைப்பாலும், பெற்றோர் பால் கொண்ட பேரன்பாலும், மனத்தூய்மையாலும் வருமென் பதை தெளிவுபடுத்தும். சர்வகலாசாலைப் பட்டங்கள் பெறா விட்டாலும் ஒருவன் தன் ஊக்கத்தாலும், உழைப்பினாலும், சுய முயற்சியாலும், சுய படிப்பாலும் பெருஞ் செல்வத்தை யும் உயர்ந்த நிலைமையையும் பெறக்கூடும் என்பதை ருசுப் படுத்தும். ஒரு மாணவன் படிக்குங்காலத்தில் எவ்வாறு தீய நட்பினால் துன்பம் அடைகின்றானென்றும் தன் ஆசிரியர்கள் சொற்படி கல்வியைக் கல்லாமையால் அவன் அடையும் கஷ்டங்கள் என்னவென்றும் கூறும். இப்புத்த கத்தில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனைப் பெயர்களே. இச்சிறு புத்தகத்தை பொதுவாக எல்லா மக்களும் முக்கியமாக மாணவர்களும் வாங்கி வாசித்து இன்புறுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
எம். இ. வீரபாகு.

பரமசிவன்
பள்ளி வாழ்க்கை

அதிகாரம் ஒன்று

பரமசிவன் அரிபுறமென்னும் கிராமத்திலுள்ள பாடசாலையில் ஒரு சிறந்த மாணவன். அரிபுறம் மிகவும் சிறிய கிராமம். அங்கு நியமிக்கப்பட்ட ஏழாவது வகுப்பு வரையிலுள்ள பாடசாலையே அதனை அணிபெறச் செய்தது. இயற்கை அழகுகள் அக்கிராமத்தின்கண் பல இருந்தாலும், அதன் அருகில் தெளிந்த நீர் ஓட்டம் உள்ள ஓர் சிறிய நதியின் இயற்கை அழகுதான் சாலச் சிறந்தது. நதிக்கரையின் மீது அப்பாடசாலை அமைக்கப்பட்டு இருந்தது மாணவர்களுக்குத் தனிக்களிப்பை அளித்தது.

பரமசிவன் தாய் தந்தையர் மிகுந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள்; இருப்பினும், அவர்கள் உயர்ந்த மனப்பான்மையும் வாய்மையும் ஒளிபெறப் பெற்றுச் சிறந்து வாழ்ந்தனர். வறுமைப்பிணியால் அவர்களுக்கு நல்ல உணவு, உடை, நகைகள் வாங்கப் போதிய வருவாய் இல்லை. பரமசிவன் தந்தைக்கு ஒரு ஏக்கரா நிலமும் ஒரு சிறு தென்னஞ்சோலையுமே இருந்தன. அவர் அவற்றைக் கொண்டு, கடினமாக வேலை செய்து தம் இல்லற வாழ்க்கையை நடாத்தி வந்தனர்.

பரமசிவன் தந்தையின்பெயர் பரஞ்சோதி. அவர் தினந்தோறும் விடியற்காலையில் எழுந்து கடவுளை வணங்கித் தமது நிலத்துக்கு நீர்பாய்ச்சிப் பயிர் செய்து வந்தனர். தென்னஞ் சோலைக்குத் தண்ணீர் பாய்ச்சும் கடினமான தொழிலையும் அவர் தவறாமல் செய்து வந்தனர். எளிய வாழ்க்கையாக இருப்பினும், அவர் தம் மனத்திற்கு ஏற்ற அருமை மனைவியை இல்லறத்துணைவியாகப் பெற்றமையால், அவர் வாழ்க்கை மாட்சிமை பெற்று விளங்கிற்று. பரஞ்சோதி தம் புண்ணியத்தின் பயனாக ஒரு புதல்வனையும் ஒரு புதல்வியையும் தம் மனைமாட்சிக்கு அணிகலன்களாகப் பெற்றனர். அவர்கள் இருவரும் இளவயதிலேயே ஒற்றுமை நலனும் இணையில்லா அன்பும் பெற்று இனிது வளர்ந்து வந்தனர். சகோதர மாட்சிமை அவர்களிடத்தில் சிறந்த ஒளியுடன் விளங்கியது.

பரமசிவன் பள்ளி வாழ்க்கை அவன் தாய் தந்தையர்க்கு அளவில்லா மகிழ்ச்சியை ஊட்டிற்று. ஏனெனில் அவனே எல்லா வகுப்புகளிலும் முதன்மை பெற்று, இணையில்லா மாணிக்கமென ஆசிரியர்களால் புகழப்பெற்று, மாணவர்களுக்குள் ஒரு தீபம்போல் சிறந்து வந்தான். பரமசிவன் அத்தகைய சிறப்புடன் கல்வி வளம்பெற்று, ஏழாவது வகுப்பை அடைந்தான். அவன் அவ்வகுப்பின் பரீட்சையில் முதன்மை பெற்றுத் தலைமையாசிரியரால் சிறப்பிக்கப் பெற்றான். அதற்குமேல் வகுப்பு அப்பாடசாலையில் இல்லாமையால், அவனுக்கு உயர்ந்த கல்வி அடைய அவ்வூரில் வழியில்லை. அவன் தலைமை

யாசிரியர் சங்கரய்யர் அவன் விஷயத்தில் மிகுந்த ஊக்கம் கொண்டவர். அவர் எப்படியும் அவன் உயர்ந்த கல்வியை அடைதல்தான் நல மென்று அவனிடம் கூறி, அவனைப் பத்தாவது (Matriculation) வகுப்புவரையில் அம்பை நகரில் வாசிக்கும்படி வற்புறுத்தினர். அவன் பத்தாவது வகுப்புப் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைவானென்றும் அதன் பின்னர் அவன் உயர்ந்த உத்தியோகத்தை அடைவானென்றும் கூறி அவனுக்கு உற்சாகம் அளித்தனர். அவன் தந்தைக்கும் அவ்விஷயத்தைச் சொல்லுமாறு அவர் அவனுக்குக் கட்டளையிட்டனர். பரமசிவனும் தன் தலைமையாசிரியர் சொல்லை முற்றிலும் நம்பித் தன் தாய் தந்தையரைத் தனக்கு உயர்ந்த கல்வி அளிக்குமாறு வேண்டிக்கொண்டான்.

பரஞ்சோதி தம் மைந்தன் சொல்லைக் கேட்டு மனம் தடுமாற்றமெய்தினர். ஏனெனில், அவர் தன் மைந்தனைத் தன் எளிய நிலையில் அத்துணை தூரம் கல்வி தந்ததே மிகவும் அரிய செயலாகும். அத்துணைக்கல்விக்கே அவர் பிற நலன்களை இழக்க வேண்டியிருந்தது; தம் மனைவியும், செல்வ மகளும், அருமை மகனும் அற்ப உணவை அருந்தவேண்டி இருந்தது. இன்னும் அதற்குமேல் கல்வி அளிப்பதென்றால், பரஞ்சோதிக்குச் சாத்தியமான காரியமாகத்தோன்றவில்லை.

எவ்வளவு இடையூறுகள் இருந்தாலும், தம்மைந்தன் விருப்பத்தின்படியே பத்தாவது வகுப்புவரையில் அவனைப் படிக்கவைக்கவேண்டும் என்ற அவா

அவருக்கு உண்டாய் விட்டது. பரமசிவனுக்கும் தன் தலைமையாசிரியர் சொற்படியே இன்னும் உயர்ந்த கல்வியைப் பெறவேண்டு மென்ற ஆசை உரமாக உண்டாய் விட்டது. அவன் அன்னைக்கும் தன் மைந்தன் கல்வி மாட்சிமையில் தனி விருப்பம் பிறந்து விட்டது. அவன் தங்கை பார்வதிக்கும் தன் தமையன் உயர்ந்த கல்வியைப் பெறவேண்டுமென்ற ஆசை உதித்து விட்டது.

பரமசிவன் மனம் கல்வியில் மாட்சிமை பெறுவது தன் தாய் தந்தையர்க்கும் தன் தங்கைக்கும் பெரும் பயனை அளிக்குமென்று தோன்றிற்று. அவன் தன் நலத்தைக் காட்டிலும் அவர்கள் நலத்தையே அதிகமாகக் கருதினன். அதன் மேற்சொல்லிய பரீட்சையில் தேர்ச்சி அடைந்து, துரைத்தனத்தில் ஓர் உத்தியோகம் பெற்ருல், தன் தந்தையின் கடினமான வேலையும், தன் அன்னையின் பொருட் கவலையும், தன் தங்கையின் கடினமான பணியும் நீங்குமென எண்ணினன். அவன் தங்கை பார்வதி அடுத்த வீட்டில் ஓர் செல்வந்தன் மகளுக்குப் பணி செய்து, சிறு பொருள் பெற்றும் குடும்ப வாழ்க்கைக்கு உதவிபுரிந்தனள். பரமசிவன் தான் பரீட்சையில் தேர்ந்து, தன் தாய் தந்தையரை மகிழ்வித்துத் தன் தந்தைக்கு நல்ல ஆடையும், தன் அன்னைக்கு நல்ல சேலையும், தன் தங்கைக்கு நல்ல ஆபரணமும் அளித்து, அவர்கள் மகிழ்ச்சியைத் தன் மகிழ்ச்சியாகக் கொள்ளவேண்டுமென்ற பரந்த நோக்கம் இருந்தது. ஆதலால், அவன் தன் பொருட்டன்றிப்

பிறர் பொருட்டே தன் கல்வியை இன்னும் வளர்த்தல் வேண்டுமென்று தீர்மானித்து விட்டான்.

பரஞ்சோதி ஆழ்ந்து சிந்தித்துத்தன் மைந்தனை உயர்ந்த கல்வி பெறும் பொருட்டு, வெளியூருக்கு அனுப்பத் துணிந்து விட்டனர். அவர் தம் அருமை மனைவியையும், செல்வ மகனையும், கனிவுள்ள புதல்வியையும், அன்றிரவு அமர்த்தி அவ்விஷயத்தைப் பற்றி நெடுநேரம் பேசினர். அவர் தாம் சேமித்துவைத்த நூறு ரூபாயையும், தம் மைந்தன் கல்விக்குச் செலவு செய்துவிடவேண்டும் என்று கூறினர். அந்தோ! பாவம்! அவர் நெடு நாட்களாக இன்னும் இரண்டு மாடுகள் வாங்கவேண்டுமென்ற நோக்கத்தால் அத்தொகையைச் சேமித்து வைத்தார். அப்பணம் செலவழிந்து விட்டால் அவருக்குத் துன்பம் அதிகரிக்குமென்றும் இருப்பினும் அவர் தம் மைந்தன் பொருட்டு அத்துன்பத்தைப் பொருட்படுத்த வில்லை யென்றும் சொன்னர். அவர் மனைவி கோமதியம்மை தன் கைத்திறத்தால் சிறிது தொகை குடும்பத்தில் சேமித்து, மாதாமாதம் தன் மைந்தன் கல்விச் செலவிற்கு அளிப்பதாகக் கூறினள். அவள் அக்காரணத்தால் தன் கணவனும் தன் புதல்வியும் உணவு விஷயத்தில் உண்டாகும் சிறு குறையை கருதக் கூடாது என்றனள். பார்வதிக்கும் ஒரு வருஷத்தில் நான்கு சேலைகள் வாங்குவதற்குப் பதிலாக இரண்டு சேலைகள் தான் வாங்கமுடியுமென்று மொழிந்தனள். பார்வதி தன் தமையன் பொருட்டு அந்த யோசனையைக் களிப்புடன் ஆமோதித்தனள். பரஞ்சோதி தாம் அருந்தும் எளிய உணவிலும் குறைவு வருதலைப்

பொருளாகக் கருதாமல், தம் மைந்தன் சிறப்பையே ஒண்பொருளாகக் கருதி அவன் உயர்ந்த கல்வி பெறுதலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். பரமசிவன் தாய் தந்தையர் தன்னிடத்து வைத்துள்ள அளவு கடந்த அன்பையும், தன் நலத்தைத் தங்கள் நலத்தினும் மேலாகக் கருதுகின்ற மனப்பான்மை யையும் கண்டு மனமுருகினன். அவன் தன் அரு மைத் தங்கையின் பேரன்பைக் கண்டு மனம் கசிந்து, ஆனந்தக் கண்ணீர் விட்டனன். கடைசியாக, அவன் அவர்கள் செய்யும் உதவிக்கும் செலுத்தும் அன்பிற்கும் தான் தகுதி உடையவனாக இருத்தல் வேண்டுமென்று தீர்மானித்து, அவர்கள் நலத்தின் பொருட்டே தன் கல்வியை வளர்த்தல் வேண்டும் என்று ஊக்கம் கொண்டு, தான் மிக விரும்பிய தன் கிராமத்தைவிட்டும், தன்னை ஒரு கணமும் பிரிந்தி ராத தாய் தந்தையரையும், செல்வத் தங்கையையும் விட்டுப் பிரிந்து, சில ஆண்டுகள் தனித்த வாழ்க்கை யை வாழத்துணிந்து விட்டனன். இறுதியில், அவர்கள் அனைவரும் பரமசிவன் உயர்ந்த கல்வியைப் பெறும் பொருட்டு, அம்பை நகருக்குப் போகவேண்டுமென்ற ஒரேவிதமான தீர்மானத்திற்கு வந்தனர். பரமசிவன் அன்றிரவு நித்திரையில் அவன் தன் கிராமத்தை விட்டுப் பிரிந்து விட்டதாகவும் அம்பை கல்லூரியில் சேர்ந்து விட்டதாகவும் கனவும் கண்டுவிட்டான்.

அதிகாரம் இரண்டு

மறு நாட்காலை பரமசிவனுக்கு இரண்டு மேலாடைகள் (coat and shirt) புதிதாகத் தைத்துத் தையற்காரன் கொண்டு வந்தான். அவனுக்கு உடைகள் தைக்கும் போதிய கைத்திறம் இல்லையென்றாலும், அவன்தான் சாலச் சிறந்த தையற்காரனென்று அச்சிற்றூரில் பெரும் பெயர் பெற்று இருந்தான். பரமசிவன் தாயார் அவ்வுடைகளைக் கண்டதும், பெருமகிழ்ச்சியடைந்து, தன் மகனை அப்பொழுதே அவைகளை அணிந்து, புதிய காட்சியளிக்கும்படி கூறினான். அவன் அத்தகைய சிறந்த உடையை அதன் முன்னர் கண்டதில்லை ஆதலால் அவனும் அவைகளை ஆவலுடன் அணிந்து கொண்டு, தன் தாயை வணங்கினான். அவ்வம்மையார் தன் மைந்தன் புதிய தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்து அவனை நோக்கி, "அருமைச் செல்வா! நீ சிறந்த கல்விமான் ஆவாய். பத்தாவது வகுப்பு பரீட்சையில் தேர்ந்து, மாட்சிமையடைவாய். கண்மணீ! உன்னை விட்டுப்பிரிய காலம் வந்துவிட்டது. உன் பெற்றோரையும் தங்கையையும் மறவாமல் கல்வியில் சிறந்த ஊக்கம் வைத்து நம் எளிய மனை வாழ்க்கையை மாண்புள்ள மனைவாழ்க்கையாகச் செய்வாயாக" என்று கூறி, அவனை வாழ்த்தினள். அவன் தங்கை பார்வதி தன் தமையன் புதிய ஆடையைக் கண்டு களிப்புற்று, "அண்ணா! நீ பெரிய பரீட்சையில் தேறிப்பெரிய உத்தியோகம் பெறுவாய். நீ இந்தப்புதிய உடையில் மிகவும் அழகாகக் காணப்படுகின்றாய். என்னை ஒருபொழு

தும் மறவாதே" என்று கூறி, அவனை அன்புடன் தழுவிக்கொண்டாள். அவர்கள் அந்நிலையில் இருக்கையில் அவன் தந்தை அவ்விடம் வந்தனர். அவர் தன் தவப்புதல்வனைக் கண்டு களிப்புற்று, "அருமைச் செல்வா! நீ எங்களை விட்டுப்பிரியும் காலம் வந்து விட்டது. இருப்பினும், உன் உயர்ந்த கல்வியின் பொருட்டு, உன் பிரிவை நாங்கள் சகித்துக்கொள்வோம். என் கண்களை விட்டு அகலாத கனியே! உன்னை ஊரார் சிறந்து புகழவும் நாங்கள் மகிழ்ந்து வாழவும், உன் தங்கை சிறந்த இளவலை மணந்து மகிழவும், உன் கல்வியை வளமுற வளர்ப்பாயாக" என்று கூறித் தம் மைந்தனை அன்று மாலை பிரயாணத்திற்குத் தயாராகும்படி சொன்னாள்.

பரமசிவன் தன் தாய்தந்தையர் தலை சிறந்த அன்பின் மாட்சியையும், தன் தங்கையின் கனிவின் மாட்சியையும் கண்டு பேருவகை கொண்டு, தான் அவர்கள் அன்பிற்குத்தகுதியுடையவனாக இருத்தல் வேண்டுமென்று தீர்மானித்துப் பிரயாணம் அன்றே செய்யவேண்டியிருத்தலை நினைந்து மனம் புழுங்கித் தன் தந்தையை நோக்கி, "அன்புள்ள அப்பா! நான் ஊரைவிட்டுப் போவதற்குள், என் தலைமையாசிரியர் சங்கரய்யரைக் கண்டு, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, என் நண்பர்களின் நன்மொழிகளையும் பெற்றுவரவேண்டும்" என்று கூறினான்.

அவன் தந்தை அவ்வாறே செய்தல் நலமென்று சொல்லி, அவரும் அவனுடன் அவன் பாடசாலைக்குச் சென்றனர்.

பரஞ்சோதியும் பரமசிவனும் தங்கள் வீட்டை விட்டு வெளியே சென்றதும் பரமசிவன் நண்பர்கள் பலர் அவனுடன் பள்ளிக்குச் சென்றனர். அவர்கள் அவனைப் பலவாறு புகழ்ந்து கொண்டும், அவன் கல்வியை வியந்துகொண்டும், அவன் பெரிய உத்தியோகத்தை அடைவானென்று சொல்லிக் கொண்டும், அவனைச் சூழ்ந்துகொண்டே பள்ளிக்குச் சென்றனர். பரமசிவன் அத்தகைய புகழ்ச்சியை மற்ற மாணவர்களிடம் பெற்றமையால் அவன் தன்னையே மறந்து, தனது கல்வி அச்சிற்றூரில் ஒப்பற்றது என்று எண்ணிக்கொண்டான். அவன் அதை இன்னும் அதிகமாகப் பெற்று, அவ்வூர் முழுவதும் பெரிய கல்விமான் எனப் பேர்பெற வேண்டுமென்றும் ஊக்கம் கொண்டான்.

அவனும், அவன் தந்தையும், வேறு மாணவர்களும் ஒன்று சேர்ந்து பாடசாலையை அடைந்தனர். பரமசிவன் தன் தந்தையுடன் தலைமையாசிரியர் சங்கரய்யரை அவர் தனித்த அறையில் கண்டனன். சங்கரய்யர் அவனையும் அவன் தந்தையையும் கண்டதும், பெரிதும் மகிழ்ச்சியடைந்து, அவன் தந்தையை ஓர் நாற்காலியில் அமரச்செய்து, புன்னகையுடன் பரமசிவனை நோக்கி, 'அருமை மாணவனே, உன் கல்வி வளம் யாவரும் வியக்கத்தக்கது. நீ சிறந்த கல்விமானுவதோடு உயர்ந்த உத்தியோகஸ்தனுகவும் ஆவாய். உன் தந்தையின் உழைப்பிற்கும் பொறுமைக்கும் ஏற்ற பயனை அளிப்பாய். உன் நுட்ப அறிவாலும் சிறந்த உழைப்பாலும் நீ ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்திலும்

முதன்மை பெற்று விளங்குவாயாக. பாடசாலைக்கு ஒவ்வொரு நாளும் தவருமல் குறித்த மணிக்கு ஒழுங்காகச் சென்று, பாடங்களை உணர்ந்து கொள்வாயாக. ஒரு நிமிஷமும் குறித்த மணிக்குப் பின்னர் பாடசாலைக்குச் செல்வது தவருன செயலாகும். ஆசிரியர்கள் பாடம் போதிக்கையில், ஒரு நிமிஷமும் உன் சிந்தனையை வேறு விஷயத்தில் செலுத்துவது குற்றமாகும். அவர்கள் போதிக்கும் விஷயங்களைக் கூர்ந்து கவனிப்பாயாக. வருடாந்தரப் பரீட்சையில் முதன்மை பெற்று பரிசும் பெறுவாயாக. நற்குணமில்லாத பிள்ளைகளோடு எக்காலத்திலும் சேராதே. கடைசியாக இதோ நான் அளிக்கும் இச்சிறிய திருக்குறள் மூலத்தை எப்போதும் உன்னிடம் வைத்துக்கொள். இதைத் தினந்தோறும் ஒவ்வொரு அதிகாரமாகப் படிப்பாயாக. இச்செய்யுட்களின் பொருள்கள் விளங்காமலிருந்தாலும், சும்மா ஓதுவாயாக. இந்நூலின் பெருமை ஒப்புயர்வற்றது. இதனிடத்திலுள்ள பாக்களின் உண்மைப் பொருள்கள் உனக்குப் பிற்காலத்தில் விளங்கும். கல்வியென்னும் அதிகாரத்தைத் திருப்பித் திருப்பி ஓதுவாயாக. இந்நன்மதியோடு நான் என் நல்ல ஆசியையும் அளிக்கின்றேன். அதனேடு கடவுள் அருளும் உன்னிடத்தில் தழைக்கும்' என்று கூறிப் பரமசிவனுக்கு விடையளித்தனர்.

பின்னர் சங்கரய்யர் பரமசிவன் தந்தையை நோக்கி, "பெரியவரே! நீர் செய்த புண்ணியம் பெரிது. உம் புதல்வன் பெரிய கல்விமானுவான்; உமது குடும்பத்தை ஒளிபெறச் செய்வான். இவ்

வூரில் இவனுக்கு இணையான கல்விமான் ஒருவரும் இரார். உமக்கு எத்துணைய வறுமையிருப்பினும், பின்னர் இவன் அடையப்போகும் பெருமையை நினைத்து, உம் அருமை மைந்தன் கல்வியை இன்னும் வளர்ப்பீராக" என்று கூறிப் பரஞ்சோதியின் மனதைக் களிக்கச் செய்தனர்.

பரஞ்சோதி மைந்தன் கல்வி மாட்சியைத் தலைமையாசிரியரே அவ்வாறு புகழக்கேட்டு, அளவில்லா மகிழ்ச்சியடைந்து, அவரைப் பணிந்து, தகுந்த மரியாதை தந்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டனர். பரமசிவன் தன் தலைமையாசிரியரைக் கைகூப்பி வணங்கி, அவர் திருவடிகளைத் தொழுது, அவர் தம் பொன் மொழிகளோடு தன் பாடசாலையை விட்டு அகன்றான். மாணவர்கள் பலர் அவனை உற்சாகப் படுத்தி, அவனுடன் அவனைப் புகழ்ந்து கொண்டே அவன் வீடு வரையில் சென்றனர். பின்னர் அவன் அவர்களை நோக்கி, "என் அருமை நண்பர்களே, உங்களைப் பிரியுங்காலம் நெருங்கிவிட்டது. நான் உங்கள் பேரன்பை என்றும் மறவேன். என் தாய் தந்தையரை நீங்கள் வாரத்திற்கு ஒரு முறையாகிலும் வந்து பார்த்து, என்னைப்பற்றி தைரிய மொழிகள் கூறுவீர்களாக" என்று கூறி, அவர்களிடம் விடை பெற்றனன். மாணவர்கள் அவனை விட்டுப்பிரிய மனம் இல்லாதவர்களாய்ச் சிறிது நேரம் அவனையே உற்றுநோக்கி அவன் உருவத்தை மனத்தில் வைத்து, "உயர்குண நண்பா, உத்தம சீலா, உன்னை என்றும் மறவோம். உன்

கல்வி சிறந்து விளங்கும்" என்று கூறி, மனவருத் தத்துடன் அவனை விட்டுப் பிரிந்தனர்.

பரமசிவன் அவர்கள் பிரிவையே சகிக்கத்திறமை யற்றவனாய், வீட்டிற்குள் நுழைந்ததும், தன் அன்னை தன் பிரயாணத்திற்காக கட்டி வைத்துள்ள ஒரே ஒரு மூட்டையையும், ஒரு படுக்கையையும், ஒரு பெட்டியை யும் கண்டனன். அப்போதே அவைகள் அவனுக் குத் தன் தாய் தந்தையர் பிரிவையும், தன் தங்கை யின் பிரிவையும் உணர்த்திவிட்டன. அவனுக்கு அப்போதே ஆற்றொணாத்துயரம் வந்து விட்டது. அவன் எவரைப்பிரிய நேர்ந்தாலும், தன் தாய் தந் தையரையும் தங்கையையும் பிரிந்து வாழ ஒரு நாளும் இயலாது என்று எண்ணுவானாயினன். உடனே அவன் தன் கோழை மனத்தை உரம் செய்துகொண்டு, தன் கல்வியை இன்னும் மாட்சி மைப்படுத்தவே வெளியூருக்குப் போதல் அத்தியா வசியமென்றும், அக்கல்வி மாட்சிமையால் அவர் களுக்குப் பெருங்களிப்பையும், பற்பல நலங்களையும் அளித்தல் அத்தியாவசியமென்றும் தீர்மானித்து, தனக்கு உண்டாகிய மனவருத்தத்தைத்தணித்துக் கொண்டனன்.

பரமசிவன் தாய் கோமதிஅம்மையார் தன் மைந் தனைப் பார்த்து, "கண்மணி பரமசிவா! நீ உணவு அருந்தும் நேரம் வந்துவிட்டது. நீ மிக விரும்பும் கூழ்வற்றலும், மோர்க்குழம்பும், உருளைக் கிழங்கு வறவலும், வெண்ணைத் தயிரும் வைத்திருக்கிறேன். நீ இவற்றை வயிறார அருந்தி, என்னை மகிழ்விக்க வேண்டும். என் கண்களைவிட்டு என்றும் அகலாத

பரமசிவா! கண்மணியே! உன்னை விட்டுப் பிரியும் காலம் நெருங்கிவிட்டது. இருப்பினும், நீ மனம் தளராமல், மணமுள்ள கல்வியை மகிழ்வுடன் வளர்த்து நமது எளிய வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கையாகச் செய்வாயாக. உன் தங்கையைக் கனவிலும் மறவாதே. அவள் நலத்தின் பொருட்டும் உன் நலத்தின் பொருட்டுமே நாங்கள் உன்னைவிட்டுப்பிரியத்துணிந்து விட்டோம். கடைசியாக, நான் சொல்லும் வார்த்தையாதெனில், நீ எல்லோரிடத்திலும் நல்ல பிள்ளை என்ற நற்பெயரைப்பெற வேண்டும். உன்னைப் பெற்ற ஏழ்மை மிக்க என்னைஎல்லோரும் நற்றாயெனக்கூறுமாறு நீ நடந்து கொள்வாயாக" என்று மொழிந்து கண்ணீர் விட்டனள். அவளால் அடக்கமுடியாத வருத்தம் அவள் மனத்திற்குள் சிறு புலம்பலை உண்டு பண்ணிவிட்டது. அதைக் கண்ட பரமசிவன் அடக்கவொண்ணுத் துயரால் வெளிப்படையாகவே புலம்பி விட்டான். அவன் தாய் அவனை அணைத்து, அவனுக்குத் தைரியம் சொல்லுகையில், அவன் தங்கை பார்வதி விம்மி விம்மி அழுதாள். அவர்கள் இந்த நிலையிலிருக்கையில், பரமசிவன் தந்தை விரைவாக வீட்டிற்குள் நுழைந்து, பரமசிவன்பெட்டியைத் தூக்கி, வீதியில் விடப்பட்டிருந்த வண்டியில் அதைக் கொண்டுபோய் வைத்தார். கோமதியம்மையார் தன் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு தன் மைந்தனைத்தான் அன்புடன் சமைத்து வைத்திருந்த உணவை இனிது உண்ணுமாறு வேண்டினுள். பரமசிவன் தன் அன்னையின் பொருட்டு, தனக்கு உண்டாகிய பெரிய வருத்தத்தை அடக்கிக்கொண்டு,

உணவு அருந்த ஆரம்பித்தான். வேறு எத்தினத்தி லேனும் அத்தகைய சிறந்த உணவு அவனுக்கு இடப் பட்டிருந்தால் அவன் அதை அளவில்லா மகிழ்ச்சி யுடன் அருந்தி இருப்பான். ஆனால், அவன் அன்று மனம் வருத்தத்தால் தத்தளிக்கையில், தான் நனி விரும்பிய நல்ல பதார்த்தங்களும் வேம்பாகக் காணப் பட்டன. அவன் எதை அருந்தினாலும், அது ஏற்ற உணவாகக் காணப்படவில்லை. சுருங்கச் சொல்லு மிடத்து, அவனால் ஒன்றையுமே அருந்த இயலவில்லை. அவன் தாய் அவன் நிலையைக் கண்டு, தன் அன்பின் பெருக்கினால் அவன் அருகில் அமர்ந்து அவ்வருமை உணவினை அவனுக்குச் சிறிது சிறிதாக ஊட்டுவாள் ஆயினாள். பரமசிவன் தன் தாயின் கையால் அந்நல் லுணவு அவள் அன்போடு கலந்து 'வந்தமையால், அவன் தன் மனத்துயரை முற்றிலும் மறந்து தன் அன்னை ஊட்டிய உணவை அவள் விருப்பின்படியே வயிறார உண்டு விட்டனன்.

பரஞ்சோதி தம் அருமை மைந்தன் பெட்டியை யும் படுக்கையையும் தூக்கிக்கொண்டுபோய், வண்டி யில் வைத்தார். பரமசிவன் தன் தந்தையின் தனி அன்பைக்கண்டு மனம் கசிந்து, அப்பெருந்தகையா ளருக்குத்தான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். பின் னர் அவன் தன்புதிய உடையை அணிந்து கொண்டு, தனக்குள் தோன்றிய வருத்தத்தை அடக்கிக் கொண்டு, தன் அன்னையை வணங்கி அவள் நல்லாசியைப் பெற்று அவளிடம் விடைபெற் றான். கோமதிஅம்மையார் தன் மைந்தனுக்கு விடை

யளிக்கையில், அவன் விழிகளினின்றும் நீர் முத்துக்கள் பெருக்கெடுத்தன. அவன் தங்கை பார்வதி கண்ணீர் விட்டு புலம்பிக்கொண்டே தன் தமையன் கையைப் பிடித்துக்கொண்டு நின்ருள். பரமசிவன் அவ்விருவர் இணையற்ற அன்பைக்கண்டு வியப்பும் களிப்பும் கொண்டு பிரிவென்னும் துன்பக் கடலில் ஆழ்ந்து தன் தங்கையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டே வீதிக்குச் சென்ருன். அண்டை வீட்டு மக்களும், அவன் அருமை நண்பர்களும் வீதியில் அவனைச் சூழ்ந்து கொண்டனர். அவன் தந்தை பரஞ்சோதி பிரயாணத்திற்கு வேண்டிய புல், தவிடு வைக்கோல் முதலியவைகளை வண்டியில் பரப்பித் தான் வாடகைக்குக் கொண்டுவந்த ஒற்றை மாட்டு வண்டியில், தன் மாடுகளில் ஒன்றைப் பூட்டி, வண்டியில் ஏறி அமர்ந்து அதை ஓட்டுவாராயினர். பரமசிவன் வண்டியில் அவசரமாக ஏறிக் கொண்டு தன் தாயைக் கைகூப்பி வணங்கி, அம்மா! பயப்படாதே, நான் உங்கள் பொருட்டே உங்களை விட்டுப் பிரிகின்றேன், கடவுள் உங்களைக் களிப்புடன் வாழச் செய்தல் வேண்டும் என்று கூறினன். அவன் அன்னை தன் மகன் முகத்தைக் கண்டு மரம்போல் அசைவற்று நின்ருள். அவன் தங்கை வண்டியின் பின்னர் அதைப்பிடித்துக் கொண்டே, “அண்ணு! அண்ணு! என்னை மறவாதே, மறவாதே” என்று சொல்லி, அழுதுகொண்டே சிறிது தூரம் சென்ருள். பின்னர் வண்டி அவ்வீதியின் கோடியில் போய்த் திரும்பியதும் அவள் வண்டியை விட்டுத் தனியாக நின்ருள். பரமசிவன் நண்பர்கள் பலர் வண்டியோடு

சுமார் அரைமைல் தூரம் சென்றூர்கள். அவர்கள் அவன் கல்வியைப் புகழ்ந்து கொண்டும் அவன் அன்பை வியந்து கொண்டும் அத்துணை தூரம் சென்றனர். பின்னர் எல்லோரும் பரமசிவனை விட்டுப் பிரிந்தனர். அப்போது பரமசிவனுக்குப்பட்டமுடியாத துன்பம் உண்டாயிற்று. அவனுக்குப் பிரயாணத்தில் ஒரு திணைத்துணை மகிழ்ச்சியும் உண்டாகவில்லை. அவன் அப்பிரயாணத்தைத் தன் தாய், தந்தை, தங்கையோடு செய்வதாக இருந்தால், அது அவனுக்கு அளவில்லா மகிழ்ச்சியை உண்டாக்கி இருக்கும். வழியில் காணப்பட்ட அழகான தென்னஞ் சோலைகளும், பச்சைப்பசேலென கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். நெற்பயிர்களும் அவன் மனதிற்கு இன்பத்தை ஊட்டாமல் துன்பத்தையே விளைவித்தன. தன் தாய் தந்தையர் பிரிவும் தன் தங்கையின் பிரிவுமே அவன் துன்பத்திற்கு முக்கிய காரணமாகும். கடைசியாக, அவன் அதுவரை வசித்திருந்த அரிபுறமென்னும் அருமைக் கிராமத்தை விட்டு அகன்றூன். அவன் தந்தையும் மாட்டை அதட்டி ஓட்டினூர். அம்மாடும் விரைவாய் ஓட ஆரம்பித்தது.

அதிகாரம் மூன்று

பரமசிவனும் அவன் தந்தையும் அன்று இரவு ஏழுமணிக்கு வழியிலுள்ள ஒரு சிற்றூரின் சத்திரத்தில் தங்கினூர்கள். அவன் தந்தை தான் கொண்டுவந்த ஏட்டுத்தயிரோடு கலந்த அன்னத்

யைத் தம் அருமைச் செல்வனுக்கு பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஒரு நீரோடையின் கரையில் அமர்ந்து அளித்தார். அப்பொழுது வானில் வெண்ணிலா தோன்றலாயிற்று. பரமசிவன் அக்காட்சியில் தனிக் களிப்பு கொள்வானுயினன். தந்தையும் மகனும் கொண்டுவந்த அன்னத்தை ஆர்வத்துடன் புசித் தனர். பின்னர் அவர்கள் அவ்வோடையில் ஓடிக் கொண்டிருந்த தெளிந்த நீரைப்பருகினர்கள். அதன் பின்னர் அவ்விருவரும் கரையின் மீது சிறிது அமர்ந்து, சற்று நேரம் சம்பாஷணை புரிந்தனர்.

பரஞ்சோதி தன் மைந்தனை நோக்கி, "அன் புள்ள செல்வா! நாங்கள் உன்னைவிட்டுப்பிரியக் காலம் வந்துவிட்டது. நானும் உன்னைக் காணுமல் காலங்கழிப்பது அரிது. இருப்பினும், உன் நலத்தை யோசித்து என் மனத்தைத் தேற்றிக்கொள்கிறேன். உனக்கு நன் மதிகூற எனக்கு சிறந்த கல்வி இல்லை. இருப்பினும், நான் பெரியோர் சொல்லை எக்காலத்திலும் தள்ளுவதில்லை. எனக்கு என் தந்தை கூறிய ஒரு நன்மதியை உனக்குச் சொல்லுகின் றேன். அதாவது, நீ சோம்பல் என்பதை எக்காலத் திலும் அடையக்கூடாது. உழைப்பை இன்பமாகக் கருதவேண்டும். உழைப்பால் வரும் பெரும்பயன் உற்றார் உறவினரால் வராது. உழைப்பே தேக நலத்திற்கும், நல்ல நித்திரைக்கும், தேக வன்மைக் கும் காரணமாகும் என்பதாகும். நான் உழைக் கும் உழைப்பினுல்தான் நமக்கு வரவேண்டிய வறு மையையும், மனத்துன்பத்தையும் நீக்கிப் புனித மான வாழ்வை அடைந்து வருகின்றோம். நீயும் அத்

தகைய உழைப்பையே கைக்கொண்டு, உயர்ந்த கல்வியைப் பெற்றுப் பின்னர் உயர்ந்த பதவியைப் பெறவேண்டும். இது தான் நான் கூறும் நன்மதி யாகும். இதுவே நான் அளிக்கும் பரிசுமாகும்" என்று சொல்லித் தம் மைந்தனை அழைத்துக் கொண்டு, சத்திரத்திற்குப்போனார். வழியில் அவர் பெரிய பாடல்களை எடுத்துச் சொல்லாமல், தமிழ் மூதாட்டியார் கூறிய, "அன்னையும் பிதாவும் முன் னறி தெய்வம்" "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே." என்னும் பொன் மொழிகளைத் தம் மைந்தனுக்கு ஞாபகமூட்டினார். பரமசிவன் தன் தந்தையின் களங்கமில்லா உள்ளத் தையும், மாசில்லா மதியையும் நினைந்து, மனத்திற் குள் ஒரு புறத்தில் மகிழ்ச்சியும் ஒரு புறத்தில் துன்ப மும் அடைந்தனன். அவர் கொள்கையை நிறை வேற்றுவதை நினைந்து மகிழ்ச்சியும் அவரைப் பிரிய வேண்டிய காலத்தையும் நினைந்து வருத்தமும் அடைந்தான்.

பின்னர் பரஞ்சோதி தன் மாட்டிற்குத் தவிடும் நீரும் தந்து வைக்கோல் வேண்டிய அளவு போட்டுப் பின்னர் சத்திரத்தின் திண்ணையில் தம் மைந்தனோடு படுத்துக்கொண்டனர். படுத்தமாத்திரத்தே அவர் அயர்ந்து நித்திரை போயினர். பரமசிவன் அதைக் கண்டு ஆச்சரியம் அடைந்து களங்கமில்லா உள்ள மும் தளராத உழைப்பும் உடையவர்க்கு நல்ல தூக் கம் வருதல் இயற்கையே என்று எண்ணுவானாயினன். ஆனால், அவன் மாத்திரம் அன்று இரவு ஒருகணமும் துயிலவில்லை. அவன் இரவு முழுவதும் தன் அன்னை

யையும் தங்கையையும் எண்ணிக்கொண்டே நித்திரையின்றித் தன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். அவன் கண்களை மாத்திரம் மூடிக்கொண்டிருந்தானேயன்றி நித்திரை என்பதை ஒரு சிறிதும் கொண்டானில்லை. அந்நிலையில் அவன் இரவைக் கழிக்கையில் விடியற்காலை நான்குமணி ஆகிவிட்டது. அப்போது அவன் தந்தை திடுக்கென எழுந்து தன் மைந்தனை எழுப்பினர். அவன் அவருடன் சென்று நீரோடையில் அவரோடு குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்து கடவுளைத் தொழுதான். பின்னர் இருவரும் விடியற்காலையிலேயே பிரயாணம் செய்வாராயினர்கள்.

பரமசிவனும் அவன் தந்தையும் மறுநாள் பகலும் இரவும் பிரயாணம் செய்து மூன்றும் நாள் காலை எட்டு மணிக்கு அம்பை என்னும் நகரைச் சேர்ந்தார்கள். அந்நகரில் பற்பல வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் சாலைகளில் ஏராளமாகப்போய்க்கொண்டிருந்தன. பரஞ்சோதிக்கு ஒரு நகரில் வண்டி ஓட்டுபவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விதிகள் யாவை என்று தெரியாது. முதன்மையான விதியாகிய "எதிர் வண்டி வந்தால் இடது பக்கம் செல்லவேண்டும்" என்னும் விதியும் தெரியாது. அவர் தன் கிராமத்தில் எதிர் வண்டி வந்தால் தனக்குத் தோன்றியபடி வண்டியை ஒதுக்கிக்கொண்டு போவார். எதிரில் வரும் வண்டிக்காரனும் அவ்வாறே செய்வான். கிராமங்களில் அத்தகைய விதிகள் ஒன்றும் இல்லை. ஆகையால், பரஞ்சோதி தான் வண்டி ஓட்டிக் கொண்டு போகையில், எதிரில் வண்டிகள் வந்தால் வலது பக்

கமோ அல்லது இடதுபக்கமோ தனக்குத் தோன்றியபடி ஒதுக்கி ஓட்டிக்கொண்டு போனார். குதிரை வண்டிக்காரரும் மாட்டுவண்டிக்காரரும் அவரை அதட்டி "முட்டாள்" என்று கூறிக்கடைசியாக நிந்தித்துக்கொண்டு போயினார்கள். அவருக்கு அப்போது அச்சம் அதிகரித்துவிட்டது. அவர் மாடும் அந்நகரின் புதிய தோற்றங்களையும் பற்பல வண்டிகளின் காட்சிகளையும் கண்டு மருள ஆரம்பித்தது; அப்போது அவருக்கு வண்டி ஓட்டும் தொழில் பெரிய கடினமான தொழிலாகக் காணப்பட்டது. அவர் இன்னது செய்வது என்று தோன்றப்பெருமல், தன் மாட்டை மெதுவாக அச்சத்துடன் ஓரமாக ஓட்டிக்கொண்டுபோனார். அப்போது வழியில் ஓர் அழகான கோச்சுவண்டி மணி ஓசையுடன் அவர் எதிரே வந்தது. அவர் மாடு அக்குதிரையின் கம்பீர தோற்றத்தையும் கனைப்பையும் கண்டு மிகவும் மருண்டு வழியில் நின்றுவிட்டது. பரஞ்சோதி அதை வலது பக்கமாக ஓட்டிவிட்டார். உடனே எதிரில் வந்த கோச்சுவண்டி அவர் வண்டியைத்தாக்கிவிட்டது. உடனே அவர் மாடு கீழே விழுந்தது. கோச்சு வண்டி ஓட்டுபவன் தன் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கி, ஓடி வந்து, அவர் மாட்டை மெதுவாகத் தூக்கி, வண்டியில் பூட்டித் தன் வாயில் வந்தவாறு அவரை வைதான். கோச்சுவண்டியிலிருந்த மனிதர் ஓர் ஆங்கில உத்தியோகஸ்தர். அவர் பரஞ்சோதியின் மீது இரக்கங்கொண்டு, வண்டியைவிட்டுக் கீழே இறங்கி, அவரிடம் வந்து, அப்பெரியவரை நோக்கி, "ஓ! பெரியவரே! உமக்கு ஒரு நகரில் வண்டியை எப்படி ஒதுக்கு

வது என்றுகூடத் தெரியாது போலும். நீர் கிராம வாசியாகக் காணப்படுகின்றீர். எப்போதும் இடது பக்கமே வண்டியை ஒதுக்கவேண்டும். நல்ல காலம் நீரும் இச்சிறுவனும் பிழைத்தீர்கள். அஞ்சவேண்டாம். நீர் கடவுளுக்கு வந்தனமளித்து ஒழுங்காக வண்டியை ஓட்டிக்கொண்டு செல்வீராக என்று தமிழ் மொழியில் கூறினர். ஓர் ஆங்கிலேயர் அவ்வாறு தமிழில் பேசியதைக்கண்டு பரஞ்சோதி ஆச்சரியங் கொண்டு, அவருக்குப் பெரிய நமஸ்காரங்கள் பல புரிந்து, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

பின்னர் அந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர் தம் இருப்பிடம் சேர்ந்தார். பரஞ்சோதி தமது வண்டியை வெகு ஜாக்கிரதையாக ஓட்டிக்கொண்டு அந்நகரின் கடைத்தெருவிற்குச் சென்றார். அவர் அங்குப்பல விசாரணைகள் புரிந்து, தம் பழைய நண்பர் சோமசுந்தரர் என்பவர் வசித்திருந்த வீட்டைக் கண்டு பிடித்தார். சோமசுந்தரர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அரிபுறமென்னும் கிராமத்தில் வசித்தவர். அவர் அங்குப் பஞ்சம் ஏற்பட்டபோது தமக்கு இருந்த இரண்டு ஏக்கரா நிலங்களையும் சிறிய வீட்டையும் விற்றுவிட்டுத் தமதுவாழ்க்கைக்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்க அம்பைநகரம் போய்ச் சேர்ந்தனர். அவர் அந்நகரில் ஒரு சிறிய வீட்டை குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்டு, காய்கறிகளும் சில பழ வகைகளும் அவ்விடத்திலேயே விற்றுச் சிறிது பொருள் சம்பாதித்துத் தாமும் தம் மனைவியும் வயிறு வளர்த்து வந்தனர். அவர் ஏழ்மைத்தனம் அப்பொழுதும் நீங்கவில்லை. அவர் மனைவி பருத்த தேக

மும், வசீகரமில்லாத் தோற்றமும், பெருங்கோபமும், முரட்டுத்தனமும் உடையவள். அவளும் இலைகள் தைத்து விற்றுச் சிறு ஊதியம் பெற்று வந்தாள். அத்தகைய பரிதாபகரமான நிலையிலுள்ள வீட்டிற்குப் பரமசிவன் போய்ச் சேர்ந்தான். அவன் தந்தை தாம் ஓட்டிவந்த வண்டியை ஒரு புறத்தில் அமர்த்தி, மாட்டிற்கு வைக்கோலும் தண்ணீரும் வைத்துப்பின்னர் தம் நண்பரிடம் சம்பாஷிக்கத் தொடங்கினர்.

சோமசுந்தரர் தம் நண்பர் பொருட்டு அவர் மைந்தன் பரமசிவனுக்கு தம் வீட்டில் ஓர் அறை வாடகைக்கு அளிக்க ஒத்துக் கொண்டனர். அவர் தம் மனைவி அதை எவ்வளவு தடுத்தும், ஒரு சிறுவன் கல்வி நலத்தின் பொருட்டும், ஓர் பழைய நண்பர் வேண்டுகோளின் பொருட்டும் தம் மனைவியின் சொல்லை நிராகரித்தனர். அவள் இயற்கையிலேயே சீரிய சினமுடையவள்; அவள் தன் கணவன் தன் சொல்லை அங்கீகரிக்கவில்லை என்பதை மனத்தில் எண்ணி மாசில்லாப் பரமசிவனிடம் கோபம் கொண்டுவிட்டாள். பரஞ்சோதி தம் மைந்தனுக்கு வேறு இடம் தேடிப்பிடிக்கச்சக்தியற்றவராய்க்குகைபோல்இருந்த ஒரு சிற்றறையை மூன்று ரூபாய் மாத வாடகைக்கு ஏற்பாடு செய்தனர். அந்தோ! பாவம்! அவர் அந்த ஏற்பாட்டைச் செய்ய எவ்வளவோ பாடுபட்டார். ஆனல், பரமசிவனுக்கு அந்த அறையைப் பார்த்ததும் சொல்ல முடியாத துயரம் வந்துவிட்டது. இருப்பினும், அச்சிறுவன் என் செய்வான்? அவன் தன் தந்தை அது விஷயமாக எடுத்துக்கொண்ட பெருமுயற்சியைக்கண்டு, அந்த அறை தனக்குப்போது

மென்று தன் தந்தையைத் திருப்தி செய்யவேண்டி சொல்லிவிட்டான். அவன் தந்தை தம் மைந்தனுக்கு வசிக்க இடத்தை ஏற்பாடு செய்ததே பெரிய காரிய மாகத் தோன்றிற்று. அதன் பின்னர் அவனுக்கு உணவு எவ்விடத்தில் ஏற்பாடு செய்வது என்ற கவலை அவருக்கு வந்துவிட்டது. ஆனல், அவர் நண்பர் நல்ல குணமுடையவராகையால் மனக்கலக்கத்தை நீக்கி, தம் வீட்டின் அருகாமையில் இருந்த ஓர் சோற்று விடுதியில் அவர் மைந்தனுக்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவு மாதம் பத்து ரூபாய்க்கு ஏற்பாடுசெய் தனர். பரஞ்சோதி அவர் செய்த உதவிக்குப் பல வந்தனங்கள் அளித்துக்கடைசியாக அவரைநோக்கி, “ஆப்த நண்பரே! தாங்கள் தகுந்த சமயத்தில் புரிந்த இப்பெரிய உதவியை நானும் என் மகனும் என்றும் மறவோம். உங்களைக் கடவுள் செம்மையுற வாழ அருட்செய்தல்வேண்டும். தங்கள் மனைவியா ருக்கு என்மகன் விஷயமாக நன்மொழிகள் பகர்ந்து அவனைத் தாய்போல் பாதுகாக்குமாறு தாங்கள் சொல்லுதல்வேண்டும். உங்கள் இருவரிடத்திலும் என் மகனை விட்டுச் செல்கின்றேன்” என்று மனத் துயருடன் கூறினர்.

சோமசுந்தரர் தம் பழைய நண்பரிடம் பெரிதும் அன்புகொண்டு அவன் மனத்துயரை நன்கு உணர்ந்து, அவன் மகனை தம் சொந்த மகனைப்போல் பாதுகாத்துக்கொள்வதாகக் கூறிப் பரஞ்சோதியை மகிழ்வித்தனர். பரஞ்சோதி பரமசந்தோஷமடைந்து பகவானை மனத்துள் போற்றிப் பரமசிவனைப் புதிய பள்ளிக்கு அழைத்துச் செல்வாராயினர்.

பரமசிவன் தன் கிராமத்தில் கைதேர்ந்த தையற்காரன் தைத்துக்கொடுத்த மேல் உடை (Coat) அணிந்துகொண்டு, ஒரு புதிய தொப்பியைத் தலையில் தரித்துக்கொண்டு, இடுப்பில் ஓர் முரட்டு ஆடையை அணிந்துகொண்டு, புத்தகங்களையும், குறிப்புப்புத்தகங்களையும் (Note Books) ஒரு பையில் வைத்துக்கொண்டு, தன் தந்தையோடு அந்நகரில் உள்ள இராமகிருஷ்ண கல்லூரிக்கு மிக்க ஆவலோடு சென்றான். அவன் தொப்பியையும் மேல் உடையையும் வழியில் சென்றுகொண்டிருந்த பல மாணவர்கள் பார்த்து நகையாடிச் சென்றனர். ஏனெனில், அவைகள் இரண்டும் சரியாகத் தையற்காரனால் தைக்கப்படவில்லை. அந்நகரில் பரமசிவன் தரித்துச்சென்ற உடை உண்மையில் நகைப்புக்கு இடமாகத்தான் இருந்தது. அவனோடு ஒரு நாட்டுப்புறத்துக் கிழவனார் சென்றது சில குறும்புத்தனமுள்ள மாணவர்களுக்கு இன்னும் அதிக நகைப்பை உண்டுபண்ணிற்று. பரமசிவன் ஓர் நகரத்தின் காட்சியை எப்பொழுதும் கண்டதில்லை. ஆதலால், அந்நகரிலுள்ள கட்டடங்களும், பற்பல வண்டிகளும், கடைகளும், உத்தியோகச் சாலைகளும், அவனுக்குப் பெருங்காட்சிகளாகத் தோன்றின. அவன் அவைகளை மருண்ட பார்வையுடன் பார்த்துக்கொண்டே தன்னைப்புதிய கல்லூரியின் தலைமையாசிரியர் என்ன கேள்விகள் கேட்பாரோ என்றும், தன்னை எட்டாவது வகுப்பில் (Third Form) சேர்த்துக் கொள்வாரோ என்றும் எண்ணிப் பயந்து கொண்டும், மேற்கூறப்பட்ட இராமகிருஷ்ண கல்லூரியை அடைந்தனன்.

அக்கல்லூரியில் பலதிறப்பட்ட மாணவர்களும் பலவகைச் சாதியைச் சேர்ந்த மாணவர்களும் பல விதமதத்தைச்சேர்ந்த மாணவர்களும் வேற்றுமை இன்றிக் கல்விகற்பிக்கப்பட்டு வந்தனர். அக்கல் லூரிக்குத் தலைமையாசிரியர் ஓர் ஆங்கிலேயர். அவர் பரந்த நோக்கத்துடன் மாணவர்களுக்கு ஒற்றுமை நலத்தையும், கல்விமாட்சியையும், நலத்தையும், சகோ தரமாட்சியின் நலத்தையும்,அன்பின் மாட்சிநலத்தை யும் தலைசிறந்த பொருள்களாகக் கருதி எல்லா மாண வர்களையும் ஒரே தன்மையாகப் பாராட்டி, அவர்கள் நலத்தையே தமது தனி நோக்கமாகக்கொண்டு, தலை சிறந்த ஆசிரியர் தொழில் நடாத்தி வந்தனர். அவர் எத்துணைய சிறந்த நிலையில் தம் கல்லூரியில் ஆசிரியர் களையும் மாணவர்களையும் நடத்திவந்தாலும், குறும் புத்தனத்தில் தலைசிறந்த துஷ்ட மாணவர்கள் சிலர் அக்கல்லூரியிலும் இருந்தனர்.

பரமசிவனும் அவன் தந்தையும் இராமகிருஷ்ண கல்லூரியைக் கண்டதும் பெரிதும் வியப்படைந்த னர். பரமசிவன் அக்கல்லூரியின் மகத்தான கட்ட டத்தையும், அதைச் சுற்றியிருந்த குளிர் நிழல் பரப் பும் பெரிய ஆலவிருக்ஷங்களையும், மாமரங்களையும், மற்றுமுள்ள மலர்ச்செடிகளையும், அம்மருங்கேயிருந்த அகன்ற புற்கள் நிறைந்த விளையாட்டு இடத்தையும் (Play Ground) கண்டு மகிழ்ச்சி கொண்டான். அத் தகைய பாடசாலையில் தான் படிக்க என்ன புண்ணி யம் செய்தேன் என்று பரமசிவன் தனக்குள் கூறி மகிழ்ந்தான். அவனும் அவன் தந்தையும் அக்கல் லூரியின் கட்டடத்துள் நுழைந்ததும் தலையில் சிறந்த

தலைப்பாகையைத் தரித்துக்கொண்டு நெற்றியில் பரந்த நாமத்தைப். போட்டுக்கொண்டு, ஒரு முதிய வேலைக்காரன் (Peon) அவர்களைக்கண்டு "ஓ! பெரிய வரே! எங்குப் போகிறீர்? சற்று நில்லும்" என்று கூறிப்பரஞ்சோதியைத் தடுத்தான். அவர் அவனைக் கண்டு சற்று மருண்டு அவனுக்கு நமஸ்காரம் புரிந்து, "ஐயா! நான் என் மைந்தனை இப்பள்ளியில்சேர்க்க வந்தேன். அவன் எங்கள் கிராமத்தின் பாடசாலை யில் ஏழாவது வகுப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ருன். அவனை இங்கு எட்டாவது வகுப்பில் சேர்க்கப்போகின்றேன்." என்று கூறினர். அதைக் கேட்ட வேலைக்காரன் நகைத்து, அவரை நோக்கி, "போதும்! போதும்! உன் பையன் பெருமையை இங்குச்சொல்லாதே. நீங்கள் இருவரும் நான் காட் டும் இடத்திற்கு வாருங்கள். அங்கேயே நீங்கள் நான் மறுபடியும் வந்து கூப்பிடும் வரையில் இருத்தல்வேண் டும். தலைமையாசிரியர் வந்ததும் உங்களை அவரிடம் அழைத்துக் கொண்டு போகின்றேன்" என்று மொழிந்து அவர்கள் இருவரையும் அக்கல்லூரியில் ஒரு தனி இடத்தில் இருக்கச்செய்தான்.

பரஞ்சோதியும் அவர் மகனும் சிறிது நேரம் மௌனத்துடன் அப்பள்ளிக்கு வந்து கொண்டிருந்த பற்பல மாணவர்களையும் ஆசிரியர்களையும் பார்த்துக் கொண்டிருந்தனர். பத்துமணி ஆக ஐந்து நிமிஷம் இருக்கையில் அக்கல்லூரியின் மணி ஓசை உண்டா யிற்று. அதே சமயத்தில் அக்கல்லூரியின் அருகே மணி ஓசையுடன் ஒரு குதிரை வண்டி வந்து நின் றது. பரஞ்சோதியும் அவர் மகனும் அக்குதிரை

வண்டியைப் பார்த்ததும் திகைத்தனர். ஏனெனில், அவ்வண்டியிலிருந்து இறங்கியவர் தாங்கள் முன்னர் பார்த்த ஆங்கிலேயர் உத்தியோகஸ்தராகவே காணப்பட்டார். அவர் வண்டியைவிட்டு இறங்கியதும் முன்னர் கூறிய வேலைக்காரன் ஓட்டமாக ஓடி அவரை வணங்கி, அவர் கொண்டுவந்த கைப்பெட்டியை வாங்கிக்கொண்டு அவர் முன்னர் மிகுந்த பயபக்தியுடன் சென்றனன். அவரைக்கண்டதும் ஆசிரியர்கள் பலர் நமஸ்காரம் செய்தனர். மாணவர்கள் பலர் வணங்கினர்கள். எல்லா மாணவர்களும் விரைவாக அவரவர்கள் வகுப்புகளுக்குப் போய்விட்டனர். அதற்கு முன்னிருந்த மாணவர்கள் செய்தபேரொலி முற்றிலும் மறைந்து எங்கும் நிர்சப்த நிலை உண்டாயிற்று. பரஞ்சோதி அங்குள்ள ஒருவரை அந்த உத்தியோகஸ்தர் யாவர் என்று கேட்க, அவர் தான் அக்கல்லூரியின் தலைமையாசிரியர் என அறிந்து அச்சமும் நாணமும் பெரிதும் கொள்வாராயினர்.

தலைமை ஆசிரியர் தம் அறைக்குள் சென்றதும், அக்கல்லூரியில் கற்பிக்கும் தொழில் இனிது துவங்கலாயிற்று. சுமார் பதினொருமணி ஆனதும், முன்னர்க்கூறிய வேலைக்காரன் பரஞ்சோதியிடம் வந்து அவரையும் அவர் மைந்தனையும் தலைமையாசிரியர் அழைக்கின்றார் என்று கூறினன். தந்தையும் மகனும் மிகுந்த அச்சத்துடன் அந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தரிடம் சென்றனர். அவர் பரஞ்சோதியைப் பார்த்ததும் புன்னகை புரிந்து, “ஓ பெரியவரே! நீர்தானே அவ்வொற்றை மாட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவர். நல்லகாலம் நீங்கள் இருவரும்

உயிர்தப்பினீர்கள். ஏனெனில் எனக்குப் பெரிய ஆபத்து விளைவித்தீர். வேறு என்ன விபத்துகள் பின்னர் நேர்ந்தன. நீர் கிராமவாசி போலும்'' என்று கூறினர்.

பரஞ்சோதி மிகுந்த வணக்கத்துடன் அவரை நமஸ்காரம் செய்து, தாம் அறியாமல் செய்த பிழையை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டனர். தலைமை ஆசிரியர் அவர் மீது பரிதாபம்கொண்டு அவரை நோக்கி, "பெரியவரே! பயப்படவேண்டாம்; நான் விளையாட்டாகக்கூறினேன். நீர் இங்கு வந்த நோக்கம் யாது? உம் மகனை இக்கல்லூரியில் சேர்க்க வந்தீர்போலும்!'' என்று சொன்னர். பரஞ்சோதி அவர் பெருங்குணத்தை வியந்து, அவரிடம் தம் மகனை இக்கல்லூரியில் எட்டாவது வகுப்பில் சேர்க்க வந்ததாக உரைத்தனர். அதைக் கேட்டுத்தலைமையாசிரியர் தாம் அவர் மகனைப் பரீக்ஷித்துப் பின்னர் எட்டாவது வகுப்பில் சேர்ப்பதாகக் கூறிப் பரஞ்சோதியை தனிமையான ஓர் இடத்தில் அமரும்படி செய்தார்.

பரமசிவன் மாத்திரம் தலைமையாசிரியர் அறையிலேயே இருந்தனன். அவன் தான் கொண்டு வந்த பள்ளி மாறும் சீட்டை (Transfer Certificate) அவரிடம் கொடுத்தான். அப்போது அச்சத்தால் அவனது கை நடுங்கிற்று. அவன் எப்போதும் ஆங்கிலேயரிடம் பேசியதில்லை. ஆதலால், அவரைப் பார்த்ததும் அவனுக்குப் பெரிய அச்சம் உண்டாயிற்று. அவன் அவர் என்ன கேள்விகள் கேட்பாரோ என்று மனக்கலக்கம் கொண்டிருக்கையில்,

அவர் அவனை நோக்கி, "நீ எட்டாவது வகுப்பில்சேர வேண்டுமா? நல்லது, நீ ஆங்கிலத்தில் என்ன புஸ்தகங்கள் வாசித்து இருக்கிறாய் என்று ஆங்கிலமொழியில் வினவினர். பரமசிவன் நடுநடுங்கிவிட்டான்; மௌனமே சாதித்தான். ஆந்தைபோல் விழித்துத் தலைமையாசிரியர் முகத்தை நோக்கினன்.

தலைமை ஆசிரியர் அவனைக் கண்டு வியந்து, மறுபடியும் அவனை நோக்கி உனக்கு ஆங்கில மொழி பேசத் தெரியுமா? நீ உண்மையில் ஏழாவது வகுப்பில் தேர்ச்சி அடைந்தாயா? சென்ற வருஷத்தில் எந்த ஆங்கிலப் புத்தகம் படித்தாய் என்று கேட்டார்.

பரமசிவன் அச்சம் இன்னும் அதிகரித்து விட்டது. அவன் ஒரு மொழியும் பகராமல் அவன் முகத்தையே பார்த்தவண்ணமாய் நின்றான். அதன் பின்னர் அவர் ஒரு புத்தகத்தை எடுத்து ஒரு ஏட்டைக் குறிப்பித்து வாசிக்குமாறு கட்டளையிட்டார்.

பரமசிவன் ஆங்கிலேயரிடம் எப்போதும் பேசியதில்லை. ஆதலால் அவனுக்கு அவர் முன்னர் ஒரு சாதாரண ஆங்கிலப் புத்தகத்தைப் படிக்கவும் அச்சமும் நாணமும் உண்டாய்விட்டன. அவனை வேறு இந்திய ஆசிரியர் எவராகிலும் அப்புத்தகத்தை வாசிக்கக்கூறி இருந்தால், அவன் அதை வெகு நன்றாக வாசித்திருப்பான். ஆனால் அவனுக்கு அவரிடத்தில் உண்டாகிய அச்சத்தால் அவன் அதில் இருந்த எளிய வார்த்தைகளைக்கூட வெகு தடுமாற்றத்துடன் வாசித்ததுமன்றிச் சில சிறிய தப்பிதங்களும் சொல்லிவிட்டான். அதைக் கண்டதும் தலைமை ஆசிரியர் அருகாமையில் இருந்த கணக்குப்பிள்ளையை (Writer)

அழைத்து, "இம்மாணவனுக்கு ஆங்கில மொழி தெரியாது. இவன் எட்டாவது வகுப்பிற்குத்தகுதியுடையவன் அல்லன்" என்று தமிழ் மொழியில் இவரிடம் சொல்வாயாக என்று கூறினர்.

பரமசிவன் மனம் பதைபதைத்தது. அவனுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. பின்னர் அவன் தைரியத்தைக் கைக்கொண்டு, அவரை நோக்கி, "ஐய! நான் எட்டாவது வகுப்பில் நன்ருக வாசிப்பேன்" என்ற பொருள்பட ஆங்கில மொழியில் அவரிடம் உரத்த குரலில் கூறினன். தலைமை ஆசிரியர் கொல்லென நகைத்து, அவனை நோக்கி "மாணவனே! நீ ஏன் இவ்வாறு அஞ்சுகின்ருய்! உன் அச்சம் உன்னைப் படுகுழியில் தள்ளப் பார்த்தது. நல்லது, இனியாகிலும் அஞ்சவேண்டாம். நான் உன்னை எட்டாவது வகுப்பு ஆசிரியரிடம் அனுப்புகிறேன். அவர் உன்னைப் பரீட்சித்து நீ அவ் வகுப்புக்கு தகுதியுடையவனென்று கூறினல், உன்னை அதில் சேர்க்கின்றேன். பயமின்றிப் பரீட்சையில் உன் தகுதியைக் காட்டுவாயாக" என்று கூறி அவனை வேலைக்காரனேடு எட்டாவது வகுப்பு ஆசிரியரிடம் அனுப்பினர்.

அவ்வாசிரியர் அவனைக் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் பரீட்சித்து அவன் எட்டாவது வகுப்பிற்குத் தகுதியுடையவன் என்றும், அவன் அவ்விரண்டு பாடங்களிலும் சிறந்த அறிவுடையவ்ன் என்றும், அவனைப்பற்றி உயர்வாகக் கடிதம் எழுதித் தலைமை ஆசிரியருக்கு அனுப்பினர். பரமசிவன் உள்ளம் நடுங்கிய வண்ணமாகவே இருந்தது. அவன் எட்டா

வது வகுப்பு ஆசிரியர் என்ன எழுதி அனுப்பினரோ என்று எண்ணிக்கொண்டிருந்தான். அவன் தன்னை ஏழாவது வகுப்பில் ஒரு கால் வாசிக்குமாறு எழுதி விட்டிருந்தால், தன் தந்தைக்கு எத்தகைய மன வருத்தம் உண்டாகுமென்றும், தன் மதிப்புக்கு எத்தகைய இழிவு உண்டாகுமென்றும் எண்ணி வருந்துவானயினன். அவன் பரீட்சைக் கடிதத்தை எழுதி விட்டு எட்டாவது வகுப்பு ஆசிரியரிடம் கொடுத்துப் பின்னர் தன் தந்தை அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றான். அவன் தந்தை அவனைப்பார்த்து, "பரமசிவா! பரீட்சையில் தேர்ச்சி அடைந்தாயா? உன்னை எட்டாவது வகுப்பில் வாசிக்க உத்தரவுபிறந்ததா?" என்று மனக்குழப்பத்துடன்-கேட்டனர். பரமசிவன் அவரை நோக்கி, "தந்தையே! நான் நான்கு கணக்குகளையும் பிழையில்லாமல் செய்துவிட்டேன். ஆங்கிலத்தில் கொடுத்த வியாசத்தையும் நன்றாக எழுதியிருக்கின்றேன். எட்டாவது வகுப்பு ஆசிரியர் என்னைப்பார்த்து புன்னகை புரிந்து, என்னை இவ்விடத்தில் அமரும்படி கட்டளையிட்டுத் தலைமையாசிரியருக்கு ஏதோ எழுதி அனுப்பியிருக்கின்றார். தலைமையாசிரியர் என்ன கட்டளையிடுவாரோ தெரியவில்லை. கடவுள்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்" என்று அச்சத்துடன் பதில் உரைத்தான். தந்தையும் புதல்வனும் மனம் தத்தளித்த வண்ணமாய்த் தலைமை ஆசிரியர் முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் கழிந்ததும், வேலைக்காரன் பரமசிவனிடம் வந்தான். அவன் ஒரு சிறு கடிதத்தைக் கொண்டு வந்து, பரமசிவனுக்குக் காண்பித்தான்.

அதில் பரமசிவன் எட்டாவது வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்று எட்டாவது வகுப்பு ஆசிரியருக்கு எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் அவனுக்கு உண்டாகிய ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவன் தனக்குள் "ஆண்டவனே! பிழைத்தேன். என் மானத்தைக் காத்தாய். இதுவே போதும்" என்று சொல்லிக்கொண்டு, தன் தந்தையை சந்தோஷமுகத்துடன் நோக்கி, "அப்பா! தலைமை ஆசிரியர் என்னை எட்டாவது வகுப்பில் சேர்க்கும்படி கட்டளை தந்து விட்டார். இனிநமக்குஒன்றும் குறைவில்லை" என்று கூறி அவரை வணங்கினான். அவன் தந்தையும் அருமை மைந்தனை அழைத்து, அவன் இனிய முகத்தை நோக்கி, "அன்புடைச் செல்வா! ஆண்டவன் அருள் உன்னிடத்தில் தழைத்து வளரும். நீ ஒழுங்காக வாசித்து நல்லபிள்ளையென்ற பெயரை வாங்கவேண்டும்." என்று கூறி, அவனை அழைத்துக்கொண்டு தலைமை ஆசிரியரிடம் சென்றார்.

பரஞ்சோதி தம் மைந்தனோடு தலைமை ஆசிரியரை மிகவும் பணிந்து வணங்கி அவருக்கு வந்தன மொழிகள் தன் திறமைக்கு ஏற்பக்கூறினார். தலைமை ஆசிரியர் அவரை நோக்கி, "பெரியவரே! உம் மைந்தன் சிறந்த மாணவன்தான். ஆனால், அச்சம் பெரிதும் உடையவன்; சில நாட்கள் சென்றபின், அவன் தைரியசாலியாகவும் குணசாலியாகவும் விளங்குவான். நீர் கவலையின்றி உமது கிராமத்திற்குச்செல்வீராக. ஆனல் நீர் உமது மாட்டுவண்டியை விதிப்படி ஒழுங்காக ஓட்டிச் செய்தல்வேண்டும். மறுமுறையும் ஆபத்திற்கு பரஞ்சோதிக்கு விடையளித்தார்.

பரஞ்சோதி பின்னர் தம் மைந்தனுக்குச் செலுத்தவேண்டிய பள்ளித்தொகையைக் கணக்குப் பிள்ளையிடம் செலுத்திவிட்டுத் தம் மைந்தனுடன் வீட்டிற்குச்சென்ருர்.

பரமசிவன் பரமசந்தோஷத்துடன் தன் தந்தையுடன் அன்று பகல் சோற்றுவிடுதியில் வயிருர உணவு அருந்தினன். அவன் உணவு அருந்தியதும் தன் தந்தையுடன் சற்றுநேரம் தான் புதிதாக வந்துள்ள வீட்டின் திண்ணையில் அமர்ந்தான். அவன் தந்தை அன்று பிற்பகலே தன் கிராமத்திற்குச் செல்லவேண்டுமென்று அவனிடம் கூறித் தம் ஒற்றை மாட்டு வண்டியைக் கட்டிவிட்டார். அவர் வண்டியை நிறுத்தித் தம் மைந்தனை அணுகி அவனிடம் தமது பிரிவைச் சொல்ல வந்தார். பரமசிவனுக்கு அப்போது புதிய வருத்தம் உண்டாயிற்று. அவன் அதுவரையில் தன் தாயையும் தங்கையையும் ஒருவாறு மறந்திருந்தான். அவன் தந்தையின் அன்பினுல் அவர்களை ஒருவாறு மறந்து கல்லூரியின் விஷயமாகவே தன் கவனத்தைச் செலுத்தியிருந்தான். ஆனல்அவன் அப்போது தன் அருமைத் தந்தையையும் பிரியவேண்டி வந்ததால் பிரிவென்னும் துயரக்கடலில் மூழ்குவானயினன்.

அவன் தந்தை பரஞ்சோதி அவனை விட்டுப்பிரிய மனம் இல்லாதவராய் மனம் கலங்கிக் கண்ணீர் உகுத்து அவனைநோக்கி, “கண்மணீ! பரமசிவா! கலங்காதே. நானும் உன்னை விட்டுப்பிரியும் காலம் வந்துவிட்டது. நீ எப்போதும் தைரியத்தைக் கைவிடாமல் பொறுமையைக் கைக்கொண்டு பாடங்களை

நன்ருகவாசித்து நல்ல பிள்ளைஎன்னும் பேர்எடுத்து நம் குடும்பவாழ்க்கையை மாட்சிமைப்படுத்துவாயாக. நான் உனக்கு அதிகமாகச்சொல்லவேண்டிய நன்மதிகள் இல்லை. நீயே நல்லறிவுஉடையவன். நீ உன் தாய் தந்தையர் பொருட்டும் உன் தங்கையின் பொருட்டும் உன்பொருட்டுமே உயர்ந்த கல்வியைப் பெறுதல் வேண்டும். எக்காலத்திலும் எவரிடத்திலும் கோபம் கொள்ளதே; சோம்பல் என்பதை எக்காலத்திலும் கைக்கொள்ளாதே" என்று கூறிக் கடவுளை அந்நிலையிலும் தொழுது தம் செல்வமைந்தனை விட்டுப் பிரிந்தனர்.

பரமசிவன் தன் தந்தையை வணங்கி அவர் இனியமுகத்தின் பார்வையைக் கடைசியாகக் கண்டு, கண்ணீர் முத்துக்கள் சிந்தி, அவர் சென்ற ஒற்றை மாட்டு வண்டியைத் திருப்பித் திருப்பிப்பார்த்துக் கொண்டேநின்றனன்.

அதிகாரம் நான்கு

மறுநாள் பரமசிவன் தன் படுக்கையை விட்டு எழுந்ததும் கடவுளை மனத்துள் தியானித்துக் காலைக்கடன்களைக் கழிக்க அந்நகரிலும் ஒரு தனி இடத்தைத் தேடுவானாயினன். அவன் விரும்பியபடி அவன் இருந்த இடத்திற்குக்கால் மைல் தூரத்தில் ஒரு தென்னஞ்சோலையும் அதற்குப் பக்கத்தில் புற்கள் நிறைந்த ஒரு மைதானமும் இருந்தன. அவன் அவற்றைக் கண்டதும் மகிழ்ச்சி அடைந்து தனது கிரா

மத்தின் காட்சியை நினைந்து தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தென்னஞ்சோலையிலிருந்த ஒரு பெரிய கிணற்றின் ஆழ்ந்த நீரில் ஸ்நானம் செய்தான். அவனுக்குக் கிணற்றில் ஸ்நானம் செய்வதில் தனி விருப்பம் உண்டு. ஏனெனில் அவனுக்கு நன்ருக நீந்தத் தெரியும். கிணற்றுக்குள் மூழ்கித் தரையில் இருக்கும் மணலை எடுத்துக்கொண்டு மேலே வந்து மற்றப் பிள்ளைகளுக்குக் காட்டுவது ஒருவித விளையாட்டாகும். அத்தகைய விளையாட்டில் அவன் மிகுந்த ஆசையுடையவன்; தன் கிராமத்தில் மற்றப் பிள்ளைகளைவிட அவனே கிணற்றில் குதித்து தரை மண்ணைக்கொண்டுவருவதில் முதன்மைபெற்று விளங்கினன். அவ்விளையாட்டில் அவனுக்கு விருப்பம் மிகுதியாக இருந்தமையால் அன்று காலையும் அவன் அந்த எண்ணத்தைக்கொண்டனன். அங்கு வேறொரு மாணவனும் இல்லாமையால் அவன் தானே கிணற்றில் குதித்துத் தன் விருப்பின்படி ஸ்நானம் செய்து களிப்புடன் வெளியேறி அச்சோலையின் அருகே இருந்த ஒருகோயிலை அணுகி கடவுளைவணங்கித் தான் புதிதாக சேர்ந்துள்ள கல்லூரியில் தான் கல்வியில் சிறந்து விளங்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு பின்னர் தன் மனைக்குச் சென்ருன். உணவு சாலையில் உணவு அருந்தி பரமசிவன் தன் மனையை அடைந்ததும் தன் எளிய உடையை அணிந்து கொண்டு தன் புத்தகப்பையைக் கையில் ஏந்திக் கொண்டு பின்னர் தன் கல்லூரிக்கு மெதுவாக சென்றுகொண்டிருந்தனன். அவனுக்கு அப்போது தான் தனிமையின் துயர் எத்தன்மைத்து என்று

நன்கு தெரிய வந்தது. அவன் கல்லூரியில் தன் ஆசிரி யர் என்ன பாடங்கள் கேட்பாரோ என்றும் மாணவர் கள் அவனிடம் எவ்வாறு நடந்து கொள்வார்களோ என்றும் பயந்து தன் கிராமத்தின் பாடசாலையின் தலைமையாசிரியர் கூறிய நன்மதியின்படி கல்விச் சாலைக்கு ஒரு நிமிடமும் குறித்தநேரம் கழித்துச்செல் லுதல் கூடாது என்று எண்ணி, முன் ஜாக்கிரதை யாகவே புறப்பட்டுவிட்டமையால் அவன் கல்லூரி யைக் காலை ஒன்பது மணிக்கே அடைந்து விட்டான். பரமசிவன் தன் கல்லூரியை அடைந்தபோது அங்கு ஒரு மாணவனும் காணப்படவில்லை. கல்லூரியிலுள்ள பற்பலவகுப்புக்களின் கதவுகளும்திறக்கப்படவில்லை. அவன் தனியே அக்கட்டடத்தின் வெளித்தாழ்வாரத் தில் தன் புத்தகப்பையோடு சிறிது நேரம் உலாவிக் கொண்டிருந்தான். சிறிது நேரங்கழிந்ததும், ஒரு வேலைக்காரன் அங்கு வந்து பல வகுப்புகளின் கதவு களைத் திறப்பானாயினன். பரமசிவன் தான் கல் லூரிக்கு வெகு சீக்கிரம் வந்துவிட்டதை அறிந்து ஒருவாறு மனம் வருந்தினன். ஏனெனில் அவன் காலையில் அந்நேரத்தைப் பாடம்படிப்பதில் செலவு செய்து இருக்கலாம் என்று எண்ணினன். ஆனல், அவன் அன்று முன்னள் இரவே தன்பாடங்களை நன் ருக வாசித்துவிட்டான். அவன் தன் கல்லூரியின் தாழ்வாரத்தில் உலாவிக்கொண்டு தான் முன்னர் படித்தபாடங்களை மனதில் சிந்தித்துக்கொண்டுகாலத் தைக் கழித்தான்.

மேற்கூறியவாறு பரமசிவன் தன் கல்லூரியின் தாழ்வாரத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் சுமார்

இருபது வயதுள்ள ஓர் இளைஞன் முகத்தில் மீசை மிளிரப்பெற்று நல்ல உடையை அணிந்து கம்பீர மான தோற்றத்துடன் அவன் முன்னர் வந்தான். அவனைக்கண்டதும் பரமசிவன் அவனை ஓர் ஆசிரி யன் என நினைந்து அவனுக்கு நமஸ்காரம்புரிந்தான். வந்த இளைஞன் உண்மையில் பத்தாவது வகுப்பில் வாசிக்கும் ஒரு மாணவனே. அவன்பெயர் இராம நாதன். அவன் தந்தை செல்வம் நிறைந்த ஒரு வியா பாரி; கல்விப்பொருளில் மிகுந்த கருத்துடையவன் அல்லன்; அவன் மைந்தன் கல்வியில் மூடனாகி இருந் தாலும் அவனைப் பிறர் மதிப்பிற்காக ஒவ்வொரு வகுப்பிலும் அவன் இரண்டு மூன்று வருடங்கள் தங்கினாலும் அவனை மேலும் மேலும் அதைரிய மடையாமல் படிக்கவைத்தான். இராமநாதன் என் னும் இளவல் பல ஆண்டுகள் கீழ் வகுப்புகளில் அளவுக்குமேல் தங்கி, அப்போது எட்டாவது வகுப்பை அடைந்திருந்தான். அவன் கல்வி வளம் அத்தகைய நிலையிலிருக்கையில் அவன் தேக வளமும் உடையின் வளமும் மீசையின்வளமும் சிறந்துவிளங்கின. அவன் குறும்புகள் செய்வதும் மாணவர்களை மிரட்டுவதும் அவன் வகுப்பில் செய்யும் தொழில்களாகும். அவனைக் கண்டால் மற்ற மாணவர்கள் பெரிதும் அஞ்சுவார்கள்; அவன் தன்னைப் பிறமாணவர்கள் கண்டு அஞ்சுவதைத் தனக்கு ஒருதனிச் சிறப்பென எண்ணிச் செருக்கடைந்தான்.

பரமசிவன் அத்தகைய இளவலைக் கண்டதும் அவனும் ஒரு ஆசிரியனாக இருக்கலாம் என்பதை எண்ணியதும் அக்காரணத்தால் அவனுக்கு நமஸ்

காரம் புரிந்ததும் விந்தையல்ல. இராமநாதன் அவன் அச்சத்துடன் நமஸ்காரம் புரிந்ததைக்கண்டு, தன்னை அவன் ஒரு ஆசிரியன் என எண்ணிக்கொண்டான் என்பதை உணர்ந்து அவனிடத்தில் தனக்கு இயற்கையாக அமைந்துள்ள சிறுகுறும்புகளில் ஒன்றைக் காட்டுவானாயினான். அவன் பரமசிவனை நோக்கி அதிகாரக் குரலில் ஓர் ஆசிரியனைப்போல் பாவித்துக் கொண்டு, "ஓ மாணவனே! உன் பெயர் என்ன? நீ ஏன் இங்கு ஒரு சோம்பேறிபோல் உலாவிக்கொண்டிருக்கின்றாய்" என்று கேட்டனன்.

பரமசிவன் "ஐயா! என்பெயர் பரமசிவன், நான் சோம்பேறி அல்ல. நான் பாடசாலைக்கு முன்னரே வந்துவிட்டதால் என் பாடங்களை மனத்தே சிந்தித்துக்கொண்டு இவ்விடத்தில் உலாவிய வண்ணமாக இருக்கின்றேன்."

இராமநாதன் "என்ன உளறுகின்றாய்? நீ சோம்பேறியாக இல்லாவிட்டால் இந்த மாதிரி திரிந்துகொண்டு இருப்பாயா? உனக்கு எந்த ஊர்? எந்தப் பாடசாலையில் வாசித்தாய்? உன் உடையைப் பார்த்தால் நீ ஒரு நாட்டுப்புறத்தான் என்று விளங்குகிறது.

பரமசிவன் "ஐயா! மன்னிக்கவேண்டும். என் ஊர் அரிபுறம். நான் அக்கிராமத்திலுள்ள சுந்தரர் பாடசாலையில் ஏழாவது வகுப்பு வரையில் வாசித்து இங்கு எட்டாவது வகுப்பில் சேர்ந்திருக்கின்றேன்."

இராமநாதன், "உன் தலைமை ஆசிரியர் பெயர் என்ன? அவர் உனக்கு இவ்வித பழக்கத்தைத்தான்

கற்றுக்கொடுத்தாரா? பாடசாலைக்கு எட்டு மணிக்குள் வந்து இவ்வாறு திரிவது தான் கல்விக்கு அழகோ? உன் ஆசிரியர் போதனையை நான் மிகவும் மெச்சுகின்றேன்."

பரமசிவன், "ஐயா! என்மீது குற்றம் சொன்னால் சொல்லுங்கள். என் தலைமை ஆசிரியர் சங்கரய்யரின் உபதேசத்தை மாத்திரம் குறை சொல்லாதீர்கள். அவர் என்னைப் பாடசாலைக்கு எப்போதும் குறித்த நேரத்தில் வந்துவிட வேண்டுமென்றும் ஒரு நிமிஷமும் கழித்துவரக்கூடாதென்றும் எனக்கு உபதேசம் செய்தார். நான் அவர் உபதேசத்தை நிறைவேற்றும் பொருட்டு இப்பாடசாலைக்கு முன்னதாகவே வந்து விட்டேன். ஆனால் நீண்டநேரம் முன்னர் வந்து விட்டது என் தவறு, அவர் தவறாகாது மன்னிக்கவும்."

இராமநாதன் கொல்லென நகைத்து "போகட்டும் உன்னை மன்னித்து விட்டேன். நீ எட்டாவது வகுப்பில் சேர்ந்துவிட்டாயா, சரி என் பின்னேவா" என்று கூறி அவனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போனான்.

பரமசிவன் அச்சத்துடன் அவனை ஆசிரியன் எனவே நினைத்து அவன் பின்னே சென்றான். போலி ஆசிரியனாகிய இராமநாதன் ஓர் உண்மை ஆசிரியனைப் போல் நடித்துக்கொண்டு அவனை எவரும் இல்லாத ஓர் தனி அறையில் அழைத்துக்கொண்டு போய் அங்கு இருந்த ஓர் நாற்காலியில் அமர்த்தினான். அவ்வறையில்தான் மாணவர்கள் பகலில் சிற்றுண்டி அருந்துவது வழக்கம்.

பரமசிவன் பாடசாலையின் தாழ்வாரத்தில் ஒழுங்கின்றி திரிந்து கொண்டிருந்தமையால், அதற்குத் தண்டனையாக "நான் இனி பாடசாலையில் திரிய மாட்டேன், மன்னிக்கவும்" என்று தன் குறிப்புப் புத்தகத்தில் (Note-Book) ஆயிரம்முறை எழுதுமாறு இராமநாதன் அவனுக்குக் கட்டளையிட்டான்.

பரமசிவன் பயபக்தியுடன் போலி ஆசிரியன் கட்டளையை சிரமேற்கொண்டு அவ்வாறே எழுதத் தொடங்கினன். சிறிதுநேரம் கழிந்ததும் கல்லூரியின் மணியோசை எழுந்தது. உடனே இராமநாதன் பரமசிவனை நோக்கி, "ஓ பேதை மாணவனே! நீ எழுதியது போதும் என்னுடன் வா. நான் உன்னை உன் வகுப்பில் சேர்த்துவிட்டுப் பின்னர் உன்னைக் கவனிக்கின்றேன்" என்று கூறிப் பரமசிவனை அழைத்துக்கொண்டு குறும்புத்தனத்தைக் கைக்கொண்டு, அவனை வேண்டுமென்றே எட்டாவது வகுப்பில் அல்லாமல் இன்டர்மீடியேட் வகுப்பிற்குக் கொண்டு போனன். பரமசிவன் மருண்ட பார்வையுடனும் அச்சத்துடனும் இராமநாதன் சொற்படியே அவ்வகுப்பில் கடைசி இடத்தில்போய் அமர்ந்தான். இராமநாதன் அவனை அங்கேயே இருக்குமாறு கட்டளை விதித்துவிட்டு விழுந்து விழுந்து நகைத்துக் கொண்டு தன் குறும்புத்தன வெற்றியில் செருக்கடைந்து தன் பத்தாவது வகுப்பிற்குப் போய் விட்டான்.

பரமசிவன் தன் நல்லறிவை அதுபோழ்து இழந்துவிட்டமையால் போலி ஆசிரியன் குறும்புத்

தனத்தை உணராமல், தான் உட்கார்ந்திருந்த வகுப்பு உண்மையில் எட்டாவது வகுப்பிலே தான் என்று எண்ணிக்கொண்டு வகுப்பின்மேடையில் ஒரு கறுப்புப்பலகையில் (Black-Board) ஆசிரியர் முன்னல் எழுதியிருந்த பற்பல எண்களையும் எழுத்துக்களையும் குறிகளையும் (Signs in Algebra) கண்டு, அளவில்லா அச்சமடைந்தான். அவன் அத்தகைய கடினமான கணக்குகளைத் தான் எப்படி உணரமுடியும் என்றும் அவைகளைத் தானும் அவ்வயதில் போடமுடியுமோ என்றும் கவலையுறுவானுயினன்.

அவன் ஆந்தைபோல் அக்கறுப்புப் பலகையின் கோடுகளையும் எண்களையும் குறிகளையும் கண்டு விழித்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருக்கையில், இன்டர்மீடியேட் வகுப்பு மாணவர்கள் ஐந்து நிமிடங்களுக்குள் பற்பல ஆரவாரங்களுடனும் சம்பாஷணைகளுடனும் அவ்வகுப்பில் வந்து கூடினர்கள். ஆசிரியரும் தம் நாற்காலியில் வந்து அமர்ந்தார். பரமசிவன் அம்மாணவர்களையும் ஆசிரியரையும் பார்த்து அச்சமும் நாணமும் கொண்டு ஆசிரியரை ஓர் பித்தன்போல் வாடிய முகத்துடன் பார்த்து நின்றான். அவ்வகுப்பு மாணவர்கள் அச்சிறுவன் உடையையும் தொப்பியையும் சிற்றுருவையும் மருண்ட பார்வையையும் பார்த்ததும் ஒரே நகைப்பாக நகைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அந் நாட்டுப்புறத்துச் சிறுவன் யாவனே என்றும் அவன் தவருகவே அவ்வகுப்பில் வந்து அமர்ந்துவிட்டான் என்றும் உண்மையில் ஐந்து அல்லது ஆருவது வகுப்பு மாணவனுக இருத்தல்வேண்டும் என்றும்

எண்ணினர்கள். இன்டர்மீடியேட் வகுப்பின் மாண வர்கள் பலர் இயற்கையிலேயே குறும்புத்தனமும் விளையாட்டுத்தனமும் பெற்றவர்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆதலால், அவர்களுக்குப் பரமசிவன் ஒரு விநோதப் பொருளாக அப்பொழுது காணப்பட்டது ஆச்சரியமல்ல. அவ்வகுப்பு ஆசிரியர் மாணவர்களின் குறும்புத்தனத்தைக் கண்டு ஒரு சிறிதும் கோபம் கொள்ளாமல் தாம் மிகவும் விரும்பிய கோபாலன் என்னும் ஒரு நன் மாணவனை அழைத்து அவனை நோக்கி, "கோபாலா! இச்சிறு வன் தவருக இவ்வகுப்பில் வந்து அமர்ந்துவிட்டான் என்பதில் ஐயமில்லை. நீ இவனைக் கேலிசெய்யாமல் காருண்யத்துடன் அழைத்துக்கொண்டுபோய் அவன் வகுப்பில் விட்டுவிட்டு வருவாயாக. அவன் இக்கல்லூரி யில் புதிதாக வந்து சேர்ந்துள்ள மாணவன் என்பது விளங்குகிறது" என்று கூறிப்பரமசிவனைப் பரிதாபத் துடன் நோக்கி அவனைக் கோபாலனுடன் போகும் படி கட்டளை விதித்தார்.

பரமசிவன் அப்போது தான் தன் தப்பிதத்தை முற்றிலும் உணர்ந்து ஆசிரியரை நமஸ்கரித்து அடக்கத்துடன் கோபாலன் பின் சென்றனன். கோபாலன் பரமசிவனை எட்டாவது வகுப்பில் கொண்டுபோய்ச் சேர்த்தனன். பின்னர் அவன் பரமசிவன் வந்தனத்தைப் பெற்றுக்கொண்டு தன் வகுப்பிற்குப்போயினன்.

பரமசிவன் தன் சொந்த வகுப்பில் சேர்ந்ததும் மந்த அறிவு நீங்கப்பெற்றான். அவன் நாட்டுப்புறத் தின் ஆடையின் தோற்றத்தைக்கண்டு எட்டாவது

வகுப்புப் பிள்ளைகளும் நகைத்தனர். ஒரு மாணவன் தன் பக்கத்திலிருந்த மற்றொரு மாணவனிடம் இவன் நாட்டுப் புறத்துப் பையன் என்றான். மற்றொரு மாணவன் தன் நண்பனைநோக்கி இவன் கிராமத்தில் மாட்டுக்கொட்டகைப் பள்ளியில் படித்தவன் என்று கூறி நகைத்தான். வேறு ஒரு மாணவன் தன் பக்கத்திலிருந்த மற்றொரு மாணவனைப் பார்த்து, "இவன் காட்டுப்பூனைபோல் காணப்படுகிறான்" என்றான்.

பரமசிவன் கடைசி இடத்தில் அமர்ந்தபோதிலும் அக்குறும்புத்தனமுள்ள மாணவர்கள் புரிந்த சேஷ்டைகளை அறியாமல் இல்லை. ஆசிரியர் இந்து தேச சரித்திரப் பாடத்தைத் துவங்கிவிட்டார். அவர் 'அக்பர்' என்ற அதிகாரத்தில் இருந்த பாடத்தில் பற் பல கேள்விகள் மாணவர்களைக் கேட்க ஆரம்பித்தனர். முதல் வரிசையில் இருந்த பிள்ளைகள் சில கேள்விகளுக்கு விடை சரியாக அளித்தனர். மற்ற இரண்டு வரிசைகளிலும் இருந்த மாணவர்கள் தக்க விடைகள் அளிக்காமையால் பல கேள்விகள் பரமசிவனிடம் வந்தன. பரமசிவன் பயமின்றி அக் கேள்விகள் எல்லாவற்றிற்கும் தக்க விடைகள் தெளிவாகவும் அளித்ததைக்கண்டு ஆசிரியரும் மாணவர்களும் ஆச்சரியம் கொண்டனர்.

ஆசிரியர் அவன் நல்ல விடைகள் அளித்தமையால் மற்ற மாணவர்களுக்குமேல் இடம்தந்து கடைசியாக அவன் முதல் வரிசையில் இருக்கும் மாணவர்களைக் காட்டிலும் சிறந்த விடைகள் அளித்தமையால் அவனை முதல் இடத்தில் களிப்புடன் அமர்த்தினர்.

அவன் அன்றே எட்டாவது வகுப்பில் முதல்தரமாண வன் என்றபெயர் எடுத்ததோடு முதல் மாணவன் என்னும் மதிப்பையும் பெற்ருன். அதுவரையில் முதல் ஸ்தானத்தைப் பெற்று இருந்த கிருஷ்ணசுவாமி என்னும் மாணவன் பரமசிவனுக்குத் தலைமை தந்து இரண்டாவது மாணவனுனன்.

அன்று பகல் மணி ஒன்ருனதும் மாணவர்கள் பகற் போஜனத்திற்காக விடுதலை பெற்றனர். பற் பல மாணவர்கள் வெளியேகாப்பி ஹோட்டல்களுக்கு சிற்றுண்டியும் காப்பியும் அருந்தச் சென்றனர். சில மாணவர்கள் கல்லூரியில் ஒரு பக்கத்தில் அமைக்கப் பட்டிருந்த உணவு அறையில் உணவு அருந்திஞர்கள். ஒரு மாணவனும் அச்சமயம் வகுப்பில் இல்லை. பரம சிவன் மாத்திரம் எல்லா மாணவர்களும் வகுப்பை விட்டுச் சென்றபோதும் தான் மாத்திரம் தன் இருப் பிடத்தில் அமர்ந்திருந்தான். அப்போது அவன் ஆசிரியர் அவனைப் பார்த்து, "பரமசிவா! நீ படிப் பில் பெரும் சமர்த்தன். நீ இம்மாதிரியே செவ்வனே பாடங்களைப் படித்துவந்தால் வருடாந்தரப் பரீட்சை யில் நீயே முதல் மாணவனுகத் தேர்ச்சி அடைந்து பரிசும் பெறுவாய். உன் கல்வியின் பெருமை பாராட் டத்தக்கது" என்று கூறி அவனை ஏன் பகல் உணவு அருந்த வெளியே செல்லவில்லையென்று வினவினர்.

பரமசிவன், தன் அன்புள்ள ஆசிரியர் கூறிய நன்மொழிகளை மனத்துக்குள் பாராட்டி, அவரை வணங்கி, தானும் சிற்றுண்டி அருந்த வெளியே போவதாகக் கூறி அவரை விட்டுப் பிரிந் தான். அவன் தன் புத்தகப்பையைக் கையில் ஏந்

திக்கொண்டு கல்லூரியின் தாழ்வாரத்தின் வழியாகச் சென்றான். அவன் அங்ஙனம் செல்லுகையில் வழியில் தான் முன்கண்ட இராமநாதன் என்னும் மாணவனைப் பார்த்தான். அவன் அவனை அப்போதும் ஓர் ஆசிரியன் எனவே எண்ணினான். அவனைக்கண்டு ஆசிரியன்என்னும் அச்சமும்கொண்டனன். ஆனால் அவன் பக்கத்தில் போய்க்கொண்டிருந்த இரண்டு மாணவர்கள் இராமநாதனைப் பார்த்ததும் நகையுடன் அவனைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள். ஒரு மாணவன் மற்றொருவனை நோக்கி, "கிருஷ்ணா! இதோ செல்கின்ற நெட்டைப் பனைமரம்போல் உயரத்தைப்பெற்ற இராமநாதன் நேற்று தலைமை ஆசிரியரிடம் ஆறு பிரம்படிகள் பழுக்க வாங்கிக்கொண்டான். இது உனக்குத் தெரியுமா?" என்றனன். மற்றொரு மாணவன் அதைக்கேட்டு, "கோவிந்தா! அவன் அவ்வளவு பெரிய ஆளாக வளர்ந்தும் பத்தாவது வகுப்பில்தானா வாசிக்கிறான். அவனுக்குப் பெரிய மீசையும் வந்துவிட்டது. இவ்வளவு பெரியவன் பிரம்படி வாங்குவதென்றால் எவ்வளவு அவமானம்? ஏன் அவன் அவ்வாறு தண்டிக்கப்பட்டான்?" என்று வினவினான். அவன் நண்பன் அவனை நோக்கி, "அந்த இராமநாதன் பல சேஷ்டைகள் செய்பவன்; குறும்புத்தனம் செய்வதில் கைதேர்ந்தவன்; அவன் வகுப்பிலேயே ஆசிரியரிடத்திலும் குறும்புகள்செய்து மற்றமாணவர்களை நகைக்கச் செய்வான். தீய மாணவர்களுக்கு அவன் தலைவன்; நேற்றையதினம் அவன் வகுப்பில் விஞ்ஞானகலை ஆசிரியர் (Science Teacher) அப்பாடத்

தின் ஒரு பகுதியை ஒரு சோதனை மூலமாகக் (Experiment) காட்டுகையில், அவன் அவர் பின்னர் மறைவாகச் சென்று, சிவப்பு மையை (Red ink) ஒரு சிறு சீசாவிலிருந்து அவர் ஆடையில் ஊற்றிவிட்டான். அவன் அக்குறும்பைச் செய்து விட்டு இரகசியமாகப்போய்த் தன்னிடத்தில் அமர்ந்து கொண்டான். அவ்வாசிரியர் பின்னர் தன் ஆடை சிவப்பு மையால் பழுதடைந்ததைக்கண்டு மாணவர்கள் மீது வெகுண்டு பேசுகையில், சில மாணவர்கள் அத்தகைய குறும்புத்தனத்தைச் செய்தவன் இராமநாதன் என்று சொல்லிவிட்டார்கள். அதன் பின்னர் அவ்வாசிரியர் தலைமை ஆசிரியரிடம் சென்று அவன் குற்றத்தை அறிவித்ததும், தலைமைஆசிரியர் இராமநாதனைப்பல மாணவர்கள் முன்னிலையில் பகிரங்கமாக மற்றவர்களுக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்க எண்ணி பலமாக ஆறுபிரம்படிகள் அளித்தனர். அந்த இராமநாதனுக்கு மானமும் இல்லை வெட்கமும் இல்லை. இப்போதுகூட அவன் மற்றொரு மாணவனைக் கேலி செய்துகொண்டு சில துஷ்டமாணவர்களோடு காப்பி ஹோட்டலுக்குச் செல்கின்றான்" என்று கூறினன்.

பரமசிவன் அவ்விரண்டு மாணவர்களும் அவ்வாறு இராமநாதனைப்பற்றிப்பேசிக்கொண்டு போவதைக் கேட்டு அவர்கள் பின்னரே சென்றான். அப்போது அவனுக்கு அளவில்லா ஆச்சரியம் உண்டாயிற்று. அவன் அம்மாணவர்களில் ஒருவனை நோக்கி "நண்பா, அவர் ஓர் ஆசிரியர் அல்லவா?" என்று கேட்டனன். அம்மாணவன் கொல்லென நகைத்து,

"நீ இப்பாடசாலேயில் புதிதாகச்சேர்ந்தாயோ? அந்தப் புத்தியில்லா மூடனே "அவர்" என்று சொல்லுகிறாயே. அவன் மடமையும் மந்தத்தனமும் உடைய மாணவன்; அவ்வளவு பெரிய வயதாகியும் பத்தாவது வகுப்பில் தான் வாசிக்கிறான். அவன் பலவித சேஷ்டைகள் செய்வான். அவனோடு எப்போதும் எக்காரணத்தைக்கொண்டும் சேராதே" என்று கூறி அவன் மற்றொரு மாணவனிடம் வெளியே இருந்த காப்பி ஹோட்டலுக்குச் சென்று விட்டான்.

பரமசிவன் அம்மாணவன் கூறிய மொழிகளைக் கேட்டு, இராமநாதனைப்பற்றி ஒரு புறத்தில் கோபமும் மற்றொரு புறத்தில் பரிதாபமும் கொண்டனன். அவன் செய்த சேஷ்டைக்குக் கோபமும் அவன் இயற்கையாகக் கொண்டுள்ள பேதமைக்குப்பரிதாபமும் அவன் அடைந்தான். ஒரு விதத்தில் பரமசிவனுக்குப் பரம சந்தோஷம் உண்டாயிற்று. ஏனெனில், அவன் இராமநாதனை ஆசிரியன் எனவே எண்ணி, அவனிடத்தில் அதிக அச்சம் கொண்டிருந்தான்; அந்த அச்சம் அவனை விட்டு அகன்றது. அதுவே அவனுக்குப் பரம சந்தோஷம்.

பரமசிவன், மற்ற மாணவர்கள் எல்லோரும் சிற்றுண்டியும் காப்பியும் அன்னமும் அவரவர்கள் ஏற்ற நிலேயில் அருந்துகையில், அவன் மாத்திரம் சிற்றுண்டியும் அன்னமும் பகலில் இல்லாமல் பட்டினியாக இருக்கவேண்டியதை நினைந்து சிறிது புழுங்கினான். அவனுக்கு ஒரே ஒரு கோப்பை காப்பித் தண்ணீர் இருந்தாலும் போதும் என்று தோன்றிற்று. ஆனால், அவன் அதற்கும் இரண்டணா ஆகிவிடும் என்று நினைத்தான். அவனுக்கு அளிக்கப்பட்

டுள்ள பணம் மிகவும் சிறிய தொகையாகும். மேலும், அவன் தன் அருமை அன்னையினிடம் தான் ஒரு நாளைக்கு இரண்டே வேளை இன்னமுது செய்வதாகவும், வேறு சிற்றுண்டி ஒன்றும் அருந்துவதில்லை என்றும் வாக்குறுதி தந்திருந்தான். அவன் தன் தாய் தந்தையர் இருந்த எளிய நிலையில் தான் எட்டாவது வகுப்பு வாசிக்க வசதி அடைந்ததே தான் பண்ணின பெரும் புண்ணியமென்று எண்ணியிருக்கையில், அவன் தன் தாய் தந்தையருக்கு மேலும் துன்பத்தைக் கொடுக்க விரும்பவில்லை. அவன் பணம் விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாக இருந்தால் தான் தன் படிப்பு நிலைத்திருக்கும் என்று நன்கு அறிந்திருந்தான். ஆதலால், அவன் தான் சிற்றுண்டியில் கொண்ட சிறு விருப்பத்தை அறவே மறந்து, ஒரு கோப்பை காப்பியையும் முற்றிலும் துறந்து, ஒரு தத்துவ ஞானிபோல் ஆழ்ந்த சிந்தனையுடன் பக்கத்திலிருந்த ஒரு சோலையில் போய்த் தனியாக அமர்ந்தான். அவன் அங்கு மனவமைதியுடன் பிற்பகல் நடக்கவேண்டிய பாடங்களில் ஒன்றைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். பாடசாலையின் மணியோசை வந்ததும், அவன் அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து மீண்டும் தன் வகுப்பிற்குப் போய்ச் சேர்ந்தான்.

பரமசிவன் அன்று பிற்பகல் நடைபெற்ற பாடங்களிலும் சிறந்த விடைகள் அளித்து முதன்மை மாணவனாகவே அன்றைய தினமே எல்லோராலும் கருதப்பட்டான். அவனை அவன் வகுப்பு ஆசிரியர் மிகுந்த அறிவாளி என்று மற்ற மாணவர்களிடம் சொல்லி

அவனைப் புகழ்ந்தனர். பரமசிவன் ஆசிரியர் அளித்த அப்புகழ் மாலையைப் பெருங்களிப்புடன் புனைந்து கொண்டு, தன் மிக எளிய வாழ்க்கைக்கு இருப்பிட மாகிய கடைத்தெருவில் இருந்த தன் குகைபோன்ற வீட்டிற்குச் சென்றான்.

அதிகாரம் ஐந்து.

பரமசிவன் அன்று இரவு தன் பாடங்களைப் படித்து முடித்ததும், ஆசிரியர் அளித்த அளவில்லாப் புகழ்ச்சியை மனத்தில் எண்ணிப் பெரு மகிழ்ச்சி பூத்து, அன்று இரவு ஆனந்த நித்திரை புரிந்தான். அவன் மறு தினத்திலிருந்து தன் கடமையை இனிது முடித்து, தலை சிறந்த மாணவர்களில் ஒருவனாகத் திகழ்ந்து, ஐந்து தினங்கள் வரையில் தன் காலத்தை இனிது கழித்து வந்தான். அவன் ஒரு வாரம் அங்ஙனம் காலத்தைக் கழித்துப் பின்னர் ஒவ்வொரு தினமும் தன் தந்தையினிடம் இருந்து தபால் வருமென்று ஆவலுடன் எதிர்பார்த்து வந்தனன்.

பரமசிவன் ஒருவாரம் கழிந்ததும், ஒவ்வொரு தினமும் தன்வகுப்பில் தபாற்காரன் கடிதம்கொண்டு வருவானென்றே எண்ணிக் கொண்டிருந்தான். இரண்டு தினங்கள் கழிந்ததும், புதன்கிழமை யன்று மாலை மூன்றரை மணிக்கு ஒரு தபாற்காரன் அவன் வகுப்பிற்கு வந்தான். அவன் ஒரு கடிதத்தை ஆசிரியரிடம் அளித்துவிட்டுச் சென்றான். ஆசிரியர் அதன் விலாசத்தைக் கண்டு பரமசிவனிடம் அக்கடிதத்தை அளித்தனர். பரமசிவன் களிப்புடன் அக்கடிதத்

தின் விலாசம் தன் அருமைத் தந்தையின் கையினல் வரையப்பட்ட கொட்டை எழுத்துக்களால் எழு தப்பட்டிருந்ததைக் கண்ணுரக் கண்டனன். அப் போதே அவன் அன்பே வடிவாகிய தன் தந்தையின் திருமுகத்தைத் தன் முன்னர் நேரில் கண்டதுபோல் பெருமகிழ்ச்சி பூத்தனன். அவன் அப்பொழுதே அக்கடிதத்தைப் பிரிக்க ஆவல் கொண்டனன் ஆனல், வகுப்பில் பிள்ளைகள் எக்கடிதத்தையும் பிரித்து வாசிக்கப் பாடசாலையின் சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆதலால், அந்தோ, பாவம், பரம சிவன் மனம் கடிதத்தைப் பிரிக்கப்பேரவா கொண் டபோதிலும், அவன் இருந்த இடம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இருப்பினும், பரமசிவன் தன் தந் தையின் கையெழுத்துக்களை பொன் எழுத்துக்களி னும் சிறந்தவையாக எண்ணியதோடு அக்கடிதத்தை விலை மதிக்க வொண்ணுத மாணிக்கமாக நினைத்தான். அவன் அக்கடிதத்தைத் தன் குறிப்புப் புத்தகத்தில் (Note-Book) மறைவாக வைத்துக் கொண்டு, தன் தந் தையின் அன்பார்ந்த கையால் எழுதப்பட்ட எழுத் துக்களைப் பார்த்துக் கொண்டே ஆசிரியர் அளித்த கணக்குகளைப் போட்டுக் கொண்டு வந்தான். ஆனல் அவன் மனம் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தில் ஈடுபட்டு விட்டமையால், அவன் தனக்கு நன்ருகத் தெரிந்த சுலபமான கணக் குகளையும் தவருகப் போட்டான்.

அவன் ஆசிரியர் அவன் அவ்வாறு அன்றைய தினம் மாத்திரம் கணக்குகளை ஏன் தவருகப் போட் டான் என்று ஆச்சரியமும் கோபமும் கொண்டார்.

பரமசிவன் ஆசிரியர் தன்னை ஏன் கணக்குகள் சரியாகப் போடவில்லை என்று கேட்டபோது அவருக்குத் தக்க விடை அளிக்கத் திறமை அற்றவனாய் தன் இடது கையில் மறைவாக வைத்திருந்த கடிதத்தை விரைவாகத்தன் ஜோபில் போட்டுக்கொண்டான். ஆசிரியர் அதை நுட்பமாக அறிந்து கொண்டு அவனைத் தன்னிடம் சினத்துடன் அழைத்தனன். பரமசிவன் பயத்துடன் ஆசிரியரிடம் சென்று, தன் குறிப்புப் புத்தகத்தை அவர் விரும்பியபடி அவரிடம் அளித்தனன். அவர் அதை வாங்கிக் கொண்டதும் அவர் பரமசிவனைத் தாம் சொல்லிக் கொடுத்த ஆறு கணக்குகளையும் போட்டுக் காட்ட முடியுமா என்று கேட்டனர். பரமசிவன் மிகவும் பணிவுடன் அவ்வாறே செய்து காட்டுவதாக அவரிடம் கூறினான். அதன் பின்னர் ஆசிரியர் அவன் குறிப்புப் புத்தகத்தை அவனிடமே அளித்து விட்டு, அக்கணக்குகளை அவனைப் போட்டுக் காட்டுமாறு கட்டளையிட்டனர்.

பரமசிவன் தன் சிந்தையைத் தன் தந்தை அனுப்பிய கடிதத்தில் இருந்ததை மாற்றி கணக்கில் முற்றிலும் அதைச் செலுத்தியதால், அவன் அக்கணக்குகளை வெகு சீக்கிரத்தில் சரியாகப் போட்டு, ஆசிரியரிடம் கொடுத்தான். ஆசிரியர் அதைக் கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து, அவனைத் தான் முதல் மாணவன் எனக் கருதியது சரியே என்று உறுதி செய்து கொண்டு, மறுபடியும் மூன்று புதிய கணக்குகளை எல்லா மாணவர்களுக்கும் பரமசிவனுக்கும் கொடுத்தார். பரமசிவன் அவைகளையும் வெகு விரைவில் செய்து விட்டு, மற்ற மாணவர்கள்

கொடுப்பதற்கு முன் தன் குறிப்புப் புத்தகத்தை ஆசிரியரிடம் கொடுத்து விட்டனன். ஆசிரியர் அதைக்கண்டு மகிழ்ச்சி அடைந்து, அவனை நோக்கி, "பரமசிவா! உன்னைக் காட்டிலும் உயர்ந்த மாணவன் இவ்வகுப்பில் இல்லை. இக்கல்லூரியில் நீயே எல்லோரைக் காட்டிலும் தலை சிறந்த மாணவனாகத் திகழ்ந்து பெரியபரீட்சைகளில் தேர்ச்சிஅடைந்து, கடைசியில் கலக்டர் (Collector) உத்தியோகத்தைப் பெறுவாய்" என்று கூறி, அவனை மகிழ்வித்து, அவனுக்கு உற்சாகம் கொடுத்தார். மற்ற மாணவர்கள் ஆசிரியர் கொடுத்த அத்தகைய ஆசியைக் கேட்டுப் பரமசிவன் மீது பொறாமை கொண்டனர்.

பரமசிவன் தன் ஆசிரியரைத் திருப்தி செய்து விட்டாலும், தன் தந்தை அனுப்பிய கடிதத்தைப் பிரித்துப் பார்த்து தன் மனதிற்குத் திருப்தி அளிக்கமுடிய வில்லை. அவன் எப்போது மணி நாலரை ஆகுமோ என்று ஒவ்வொரு நிமிடத்தையும் கஷ்டமாகக் கழித்துக் கொண்டிருந்தான். அவன் அந்நிலையிலும் அக்கடிதத்தைத் தன் ஜோபியிலிருந்து கள்ளத்தனமாக ஆசிரியர் அறியாவண்ணம் எடுத்தெடுத்துத் தன் தந்தை எழுதிய மேல் விலாசத்தைப் பார்த்து மகிழ்ந்த வண்ணமாகவே இருந்தான்.

மணி நாலரை ஆயிற்று; பாடசாலை மணி ஓசை எழுந்தது; பற்பல வகுப்பு மாணவர்களும் தங்கள் இருப்பிடங்களை விட்டு எழுந்தார். பரமசிவனும் தன்னிடத்தை விட்டுப் பெயர்ந்தான்; அவன் தனியாக வெகு விரைவாகத் தன் புத்தகப்பையோடு கல்லூரியின் கட்டடத்தை விட்டு வெளியே சென்றான்.

அவன் பின்னரே மாணிக்கவாசகன் என்னும் மாண வன் அவனை விரைவாகத் தொடர்ந்தான். அம்மாண வனுக்கு இராமநாதனைப் போல் குறும்புத்தனத்தில் பிரியம் அதிகம். பரமசிவன் பாடசாலையை விட்டு வெளியே போகையில், தன் தந்தை எழுதிய கடிதத் தைத் தன் ஜோபியில் இருந்து மெதுவாக எடுத்தான். அப்போது அவன் பின்னரே அவனை அறியாமல் வந்து கொண்டிருந்த மாணிக்கவாசகன் அதை அவ னிடமிருந்து பற்றிக் கொண்டான். அப்போது பரம சிவனுக்கு அவன் மீது உண்டாகிய கோபத்திற்கு அளவே யில்லை. அவன் மாணிக்கவாசகன் கழுத் தையே முறித்து விடவேண்டு மென்ற அத்தகைய கோபம் வரப் பெற்று, தன் தந்தை அனுப்பிய கடிதத்தை அவனிடம் இருந்து திருப்பிப் பெற்றுக் கொள்ள முயன்ருன். ஆனல், மாணிக்கவாசகன் அக்கடிதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, மான் போல் ஓட ஆரம்பித்தான். பரமசிவனும் அவன் பின் சிங்கம் போல் சீறிக் கொண்டு அதிக வேகமாய் ஓடினன். இருவரும் ஓடும் பந்தயத்தில் ஈடுபட்டவர் போல்(RunningRace)சாலையில்ஓடினர்கள். பலவண்டி களும் மனிதர்களும் அச்சாலையில் போவதையும் பரம சிவன் பாராமல் வெகு விரைவாக ஓடி மாணிக்கவாச கன் கையைப் பிடித்தான். மாணிக்கவாசகன் தன் னைப் பரமசிவன் பிடித்துவிட்டமையால், தன் கையில் இருந்த கடிதத்தை ஆகாயத்தில் விசிறி யெறிந்தான். பரமசிவன் வெகு கோபத்துடன் மாணிக்கவாசகனை அறிவில்லா மிருகம் என்று இகழ்ந்து கூறி, மனக்கவ லையுடன் அக்கடிதத்தைப் பற்றிச் சென்ருன். அக்

காட்சியைக்கண்ட மாணிக்கவாசகனும் அவன் பின்னர் வந்த வேறு குறும்புத்தனமுள்ள மாணவர்களும் பேரானந்தம் அடைந்தார்கள். பரமசிவன் தன் தந்தையின் கடிதம் அவ்வளவு அலட்சியமாக அம்மூட மாணவர்களால் கருதப் பட்டதை நினைத்து மனம் வருந்தி ஆகாயத்தில் காற்றினல் கொண்டு போகப் பட்ட கடிதத்தை அதன் பின்னரே தொடர்ந்து போய் கடைசியாக அது ஒரு குப்பை மேட்டில் விழுந்து விட்டதும், அதை ஆர்வத்துடன் எடுத்தான். அக்கடிதத்தின் மேல் விலாசம் குப்பையிலிருந்த அழுக்கினல் பழுதுபட்டது. இருப்பினும், பரமசிவன் தன் அருமைத் தந்தை கையெழுத்துக்களை பொன்னிலும் மணியிலும் சிறந்ததாகக் கருதி தனது புனிதமான வெள்ளைக் கைக்குட்டையால் அவ்வெழுத்துக்களின் மேல் பொதிந்திருந்த அழுக்கினை மெதுவாகத் துடைத்து, பின்னர் அக்கடிதத்தைத் தன் ஜேபியில் பத்திரமாக வைத்துக் கொண்டு தன் மனைக்குச் சென்ருன். அவன் தன் அறைக்குள் விரைவாகச் சென்று தன் உடைகளைக் களைந்து விட்டு, தன் புத்தகங்களையும் அமைக்கவேண்டிய இடத்தில் அமைத்து தன் மாண்புள்ள தந்தை அனுப்பிய ஒப்பற்ற அன்பு ததும்பிய கடிதத்தை எடுத்து களிப்புடன் பிரித்து வாசிக்கத் தொடங்கினன். அக்கடிதத்தின் ஆரம்பத்தில் தன் தந்தை, "என் அருமைச் செல்வா!" என்று எழுதியிருந்ததை முன்னர் கண்குளிரக் கண்டான். அப்போது அவன் உள்ளம் பெரும் மகிழ்ச்சியும் அவன் முகம் மலர்ச்சியும் அடைந்தன, அக்கடிதத்தில் பின்வருமாறு விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன.

"என் அருமைச் செல்வா! நாங்கள் அனைவரும் ஆண்டவன் அருளால் தேக நலமும் மன அமைதியும் பெற்று வருகின்றோம். உன்னைப் பிரிந்துள்ள மனத் துயர் மாத்திரம் மாற்றும் மருந்து எங்களுக்கு அகப் படவில்லை. ஆனால் உன் கல்வி நலத்தை நாங்கள் கருதிக் கவலை ஒருவாறு நீங்கி வாழ்கின்றோம். நீ எழுதிய அறிவு அன்பும் ததும்பிய இனிய கடிதம் கண்டு பெருங் களிப்பு அடைந்தோம். உன் கடிதத்தைக் கண்டு உன் அன்னையும் உன் தங்கையும் கொண்ட சந்தோஷம் இத்தன்மைத்து என்று ஏட்டில் எழுத முடியாது. நீ உன் பாடங்களில் சிறப்புற்று ஆசிரியர் அபிமானத்தைப்பெற்று இருப்பதை அறிய நாங்கள் அளவிலா ஆனந்தம் அடைகின்றோம். உன் ஆசிரியர் உன்னை மிகவும் சிறந்த படிப்பாளி என்றும் பின்னர் நீ பெரிய பட்டங்கள் பெற்று சட்ட சபையிலும் அங்கத்தினன் ஆவாய் என்றும் சொல்லுவதாக நீ எழுதியிருப்பதை இங்குள்ள உன் தலைமை ஆசிரியர் சங்கரய்யரிடம் காட்டியபோது, அவர் அவ்வளவு புகழ்ச்சி உன் ஆசிரியர் கொடுத்ததற்காக நீ கர்வம் கொள்ளக் கூடாதென்றும் அவ்வாறு அவர் கூறியது உன்னைக் கல்வியில் உற்சாகப்படுத்துவதற்காக என்றும் மொழிந்தனர். அவர் கொண்ட அந்த அபிப்பிராயத்தை உனக்குத் தெரிவிக்குமாறும் அவர் என்னிடம் சொன்னார். நான் அதை உள்ளவாறு எழுதியதற்காக நீ மனம் வருந்த வேண்டாம். ஏனெனில், நீ பிற்காலத்தில் உன் ஆசிரியர் சொல்லியபடி பெரிய பதவியை நீ அடையாமற் போனாலும்,

நான் ஒரு சிறிதும் வருந்தமாட்டேன்; என் வரை யில் நான் உன் பிற்காலத்து உயர் பதவியைப் பெரி தாகப் பாராட்டவில்லை. நீ பெரும் செல்வந்தனுகவும் பெரும் உத்தியோகஸ்தனுகவும் ஆக வேண்டுமென்று நான் பேராசையும் கொள்ளவில்லை. ஆனுல், நீ உன் கல்வியின் பயனுக எல்லோராலும் நீ "நல்லவன்" என்று புகழ்ந்து உரைக்கப்படவேண்டும் என்பது தான் எனக்குள்ள உண்மையான விருப்பம். "நல்ல வன்" என்ற பெயர் அடைவது சாதாரணமான செல்வம் அல்ல; அதுவே கல்வியின் உண்மைப்பயன். அச்செல்வமே பொருட்செல்வம் கல்விச் செல் வம் இரண்டிலும் மேலான "மெய்ச்செல்வம்". பெரி யோர்களும் இவ்வாறே கூறுகின்றனர். நானும் என் அனுபவத்திலும் அதன் உண்மையை அறிந்திருக் கின்றேன். உலகத்தார் உன்னை "நல்லவன்" என்று உரைத்தால், கடவுளும் உன்னை நல்லபிள்ளை என்று எண்ணுவார். அப்போது உனக்கு வாழ்க்கையும், தேக நலமும், மன அமைதியும் இவ்வுலகில் பூரண மாக உண்டாகும். இதைக்காட்டிலும் சிறந்த செல் வம் எதுவும் இல்லை. ஆகையால், நீ உன் கல்வியை வளர்ப்பதோடு, உன் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும். நான் ஒரு தத்துவஞானிபோல் இக்கடி தத்தில் எழுதி இருக்கின்றேன் என்று எண்ண வேண்டாம். நீ இவ்வுலக நடைக்கு ஏற்ப, பெருஞ் செல்வமும் நீ அடைவதில் எனக்குப் பூரண சந்தோ ஷமே. நீ ஒரு மகத்துவம் பொருந்திய கலெக்டர் உத் தியோகம் பெற்றாலும் எனக்கு மகிழ்ச்சியே. ஆனுல், ஆசிரியர் கூறிய பொன்மொழிகளால் உன் கல்வி

வளத்தை மிகவும் மாட்சிமை உடையதாகக் கருதி, அக்கல்வியில் கொண்டுள்ள ஊக்கத்தில் தளர்ச்சி கொண்டுவிடாதே. கடைசியாக நான் கூறுவது நீ "நல்ல பிள்ளை," என்று பெயர் பெறவேண்டும் என்பதேயாகும். எக்காலத்திலும் கடவுளைமறவாதே. இரவும் பகலும் இறைவனை வணங்கு. நானும், உன் அன்னையும், உன் தங்கையும் உன்னை உயிரினும் மேலாகஎண்ணி, உன்னையே சதா நினைந்து வாழ்கின்றோம்".

"உன் அருமைத்தாய் நமது சோலையில் உள்ள மாமரத்தின் அருங்கனிகள் சில உனக்கு அனுப்புவதாக எண்ணி இருக்கின்றாள். நான் அடுத்த மாதம் இரண்டு தேதிக்குள் உனக்குப் பணம் அனுப்புகின்றேன். அதற்குள் நான் நமது பசுங்கன்றை விற்றுவிட்டு உனக்கு வேண்டிய பணத்தைப்பெற்று விடுவேன். நீ பணத்திற்காக மனம் வருந்தாதே."

"உன் பொருட்டு உன் தங்கை பார்வதி வேறு ஒரு வீட்டில் ஒரு குழந்தையை காலையிலும் மாலையிலும் அன்புடன் வளர்த்து அற்ப ஊதியம் பெற்று வருகின்றாள். அச்சிறு தொகையையும் உனக்கு அனுப்பும்படி என்னிடம் கூறினாள். நான் அவ்வாறே செய்கின்றேன். உன் நல்லன்னை உன் பொருட்டுத் தன் உணவையும் சுருக்கிக் கொள்கின்றாள். ஆனால் அதற்காக நீ வருந்தாதே. ஏனெனில், அவள் உன் பொருட்டு அன்பின் பெருக்கால் அவ்வாறு செய்கின்றாள். இதை வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

“கண்மணீ! கனிவுள்ள செல்வா! மேற் கூறிய விஷயங்களோடு எங்கள் மூவர் கனிமுத்தங்களையும் இக்கடிதத்தில் களிப்புடன் அனுப்புகின்றோம்.

இங்ஙனம்,

உன்னை உயிரினும் உயர்வாகக்கருதும்,

உன் தந்தை,

பரஞ்சோதி.”

பரமசிவன் மேற்கூறிய கடிதத்தை வாசித்ததும் அடக்கவொண்ணு மகிழ்ச்சி ஒருபுறத்திலும் சொல்ல வொண்ணு வருத்தம் ஒரு பக்கத்திலும் கொண்டான். அவன் அம்மூவரும் தன்னிடத்தில் கொண்டுள்ள அளவில்லா இன்ப அன்பை எண்ணி எண்ணி சொல்ல வொண்ணு மகிழ்ச்சி அடைந்தான். அவன் அக்கடிதத்தைத் திருப்பித்திருப்பி வாசித்தான். அவன் அங்ஙனம் வாசிக்கையில் அவனை அறியாமல் அவன் கண்களினின்றும் நீர் தாரைதாரையாக கடிதத்தில் விழுந்தன. அவன் அக்கடிதத்தைத் தன் உயிர் போல் நினைத்து அதைத்தினந்தோறும் தன் அறையிலுள்ள நாற்காலியின்மேல் அதைப் பன்முறை பார்க்கும் பொருட்டு வைத்தான். அவன் அந்நாற்காலியின் பக்கத்தில் தன் பாயை விரித்து தன் பாடம் முடிந்ததும், அதில் படுத்துக்கொண்டான். அவன் படுத்தவண்ணமே நெடுநேரம் கண்களை மூடிக்கொண்டு தன் தாய் தந்தையர் களங்கமற்ற உருவங்களையும் தன் தங்கையின் மாசில்லா வடிவத்தையும் நினைந்து நினைந்து, அவர்கள் அன்பில் திளைத்துக்கடைசியாகக் கடவுளை மனத்தே வணங்கித்தன்னை அறியாமல் நித்திரை

போய்விட்டான். அவன் தன் கனவில் தன் அன்னை தங்கள் மாமரத்தில் தனக்காக மாங்கனிகள் பறிப்பது போலவும், தன் தங்கை அயல்வீட்டுக் குழந்தையை அன்போடு அணைப்பது போலவும், தன் தந்தை பசுங் கன்றை விற்பனை செய்வது போலவும் கனவு கண் டான்.

அதிகாரம் ஆறு.

மறுநாள் பரமசிவன் தன் கல்லூரியில் தன்பாடங்களை எல்லாம் செவ்வனே கற்று, தன் ஆசியர் அளித்த அரும்புகழையும் பெற்று அன்று, மாலை மற்ற மாணவர்கள் பந்து விளையாடும் இடத்திற்குச் சென்றனன். அவனுக்குப் பந்தாட்டத்தில் அளவு கடந்த பிரியம் உண்டு. அவன் தன் கிராமத்தில் தான் வாசித்த பாடசாலையில் பந்தாடிய மாணவர்களில் தலைசிறந்து விளங்கினன். அவன் பந்தாட்டத்தின் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட சபைக்கு "(Foot-Ball Club)" காரியதரிசியாகவும் இருந்தான். அவன் அப்பாடசாலையில் கல்வி வளத்தில் சிறந்து விளங்கியதுபோல், பந்தாட்டத்தின் பண்பிலும் சிறந்து விளங்கினன். அவன் பந்தாட்டத்தில் ஒப்பற்ற ஆட்டக்காரனுக விளங்கியதால், அவனை இணையில்லாப் பந்தாட்டத் தலைவன் (Captain) என்றும் மாணவர்கள் புகழ்ந்து பேசினர்கள். அவன் தலைமை ஆசிரி

யர் சங்கரய்யரும் அவன் பந்தாட்டத்தின் திறத்தைப் பலவாறு புகழ்ந்திருந்தனர். கல்விச் சிறப்பில் ஒரு மாணவன் புகழ்பெறுவது எத்துணை அவசியமோ அவ்வாறே அவன் பந்தாட்டத்தின் திறத்திலும் புகழ் பெறுவது அவசியம் என்று அவ்வப்போது ஆசிரியர்கள் கூறிய நன்மதிகளைப் பரமசிவன் ஏற்றுக் கொண்டு, கல்வியிலும் பந்தாட்டத்திலும் தலைசிறந்து விளங்கினன். ஆனல், அக்கிராமத்தில் பந்தாடிய மாணவர்களுக்குப் பந்தாட்டத்தின் பற்பல விதிகளின் நுணுக்கங்கள் (Rules of Foot-ball Play) தெரியாது. அதுபோல் பரமசிவனும் அவ்விதிகளை நன்கு அறிய இடமில்லை. அவன் ஆட்டத்தில் ஆடத் துவங்கிவிட்டால், அதில் ஊக்கமும் வெற்றியின் நோக்கமுமே கொண்டு பிற விஷயங்களை மறந்து மிகுந்த உற்சாகத்தோடு ஆடுவான்.

பரமசிவன் இயற்கையில் பெரிதும் விருப்புடையவனுக இருந்தமையால், தான் புதிதாகச் சேர்ந்துள்ள கல்லூரியின் மாணவர்கள் அன்று மாலை பந்தாட்டம் ஆடுகையில் தான் ஒருபக்கம் நின்றுகொண்டு, அந்த ஆட்டத்தை ஆசையோடு பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தானும் அந்த ஆட்டத்தில் சேர்ந்து ஆடவேண்டும் என்று விருப்பம் இருந்தது. ஆனல், அவன் அதில் சேர்வதற்கு மாதம் எட்டணு கட்டவேண்டியதாக இருந்தமையால் அத்தொகையை எங்ஙனம் பெறுவது என்று எண்ணித்தான்கொண்ட எண்ணத்தை விட்டுவிட்டான். அவன் பணமில்லாமல் பந்தாட்டத்தைப் பார்த்துக்கொண்டாகிலும் மாலை வேளையில் காலத்

ளைதக் களிப்பாகக் கழிக்கலாமென்று கடைசியில் முடிவு செய்துகொண்டான்.

பரமசிவன் பந்தாட்டத்தைப் பார்த்தவண்ண மாக நிற்கையில், தன் கல்லூரியின் தலைமை ஆசிரியர் மாணவர்களின் கல்விமாட்சியைக் கண்ணுங்கருத்து மாகக் கவனிப்பதுபோல் அவர்கள் பந்தாட்டத்தின் மாட்சியையும் கண்ணுங்கருத்துமாகக் கவனிப்பவர். ஏனெனில், மாணவர்கள் கல்வி வளர்ச்சியினல் அறிவு வளர்ப்பதுபோல், பற்பல பந்தாட்டங்களின் வளர்ச்சியினல் தேக பலத்தையும் தேக வளத்தை யும் வளர்க்கவேண்டும் என்ற சிறந்த கொள்கையை அவர் உடையவர். அக்கருத்துப்பற்றியே தம் கல் லூரியின் மாணவர்களைப் பற்பல பந்தாட்டங்களும் வேறுவிதமான தேக வளத்திற்கு ஏற்ற விளையாடல் களும் விளையாடவேண்டு மென்று அவ்வப்போது போதிப்பது வழக்கம். அத்தகைய நல்ல அபிப்பிரா யத்தை மாணவர்கள் ஆட்டங்களில் கொண்டிருந்த அத்தலைமை ஆசிரியர் பரமசிவன் பந்தாட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பரிதாப நிலையைப் பார்த்து அவன்மீது பரிதாபம் கொண்டு, அவனை நோக்கி, "பரமசிவா, நீ ஏன் சும்மா நிற்கின்ருய்? நீயும் பந் தாட்டத்தில் சேர்ந்து விளையாடலாமே. மாலை வேளை யில் இத்தகைய ஆட்டம் அத்தியாவசியமே" என்று பொருள்பட ஆங்கில மொழியில் சொன்னர். பரம சிவன் பதில் அளிக்கத் திறமையற்று, அவரை நாணத்துடன் பார்த்து, தன் பரிதாப நிலையை விளக்க மனமில்லாதவனுய் மௌனம் சாதித்தான் தலைமை ஆசிரியர் தலைசிறந்த நுட்ப அறிவுபெற்றவ

ராதலால் பரமசிவன் பணக்கஷ்டத்தை அறிந்து கொண்டார். அவர் அவன் மாதத்திற்கு ஒருமுறை கட்டவேண்டிய எட்டணுத் தொகையைத் தானே கட்டிவிடலாம் என்று எண்ணினர். ஆனல், அவர் அத்தகைய செயல் பொருத்தமுடையதாகுமோ என்றும், அதை அறிந்த வேறு சில மாணவர்கள் பொய்யாக ஏழ்மையைக் காட்டித் தம்மிடத்தில் அத்தொகையைப் பெற எண்ணுவார்களோ என்றும் நினைத்து, தாம் கொண்ட விருப்பத்தை அப்போதே நிறைவேற்றவில்லை. இருப்பினும், அவர் பரமசிவனைப் பார்த்து, "நீ நாளைக்கு எப்படியும் பந்தாட்டத்தில் சேர்ந்துவிடுவாயாக. அது விஷயத்தில் நீ வீண் சிந்தனை கொள்ளவேண்டாம். மாலையில் மாணவர்களுக்கு ஏதாகிலும் ஓர் ஆட்டம் அத்தியாவசியமாகும்." என்று முடிவாகக் கூறிவிட்டுப் பந்தாட்டத்தைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

பரமசிவன் பந்தாட்டத்தில் தான் எவ்வாறு சேர முடியும் என்று ஆழ்ந்து சிந்திக்கலானன். அவன் அப்போதே மனக்கவலை புதிதாக அடைந்து, மாதத்திற்கு ஒருமுறை எட்டணு கட்டுவது சாத்தியமான காரியம் அல்ல என்று தீர்மானித்து, தன் வீடு போய்ச் சேர்ந்தான். அவன் தன் தாய் தந்தையருக்குப் பணக்கஷ்டம் இன்னும் அதிகமாக அளிக்கக் கூடாதென்று மனத்தில் எண்ணினன். அவன் தான் பகல் வேளையில் பட்டினியாக இருத்தலையும் எண்ணினன். அவனுக்கு அவ்வாறு பகலில் பட்டினியாக இருப்பதுகூட துன்பமாகத் தெரியவில்லை; ஆனல் மாலைவேளையில் ஆட்டம் இல்லாமல் இருப்

பதுதான் அவனுக்கு உண்மையில் வருத்தமாகக் காணப்பட்டது. இருப்பினும், அவன் ஆட்டத்தில் சேராமல், அதைப் பார்த்திருந்தாலே போதுமென்று எண்ணி இருந்தான். ஆனால் தன் தலைமை ஆசிரியர் தன்னை ஆட்டத்தில் மறுநாள் சேர்ந்துவிடவேண்மென்று கட்டளை இட்டமையால், அவன் அக்கட்டளையை எவ்வாறு மீறமுடியும் என்று எண்ணி, மனக் கவலையுடன் அன்று பாடங்களையும் படிக்காமல், தன் அறையில் பரிதாபமான நிலையில் விளக்கை ஏற்றி விட்டு ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஒரே சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

பரமசிவன் அந்நிலையில் இருக்கையில், அவன் வீட்டுக்காரர் சோமசுந்தரர் அவனை வந்து பார்த்தார். அவர் நல்லவுள்ளம் பெற்றவராதலால்,அவன் பரிதாப நிலையைப்பார்த்து, அவனைநோக்கி, "பரமசிவா! நீ ஏன் கவலையுறுகிறாய், உன் மனத்துயரத்திற்குக் காரணம் என்ன என்று வினவினார். பரமசிவன் பரிதாபமான குரலில், "அண்ணா! நான் பந்தாட்டத் தில் நாளையதினம் சேரவேண்டுமென்று என் தலைமை ஆசிரியர் கூறினார். எனக்கும் பந்தாட்டத்தில் அதிகப் பிரியம் உண்டு. ஆனால், அதில் சேர்வதற்கு மாதம் எட்டணா கட்டவேண்டும். என் தாய் தந்தையர் இருக்கும் எளிய நிலையில் இன்னும் அவர்களைப் பணம் கேட்க எனக்குப்பிரியமில்லை. நான் எவ்வாறு தலைமை ஆசிரியர் கட்டளையை நிறைவேற்றுவது என்று மனம் வருந்துகின்றேன்" என்று மொழிந்தான்.

சோமசுந்தரர் அவன் கூறியதைக்கேட்டு மன மிரங்கி, "பரமசிவா! வருந்தாதே. நம் அருகாமையி

லுள்ள மிட்டாய்க் கடைக்காரர் மகன் முதல் வகுப்பில் வாசிக்கிருன். அவனுக்கு நீ இரவில் ஒரு மணி நேரம் பாடம் சொல்லிக் கொடுத்தால், மாதம் இரண்டு ரூபாய் சம்பளம் அளிப்பதாக என்னிடம் கூறினர். நான் அதை உன்னிடம் சொல்லவே இப்பொழுது இங்கு வந்தேன். உனக்கு விருப்பம் இருந்தால், அம் மகனுக்கு நாளையதினமே பாடம் சொல்லத் துவங்குவாயாக. உனக்கு இரண்டு ரூபாய் முன் பணமாக வேண்டுமானல் வாங்கித் தருகின்றேன். நீ இவ்வயதிலேயே அச்சிறு தொகையைச் சம்பாதிக்கத் தொடங்கினல், பிற்காலத்தில் நீ பெரும் பணக்காரனுகவிளங்கக்கூடும். கடவுளே கொடுத்த இச்சிறு ஆசிரியத் தொழிலை நீ களிப்புடன் கைக்கொள்ளுவாயாக" என்று கூறினர்.

பரமசிவன் அவர் கூறிய எதிர்பாராத இன்பச் செய்தியைக் கேட்டதும் ஆனந்த பரவசனுனன். அவன் தனக்கு ஆண்டவன் காட்டிய கருணை மிகப் பெரிதேயென்று அப்பெருமானை மனத்தே தொழுதான். அவன் வாடிய முகம் சோமசுந்தரர் கூறிய மொழிகளைக் கேட்டதும் செந்தாமரைமலர்போல் மலர்ச்சியடைந்தது அவன் இனிய முகத்தில் பொன் முறுவல் மிளிர, அவன் சோமசுந்தரரை நோக்கி, 'அண்ண! நீங்கள் கூறிய எதிர்பாராத இந்நல்ல செய்தியை நான் கேட்டுப் பெருங்களிப்பு அடைகின்றேன். தாங்கள் விரும்பியபடி நாளையதினமே நான் அச்சிறுவனுக்குப் பாடம் சொல்லுகின்றேன். இதில், இரண்டு ரூபாய் முன் பணம் மாத்திரம் நாளைக் காலையிலேயே

வேண்டும். அப்போதுதான் நான் தலைமை ஆசிரியர் கட்டளையை நிறைவேற்றுவதோடு, என் உள்ளம் மகிழ நாளை மாலையிலேயே பந்தாட்டத்தில் சேர்ந்து மற்ற மாணவர்களோடு விளையாடுவேன். தாங்கள் புரியும் இந்த உதவியை நான் எப்போதும் மறவேன்" என்று சொன்னான். சோமசுந்தரர் அவன் கூறியதைக்கேட்டு மனமகிழ்ந்து, அவனை நோக்கி "நல்ல அறிவு ததும்பும் மைந்தா! நீ கொண்ட தீர்மானம் மிகவும் புகழத்தக்கது. நீ பேராசை என்னும் பேய்க்கு அடிமை ஆகாமல், பகவான் பரிந்து அளிக்கும் சிறிய தொகையை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தாய். நான் இப்போதே மிட்டாய்க்காரரிடம் சென்று, அத்தொகையைவாங்கிவந்து தருகின்றேன். அவர் அதைக்களிப்புடன் அளிப்பார்; அதைப்பற்றி உனக்குச் சந்தேகம் சிறிதும் வேண்டாம்." என்று கூறி அப்போதே அவ்விடத்தைவிட்டுப் பெயர்ந்தார்.

சுமார் கால்மணிநேரம் கழிந்ததும், சோமசுந்தரர் மிட்டாய்க் கடைக்காரரிடம் வெள்ளி ரூபாய்கள் இரண்டு புத்தம் புதிதாக வாங்கிவந்து, ஆசி கூறி, பரமசிவன் கையில் வைத்தார். பரமசிவன் அதுபோழ்து அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவன் தான் பணம் சம்பாதிக்கும் திறத்தை அச்சிறு வயதிலேயே பெற்று விட்டதை எண்ணிப் பேருவகை பூத்தான். அவன் இரண்டு புதிய வெள்ளி நாணயங்களைத் தன் கையில் பெற்றதும் தன் தந்தையையும் தன் தாயையும் தன் மனத்தில் தொழுதான். அவன் அவர்களுக்கு மேலும் துன்பத்தை வைக்காமல், பந்தாட்டத்தில் சுலபமாகச் சேர்வதோடு மீதியுள்ள சிறு

தொகையைச் சேர்த்து வைக்கவேண்டும் என்றும் தீர்மானித்தான்.

மறுநாள் பரமசிவன் விடியற்காலையில் எழுந்து தன் பாடங்கள் எல்லாவற்றையும் செவ்வனம் ஓதித் தெளிவுபெற்று தன் கல்லூரியை வழக்கப்படி ஒன்பதரை மணிக்கு அடைவானாயினன். அவன் பந்தாட்டத்திற்குச் சேரவேண்டிய எட்டணா தொகையை கேப்டனிடம் (Captain) அளித்துவிட்டு, ஆனந்தமாகத் தன் வகுப்பில் அமர்ந்து, ஆசிரியர் கேட்ட பற்பல வினாக்களுக்கும் சமர்த்தாகப் பதில் அளித்து, வழக்கம்போல் தனிச்சிறப்பு எய்தினான். அவன் நாலரை மணி எப்போது ஆகும் என்று ஆவலுடன் எதிர் பார்த்திருந்தான். பின்னர் மாலை நாலரை மணிக்கு மணி ஓசை வந்ததும் பரமசிவன் பரம சந்தோஷத்தோடு பந்தாட்டத்திற்குச் சென்றனன்.

பரமசிவன் பந்தாட்டத்தில் பெரிய விருப்பம் பெற்று இருந்ததுபோல் பேராற்றலும் பெற்றிருந்தான். ஆனால், அவனுக்குப் பந்தாட்டத்தின் பற்பல விதிகள் மாத்திரம் நன்கு தெரியாது. அவன் இளஞ் சிங்கம்போல் பந்தாட்டத்தில் பற்பல மாணவர்களை எளிதில் தாக்கிப் பந்தை வெகு சமர்த்தாகக் காலிலேயே தள்ளிக்கொண்டுபோய், வெற்றிக்குறி (Goal) பார்த்து அதை விசையாக உதைத்தான். அச்சமயம் அதைப்பார்த்துப் பல மாணவர்கள் பரமசிவன் திறத்தை வியந்து கரகோஷம் செய்தார்கள். தலைமை ஆசிரியரும் அதுபோழ்து, பந்தாட்டத்தை அங்கு வந்து பார்த்துக் கொண்டிருந்தமையால், பரமசிவன் எவ்வாறு கட்டணத் தொகையைச் செலுத்தி பந்தாட்

டத்தில் சேர்ந்து விட்டானென்று வியப்புற்று அவன் ஆட்டத்தில் ஆர்வமாக பந்தைச் செலுத்தும் திறமையைப்பார்த்து மகிழ்ந்தார். அவன் எட்டணு தொகையை எங்ஙனம் பெற்ருன் என்று அவர் சிறிதுநேரம் சிந்தித்துப் பின்னர் அத்தொகையைத் தானே கொடுக்கக் கொண்டிருந்த தீர்மானத்தை மாற்றி விட்டார்.

பரமசிவன் பந்தாட்டத்தின் விதிகளைச் செவ்வனம் அறியாமையாலும், கிராமங்களில் அவ்விதிகளை அவ்வளவு முக்கியமாக அனுசரிப்பதில்லை யாதலாலும் அவன் ஒருமுறை பந்து கோட்டுக்கு வெளியே (Outside) போய்விட்ட போதும் அதைத்தொடர்ந்து அவ்விடத்திலிருந்து வெற்றிக்குறிக்கு (Goal) விசையாக உதைத்தான். அப்போது எல்லா மாணவர்களும் தலைமை ஆசிரியரும் கொல்லென நகைத்தார்கள். பரமசிவன் மாத்திரம் தான் வெற்றி அடைந்து விட்டதாக எண்ணிக் களிப்புற்ருன். ஆனல், அவன் பின்னர் தன் அறியாமையை தலைமை ஆசிரியரால் அறிந்து நாணமடைந்தான். தலைமை ஆசிரியர் அவன் திறத்தையும், வீரத்தையும், வைராக்கியத்தையும் மெச்சி, அவனைத்தட்டிக் கொடுத்துப் புன்னகையுடன் நோக்கி, "பரமசிவா! நீ பந்தாட்டத்தில் பெரும் சமர்த்தன்; ஆனல், அந்த ஆட்டத்தின் விதிகளை நீ நன்ருக அறியவில்லை. உங்கள் பந்தாட்டச் சபையின் தலைவனிடமிருந்து (Captain) அவ்விதிகளைச் செவ்வனம் அறிந்துகொண்டு, நீ ஆட்டத்தில் தலை சிறந்து விளங்குவாயாக என்று கூறி அவனை உற்சாகப் படுத்தினர். பரமசிவனும் அவர் கூறிய

மொழிகளைப் பொன் மொழிகளாகக் கருதி, அவர் விரும்பிய வண்ணமே செய்வதாகக் கூறி, அவரைக் கைகூப்பி வணங்கினன். அன்று மாலைப்பொழுது அவனுக்கு மகிழ்ச்சியுடன் கழிந்தது. அவன் தன் வீடு சேர்ந்ததும் குறித்த நேரத்தில் மிட்டாய் கடைக் காரர் மகனுக்கு இன்முகத்தோடும் புன்முறுவலோடும் பாடம் கற்பிக்க ஆரம்பித்தான்.

———

அதிகாரம் ஏழு.

பரமசிவன் பள்ளி வாழ்க்கையில் பெருமையும் புகழும் பெற்று எல்லா மாணவர்களிலும் தலைசிறந்தவன் என்று ஆசிரியராலும் சிறிதுகாலம் கருதப்பட்டு வந்தான். அவன் தன் கல்வியில் சிறந்து விளங்கியதோடு தன் சிறு மாணவனுக்குத்தக்க கல்விகற்பித்து வந்தான். அவன் அத்தகைய சிறந்த பள்ளிவாழ்க்கையைப்பெற்று வருகையில், அவன் வகுப்பிலுள்ள மாணிக்க வாசகன் என்னும் மாணவன் நட்பைப் பெறுவானயினன். மாணிக்க வாசகன் பல வேலிகளைச் சொந்தமாகவுடைய ஒரு சிறு ஜமீன்தார் மகன். அவனுக்குப் பணக்கஷ்டம் இன்னதென்று தெரியாது. அவன் தனக்குத்தோன்றிய வண்ணம் அவன் தந்தை அவ்வப்போது அளித்து வந்த ஐந்து ரூபாய் பத்து ரூபாய் நோட்டுகளை மாற்றிமாற்றி செருக்குடன் செலவு செய்து வருவான். அவனேடு சில மாணவர்கள் சதா அவன் நிழல்போல் அவனைத் தொடர்ந்து அவனுடன் சிற்றுண்டியும் தேத்தண்ணீ

ரும், காப்பித்தண்ணீரும், மாலை வேளைகளிலும், வகுப்பில் சமயம்வாய்த்த வேளைகளிலும் அருந்தி வருவார்கள். அவன் அழகிய விலையுயர்ந்த ஆடைகளும், விரல்களில் வைர மோதிரங்களும், செவிகளில் ஒளி மிளிரும் உயர்ந்த இரவைக் கடுக்கன்களும் அணிந்து, அவ்வகுப்பில் ஒரு சிறு அரசகுமாரன்போல் மிளிர்ந்து வந்தான். அவனிடத்தில் அடிமையும் அச்சமும், அன்பும் கொள்ளாத மாணவன் ஒருவனுமே இலன் என்று கூறலாம்.

பரமசிவன் அவன் குறும்புத்தனத்தின் பயனை முன்னமே தன் தந்தை எழுதிய அருமைக் கடிதத்தை அபகரித்ததிலேயே பெற்று அனுபவம் அடைந்தான். அவன் அத்தகைய குறும்புகளையுடைய மாணவனைப் பெரிதும் வெறுத்தாலும், தன்னை அறியாமலேயே அவன் வசீகர தோற்றத்திலும், நகைச்சுவை ததும்பும் பேச்சின் மாட்சியிலும், மற்றமாணவர்களுக்குத் தளராமல் சிற்றுண்டி கொடுக்கும் குணத்திலும் அவனிடம் ஒரு புறத்தில் அதிக அன்பு கொண்டிருந்தான். பரமசிவன் அத்தகைய மாணவன் நட்பு தனக்கும் சாலச் சிறந்ததே என்று தன் இளமையின் மடமையினால் எண்ணிவிட்டான். அவன் விரும்பிய படியே மாணிக்க வாசகன் மாலை வேளைகளில் அவனோடு பந்து விளையாடலில் ஊக்கத்துடன் விளையாடி வந்ததால், அவன் சிறிது சிறிதாக அவன் சிறந்த நண்பனானான். இருப்பினும் பரமசிவன் தன் பாடங்களை ஓதுவதால் தளர்ச்சியடையாமல் மாணிக்கவாசகனோடு எங்கும் தொடர்ந்து செல்லாமல், தனிமையாகவே பாடசாலையின் கூட்டுறவு தவிர, வேறு கூட்

டுறவு வைத்துக் கொள்ளாமல், வெகு ஜாக்கிரதை யாக சிறிது காலம் கழித்து வந்தான். ஆனல், மாணவர்களின் மனப்பான்மை மற்ற மாணவர் களின் மனப்பான்மையோடு கலந்து விட்டால் நல்ல மாணவர்களாய் இருந்தால் நல்ல நோக்க மும், தீயமாணவர்களா யிருந்தால் தீய நோக்கமும் உண்டாய் விடுதல் இவ்வுலக இயற்கையாகும். அத்தகைய உலக இயற்கைக்குப் பரமசிவனும் பாத் திரனானன். சுருங்கச் சொல்லுமிடத்து, பரமசிவ னுக்கு மாணிக்கவாசகனைப்போன்ற மாண்புள்ள நண் பன் வேறு ஒருமாணவனும் இலன் என்று தோன் றிவிட்டது. ஆதலால், அவன் நாளடைவில் மாணிக் கவாசகன் கூட்டுறவால், தன் கல்வி வளர்ச்சியில் தளர்ச்சி அடைந்தான். இருப்பினும், அவன் அஞ் ஞான்றும் தன் வகுப்பு மாணவர்களுள் முதன்மையே பெற்றுவந்தான். அவன் முன்போல் எல்லாப்பாடங் களிலும் பழுத்த ஞானம் பெற்று வரவில்லை யென்று லும், தான் பெற்ற குறைந்த ஞானத்திலும் தன் வகுப்பு மாணவர்களுள் தலை சிறந்து விளங்கினன். ஆனல், அவன் கல்விவளம் குன்றி வருதலையும் பாடங்களில் பழுத்தஞானம் வழுவி வருதலையும் அவன் ஆசிரியர் புத்திசாதுரிய முடையவராதலால், செவ்வையாக அறிந்துவிட்டார். ஆதலால், அவர் அவனைப்பற்றி அடைந்திருந்த தலை சிறந்த அபிப் பிராயத்தில் சிறிது மாறுதல் கொள்வாராயினர்.

ஒரு நாள் பரமசிவன் ஆசிரியர், மற்ற மாணவர் கள் வகுப்பை விட்டுப் போனதும், அவனை மாத்திரம் வகுப்பிலேயே அமர்த்தி, அவனை நோக்கி, "பரம

சிவா! உன் குணமாட்சி தற்போது மாசுபடுகின்றது; கல்வி மாட்சியும் தளர்ச்சியுறுகின்றது; பாடங்களில் நீ பெற்றுவந்த பழுத்த ஞானம் இழுக்கடைகின்றது. உன் கூட்டுறவு சிறந்ததாகக் காணப்படவில்லை; நீ முன்போல் கல்வியில் ஊக்கமும் உயர்ந்த முயற்சியும் தற்போது காட்டுவதில்லை. உன் முயற்சியையும், உழைப்பையும் நீ அவசியம் அதிகரித்தல் வேண்டும்; இல்லையேல், உன் நல்ல பெயர் மாசடைவதோடு, நீ வருடாந்தரப் பரீட்சையிலும் முதன்மை பெற்றுப் பலரும் புகழப் பரிசும் பெறமாட்டாய். நான் உனக்குக் கொடுத்த இந்த எச்சரிக்கையையும் நன்மதியையும் மறவாமல், முன்போல் தலை சிறந்த மாணவனாகத் திகழ்வாயாக" என்று கூறி அவனுக்குத் தக்க உபதேசம் செய்து, அவனை வீட்டிற்கு அனுப்பினர்.

பரமசிவன் தன் மனையையடைந்ததும், தன் பாடங்களைப் படித்து முடித்ததும், தன் ஆசிரியர் அளித்த எச்சரிக்கையையும் நன்மதியையும் எண்ணி மனம் வருந்தி, தான் அத்தகைய குற்றத்திற்கு பாத்திரனானதை மனத்துள் வெறுத்து, தன் அறியாமையைத்தானே இகழ்ந்துகொண்டான். ஆனால், அவன் மறுநாட்காலை நெடுநேரங் கழித்துப் படுக்கையை விட்டு எழுந்தமையால், தான் வழக்கம்போல் செல்லுகின்ற தென்னஞ்சோலையில் சென்று அங்குள்ள கிணற்றில் ஸ்நானம் செய்யாமல் அவசரமாகத் தன் வீட்டிலேயே ஸ்நானம் செய்துவிட்டு அவசரமாக சோற்று விடுதியில் அன்னம் அருந்திவிட்டு அவசரமாகப் புத்தகப்பையை ஏந்திக்கொண்டு அவசரமாகவே காலையில் நடந்து தன் கல்லூரி இருந்த

சோலையில் புகுந்தனன். அப்போது பாடசாலை மணி ஓசை அவன் செவிகளில் விழவில்லை. கல்லூரி முழுவதும் நிசப்த நிலையை அடைந்து இருந்தது. அவன் அப்போது மணி அதிகமாய்விட்டது என்று அஞ்சி தேக நடுக்கத்துடன் தன் வகுப்பிற்குச்சென்ருன். அப்போது அவன் வகுப்பு ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்து விட்டார். பரமசிவன் பரிதாப நிலையைக்கண்டு மாணிக்கவாசகன் மகிழ்ந்து, பக்கத்திலிருந்த மாணவனிடம் இரகசிய மொழியில் பேசி நகைத்தான். எல்லா மாணவர்களும் பரமசிவன் வாடிய முகத்தைக் கண்டார்கள். அவன் ஆசிரியர் அவன் பெரிதும் அச்சமடைந்திருந்ததைக்கண்டு அவனை மருட்டாமல், அவனை நோக்கி, பரமசிவா! ஏன் இன்றைய தினம் இவ்வளவு நேரம் கழித்து வந்தாய்? மணி ஓசை எழுந்து பத்து நிமிடங்களாய் விட்டன. நல்லது, நீ உன் இடத்தில்போய் உட்காருவாயாக" என்று கூறி அவனிடம் பெருந்தன்மையும் தந்தை அன்பும் காட்டினர்.

பரமசிவன் அன்று முழுவதும் தான் கல்லூரிக்குக்காலம் கழித்து வந்ததை எண்ணி, மனம் புழுங்கித் தன் கிராமத்துத் தலைமை ஆசிரியர் அளித்த நன்மதியை மறந்ததை நினைந்து, தன்னையே தான் நொந்துகொண்டு, இனி எக்காரணம் பற்றியும் பாடசாலைக்கு நேரங்கழித்துச் செல்லக்கூடாதென்று தீர்மானித்து, அன்று பகலை இன்பமின்றிக் கழித்தான்.

மறுநாள் பரமசிவன் மாணிக்கவாசகன் நட்பை மறக்கவில்லை. அவன் அவனேடு நட்பு அதிகமாகக்

கொள்வானுயினுன். மாணிக்கவாசகன் அவன் மனத்தை அன்று மாலையிலேயே மாற்றிவிட்டான். மாணிக்கவாசகனுக்கு நெடுநேரம் பாடங்கள் படிப்பதும் இரவில் நெடுநேரம் தேகம் வருந்த உழைப்பதும் பேதைமையான செயல்களாகக் காணப்பட்டன. அவன் செல்வந்தன் மகனுகையால், ஒரு கவலையும் இல்லாதவனுய் காலத்தை இனிது கழித்து வந்தமையால், ஆசிரியர் அவ்வப்போது கூறி வந்த பொன் மொழிகள் புன்மொழிகளாகவே இருந்தன. அவன் பரமசிவனை நோக்கி, "பரமசிவா! நீ ஏன் வருந்துகின்ருய்? அதிகமாக உழைத்தால் உன் தேகம் பழுதடையும். நீ சிறிது வாசித்தாலே உனக்கு இயற்கையாக அமைந்துள்ள அறிவால் நீ இவ்வகுப்பை விட்டு மேல் வகுப்பிற்கு மாறவிடமுடியும். நீ ஏன் மேலும் மேலும் வாசித்துத் தலைவலி உண்டாக்கிக் கொள்கின்ருய்? மற்ற மாணவர்களைக் காட்டிலும் நீ சிறந்தவன் என்ற பெயரை அடைவது உன் சுயநலத்தைக் காட்டுகின்றது. நீ மற்ற மாணவர்களும் அவ்வப்போது வகுப்பில் பற்பல பாடங்களில் முதன்மை பெறுவதற்கு அனுகூலமாக இருக்கவேண்டும். நீயே ஆசிரியர் அன்பை யெல்லாம் அபகரித்துக் கொள்வது அழகல்ல. மேலும், நீ எல்லாப் பாடங்களிலும் ஒரு பிழையும் இல்லாமல் பேராற்றல் காட்டுவதால், மற்ற மாணவர்கள் அவமானமும், இழிவும் உன்னல் அடைகின்ருர்கள். ஆசிரியரும் மற்ற மாணவர்களை இரக்கமின்றி வைகின்ருர். சமயம் நேர்ந்தால், ரகசியமாகப் பிரம்படியும் பழுக்கக் கொடுக்கின்ருர். மற்றமாணவர்கள் துன்பத்திற்கும் இழிவிற்கும்

உன் உயர்ந்த கல்வியே காரணமாகும். இவ்வாறு நீ எப்போதும் ஒரு இன்பமும் இல்லாமல் உழைத்து வந்தால், உன் தேகம் மெலிவுற்று, நாளடைவில் நீ உலக வாழ்வையே இழக்க நேரிடும். ஆகையால், நீ இனிமேல் அளவாக வாசித்து என்னேடு அடிக்கடி வெளியே உலாவி அளவளாவி வாழவேண்டும். நான் இவ்வளவும் உன் நன்மைக்கே கூறினேன்'' என்று கூறி அவனை அன்போடு அணைத்துக்கொண்டு, பந்தாட்டம் ஆடும் இடத்திற்குச் சென்று, அவனேடு இன்புடனும் அன்புடனும் பந்து விளையாடினன்.

பரமசிவன் எத்துணைய வைராக்கிய முடையவனுக இருந்தாலும், மாணிக்கவாசகன் கூட்டுறவால் நாளடைவில் அவ்வைராக்கியத்தை இழக்கப்பெற்று, தன் கல்வி சம்பந்தமாக உரமாகக் கொண்டிருந்த உழைப்பும் குறையப்பெற்று, தலை மாணவன் வகுப்பிலிருந்து இடைமாணவன் வகுப்பைச் சேர்ந்து விட்டான் என்பதில் ஐயமில்லை. அவனுக்கு மாணிக்கவாசகனிடம் இன்னும் அதிக அன்பும் அதிக மரியாதையும் ஏற்பட்டுவிட்டன. அவன் மாணிக்கவாசகன் நகைச் சுவை ததும்பும் பேச்சிலும் அவன் ஈகைக் குணத்திலும் மதிப்பு கொண்டுவிட்டான்.

பரமசிவனுக்கும் மாணிக்கவாசகனுக்கும் சில மாதங்கள் கழிந்ததும், சிறந்த நட்பு உண்டாய் விட்டது. ஒரு நாள் மாலை அவன் மாணிக்கவாசகனேடு வெளியே உலாவச் சென்றான். அவர்கள் இருவரும் கடைத்தெருவில் உல்லாசமாகப் பலவித கடைகளையும் காட்சிகளையும் கண்டு களி பூத்தனர். பின்னர் மாணிக்கவாசகன் பரமசிவனை ஒருகாப்பி

ஹோட்டலுக்குள் அழைத்துக் கொண்டு போனன். அவர்கள் இருவரும் சிற்றுண்டியும் காப்பியும் இன்பமாகப் பேசிக்கொண்டே அருந்தினர்கள் மாணிக்கவாசகன் பரமசிவன் மனத்தைக் கல்வி விஷயமாக எவ்வளவு கெடுக்கக்கூடுமோ அவ்வளவும் கெடுத்தான். பரமசிவன் மாணிக்கவாசகன் பேசிய மாண்பில்லா மொழிகளை அறிவுத்ததும்பிய மொழிகளாகவே எண்ணிவிட்டான். அவன் மாணிக்கவாசகன் அன்பை மனத்துக்குள் பெரிதும் பாராட்டிவிட்டான். அவன் மாலை வேளையில் காப்பி பருகுதல் தேகத்திற்கு பலமும் உள்ளத்திற்கு உற்சாகமும் உண்மையில் கொடுக்கின்றது என்றும் எண்ணிவிட்டான். ஆனல், அவனுக்குத் தினந்தோறும் அவ்வாறு காப்பி பருகுவதற்குப் போதிய பணமில்லையேயென்று மனக்கவலையும் உண்டாயிற்று. மாணிக்கவாசகன் பரமசிவனைப் பிரிய சீடனாக்கிக் கொண்டு காப்பி ஹோட்டலுக்கு வெளியே வந்து, ஒரு வெற்றிலை பாக்குக்கடையில் ஒரு சிகரெட்டை வாங்கினன். அவன் அதை மிகவும் ஆர்வத்துடன் வாயில் வைத்துப் பிடிக்கவும் ஆரம்பித்தான்.

பரமசிவனுக்குச் சிகரெட்டைக் கண்டதும் உள்ளம் திடுக்கிட்டது; அது கொடிய பழக்கமாயிற்றே என்று அவன் பயந்தான். ஆனல் மாணிக்கவாசகன் அவ்வழக்கத்தை நெடுநாட்களுக்கு முன்னமே கைக்கொண்டு விட்டதால், அச்சமின்றி, அவன் முன்னர் அதைப்பிடிக்க ஆரம்பித்தான். ஆனல், பரமசிவனை மாத்திரம் அவன் சிகரெட்

பிடிக்கச் சொல்லவில்லை. பரமசிவன் மாணிக்க வாசகனுடன் பேசிக்கொண்டே நெடுநேரம் கழிந்து விட்டதால், அன்று அவன் மிட்டாய்க் கடைக்காரன் மகனுக்குப் பாடமும் சொல்லவில்லை. தன் பள்ளிப் பாடங்களையும் படிக்கவில்லை. அவன் அன்று இரவு இன்னமுது அருந்தியதும், துயில் கொள்வானாயினன். அவன் மறுநாள் விடியற்காலையில் எழுந்து, தன் பாடங்களை ஒருவாறு வாசித்துவிட்டு, வழக்கமாகச் செல்லும் தென்னஞ்சோலைக்கும் செல்லாமல், தன் வீட்டிலேயே ஸ்நானம் செய்துவிட்டு, அவசரமாக அன்னம் அருந்தி, கல்லூரிக்குச் சரியாக பத்து மணிக்குப் போய்ச் சேர்ந்தான். அவன் அன்று பாடங்களை முன்போல் சிறப்பாகச் சொல்லாமையால், ஆசிரியர் அவனை வகுப்பில் பலமாணவர்கள் முன்னிலையில் இழிவாகக் கூறினர். பரமசிவன் மறுபடியும் அவ்வாறு பாடங்களை நன்ருகப் படிக்கா மல் போனல், அவன் தண்டனையடைவானென்றும் அவர் அவனைக் கண்டித்தார். அப்போது பரமசிவ னுக்குப் பயமும் நாணமும் உண்டாகவில்லை; அவன் மாணிக்கவாசகன் முகத்தை அப்போது பார்த் தான். மாணிக்கவாசகன் புன்னகை பூத்தான்; பரமசிவன் தன்னை ஆசிரியர் கண்டித்தது தனக்கு விருப்பமே என்றும் அது மற்ற மாணவர்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் என்றும் மடத்தனமாக எண்ணி விட்டான்.

பரமசிவன் முன்போல் ஆசிரியரிடத்தில் நல்ல பெயர் பெறவில்லை. இருந்தாலும், அவனே அப் போதும் வகுப்பில் முதன்மை பெற்றிருந்தான்

அவன் அடிக்கடி தன் தாய் தந்தையரின் வறுமையையும், அவர்கள் தன் பொருட்டு அடையும் வாழ்க்கையின் கொடுமையையும் நினைந்து, தனக்கு உண்டாகிய சோம்பலைத் தனக்குள்ளேயே நிந்தித்து, அதை அகற்றிப் பழைய ஊக்கத்தை மறுபடியும் கைப்பற்றி, கல்வியில் சிறப்புற்று வந்தான். அவன் அவ்வெண்ணம் கொண்டபோதெல்லாம் மாணிக்க வாசகன் கூட்டுறவைத் தந்திரமாக நீக்கிவந்தான். ஆனால், மாணிக்க வாசகன் தன் பேச்சின் நயத்தாலும், பணத்தின் சிறப்பாலும் பரமசிவனைத் தன் அடிமையாக்கி வந்தான்.

பரமசிவன் கல்லூரியில் சேர்ந்து பல மாதங்கள் கழிந்ததும், வருடாந்தரப் பரீட்சை நெருங்கிவிட்டது. அப்போது பரமசிவனுக்கு அளவில்லா அச்சமுண்டாய்விட்டது. அவன் தான் வாசித்து வந்த அளவு போதாதென்றும், தான் பரீட்சையில் தேர்ச்சி அடைய முடியுமோ என்றும் அஞ்சினான். அவன் அவ்வகுப்பைவிட்டு மேல் வகுப்பிற்குச் சென்றால் போதுமென்ற எண்ணமும் கொண்டுவிட்டான். அப்போதுதான் அவன் தன் குற்றத்தைச் செவ்வனம் உணர்ந்தான். பரீட்சைக்கு ஒருவாரம் இருக்கையில்தான் அவன் இரவும் பகலும் ஓயாமல் படிக்க ஆரம்பித்தான். அவன் வைராக்கியத்துடன் ஒரு வாரம் நன்றாக வாசித்து வருடாந்தரப் பரீட்சைக்குச் சென்றான்.

பரமசிவன் பரீட்சைகளில் தான் விரும்பிய வண்ணம் கேள்விகளுக்குத் தக்க விடைகள் எழுதவில்லையென்றும் சில கேள்விகளுக்குப் பொருத்த

மற்ற நீண்ட பதில்களை எழுதிவிட்டதாகவும், பல தெரிந்த கேள்விகளுக்கும் போதிய நேரம் இன்மையால் விடைகள் எழுதாமல் வந்து விட்டதாகவும் எண்ணியெண்ணி மனம் வருந்தினன். மொத்தத்தில் அவன் பரீட்சையில் சரியாக எந்தப் பாடத்திலும் விடைகள் எழுதவில்லையென்று பெரிதும் அச்சமுற்றதால், தனக்கு ஒன்பதாவது வகுப்பிற்குப் போகும் புண்ணியம் உண்டாகுமோ உண்டாகாதோ என்று பயந்தான். அவனுக்கு பரீட்சை, முடிந்த பின்னர் அவனுக்கு நல்லறிவு வந்ததால் பயனில்லையென்று அவனுக்குத் தோன்றிற்று. அவன் பரீட்சையின் முடிவைப் பயத்துடன் எதிர்பார்த்திருந்தான். பரீட்சை விடைத்தாள்கள் ஒரு வாரமாகக் கல்லூரி ஆசிரியர்களால் திருத்தப்பட்டு வந்தன. ஒருவாரம் ஆசிரியர்கள் தத்தம் வகுப்பு மாணவர்களைத் தங்களுக்குத் தோன்றிய கதைப்புத்தகங்களை வாசிக்கும்படியும், தங்களுக்குத் தோன்றிய கணக்குகளைப் போடும்படியும் சொல்லிக் கவலையின்றிக் காலத்தைக் கழித்து வந்தனர். ஆனல் மாணவர்கள் மனங்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. மாணவர்கள் பற்பல பாடங்களில் வாங்கிய குறிகள் (Marks) வெகு இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஒரு வாரமாக மாணவர்கள் அடைந்த அச்சம் மிகப் பெரிதேயாகும். பரமசிவன் கொண்ட அச்சத்திற்கு அளவே இல்லை.

ஒரு வாரம் கழிந்ததும் கல்லூரியின் வருடாந்தரக் கொண்டாட்டம் நடைபெறலாயிற்று. அன்றைய தினம் மாணவர்களே தங்கள் கல்லூரியை பலவித கொடிகளாலும் பச்சை இலைகளாலும் அலங்காரம்

செய்தனர். பரமசிவனும் சில பச்சை இலைகள் கொண்டு வந்து, சுவர்களில் அலங்கரித்தான். அன்று மாலை ஆறு மணியாயிற்று. மாணவர்கள் அனைவரும் கல்லூரியின் பெரிய கூடத்தின் (Hall) ஒரு மூலையில் கூடினார்கள். மத்தியில் பொதுமக்கள் நாற்காலிகளில் அமர்ந்தார்கள். ஆசிரியர்களும் கன வான்களும் மேடையின்மேல் அமைக்கப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள். அன்றைய கொண் டாட்டத்திற்கு அந்த நகரிலிருந்த கலெக்டர் (Collector) தலைமை வகித்தார். அவர் கல்லூரியை அடைந்ததும், தலைமை ஆசிரியர் அவருக்குத் தக்க மரியாதை அளித்து அவரை அன்புடன் அனைவரும் கூடி இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். கலெக்டர் அவர்களைக் கண்டதும், ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் இருப்பிடங்களை விட்டு எழுந்து கரகோஷம் செய்தார்கள். கலெக்டர் தமக்கு அமைக்கப்பட்டிருந்த பற்பல அலங்காரங்களோடு விளங்கிய நாற்காலியில் அமர்ந்ததும் தலைமை ஆசிரி யர் அவருக்குப் பூமாலை சூட்டினார். தலைவர் பூமாலையை அணிந்து, அங்கு கூடியிருந்த அனைவரை யும் நோக்கி, "பெரியோர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே! நான் இன்று இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் பெருமையை அடைந்தமைக்குப் பெரிதும் சந்தோஷமடைகின்றேன். தலைமை ஆசி ரியர் எனக்கு அளித்த இப்பெருஞ் சிறப்பின் அன் பைப் பாராட்டி அவருக்கு வந்தனம் அளிக்கின் றேன். இன்பகரமான இந்நிகழ்ச்சியில் நான் உங்க ளோடு கலந்து இன்பமடைகின்றேன். நான் கூற

வேண்டிய சில மொழிகளை கடைசியில் கூறுகின்றேன்" என்று சொல்லி தலைமை ஆசிரியரைக் கல்லூரியின் வருடாந்தர அறிக்கையை வாசிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

தலைமை ஆசிரியர் தலைவர் கட்டளையின்படி வருடாந்தர அறிக்கையை நீண்ட நேரம் வாசித்தார். தலைமை ஆசிரியர் எப்பாடசாலையிலும் வழக்கமாகச் சொல்வதுபோல், தம் கல்லூரிக்குப் போதிய முதற் பணம் இல்லையென்றும், துரைத்தனத்தார் இன்னும் அதிக தொகை கல்வி விருத்தியின்பொருட்டு அளிக்க வேண்டுமென்றும், பொதுமக்களும் தரும சிந்தனையுடன் பெரும்பணம் உதவி செய்யவேண்டும் என்றும் வாசித்து முடித்தார். அவர் அவ்வறிக்கையை வாசிக்கும் வரையில் பல மாணவர்கள் தங்கள் மகிழ்ச்சியை மறந்து தலைவலியும் வரப்பெற்றனர். தலைமை ஆசிரியர் வருடாந்தர அறிக்கைப் பத்திரத்தை வந்துள்ள சபையினர்க்கு வழங்கிவிட்டுத்தாம் முக்கியமான விஷயங்களைமாத்திரம் வாசித்திருந்தால் நலமாக இருக்குமென்று கலெக்டருக்குத் தோன்றிற்று. ஆனால், அவர் அதை வெளியே சொல்லாமல், அடுத்தபடி நடக்கவேண்டிய நிகழ்ச்சி யாதென்று வினவினர். முன்னமே விளம்பரம் செய்தபடி முதலில் முனிசாமியென்னும் மாணவனும், பின்னர் பரமசிவன் என்னும் மாணவனும் சில பாடங்களை ஆசிரியர்கள் கற்பித்தவண்ணம் நடிப்புடன் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். முனிசாமி யென்னும் மாணவன் பத்தாவது வகுப்பைச் சேர்ந்தவன். அவன் பாடும்போது ஒரு பேயின் ஆவேசம் எத்

தன்மைத்து என்று வீரத்துடன் காட்டினான். பரமசிவன் எட்டாவது வகுப்பு மாணவனாக இருந்தாலும், ஆசிரியர் போதித்தவண்ணம் தன் பாடலைப்பாடியபோது ஒரு குடியானவன் மகள் கடலில் மாய்ந்தாள் என்ற இடத்தில் கண்ணீர் விட்டுக் கதறிப்பாடினான். சிறு மாணவன் அவ்வளவு வருத்தத்துடன் நடித்துக்காட்டியது சபையோர்களுக்கு வியப்பையும் களிப்பையும் அளித்தது.

பரமசிவன் முன்போல் தன் பாடங்களில் சிறந்து விளங்கவில்லை எனினும், அவன் ஆசிரியர் அவனையே தான் நடிப்புக்குத்தேர்ந்து எடுத்தார்.

பின்னர் சிறிது நேரம் கழிந்ததும், உதவித் தலைமை ஆசிரியர் மேடையின் மீது சென்று கீழ் வகுப்புகளிலிருந்துமேல் வகுப்புகளுக்கு மாற்றப்பட்ட மாணவர்களின் பெயர்களையும், அவ்வகுப்புகளில் கல்விச்சிறப்பால் பரிசு பெற வரையப்பட்ட மாணவர்களின் பெயர்களையும், கலெக்டர்முன்னிலையில் வாசிக்கத்தொடங்கினார். அச்சமயம் அங்கு குழுமியிருந்த மாணவர்கள் பலர் வருடாந்தரப் பரீட்சையில் தங்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ என்று பெரிதும் பயந்து, உதவித் தலைமை ஆசிரியர் முகத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தனர். பரமசிவன் எல்லாமாணவர்களைக் காட்டிலும் அதிக பயமும் மனக்குழப்பமும் கொண்டிருந்தான். அவன் தனக்கு ஒன்பதாவது வகுப்பிற்குப் போகும் புண்ணியம் கிடைக்குமோ கிடைக்காதோ என்று பெரும் பயங்கொண்டிருந்தான். ஏனெனில், அவன் வருடாந்தரப் பரீட்சை

யில் வினக்களுக்குத் தக்க விடைகள் தான் விரும்பிய வண்ணம் அளிக்கவில்லை; பல கேள்விகளுக்குப் பதில் அளவுக்குமேலும், சில கேள்விகளுக்கு மிக சுருக்கமாக விடைகளும், வேறு சில கேள்விகளுக்கு விடைகள் எழுதப் போதிய நேரமின்மையால் விடைகள் எழுதாமலும் இருந்தான். அவன் பரீட்சைக்காக உழைத்த உழைப்பும் போதிய அளவு இல்லை; கடைசியில், ஒரே வாரம் அவன் அல்லும் பகலும் பாடங்களை வாசித்தானேயன்றி அதன் முன்னர் அவைகளை ஒழுங்காக வாசிக்கவில்லை. மேற்கூறிய காரணங்களால் பரமசிவன் தன் பரீட்சையின் முடிவை திகிலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

உதவித்தலைமை ஆசிரியர் ஒன்பதாவது வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பிற்கு மாற்றப்பட்ட மாணவர்களின் பெயர்களை அவரவர்கள் பரீட்சையில் பதில் அளித்த நிலைமைக்கு ஏற்ப, வரிசைக் கிரமமாக வாசித்துக்கொண்டுவந்தார். மேல் வகுப்பிற்கு மாற்றப்பட்ட மாணவர்களின் பெயர்களை வாசித்து முடிந்ததும், உதவித்தலைமை ஆசிரியர் அவ்வகுப்பில் முதல் பரிசும் இரண்டாவது பரிசும் பெற வேண்டிய மாணவர்களின் பெயர்களையும் வாசித்தார். பரிசு பெறப் போகும் மாணவர்களின் பெயர்களை அவர் வாசித்ததும், அங்கு கூடியிருந்த சபையோர்களும் மாணவர்களும் கரகோஷம் செய்தார்கள். ஆனல் பரமசிவன் மனம் பெருங்குழப்பத்திலிருந்தமையால், அவன் மாத்திரம் மௌனம் சாதித்து, உதவித் தலைமை ஆசிரியர் முகத்தையே பார்த்துக்கொண்டு, உள்ளம் நடுங்கிய

வண்ணம், தன் கதியென்னவாகுமோ என்று கட வுளைத் தியானித்துக் கொண்டிருந்தான்.

பத்தாவது வகுப்புக்கு மாற்றப்பட்ட மாணவர் களின் பெயர்கள் வாசிக்கப்பட்டதும், உதவித் தலைமை ஆசிரியர் சபையோர்கள் செவ்வனம் கேட் கும் பொருட்டு, "எட்டாவது வகுப்பிலிருந்து ஒன்பதாவது வகுப்பிற்கு மாற்றப்பட்ட மாணவர்கள்" என்று சொல்லி யதும், பரமசிவன் அவரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். தான் கையில் வைத்திருந்த குறிப்பை எடுத்து, எட்டாவது வகுப்பிலிருந்து ஒன்ப தாவது வகுப்பிற்கு மாற்றப்பட்ட மாணவர்களின் பெயர்களை அவர் வாசிக்கத் தொடங்கினர். அவர் சபையோரை நோக்கி, அங்ஙனம் மாணவர்கள் பெயர்களை வாசிக்கையில், முதலாவதாக கோவிந்த சுவாமியின் பெயரையும், இரண்டாவதாகப் பரம சிவன் பெயரையும், அதன் பின்னர் மற்ற மாணவர் களின் பெயர்களையும் வாசித்தார். பரமசிவன் தன் பெயர் ஒன்பதாவது வகுப்பிற்கு மாற்றப்பட்ட மாண வர்களின் பெயர்களில் இரண்டாவதாக இருந்ததைக் கண்டு அளவில்லா மகிழ்ச்சி அடைந்தான். அவன், "ஆண்டவனே! பிழைத்தேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தான் முன்னர் இழந்த தைரியம் மீண்டும் வரப்பெற்று குதூகலத்துடன் மலர்ந்த முகத்தோடு மேடையைப் பார்த்த வண்ணமாயிருந் தான். அவனுக்கு மேல் வகுப்புக்குச் செல்லும் யோக்கியதை வந்ததே போதுமென்று தோன்றிவிட் டது.

பின்னர் உதவித் தலைமை ஆசிரியர் எட்டாவது வகுப்பில் பரிசு பெறப்போகும் மாணவர்களின் பெயர்களை வாசித்தார். அப்பெயர்களில் முதல் பரிசு வாங்க வேண்டியவன் பெயர் கோவிந்தசாமி என்றும், இரண்டாவதுபரிசு வாங்க வேண்டியவன் பெயர் பரமசிவன் என்றும் வாசித்தார். அப்போது பரம சிவன் தனக்கும் ஒரு பரிசு வந்து விட்டதைப்பற்றி மிகுந்த வியப்படைந்தான். அவன் தான் காலம் இன்மையால் விடப்பட்ட வினுக்களுக்கு மாத்திரம் விடைகள் அளித்திருந்தால் தானே முதல் பரிசு பெறலாமென்று எண்ணிக்கொண்டான். அப் போது தான் அவன் தன் காலத்தை மாணிக்கவாச கன் கூட்டுறவால் வீணுக்கிய பெருங்குற்றத்தை எண்ணி மனம் வருந்தினுன். இனியாகிலும் அவன் அக்குற்றத்தை மீண்டும் புரியாமல் காலத்தைக் கல்வி யில் செவ்வனே கழித்து எல்லா மாணவர்களிலும் தலை சிறந்த மாணவனுகத் திகழவேண்டும் என்று தீர் மானித்துக் கொண்டான்.

பரமசிவன் தன் கல்வி சம்பந்தமாக மேற்கூறிய வாறுமுடிவு செய்த பின்னர் கோவிந்தசுவாமியின் கல்வி வளத்தைப்பற்றி சிறிது எண்ணுவாளுயினுன். கோவிந்தசுவாமிஎன்னும் மாணவன் தன் வகுப்பில் இரண்டாவது வரிசை மாணவர்களில் ஒருவனுக இருந்து, ஆசிரியர் கேட்ட வினுக்களுக்கு நிதானமாக நின்று நின்று விடையளித்துக் கொண்டிருந்தவன். அவன் சர்வ சாதாரணக்கல்வியே மற்ற மாணவர் களைப்போல் சிறிது காலம் பெற்று வந்தான். பின் னர் அவன் கல்வியில் கண்ணுங்கருத்துமாக இருந்து,

தினந்தோறும் முறைப்படி காலத்தை வீணாக்காமல் ஒழுங்காகக் கல்வி வளர்ச்சிக்காக உழைத்து வந்தான். அவன் எதிலும் துரிதம் கொள்ளாமல் நிதானத்துடனும் மனவமைதியுடனும் ஆழ்ந்த சிந்தனை செலுத்திப் பல பாடங்களையும் ஒழுங்காகப் படித்து வந்தமையால் அவன் நாளடைவில் கல்வியில் மிகவும் சமர்த்தனாகி வருடாந்தரப் பரீட்சையில் பரமசிவனையும் வென்று விட்டான். அவன் மெதுவாகவும் ஒழுங்காகவும் பாடங்களைப் படித்து வந்தமையால் அவனே கடைசியில் தலைசிறந்த மாணவனானன்.

பரமசிவன் கோவிந்தசுவாமியென்னும் மாணவனை வகுப்பில் ஒரு நாளாகிலும் மதித்ததில்லை; அவனை ஒரு சிறந்த மாணவனாக எண்ணி அவனோடு பேசியதுமில்லை. கோவிந்தசுவாமி ஆசிரியர்கள் கேட்ட கேள்விகளுக்கு நிதானமாகத் தடுமாற்றத்துடன் விடைகள் அளித்துக் கொண்டுவந்ததை அவன் நகையாடிக் கொண்டிருந்தவன். அத்துணைய தாழ்ந்த நிலையிலிருந்த கோவிந்தசுவாமி என்னும் மாணவன் தன் தளராத உழைப்பினாலும் தன் காலத்தைக் கல்வியில் கழித்ததாலும் நாளடைவில் அத்துணைய சிறந்த மாணவனாகி வருடாந்தரப் பரீட்சையில் தன்னையும் வென்று விட்டானே என்று எண்ணி தன்னையே தான் இகழ்ந்து கொண்டான். அவனுக்கு அப்போது மாணவர்கள் கீழ் வகுப்பில் வாசிக்கும் “முயலும் ஆமையும்” என்னும் கதை கவனத்திற்கு வந்தது. அவன் தானே முயலென்றும் கோவிந்தசுவாமி ஆமையென்றும் எண்ணிக் கொண்டான். அவன் கடைசியில் ஆமைதானே பந்

தயத்தில் வென்றது என்றும் முதல் பரிசு பெறும் சிறப்பைப் பெற்றவன் கோவிந்தசுவாமி தானே யென்றும் எண்ணித் தானும் இனிமேல் அவனைப் போலவே தளராமல் உழைத்துத் தனிச் சிறப்பை அடுத்த ஆண்டில் அடையவேண்டு மென்றும் தீர் மானித்துக்கொண்டான்.

உதவித் தலைமை ஆசிரியர் மற்ற வகுப்புகளின் மாணவர்களின் பெயர்களை வாசித்து முடித்ததும், சபைக்குத் தலைமைபூண்டிருந்த கலெக்டர் அவர்கள் பரிசு பெறவேண்டிய மாணவர்களின் பெயர்களை அழைத்துப் பரிசுகள் அளிப்பாராயினர். பரமசிவன் பெயர் அழைக்கப்பட்டதும் அவன் தன் அழுக்குச் சட்டையுடனும் நகைப்புக்கு இடமாகிய தொப்பியுட னும் குள்ள உருவத்துடனும் மனக்குழப்பத்தோடு மேடைக்குச் சென்றதைக் கண்ட மாணவர்களும் சபையோர்களும் குலுங்கக் குலுங்க நகைத்தார்கள். மாணவர்கள் அச்சிறுவன் அவ்வளவு எளிய நிலையி லும் மற்ற மாணவர்கள் மதிக்கும்படி மேடையில் நடிப்பும் வகுப்பில் பரிசும் பெற்றதைப் பெரிதும் வியந்து பேசிக்கொண்டனர். பரமசிவன் கலெக்டர் அவர்கள் கையால் மகிழ்ந்தளித்த மாண்புள்ள பரிசுப் புத்தகத்தைத் தலைவணங்கி வாங்கிக்கொண்டு அவரை நமஸ்கரித்து மேடையை விட்டு இறங்கிய போது சபையோர்கள் அனைவரும் கரகோஷம் செய் தனர். அப்போது பரமசிவனுக்கு ஒரு வித புதிய உற்சாக உணர்ச்சியும் தன்னைப்பற்றி ஒரு தனி மதிப்பும் உண்டாய் விட்டன. பரிசுகள் அளித்தான தும் கலெக்டர் அவர்கள் தம் இருக்கையை விட்

டெழுந்து சபையோர்களை நோக்கி, “அறிஞர்களே! அன்புள்ள மாணவர்களே! நீங்கள் இதுகாறும் பொறுமையுடன் இங்கு நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்புற்றீர்கள். நீங்கள் காட்டிய பொறுமைக்கு நான் உங்களுக்கு வந்தனம் புரிகின்றேன். உலகில் கல்வியே ஒருவருக்கு அழிவில்லாத பொருள் என்று நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். கல்வியினல் தான் ஒருவர்க்கு உயர்வும் செல்வமும் மதிப்பும் பதவியும் உண்டாகின்றது. ஆகையால் இங்குள்ள மாணவர்கள் கல்வியைத் தங்கள் கண்போல் கருதி அதைச் சிறக்கக் கற்க வேண்டும். பரிசு பெற்ற மாணவர்கள் தங்களை மிகச்சிறந்தவர்களாக எண்ணுதல் கூடாது. பரிசு பெருத மாணவர்கள் தங்களைத் தாழ்ந்தவர்களாகவும் கருதுதல் கூடாது. அவர்கள் இன்னும் அதிகமாகக் கவனித்தால் தாங்களும் சுலபமாக பரிசு பெறலாம் என்றுதான் எண்ணவேண்டும். எல்லா மாணவர்களும் எல்லாவற்றைக் காட்டிலும் சிறப்பாக உண்மையையும் ஒழுக்கத்தையும் எண்ண வேண்டும். அவர்கள் கற்றபடியே நிற்க முயலவேண்டும். மாணவர்களே பிற்காலத்தில் சிறந்த நகரவாசிகளாகவும் பொது நல உழைப்பாளிகளாகவும் திகழ்வார்கள். உங்களுக்குக் கல்விநலமும், ஒழுக்க நலமும் குண நலமும் உண்டாகுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். இக்கல்லூரி இன்னும் சிறந்த நிலையை அடைந்து பல மாணவர்களைச் சீரிய நிலையில் கல்வியில் விளங்கச்செய்து பொது மக்கள் பெருமதிப்பைப் பெறவேண்டும் என்றும் பொருள் உதவி இன்னும் பலகனவான்கள் செய்ய முன்வரவேண்டும்

என்றும் நான் எல்லாம் வல்ல இறைவனைக் கேட்டுக் கொள்கின்றேன். கடைசியாக என்னைத் தலைமை வகிக்கும்படி என்னைக் கௌரவித்த உங்கள் தலைமை ஆசிரியருக்கு நான் என் மனப்பூர்வமான வந்தனத்தை அளிக்கின்றேன். மற்றும் இங்குக் கூடியுள்ள அறிஞர்களாகிய உங்களுக்கும் மாணவர்களுக்கும் என் வந்தனத்தையும் ஆசியையும் முறையே அளிக்கின்றேன். இக்கல்லூரியின் விருத்தியில் கடவுள் அருள் புரிவாராக என்று கூறித்தன் முடிவுரையை நிகழ்த்தினர்.

கடைசியாக தலைமை ஆசிரியர் கலெக்டர் அவர்களுக்குத் தக்க மரியாதை புரிந்து அவரது சிறப்பைப்பற்றிச் சபையோர்களுக்கும் மாணவர்களுக்கும் எடுத்துக் கூறிப் பின்னர் எல்லோருக்கும் வந்தனமளித்துக் கூட்டத்தைக் கலைத்தனர்.

பரமசிவன் பரம சந்தோஷத்துடன் கல்லூரியின் வருடாந்தர விடுமுறை பெற்று மேல் வகுப்பிற்குச் செல்லும் புண்ணியமும் பெற்றுக் கல்விச் சிறப்பின் அறிகுறியாக ஒரு பரிசும் அடைந்து தன் வீட்டுக்கு உற்சாகத்துடன் சென்றான். அவனைப்பலமாணவர்கள் தொடர்ந்து சென்று அவன் புகழை மெச்சியும், சாதாரணக் கல்வியையுடைய கோவிந்தசுவாமி முதல் பரிசு பெற்றதை இகழ்ந்தும் தங்கள் இருப்பிடம் சென்றனர். பரமசிவன் மாத்திரம் கோவிந்தசுவாமியின் மேல் கோபங் கொள்ளாமல் அவன் கல்வி உழைப்பின் மேல் பொறாமை கொண்டு, அவனை அடுத்த ஆண்டில் வெல்லவேண்டுமென்று

தீர்மானித்து மறுநாள் தன் கிராமத்திற்குச் செல்ல சமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாய், அன்றிரவு ஒன்றும் படிக்காமல் தாயையும், தந்தையையும், தங்கையையும் எண்ணிக் கொண்டே அவர்கள் முகங்களைக் கருத்தில் கண்டு ஆனந்த நித்திரை புரியலானான்.

அதிகாரம் எட்டு.

மறுநாட் காலை பரமசிவன் பெருங்களிப்புடன் படுக்கையை விட்டெழுந்தான். அவன் அன்றைய தினம் பிற்பகல் அரிபுறம் என்னும் தன் கிராமத்திற்குப் பிரயாணம் செய்ய அவன் வீட்டிலிருந்த பெரியார் ஏற்பாடு செய்தார். அப்பெரியார் பரமசிவன் கல்விச்சிறப்பை மெச்சி அரிபுறமென்னும் கிராமத்திற்குப் பிரயாணம் செய்யும் தம் நண்பர் ஒருவரிடம் அவனை அனுப்பினர். பரமசிவன் அவருடன் ஒற்றைமாட்டு வண்டியில் சிறிது தொகைப் பணம் கொடுத்துப் புறப்படலானான். அவ்வீட்டுப் பெரியவரிடம் விடை பெற்றுக்கொண்டு தன் உடைகள் அடங்கிய பெட்டியையும் சில புத்தகங்களையும் தான் பரிசு பெற்ற புத்தகத்தையும் மிகவும் பத்திரமாக எடுத்து ஒற்றைமாட்டு வண்டியில் கொண்டுபோய் வைத்தான். அவ்வண்டியில் பிரயாணம் செய்யப் புறப்பட்டவர் வயது முதிர்ந்த ஒரு கிழவனவான். அக்கிழவன் தன் மனைவியையும் அரிபுறமென்னும் கிராமத்திற்கு அவ்வண்டியில் அழைத்

துச் சென்றான். அவள் மிகுந்த கோபமும் கொடூரமு முடைய தேகம் பருத்த வசீகரமற்றஒரு கிழவி. அவள் எப்போதும் கடுகடுப்பாகவே பேசும்இயல்புடையவள்; காரணமின்றியே வீண்சண்டைக்கு இழுக்கும் தன்மை யுடையவள். அத்தகைய இழிந்த குணமுள்ள வயது சென்ற பருத்த மங்கையோடு பரமசிவன் பிரயாணம் செய்ய நேர்ந்தது அவன் செய்த தீவினைப் பயனே யாகும்.

அக்கிழவி ஒரு பெரிய பெட்டியையும், அநேக செப்புப் பாத்திரங்களையும், படுக்கையையும் கொண்டு வந்து வண்டியில் நிரப்பினாள். பரமசிவன் பெட்டிக் கும் புஸ்தகங்களுக்கும் படுக்கைக்குமே அவ் வண்டி யில் இடமில்லை. அந் நிலையில் அவன் வண்டியில் அமர இடம் பெறுவது அசாத்தியமான காரியமாக இருந் தது. இருப்பினும், அவன் மூன்று நாள் வண்டியில் பிரயாணம் செய்யவேண்டி யிருந்ததால் அவன் வண் டியின் முனையில் ஒருபுறமாக ஒதுங்கிச் சிறிது இடத் தில் அமருவானாயினான். வண்டியின் அடிப்பாகத்தில் வழிப் பிரயாணத்திற்கு மாட்டிற்கு தீனியாக ஒரு பெரிய வைக்கோல் சுமை கட்டப்பட்டிருந்தது. அவ் வண்டியை இழுத்துச்சென்ற மாடு குள்ளமாக இருந் தாலும் தேக வன்மை யுடையதாக இருந்தது.

வண்டிக்காரன் மனைவி தானே முக்கால் வண்டி யின் இடத்தை அடைத்துக்கொண்டு அமர்ந்த போதி லும் பரமசிவனை கோபத்துடன் நோக்கி மனத்தில் முணு முணுத்துக்கொண்டு பரமசிவன் பெட்டியை மேலும் மேலும் பின்னுக்குத் தள்ளிக்கொண்டே. போனாள் பரமசிவன் சினங்கொள்ளாமல் பொறு

மையையே பொருளாகக் கருதி அக் கொடியவள் புரிந்த சேஷ்டைகளை எல்லாம் சகித்துக் கொண்டே போனன். அவன் தான் பரிசு பெற்ற புஸ்தகத்தை மாத்திரம் வர்த்தமானப் பத்திரிகைகளில் பத்திரமாகச் சுற்றி ஒருசிறு மூட்டையாகக் கட்டித் தன் கையிலேயே வைத்துக் கொண்டான். அவன் அப்பரிசை நோக்கும்போது தான் பிரயாணத்தில் அடைந்த துன்பங்களைப் பொருட்படுத்தவில்லை.

ஒற்றை மாட்டுவண்டி கரடு முரடான வழிகளையும், சிறு ஓடைகளையும், சிற்ருறுகளையும் வழியில் கடக்க வேண்டியதாக இருந்தது. ஆதலால், பரமசிவன் பல இடங்களில் வண்டியை விட்டுக் கீழே இறங்கி வெகு தூரம் நடக்க வேண்டியவனுனன். சில இடங்களில் அவன் கீழே இறங்கி, மாட்டிற்குச் சகாயமாக வண்டியைப் பின் புறத்திலிருந்து தள்ள வேண்டியதாகவுமிருந்தது. வழியில் நெடுநேரம் வண்டிக்காரன் மனைவி குரட்டைவிட்டு நித்திரை புரிந்து கொண்டு போனள். பரமசிவன் அக்கொடியவள் அந்நிலையிலும் நித்திரை புரிந்து சென்றதைக் கண்டு ஒரு புறத்தில் வியப்பும் ஒரு புறத்தில் மனக் கொதிப்பும் கொண்டான். அவள் தன் சுகத்தையே பெரிதாகக் கருதி இளைஞனுகிய தன்னைக் கருணையின்றித் துன்பத்திற்குள்ளாக்கிச் சென்றதை ஆண்டவன் எங்ஙனம் பொறுப்பானே என்றும் எண்ணினன். அவள் நித்திரையை விட்டெழுந்தபோதெல்லாம் பரமசிவன்மேல் குறை கூறிப் புலிபோல் சீறி அவனை நிந்தித்துக் கொண்டே போனள் பரமசிவன் அப்போதும் அவள் மீது சினங் கொள்ளாமல் மௌனம் சாதித்த வண்ணமாய் வண்டியை விட்-

டுக் கீழே இறங்கி நெடுந்தூரம் நடந்து செல்வானாயினன். பின்னர் அப்பாதகி அயர்ந்து நித்திரை புரியும் சமயம் பார்த்து பரமசிவன் மீண்டும் வண்டியில் ஏறி அமர்ந்து ஓரத்தில் ஒட்டிக்கொண்டே சிறிது தூரம் செல்வான். அவன் அத்தகைய கடுமையான பிரயாணத்திலும் மனம் கலங்காமல், தான் பெற்ற பரிசைத்தன் உயிரினும் சிறந்ததாக பாதுகாத்துக்கொண்டு தன் அன்னைக்கும் பிதாவுக்கும் தங்கைக்கும் அதைக் காண்பித்து மகிழ்விக்கும் எண்ணத்திலேயே தனது சிந்தையைச் செலுத்தி அவர்களின் அன்பும் கனிவும் ததும்பிய முகங்களைப் பார்க்கும் ஆசையைப் பெரிதுங் கொண்டு இன்புடனே பிரயாணம் செய்தான்.

மூன்றும் நாள் பகல் ஒரு மணிக்குப் பரமசிவன் அரிபுற மென்னுங் கிராமத்தை அடைந்தான். அச்சமயம் அக்கிராமத்தின் பாடசாலை மாணவர்கள் பகற் போஜனத்திற்குத் தத்தம் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். அவர்களில் பலர் பரமசிவனைக் கண்டு குதூகலம் அடைந்து, இன்னமுது அருந்தவும் செல்லாமல் அவனோடு அவன் மனைக்குச் சென்றார்கள். அவர்கள் காட்டிய அன்பின் ஆரவாரத்தை வண்டிக்காரன் மனைவி கண்டு, கடுஞ்சினங்கொண்டு, பரமசிவனிடம் சில மொழிகள் பகர்ந்தாள். பரமசிவன் வண்டியைவிட்டு உடனே இறங்கி, அவளுக்கு ஒரு பதிலும் அளிக்காமல், தன் கிராமத்திற்கு வந்துவிட்ட பெருங்களிப்பினால் மற்ற மாணவர்களோடு அன்புடன் சம்பாஷித்துக்கொண்டு வண்டியின் பின்னரே சென்றான். அவன் வழியில் அரசமரத்தடியிலிருந்த பிள்ளையார் கோவிலைக்கண்டு, கைதொழுது வணங்கி, தனக்

குத் தெரிந்த கிராமவாசிகள் சிலர் வழியில் வந்தமையால், அவர்களுக்குப் புன்முறுவலுடன் நமஸ்காரம் புரிந்துகொண்டு, தன் அருமையான மனையை ஆவலுடன் நோக்கிச்சென்றான். வழியில் தபாலாபீஸ் தலைவர் பகற்போஜனம் முடித்துவிட்டு, ஒருநாற்காலியிலமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டு இருந்தார். அவர் சிறிதுயில் புரிந்துகொண்டிருந்ததை அறியாத பரமசிவன் அவரைப்பார்த்து சிறுநகை பூத்து, அவருக்கு நமஸ்காரம் செய்தான். ஆனால், அவர் அவனுக்குப் பிரதி நமஸ்காரம் புரியவில்லை. அவன் அதைப் பொருட்படுத்தாமல் பல மாணவர்கள் உடன் சூழத்தன் வீட்டிற்குச் சென்றான். அவன் தங்கை பார்வதி அவன் வந்ததை வயலில் கேள்விப்பட்டு, அங்கிருந்து ஓட்டமாக ஓடித் தன் தலைசிறந்த அன்பு நிறைந்த தமையனை அடைந்து, அவனை அன்புடன் அணைத்துக்கொண்டாள். பரமசிவன் பண்புமிக்க நல்லன்னை தன் அருமைச் செல்வனை ஆர்வத்துடன் அணைத்து ஆனந்தக்கண்ணீர் உகுத்தாள். அவன் களங்கமில்லாத் தந்தை விரைவாக ஓடி வந்து, தன் செல்வமகனைத் தழுவிக்கொண்டார். அத்தகைய அன்பின் நிகழ்ச்சிகளைக் கண்குளிரக்கண்ட மாணவர்கள் பரமசிவனை இன்னும் மிகுதியாகப்புகழ்ந்தார்கள்.

பரமசிவன் அன்புள்ள மாணவர்கள் தனக்குக் காட்டிய நட்பின் திறத்தை வியந்து மகிழ்ந்து, அவர்களிடம் இனியமொழிகள் பகர்ந்து, அவர்களைத் தத்தம் இல்லங்களுக்குச் செல்லுமாறு இயம்பினான். அவன் அவர்களைப் பின்னர் பார்ப்பதாகவும், நெடு

நேரம் அவர்களோடு சம்பாஷணை புரிவதாகவும் அவர்களிடம் சொல்லியனுப்பினன். அவர்கள் பரமசிவனை பரீட்சையில் தேர்ச்சியடைந்தானு என்று வினவினர்கள். அவன் அவர்களிடம் தான் பரீட்சையில் தேர்ச்சி அடைந்தது மன்றிப் பரிசும் பெற்று இருப்பதாகக்கூறி, அப்பரிசுப் புத்தகத்தையும் அவர்களுக்குக் களிப்புடன் காட்டினன். அப்புத்தகம் மிகவும் புதிதாகவும், பொன்வர்ணம் கொடுக்கப்பெற்று பளபளப்பாகவும் காணப்பட்டது. அதைக் கண்ட அப்பாடசாலையிலுள்ள மாணவர்கள் பரமசிவனை மிகவும் சிறந்த மாணவனென்று எண்ணினர்கள். அன்று பகல் அவர்களில் சிலர் பரமசிவனின் மீது கொண்ட அன்பின் பெருக்கால் போதியநேரமின்மையால், பகற்போஜனத்தையும் இழந்து, பாடசாலைக்கு நேராகப் போய்விட்டார்கள். சில மாணவர்கள் மிக அவசரமாக அன்னத்தை அருந்தி, பாடசாலைக்குக் குறித்த நேரங்கழித்துச் சென்றூர்கள். அங்ஙனம் சென்ற மாணவர்கள் சிலரை அப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் சங்கரய்யர் தண்டிக்க வந்தபோது அவர்கள் அப்பாடசாலை மாணவன் பரமசிவன் அன்று பகல் தங்கள் கிராமத்திற்கு வந்ததாகவும் அவர்கள் அவனுக்கு அன்புள்ள வரவேற்பு அளித்ததாகவும் கூறித் தண்டனையினின்றும் தப்பினர்கள். தலைமை ஆசிரியர் சங்கரய்யரும் பரமசிவனிடம் சிறந்த அன்புபெற்று இருந்ததால் பரமசிவன் கல்வி சம்பந்தமாக அம்மாணவர்களைச் சில கேள்விகள் கேட்டுக் களிப்புற்று அவர்களிடம் தாம் பரமசிவனைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பத்தைத்

தெரிவிக்குமாறு கூறினர். அவர்கள் அவ்வாறே செய்வதாகச் சொன்னார்கள்.

பரமசிவன் பெட்டியையும் படுக்கையையும் புத்தகக் கட்டையும் பார்வதி பெருங்களிப்புடன் வீட்டிற்குள் கொண்டுபோய் வைத்தாள். வண்டிக்காரன் மனைவி அப்போதும் முணுமுணுத்தாள். அவள் முகத்தில் மலர்ச்சி என்பதே காணப்படவில்லை. அவளை ஒருவரும் பொருட்படுத்தவும் இல்லை. வண்டிக்காரன் தன் வண்டியைத் தன் இருப்பிடத்திற்குக் கொண்டு போய்விட்டான்.

பரமசிவன் தன் வீட்டைச்சேர்ந்ததும் தன் அன்புள்ள அன்னை அளித்த இன்னமுதை எட்டுத் தயிரோடு கலந்து உண்டான். அவன் அன்னை இன் சுவை அமுது தன் செல்வமைந்தனுக்கு இன்முகத்துடன் அருகே அமர்ந்து ஊட்டினள். அவன் அத்தகைய அன்பின் மாட்சியை அனுபவித்து ஏறக்குறைய ஓர் ஆண்டு ஆய்விட்டது. அவன் இன்னமுது செய்கையில் அவன் தந்தையும் தங்கையும் ஒருபுறத்தில் அவன் அருகே அமர்ந்து அவனுடன் இன்பமாகவே சம்பாஷணை புரிந்து கொண்டிருந்தனர். பரமசிவன் தந்தை அவனிடம் அவன் தங்கை பார்வதி அயல் வீட்டுச்செல்வந்தன் மனைவிக்கு சிறு பணி செய்து மாதம் ஒரு ரூபாய் சம்பளமும் ஒருவேளை அன்னமும் பெறுவதாகக் கூறினர். அவர் தாமும் தம் வயலில் தளராமல் உழைப்பதாகவும் தம் மனைவி மனங்கோணமல் அவன் பொருட்டுத்தன் உண்டியை இன்னமும் சுருக்கிக்கொண்டு வருவதாகவும் இயம்பி

ஞர். அவர்கள் மூவரும் தன் பொருட்டு அவ்வளவு தேகக்கஷ்டம் எடுத்துக்கொள்கையில் தான் மாத்திரம் தன் பழைய ஊக்கத்தில் தளர்ந்து இருப்பதைப் பரமசிவன் எண்ணி மனம் நைந்தான். இருப்பினும் அவன் அதை அவர்களிடம் சொல்லாமல் தானும் ஒரு மிட்டாய்க்கடைக்காரன் மகனுக்குப்பாடம் சொல்லி மாதம் இரண்டு ரூபாய் பெறுவதாகவும் சொல்லி அவர்களை மகிழ்வித்தான். அவன் அத்தொகையில் எட்டணு தன் பந்தாட்டத்திற்கு மாதாமாதம் அளிப்பதாகவும் மீதித் தொகையைச் சேமித்து வைப்பதாகவும் சொன்னன். அவன் தன் அன்னையினிடம் எல்லா மாணவர்களும் காலையில் காப்பி அருந்துவதாகவும் பகலில் சிற்றுண்டி உண்பதாகவும் தான் மாத்திரம் அவையிரண்டுமின்றிக் காலம் கழித்ததாகவும் கூறினன்.

பரமசிவன் தாய் தன் மைந்தன் கூறியதைக் கேட்டு மனம் வருந்தி அடுத்த ஆண்டிலிருந்து அவனையும் பகலில் ஒரு கோப்பைக் காப்பி குடிக்கும்படி கூறினள். அச்செலவிற்குப் பரமசிவன் சம்பாதிக்கும் தொகையேபோதுமென்று மொழிந்தாள். பரமசிவனும் பரம சந்தோஷத்துடன் அந்த ஏற்பாட்டிற்கு இணங்கினன். அந்தோ! பாவம் பரமசிவன் அதுவரையில் தான் சேமித்து வைத்ததொகையில் ஒரு பையும் செலவு செய்யவில்லை. அவன் தன் தாய் தந்தையர் அனுமதிபெற்றே அத்தொகையைச் செலவு செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தான். பரமசிவன் தந்தை தம் மைந்தன் காப்பி அருந்துவதற்கு இசையவில்லை. அவர் காலையில் எழுந்ததும் ஒரு

மாணவன் ஒரு கோப்பை கஞ்சி சாப்பிட்டால் போதும் என்று சொன்னர். ஆனல், அவர் மனைவி தன் மைந்தனுக்கு அதிகாலையில் கஞ்சி செய்து கொடுப்பவர் யாரென்று சொல்லி அவன் தான் சம்பாதிக்கும் தொகையைக் கொண்டே மற்ற மாணவர்களைப்போல் பரமசிவனும் பகற்பொழுதில் ஒரு கோப்பை காப்பியாகிலும் பருகுவது நியாயமே என்று முடிவாகக் கூறினள். அதைக் கேட்ட பரமசிவன் தங்கையும் அது நியாயமேயென்று சொல்லிப் பரமசிவனை அவ்வாறே அடுத்த ஆண்டில் ஒரு கோப்பை காப்பி தினந்தோறும் பருகும்படி பகர்ந்தாள்.

பரமசிவனும் அவர்கள் கூறிய மொழிகளைக் கேட்டு சந்தோஷமடைந்தபோதிலும் அவனுக்கு அடுத்த ஆண்டில் மிட்டாய்க்கடைக்காரன் தன் மகனுக்குத்தன்னை ஆசிரியனுக வைத்துக் கொள்ளமாட்டானே என்ற எண்ணம் உண்டாயிற்று. ஏனெனில் அவன் மாணிக்கவாசகன் கூட்டுறவால் மிட்டாய் கடைக்காரன் மைந்தனுக்குத் தினந்தோறும் பாடம் ஒழுங்காகப்போதிக்கவில்லை. ஆகையால் அவன் பரமசிவனை ஆசிரியனுக வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அவ்விஷயத்தைப் பரமசிவன் தன் வீட்டுக்காரப்பெரியவர் மூலமாகத் தெரிந்துகொண்டான். ஆதலால், அவன் தான் மாணிக்கவாசகன் கூட்டுறவை விரும்பியதின் குற்றத்தை நன்குஅறிந்து மனம் வருந்தினன். தன்னைச் சார்ந்த மூவரும் தன் பொருட்டு அவ்வளவு கஷ்டம் எடுத்து உழைக்கையில் தான் மாத்திரம் சோம்பலென்னும் பாவிக்கு அடிமை

யாகி மாணிக்கவாசகனென்னும் மாணவனுக்குச் சீடனுகித்தன்மதிப்பையும் பெருமையையும் இழந்து வாழ்வது துரோகமான செயலாகும் என்று கருதினுன். அவன் இனிமேல் மாணிக்கவாசகன் நட்பை மறந்துவிடவேண்டுமென்றும் இரவும் பகலும் சலிக்காமல் உழைத்துக் கல்வியில் தலை சிறந்து விளங்கி தன் வகுப்பில் முன்போல் முதல்மாணவன் என்னும் மதிப்பைப்பெற்றுக் கோவிந்தசுவாமியையும்வெல்ல வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான்.

பரமசிவன் அக்கிராமத்துப் பாடசாலைத்தலைமை ஆசிரியர் சங்கரய்யர் விரும்பிய வண்ணம் தன் தந்தையுடன் அப்பாடசாலைக்குச் சென்றுன். அவன் சங்கரய்யரிடம் தான்-எட்டாவது வகுப்பில் கல்வியில்மிகச் சிறந்து விளங்கியதையும், பரீட்சையில் தேர்ச்சி அடைந்ததையும் தன் கல்விச் சிறப்பின் அறிகுறியாகப் பரிசுபெற்றதையும் எடுத்துக் கூறினுன். சங்கரய்யர்அவன் கூறியதைக்கேட்டுப்பெரிதும்சந்தோஷமடைந்து அவன் கல்லூரியில் ஆசிரியர்கள் கல்வி போதிக்கும் திறத்தைப் பற்றிய சில கேள்விகள் கேட்டார். பரமசிவன் அவைகளுக்குத் தக்க விடைகள் அளித்தபோதிலும் அவர் அவைகளைப்பொருட்படுத்தாமல், அவ்வாசிரியர்களின்மேல் பல குறைகள் சொல்லஆரம்பித்தனர். அவர் தம்மைப்போல்திறமை வாய்ந்த நல்லாசிரியர் வேறு எவருமே இலர் என்று எண்ணிக்கொண்டார். பரமசிவன் அவர் அபிப்பிராயத்தைத் தடுக்காமல் மௌனம் சாதித்து சங்கரய்யரின் பேதைமையை மனதுக்குள் இகழ்ந்தபோதிலும் அவன் அவர்மீது வைத்திருந்த அன்பு ஒரு

சிறிதும் குறையவில்லை. அவனுக்கு அவரிடத்தில் அளவு கடந்த அபிமானமும் மதிப்பும் வியப்பும் உண்டு. அவன் அவரிடம் சிறிது நேரம் சம்பாஷணை புரிந்து தானே அக்கிராமத்திலுள்ளமாணவர்கள் எல்லோரிலும் சிறந்த மாணவனென்று எண்ணிக் கொண்டு ஒரு வித செருக்குடன் தலைமை ஆசிரியர் சங்கரய்யரிடம் விடைபெற்றுக்கொண்டு தன் தந்தையுடன் வீடுபோய்ச்சேர்ந்தான்.

பரமசிவன் தன் விடுமுறை நாட்களைத் தன் பெற்றோர் கூட்டுறவிலும் தங்கையின் தனி உறவிலும் இன்பமாகக் கழித்தனன். அவன் அவர்கள் அன்பை எண்ணியெண்ணி இன்புற்றான். அவன் அவர்கள் கனிவிலும் அன்பிலும் திளைத்துக்காலத்தைக் கழித்துவந்ததால் அவன் பெற்றிருந்த விடுமுறை நாட்கள் வெகு விரைவில் கழிந்துவிட்டன. அவனுக்கு அவர்களை மீண்டும் விட்டுப்பிரியும் காலம் வந்துவிட்டதே என்ற வருத்தம் உண்டாய்விட்டது. இருப்பினும் அவன் அவர்கள்பொருட்டே அப்பிரிவை உற்சாகத்துடன் கைக்கொள்ள வேண்டியது அவசியமே என்று நினைந்து, மனத்திடம் பெற்று, மறுமுறையும் அவர்களைப் பிரியத்துணிந்தான். அம்மூவரும் அவனைப்போலவே அவன் நலத்தின்பொருட்டும், தங்கள் குடும்ப நலத்தின் பொருட்டும், அவன் இன்னும் சிறந்த கல்வி பெறவேண்டியது அவசியமேயென்று எண்ணி அவன் பிரிவை ஒருவாறுசகித்துக் கொள்ள மனத்திடம் பெற்றார்கள்.

பரமசிவன் தந்தைக்கு தம் மைந்தனுக்கு அடுத்த ஆண்டிற்கு வேண்டிய தொகையை எவ்வாறு பெறு

தல் என்று மனஏக்கம் உண்டாயிற்று. ஆனல் அவர் மனம் தளராமல் தம்மிடமிருந்த பசுவையும் கன்றையும் விற்றுப் பரமசிவன் கல்விச் செலவிற்கு வேண்டிய தொகையைப் பெற்று அவனிடம் அதை அன்புடன் அளித்து, அவனுக்கு நல்லாசி கூறிக்கடவுள் அருளைவேண்டித் தம்மைந்தனை அம்பை நகருக்கு அனுப்பிவிட்டார். பரமசிவனை விட்டுப்பிரிந்த மனத்துயர் அம்மூவரையும் சிலதினங்கள் பெரிதும் வாட்டியது. பரமசிவனும் சொல்லொணுத்துயரம் அவர்கள் பிரிவால் அடைந்தான். அவன் கடைசியாக அம்மூவர் மாசில்லா இன்பஅன்பை மனத்தில்தனக்குத் துணையாக எண்ணிக்கொண்டு அம்பை நகர் போய்ச் சேர்ந்தான்.

அதிகாரம் ஒன்பது.

பரமசிவன் அம்பை நகர்போய்ச்சேர்ந்ததும், தன் கல்விமாட்சியில் இன்னும் சிறந்து விளங்கவேண்டுமென்றும் அதற்கு முன் ஆண்டில் பரீட்சை சமயத்தில் பயந்ததுபோல் மீண்டும் அச்சம்கொள்ளவேண்டியதன்மையில் தன் கல்வி வளம் குன்றுதல் கூடாதென்றும் மாணிக்கவாசகனிடம் இனி நட்புவைத்துக்கொள்ளுதல் தவறு என்றும் எண்ணினன். அவன் தினந்தோறும் தன் கல்வியை முறைப்படி ஒழுங்காக கற்கவேண்டுமென்றும் கல்வி சம்பந்தமான தேகஉழைப்பில் சற்றும் தளர்ச்சி அடைதல் கூடாதென்றும் தனக்குள்ளேதீர்மானித்துக்கொண்டான். அவன் தன் தந்தை அளித்த பணத்தைக்

G-,3NVBLP
N52

கொண்டு ஒன்பதாவது வகுப்பிற்கு (Fifth Form) வேண்டிய புத்தகங்களைப் புத்தம் புதிதாக வாங்கிக் கொண்டு களிப்புடனும் செருக்குடனும் தன் கல் லூரியில் ஒன்பதாவது வகுப்பில் முதல் வரிசையில் முதலாவது இடத்தில் போய் அமர்ந்தான். அவன் பக்கத்தில் மற்றொரு மாணவன்கோவிந்தசுவாமி உட் கார்ந்தான். அவனைப் பார்த்ததும் பரமசிவன் அவன் மீது வெறுப்பும் பொறாமையும் அடைந்தான். ஏனெனில், பரமசிவன் அக்கோவிந்தசுவாமியால் அல்லவா தனக்கு எட்டாவது வகுப்பில் முதல் பரிசு வராமல் போய்விட்டது என்று எண்ணினான். இருப் பினும், அவன் கோவிந்தசுவாமியை ஒன்பதாவது வகுப்பில் தான் வெல்வது வெகு எளிதேயென்றும் தன் அறிவின் மாட்சிமை கோவிந்தசுவாமியின் அறி வின் மாட்சிமையைவிட எத்தனையோ மடங்கு அதி கம் என்று இறுமாந்தான்.

பரமசிவன் அங்ஙனம் அமர்ந்திருக்கையில், அவன் நண்பன் மாணிக்கவாசகன் அவனிடம் வந்து அப்போது ஆசிரியர் இல்லாமையால் அவனைத் தட் டிக் கொடுத்து முகத்தில் நகை ஒளிர அவனை நோக்கி, "பரமசிவா! நீயும் ஒன்பதாவது வகுப்பிற்கு மாற்றப்பட்டாய்; நானும் அதே சிறப்பை அடையப் பெற்றேன்; நீயாகிலும் நன்றாக வாசித்துப் பரீட் சையில் தேர்ந்தாய்; ஆனால் உன்னோடு மேல் வகுப் பிற்கு ஆசிரியர்கள் என்னை மாற்றியது பெரிதும் வியக்கத்தக்கதே; அந்தோ! பாவம்! இவ்வாண்டும் ஐந்து மாணவர்கள் எட்டாவது வகுப்பில் நிறுத்தப் பட்டார்கள். அவர்களில் நானும் ஒருவனாக இருந்

TAMIL NADU ARCHIVES LIBRARY
104517

திருக்கவேண்டும். ஆனல், எனக்கு நல்ல அதிர்ஷ்டம் இருந்தது" என்று சொல்லுகையில் ஆசிரியர் வந்துவிட்டார். அவன் விரைவில்போய் கடைசி வரிசையில் கடைசி இடத்தில் அமர்ந்துகொண்டான்.

பரமசிவன் அப்போது மாணிக்கவாசகனை முழு மூடன் என்று எண்ணினன். அவன் கடைசிஇடத்தில் அமர்ந்து கொண்டதை கேவலமாக எண்ணுமல் கௌரவமாக எண்ணிக்கொண்டதைக்கண்டு பரமசிவன் அவன்மீது பரிதாபம்கொண்டான். மாணிக்கவாசகனும் தான் அவ்விடத்தில் அமர்ந்துகொண்டது தனக்குச் சுகம் தரும் என்றும் அங்கிருந்தபடியே பரமசிவனை அவ்வப்போது நேரில் ஆசிரியர் அறியாமல் நோக்கி நகைப்பதற்கு வசதியுடையது என்றும் கருதினன். அவன் தான் எண்ணியபடியே அன்று ஆசிரியர் பற்பல பாடங்கள் போதிக்கையில் சிற்சில சேஷ்டைகள் செய்துகொண்டு பரமசிவன் மெச்சும் பொருட்டு அவனைப்பார்த்துப் பார்த்துப் பரிகாசம் செய்துகொண்டிருந்தான். பரமசிவன் பாடங்கள் அன்றைய தினம் முற்றிலும் பாழாயின.

அன்று மாலை கல்லூரிமாணவர்கள் கலைந்ததும் பரமசிவனும் மாணிக்கவாசகனும் வழக்கம்போல் பந்தாட்டம் ஆடிப்பின்னர் இருவரும் பயனற்ற விஷயங்களைப் பேசிக்கொண்டு தத்தம் இல்லங்களுக்குச் சென்றனர்.

பரமசிவன் அன்று இரவு ஒன்பது மணி ஆனதும் தன் பாடங்களைப் படித்துவிட்டு வீட்டிற்கு வெளியே சற்று உலாவ வந்தான். அப்போது சாலை

யில் மக்கள் கூட்டம் கூட்டமாக அந்நகருக்குப் புதிதாக வந்த ஓர் சிறந்த சர்க்கஸ் ஆட்டத்தை ஆவலுடன் கண்டு களித்துச்சென்றனர். அந்த சர்க்கஸின் கூடாரம் அந்நகரின் ஒருபுறத்திலுள்ள பரந்த மைதானத்தில் போடப்பட்டிருந்தது. அக்கூடாரத்தின் பக்கத்தில் போடப்பட்ட சிறு கூடாரங்களில் பலயானைகளும் குதிரைகளும் இருந்தன. சிங்கங்களும் புலிகளும் கூண்டுகளில் மிளிர்ந்தன. அவைகளின் காட்சிகளை அன்று காலையிலேயே பரமசிவன் வெளியே சோலையில் ஸ்நானம் செய்யப்போகையில் பார்த்து மகிழ்ந்திருந்தான். அவனுக்கு எந்த ஆட்டத்திலும் கொண்டாட்டம் அதிகம்; விலங்குகளின் ஆட்டங்களில் அவனுக்குத் தலைசிறந்த விருப்பம் உண்டு. ஆதலால், அவன் சர்க்கஸ் ஆட்டத்தைக் காண மக்கள் கூட்டம் கூட்டமாகப் போகையில் அவன் மனமும் அந்த ஆட்டத்தை நாடிற்று. ஆனால், அவனுக்கு அந்த ஆட்டத்தைக் கண்டு களிக்கத் தன்னிடம் போதிய பணம் இல்லையே என்று தோன்றிற்று. அவன் பணமின்மையை நினைந்து மனவருத்தத்துடன் உற்சாகம் இன்றித் தன் இருப்பிடம் சென்றான். அவனுக்கு அப்போது தான் சென்ற ஆண்டில் மிட்டாய்க் கடைக்காரன் மகனுக்குப் பாடம் சொல்லி மாதம் இரண்டு ரூபாய் சம்பளம் பெற்றுவந்த விஷயம் கவனம் வந்தது. அவன் சரியாகத் தன் சின்னஞ்சிறு மாணவனுக்குப் பாடம் போதிக்காமையால் மிட்டாய்க் கடைக்காரன் பரமசிவனை ஆசிரியனாக வைத்துக்கொள்ளவில்லை. பரமசிவன் தன் சோம்பலால் தான் எளிதாகப்

பெற்றுவந்த இரண்டு ரூபாயையும் இழந்து விட்டதை எண்ணிச் சிறிது மனம் வருந்தினுன். பின்னர் அவன் அதைப் பொருட்படுத்தாமல் தன் உயர்ந்த நிலையைப் பெரிதாக எண்ணிக் கவலையின்றி நித்திரை போயினுன்.

பரமசிவன் மறுநாட்காலை கல்லூரியில் தன் வகுப்பை அடைந்ததும் பல மாணவர்கள் மேற்கூறிய சர்க்கஸ் ஆட்டத்தின் அற்புதக் காட்சிகளைப்பேசி மகிழ்ந்தனர், பரமசிவனும் அவர்கள் சம்பாஷணையில் தலையிடலானுன். அப்போது மாணிக்கவாசகன் தான் அன்றைய முன்னுள் இரவு சர்க்கஸ்ஆட்டத்திற்குத் தன் தந்தையோடு சென்றதையும் அவ்வாட்டத்தில் ஒரு அழகிய பெண் ஒரு வெள்ளைக்குதிரையின் மேல் நின்றவண்ணம் சவாரி செய்த காட்சியின் அருமையையும் அவள் கம்பிகளின் மேல் அச்சமில்லாமல் அழகாக ஆடிய நடனங்களின் காட்சிகளையும் சிறப்பித்துப் பரமசிவனிடம் சொன்னுன்.

அவர்கள் இருவரும் அங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையில் ஆசிரியர் வகுப்பில் நுழைந்தார். அவரைக்கண்ட மாணவர்கள் தத்தம் இடங்களில்போய் அமர்ந்து சப்தம் செய்யாமல் இருந்தார்கள். ஆனுல், மாணிக்கவாசகன் மாத்திரம் பரமசிவனை நோக்கி ஆசிரியர் அறியாவண்ணம் இரகசியமாக மெல்லிய குரலில் "பரமசிவா! நான் சர்க்கஸ் ஆட்டத்திற்கு இன்று இரவும் போவேன். நீயும் என்னுடன் வருகிருயா" என்று கேட்டான்.

பரமசிவன் மாணிக்கவாசகன் இரகசியமாகச் சொல்லிய மொழிகளை ஆவலுடன் செவிகொடுத்துக்

கேட்கையில் ஆசிரியர் பரமசிவனை நோக்கி, "பரம சிவா! எங்கே பார்க்கிறாய்? எங்குச் சந்தடி? யார் பேசுவது?" என்று கடுஞ்சினத்துடன் அவனை வினவினர். பரமசிவன் தான் எதையும் பார்க்கவில்லை என்றும் இரகசியமாகப்பேசியவன் இன்னானென்று தனக்குத்தெரியாதென்றும் பதிலுரைத்தான்.

ஆசிரியர் அவனை மேலும் ஒன்றும் கேளாமல் அப்போது நடக்கவேண்டிய கணக்கை நடத்துவாராயினர். அவர் மாணவர்களுக்கு ஒரு கணக்கைக் கொடுக்கையில் மாணிக்கவாசகன் மறுமுறையும் பரமசிவனை இரகசியமாகப் பார்த்து மெல்லிய குரலில், "பர சிவா! நான் இன்று இரவு எட்டு மணிக்கே சர்க்கஸ் கொட்டகைக்குப் போய்விடுவேன். நீயும் என்னை அதே மணிக்கு அவ்விடம் சந்தித்தால் நமக்குப்பெருங்கொண்டாட்டம்" என்று சொன்னான்.

ஆசிரியர் இரகசியமாக உண்டாகிய அரவத்தைக்கேட்டு அடக்கவொண்ணாச் சினங்கொண்டு பரமசிவனை மறுமுறையும் நோக்கி "பரமசிவா! மறுபடியும் என்ன பேச்சு? யார் பேசியது?" என்று அவனை அதட்டிக் கேட்டார்.

பரமசிவன் ஆசிரியர் வினவியதைச் செவி கொடுத்துக்கேளாமல் மாணிக்கவாசகனை இரகசியமாக நோக்கி, "நல்லது நானும் அப்படியே வருகின்றேன்" என்று மொழிந்தான்

ஆசிரியர் அதைக்கேட்டு பரமசிவனை நோக்கி "பரமசிவா! என்ன உளறுகின்றாய்? எங்கு வருகின்றாய்?" என்று வினவினர். அவன் தக்கமறுமொழி சொல்லத் திறமை அற்றவனாய் அவரைநோக்கி "ஐயா

ஒன்றும் இல்லை. நான் கணக்குப் போடுகின்றேன்'' என்ருன். ஆசிரியர் அவனை நோக்கி "கணக்கு எங்கே? காட்டு'' என்றனர்.

பரமசிவன் "ஐய! கணக்குப் போடப்போகின்றேன்'' என்ருன். ஆசிரியர் வெகுண்டு அவன் குறிப்புப் புத்தகத்தை வாங்கிப் பார்க்கையில் அதில் கணக்கே எழுதப்படாமல் இருந்ததைக்கண்டு அவன் மீது வெகுண்டு "நீ சுத்தமூடன்; யோக்கியதை அற்றவன்; பலகையின்மீது ஏறி நில்''என்று கடிந்து கூறினர்.

பரமசிவன் அவ்வாறே பலகையின் மீது ஏறி நிற்கையில், மாணவர்கள் எல்லோரும் கொல்லென நகைத்தனர்; மாணிக்கவாசகன் எல்லோரினும் அதிகமாக நகைத்தான்; பரமசிவனும்கூட நகைத்தான். ஆசிரியருக்குக் கோபம் பெரிதும் உண்டாயிற்று. அவர் பரமசிவனைப் பலகையினின்றும் இறக்கி அவன் அன்று மாலை நாலரை மணிக்கு வகுப்பைவிட்டுப் பந்தாட்டத்திற்குப் போகக்கூடாதென்றும் அவன் அன்று மாலையில் வகுப்பிலேயே தங்கிக் கோவிந்தசுவாமியினிடம் அன்று அவர்போட்டுக்காட்டிய கணக்குகளைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் கட்டளை விதித்தார்.

பரமசிவன் பல மாணவர்களும் நகையாடத்தக்க அக்கட்டளையைக்கேட்டு வெட்கமடைந்தான். அவனுக்குத் தன்னைக்காட்டிலும் அறிவின்மாட்சிமையில் குறைந்த கோவிந்தசுவாமியினிடம் கணக்குகளைக் கேட்டுக்கொள்வது மிகவும் இழிவான செயலாகக்

காணப்பட்டது. இருப்பினும், அவன் ஆசிரியர் கட்டளையை அன்று மாலை மனவருத்தத்துடன் நிறைவேற்றினன்.

பரமசிவன் அன்று இரவு எட்டு மணிக்கு தன் பள்ளிச்சம்பளத்திற்கு வைத்திருந்த தொகையை எடுத்துக்கொண்டு சர்க்கஸ் ஆட்டத்திற்குச் சென்றான். அவனுக்கு அச்சமயம் தான் செய்யும் காரியம் தவறென்றுதோன்றியபோதிலும் தனக்கு ஆட்டத்தின் மீதிருந்த அளவில்லா ஆசையினல் தவருன நெறிக்கும் அடிமையானன். அவன் தன் தாய் தந்தையர் தனக்காகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தி அனுப்பிய தொகையைத் தவருன வழிக்குச்செலவு செய்தல் தவறென்று தன் மனதுக்குள் எண்ணித் தன்னை நொந்துகொண்டே ஆட்டக்கொட்டகைக்குச் சென்ருன். அவனை அங்கு மாணிக்கவாசகன் வேறு ஐந்து மாணவர்களோடு சந்தித்தான். மாணிக்கவாசகன் பரமசிவனும் ஆட்டத்திற்கு வந்ததைக்கண்டு ஆனந்தமடைந்து அவன் செயலை மெச்சிப்புகழ்ந்தான். மற்ற ஐந்துமாணவர்களும் பரமசிவன் செயலைப் பெரிதும் புகழ்ந்து பேசினர்கள். பரமசிவன் அன்று பகல் ஆசிரியரிடம் அடைந்த அவமானத்தை எண்ணி அம்மாணவர்கள் முகங்களைப் பார்க்கவும் நாணமுற்ருன். ஆனல், அவர்கள் அவனை மிகவும் சிறப்பித்துப் பேசியதால் அவன் தான் கல்வி சம்பந்தமாக அடைந்த இழிவை மறந்தேபோனன்.

பரமசிவன் தன் உண்மை நிலையைமறந்து தன் தாய்தந்தையர் தனக்காகச்செய்துவரும் தியாகத்தை

யும் மறந்து தன் அருமைத் தங்கையின் தளராத உழைப்பையும் மறந்து அவன்தான்கொண்ட விருப்பத்தை நிறைவேற்றுவதையே தக்கசெயலாக எண்ணித் தனி மகிழ்ச்சியுடன் அறநெறிதவறிய மாணவர்களுடன் தனி நட்புக்கொண்டு தானும் ஒரு செல்வந்தன் மகன்போல் செருக்குடன் பள்ளிச்சம்பளத்திற்கு வைத்திருந்த பணத்தில் காலரி டிக்கட் வாங்கிக்கொண்டு அவர்களோடு கொட்டகைக்குள் நுழைந்தான். அவன் கொட்டகையில் ஓர் இடத்தில் அமர்ந்ததும், தன் வறுமையையும் பரிதாப நிலையையும் முற்றிலும் மறந்து சர்க்கஸ் ஆட்டத்திலேயே தன் சிந்தையைச் செலுத்திவிட்டான். அவன் பக்கத்தில் மாணிக்கவாசகன் அன்புடன் அமர்ந்து மற்ற மாணவர்கள் குலுங்கக் குலுங்க நகைக்கும்படி, பலவேடிக்கையான விஷயங்களைப் பரமசிவனிடம் பேசிக்கொண்டிருந்தான். பரமசிவனும் நகைச்சுவை மிகுந்த பற்பல பயனற்ற விஷயங்களில் பரமசந்தோஷமடைந்தான். மாணிக்கவாசகன் அன்று முன்னுள் இரவு யானைகளும் குதிரைகளும் ஆடுகளும் காட்டிய அற்புத சர்க்கஸ்வித்தைகளை மெச்சிப்பேசினுன். சர்க்கஸ் ஆட்டம் இரவு ஒன்பதரை மணிக்கு ஆரம்பமானதும், பரமசிவன் பெருங்களிப்புடன் சர்க்கஸில் காட்டியவித்தைகளைக் கண்டு தன்னையே மறந்து மிருகங்களின் பெருந்திறமைகளையும் பெண் மக்களும் ஆண்மக்களும் காட்டிய அபாரவித்தைகளையும் வியந்து பிரமித்துவிட்டான். அவன் அன்றிரவு ஆனந்தக்கடலில் ஒரு செல்வந்தன் மகன்போல் ஆழ்ந்திருந்தான்.

சர்க்கஸ் ஆட்டம் இரவு பன்னிரண்டு மணிக்கு முடிந்ததும், அதைக் கண்ணுற்ற மக்கள் அனைவரும் தத்தம் இருப்பிடங்களுக்கு வண்டிகளிலும் கோச்சு களிலும் சென்றனர். பரமசிவனும் மாணிக்கவாசக னும் மற்ற ஐந்து மாணவர்களும் கால்நடையாகத் தம் தம் இருப்பிடங்களுக்கு திரும்பிச்சென்றனர். அப் போது மாணிக்கவாசகன் பரமசிவனைத் தேயிலைத் தண்ணீர் விற்கும் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். அவன் சர்க்கஸ் ஆட்டத் திற்கு வேண்டியதொகையை மற்ற ஐந்து மாணவர் களுக்கும் கொடுத்தான். அப்படியிருந்தும், அவன் பரமசிவனுக்கு மாத்திரம் பணம் கொடுக்கவில்லை. அவன் பரமசிவனிடம் குறும்புத்தனம் செய்ய விரும் பியதால் அவனுக்கு அப்போது தக்க சமயம் நேர்ந்தது.

பரமசிவனும் ஏனையோரும் சர்க்கஸ் ஆட்டம் பார்த்துக் களித்த பின்னர் உல்லாசமாகச் சாலை யில் மெதுவாக உலாவினர்கள். அப்போது வழியில் தேயிலைத் தண்ணீர் ஹோட்டலை அடைந்தார்கள். மாணிக்கவாசகன் அதைக் கண்டதும் மற்ற மாண வர்களை நோக்கி, "நண்பர்களே! நம் சிநேகிதன் பரமசிவன் இன்று பெரிய செல்வந்தன் மகன்போல சர்க்கஸ் ஆட்டத்திற்குப் பணம் செலவு செய்திருக்கி ருன். அவன் தன் நிலைமையை மேன்மைப் படுத்து தல் அவன் குணத்திற்கு அழகாகும். அவன் தக்க சமயத்தில் தகுந்த குணப்பான்மையைக் காட்டுவதற் குப் பின்வாங்கமாட்டான். வாருங்கள், நாம் அனைவ ரும் சிற்றுண்வும் தேத்தண்ணீரும் களிப்புடன் அவ

னுடன் அருந்தலாம். பரமசிவனே அச்செலவைத் தன் பணத்தைக்கொண்டே பார்த்துக்கொள்வான்" என்று புன்னகை மிளிரக் கூறினன். பரமசிவனுக்கு அதைக் கேட்டதும் தன்னை அறியாமல் தன் நிலைமையில் அதிக மதிப்பு வைக்கலானன். அவன் அத்தகைய சமயத்தைத் தன் கௌரவத்திற்காகவும் மதிப்பிற்காகவும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று எண்ணினன். மேலும், அவன் அன்று என்றுமடையாத மகிழ்ச்சி சர்க்கஸ் ஆட்டத்தைப் பார்த்ததால் அடைந்துவிட்டான். அவன் தன் கையில் அப்போது பணமிருந்தமையால் மாணிக்கவாசகன் முன்னர் மற்ற மாணவர்கள் இருக்கையில் தான் எளிய நிலையிலிருப்பவனகக் காட்டிக்கொள்ள விருப்பமில்லை. அவன் தான் கல்வியில் சிறந்து விளங்குவதுபோல் மற்ற மாணவர்களை அன்புடைச் செயலால் மகிழ்வித்து தன் நிலைமையைக் கௌரவப்படுத்திக் காட்டுதல் தனக்குச் சிறப்பென்று எண்ணி, மாணிக்கவாசகனையும் மற்ற மாணவர்களையும் செருக்குடனும் உற்சாகத்துடனும் தேயிலைத் தண்ணீர் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்ருன். அவர்கள் எல்லோரும் சில கோதுமை அப்பங்களும் பிஸ்கட் துண்டுகளும் சாப்பிட்டனர். பின்னர், அவர்கள் பரமசிவனைப் புகழ்ந்துகொண்டே தேத்தண்ணீர் அருந்தினர்கள். பரமசிவனும் பணக்கவலையை முற்றிலும் மறந்து தனது சிறிய விளையாட்டின் துறையில் நின்று களிப்புடன் தேத்தண்ணீர் பருகினன். அவர்கள் அனைவரும் சிற்றுண்டி அருந்தும் சிறு வேலையை முடித்துக்கொண்டு ஹோட்டலை

விட்டெழுந்ததும் பரமசிவன் ஹோட்டல் சீட்டை வாங்கிப் பார்த்தான். அதில் நாலு ரூபாய் பன்னிரண்டணு வரையப்பட்டிருந்தது. அவன் அதைப் பற்றி ஒன்றும் சிந்திக்காமல், கணக்கையும் பாராமல், ஒருபெரிய தனவான் மகன்போல் செருக்குடன் ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து ஹோட்டல்காரனிடம் கொடுத்து, மீதி நாலணுவையும் வாங்காமல் கவலையின்றி வெளியே சென்ருன். மாணிக்கவாசகன் ஐந்து ரூபாய் செலவானதைப் பார்த்து மனம் திடுக்குற்ருன். ஆனல், அவன் தன் குறும்புத்தனம் செவ்வனம் நிறைவேறும் பொருட்டு வேண்டுமென்றே பரமசிவன் பணம் தாராளமாகச் செலவு செய்யும் வள்ளல் என்று மற்ற மாணவர்களிடம் புன்னகையுடன் கூறினன். பரமசிவன் தன்னை உண்மையில் ஈகைக் குணத்தில் மிகவும் சிறந்தவனென்றே பாவித்துக்கொண்டு மாணிக்கவாசகனுடன் குதூகல மொழிகள் பேசிக்கொண்டு சாலையில் மேலும் மற்ற மாணவர்களோடு மெதுவாக நடந்து போனன்.

பரமசிவன் தானும் ஒரு உயர்ந்த நிலையில் இருப்பதுபோல் எண்ணி மாணிக்கவாசகனுடன் மகிழ்ந்துபோகையில், வழியில் ஒரு கடையில் படாஸ் பெட்டிகள் (Crackers) புதிதாக வைக்கப்பட்டிருந்ததை மாணிக்கவாசகன் கண்டனன். அவன் அங்கு ஒரு குறும்புத்தனம் செய்ய எண்ணம் கொண்டான். அவன் மற்ற மாணவர்களை நோக்கி, “நண்பர்களே! இதோ பாருங்கள் படாஸ் கடை. எனக்குப் படாசின் மேல் அதிக ஆசையுண்டு. உங்களுக்கும் அந்த ஆசை

இருக்குமென்று நினைக்கின்றேன். நம் பரமசிவன் நமக்கு படாஸ் வாங்கிக் கொடுப்பான். அவன் நண்பர்கள் விஷயமாக எச்செயலையும் செய்யப் பின் வாங்கான்" என்று பரமசிவனைப் புகழ்ந்து கூறினன். பரமசிவன் பண்பற்ற புகழில் ஆசை வைத்து ஆறு படாசு பெட்டிகள் தன் பணத்திலேயே வாங்கி மாணிக்கவாசகனிடம் அளித்தான். மாணிக்கவாசகன் சதா சிகரெட் பிடிப்பவனுகையால் அவன் ஜோபியில் தீப்பெட்டி எப்போதும் இருக்கும். அவன் அவர்கள் சென்றுகொண்டிருந்த சாலையில் ஒரு குதிரை வண்டி வருவதைப் பார்த்து படாசுகளை நடுச்சாலையில் போட்டு நெருப்பு வைத்தான். குதிரை வண்டி அவ்விடம் வந்ததும், படாசுகள் படீர் படீரென்று வெடிக்க ஆரம்பித்தன. குதிரை மருண்டு துள்ள ஆரம்பித்ததால் குதிரை வண்டி கவிழ்ந்தது. உள்ளே அமர்ந்திருந்த இரண்டு பெண் மக்களும் கீழே விழுந்தனர். அப்போது அவர்கள் அலறியதால் ஒரே குழப்பம் உண்டாய்விட்டது. மக்கள் குழப்பம் மிகுதியாகக் காணப்பட்டமையால் மாணிக்கவாசகனும் மற்ற ஐந்து மாணவர்களும் தந்திரமாக ஓடிவிட்டார்கள். பரமசிவன் மாத்திரம் பொதுமக்கள் கையில் அகப்பட்டுக்கொண்டான். அச்சமயம் அங்கே போலீஸ்காரனும் வந்துவிட்டான். அப்போலீஸ்காரன் குறும்புத்தனம் செய்தவன் பரமசிவன் என்று எண்ணி அவன் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டான். அந்தோ! பாவம் பரமசிவன் உதவியற்று நண்பர்களால் கைவிடப்பட்டு மிகவும் இழிவான நிலையில் இருந்தான். அவன்

யாது செய்வது என்று தோன்றப் பெருமல் திகைத்து நிற்கையில் அங்கு ஒரு கோச்சு வண்டி வந்து நின்றது. அக்கோச்சு வண்டியிலிருந்து ஒரு ஆங்கில உத்தியோகஸ்தர் மிக அவசரமாக இறங்கினர். அவர் பரமசிவனைப் பார்த்ததும், திடுக்கிட்டு, விளங்க வொண்ணு வியப்பும் கொண்டு, போலீஸ்காரனைப் பார்த்து, "சேவகா! இச்சிறுவனை விட்டுவிடு. இவன் எங்கள் கல்லூரியின் மாணவன். இவன் மிகவும் நல்லவன். இவன் செய்த பிழைக்குத் தக்க தண்டனை நான் நாளையதினம் கல்லூரியில் அளிக்கின்றேன்" என்று கூறினர். பரமசிவன் அங்ஙனம் பேசியவர் தன் கல்லூரியின் தலைமை ஆசிரியரே என அறிந்ததும் சொல்லொணு நாணமும் அச்சமும் கொண்டான். அப்போது கவிழ்ந்த குதிரை வண்டிக்காரன் விரைவாகத் தலைமை ஆசிரியரிடம் வந்து தன் வண்டியின் சக்கரம் ஒன்று பழுது அடைந்து விட்டதென்றும் அதை ஒழுங்குபடுத்த ஐந்து ரூபாய் அம்மாணவன் அளிக்கவேண்டுமென்றும் போலீஸ்காரனிடம் கூறினன். போலீஸ்காரனும் அவ்வாறு பரமசிவன் ஐந்து ரூபாய் அளித்தே தீரவேண்டுமென்று சொன்னுன். தலைமை ஆசிரியரும் அது நியாயமே என்று தலை அசைத்தார். பரமசிவன் தன்னிடமிருந்த மீதி ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் குதிரை வண்டிக்காரனிடம் கொடுத்துவிட்டான். தலைமையாசிரியர் அவன் செயலைக் கண்டு வியப்பும் வருத்தமும் கொண்டார். அவர் நல்ல குணமுள்ள பரமசிவன்

எவ்வாறு அத்தகைய குறும்புத்தனத்திற்கு ஆளா ஞன் என்று ஆச்சரியமுற்று மக்கள் கூட்டத்தைக் கண்டு போலீஸ்காரனுக்கும் குதிரை வண்டிக்கார னுக்கும் நன்மொழி கூறி அவர்களை அனுப்பிவிட் டார். கடைசியாக, அவர் பரமசிவனை பெருஞ் சினத்துடன் நோக்கி, "பரமசிவா, உன் குறும்புச் செயல் மன்னிக்கப்படும் செயலல்ல. உன்னுடன் சேர்ந்து வந்தவர்கள் யார்? நீ இவ்வளவு தைரியம் எவ்வாறு பெற்ருய்? நல்லது, நாளைய காலை பத்து மணிக்கு நீ கல்லூரிக்கு வந்ததும் என்னை என் அறையில் வந்து பார்ப்பாயாக. நீ உன் வீட்டிற்குச் செல். ஒரு நிமிடமும் இங்கு நில்லாதே. உன் நல்ல காலம் நான் இங்கு வந்தேன். இல்லையேல் நீ போலீஸ்காரன் வசம் அகப்பட்டுக்கொண்டு நல்ல தண்டனை அடைந்திருப்பாய்" என்று கூறித் தன் கோச்சு வண்டியில் ஏறிக்கொண்டார்.

பரமசிவன் தனக்கு நேர்ந்த அவமானத்தையும் தண்டனையையும் எண்ணி மனம் மிக வருந்தி துஷ்ட சிநேகிதத்தால் நேர்ந்த கதி இதுவோ என்று மனம் நொந்து தன் பள்ளிச் சம்பளத்திற்கும் புத்தகங் களுக்கும் வைத்திருந்த பணத்தையெல்லாம் இழந்து ஒரு பைத்தியக்காரன் போல் தள்ளாடி நடந்து தன் வீட்டிற்குச் சென்ருன். அவன் தன் வீட்டை அடைந்ததும் அச்சமும் வெட்கமும் மனவருத்த மும் எய்திஞன். அவன் அன்று இரவெல்லாம் நித் திரையின்றிப் படுக்கையில் புரண்டுகொண்டு தன் கர்வத்தை இகழ்ந்து தன் தாய் தந்தையர் தனக் காக உழைக்கும் உழைப்பையும் அவர்கள் செய்யும்

தியாகத்தையும் எண்ணி ஏங்கிக்கொண்டு அன்றைய இரவை வெறுப்புடன் கழித்தான்.

மறுநாட் காலை பரமசிவன் படுக்கையை விட்டெழுந்து ஒன்றும் செய்யத் தோன்றப் பெறுமல் தன் வீட்டிலேயே காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஹோட்டலில் அரை வயிறு அன்னமே அவசரமாக உண்டு சொல்லொணுத் துயருடன் தன் கல்லூரிக்குச் சென்றுன். அவன் தன் கதி என்னவாகுமோ என்று பயந்து வாடிய முகத்துடன் தலைமை ஆசிரியர் அறைக்கு சரியாகப் பத்து மணிக்குச் சென்றுன். தலைமை ஆசிரியர் அவனைக் கண்டதும் கடுங்கோபங் கொண்டு அவனை நோக்கி "பரமசிவா! நீ நேற்று இரவு புரிந்த செயல் பெரிதும் இகழத்தக்கது. நீ ஒரு சோம்பேறி நாடோடியைப் போல் நடந்துகொண்டாய். இக்கல்லூரியின் மாணவனுக இருக்கும் மாட்சிமையை நீ முற்றிலும் இழந்தாய். உன் குணத்தை நான் அறவே வெறுக்கின்றேன். நீ துஷ்டமாணவர்களோடு சேர்ந்து விட்டாயென்று எண்ணுகின்றேன். நீ இவ்வாறு சீர்குலைதல் அழகல்ல. இனி, நீ இரவில் எங்கேயாகிலும் செல்வாயானுல் உன்னைக் கல்லூரியினின்றும் தள்ளிவிடுவேன். இதுதான் கடைசி எச்சரிக்கை" என்று கூறி அவனுக்கு இரண்டு பிரம்படிகள் கொடுத்தார். பரமசிவன் அவைகளைக் கண்ணீர்விட்டு அழாமல் பெற்றுக்கொண்டு தன் குற்றத்தையே நொந்துகொண்டு வெளியே ஒருவரிடமும் தலைமை ஆசிரியர் அளித்த தண்டனையைச் சொல்லாமல், தன் வகுப்பில் போய் அமர்ந்தான். அவன் வாடிய

முகத்தையும் தளர்ந்த நடையையும் கண்ட மாணிக்க வாசகன் அவனைப்பார்த்து நகைத்தான். வேறு சில குறும்புத்தனமுள்ள மாணவர்களும் வெகு இரகசிய மாக நகைத்தனர். பரமசிவனுக்கு அப்போது அவர்களிடத்தில் பெருங்கோபம் உண்டாகியபோதி லும், அடக்கிக்கொண்டு பொறுமையுடன் தன் பாடங்களைப் படிக்க ஆரம்பித்தான்.

பரமசிவன் தான் செய்த பிழையை எண்ணி யெண்ணி அன்றையதினம் துன்பக்கடலில் ஆழ்ந் தான். அவன் தீய நட்பினல் உண்டாகிய பயனையும் வெகு சீக்கிரத்தில் உண்டான அவமானத்தையும் ஆபத்தையும் எண்ணித் தன்னையேநொந்து, அன்று ஒரு தினைத்துணை உற்சாகமுமின்றிப் பந்தாட்டத்திற் குச்செல்லாமல்அன்றுமாலைதனியே தன்வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் தன்வீட்டை அடைந்ததும் எல்லா வற்றைக் காட்டிலும் மிகுதியான மனத்துயரை அடைந்தான். அதாவது அவன் தான் பள்ளிச் சம் பளம் எவ்வாறு கொடுப்பது என்றும் புத்தகங்களை எவ்வாறு வாங்குவதென்றும் அவன் எண்ணி ஏங்கி னன். பரமசிவன் தான் இழந்த பணத்தை மீண்டும் பெற வகையற்று நெடுநேரம் தனியே சிந்தித்துப் பின்னர் தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி அப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற முடி விற்கு வந்தான். ஆனல் அவன் தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் தான் பணத்தை பள்ளிக்குச் செல்லும் வழியில் பறிகொடுத்துவிட்டதாக எழுதித் தனக்கு இன்னும் இருபது ரூபாய் வேண்டுமென்று தன் தந்தையை பணிவுடன் கேட்டுக்கொண்டான்.

அவன் தன் தந்தைக்கும் அத்தகைய அபார பொய்யைச் சொல்லும் பொல்லாத காலம் தனக்கு வந்துவிட்டதே என்று மனம் துடிதுடித்தான். அவன் தன் மடமையாலும் இழிந்த செய்கையாலும் தன் தந்தைக்குக் கொடுத்த துன்பத்தையும் தான் மானமின்றி எழுதிய பொய்க்கும் தன்னைக் கடவுள் தண்டிப்பார் என்றும் அஞ்சினான். அவன் தன் தந்தைக்குத் தான் நினைத்தபடி கடிதம் எழுதி மறுநாள் தபாலில் போட்டுவிட்டான்.

சில தினங்களாகப் பரமசிவன் தன் தந்தைக்கு எழுதிய பொய்ம்மைக்கு என்ன தண்டனை வருமோ என்று எண்ணி பயந்து கொண்டிருக்கையில் கல்லூரியில் பணியாளன் ஒருவன் அவனைத் தலைமை ஆசிரியர் அழைக்கின்றார் என்று அவனிடம் வந்து சொன்னான். பரமசிவன் பயந்துகொண்டே தலைமை ஆசிரியரைப் போய்க் கண்டதும், அவர் அவனைப் பார்த்து, "பரமசிவா! இன்னும் ஏன் நீ சம்பளம் கட்டவில்லை? இன்னும் மூன்று தினங்களில் நீ சம்பளம் கட்டாவிட்டால், உன் பெயரை அடித்துவிடுவேன்" என்று வெகுண்டு கூறினார். பரமசிவன் பதில் சொல்ல வகையற்று தன்னையே தான் நொந்து மௌனத்துடன் தன் வகுப்பிற்குப் போனான். அங்குச் சென்றதும் ஆண்டவன் அருளால் அவனுக்கு மணி ஆர்டர் அப்போதுதான் வந்ததை அறிந்து மன அமைதி கொண்டான். பரமசிவன் தந்தை அவனுக்கு இருபது ரூபாய் மணியார்டர் செய்ததோடு ஒரு கடிதமும் அனுப்பியிருந்தார். அவன் அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு அப்போதே கல்லூரியின்

கணக்குப்பிள்ளையிடம் சம்பளத்தைக் கட்டி ரசீது வாங்கிக்கொண்டு தன் வகுப்பில் அமைதியுடன் அமர்ந்து தன் கல்வியைக் கருத்துடன் கற்ருன்.

பரமசிவன் அன்று மாலையிலும் தன் பந்தாட்டத்தைத் துறந்து மனவருத்தத்துடன் வீடுபோய்ச் சேர்ந்து தன் அறையில் அமர்ந்து தன் தந்தை எழுதிய கடிதத்தைப் பிரித்து வாசித்தான். அவன் தந்தை அக்கடிதத்தில் பரமசிவன் அஜாக்கிரதையால் பெருந்தொகைப் பணத்தை இழந்தது மிகவும் வெறுக்கத்தக்க செயலென்றும் பரமசிவனைப்போன்ற ஒழுக்கமுள்ள மாணவன் தன் நெறியில் வழுவி பணத்தை இழப்பது பரிதபிக்கத்தக்க செயலென்றும் இனி அவன் தாய் தந்தையர் வறுமைப்பிணியை உள்ளவாறு அறிந்து நடந்துகொள்ளவேண்டியது அவன் முக்கிய கடமையென்றும் எழுதியிருந்தார். மேலும், அவர் தாம் அப்பணத்தைப் பெறுவதற்காக ஒரு சவுக்காரிடம் அவன் அன்னையின் ஒரே அணிகலனையும் கொதுவை வைத்துவிட்டதாகவும் தாமும் தன் மனைவியும் பார்வதியும் தங்களுக்கு நேர்ந்த நஷ்டத்திற்காகப் பெரிதும் மனம் வருந்துவதாகவும் எழுதி இருந்தார்.

பரமசிவன் அக்கடிதத்தை வாசித்ததும் தன் தாய் தந்தையர் நிலைமையை எண்ணி விம்மி விம்மி அழுதான். அவன் அவர்களுக்குக் கொடுத்த பெருந்தொல்லை எவ்வாறு நீங்கும் என்று ஏங்கி அழுதான். அவன் தன்னைப்போல் பித்தம் பிடித்த மாணவன் உலகில் ஒருவனும் இரான் என்று நினைந்து கதறினன். அவன் கடைசியாகத் தன் தாய் தந்தையர்

களைத் தன்மனத்தில் தொழுது அவர்களின் மன்னிப்பையும் கடவுளின் மன்னிப்பையும் கேட்டுக்கொண்டு புலம்பிய வண்ணமே நித்திரைபோய்விட்டான்.

அதிகாரம் பத்து

பரமசிவன் தகாத நண்பன் கூட்டுறவால் அடைந்த இழிவையும் பொருள் இழப்பையும் மதிப்புக் குறைவையும் எண்ணி யெண்ணித் தன்னையே நொந்து கொண்டான். அறிவின் களஞ்சியமாகத் தமிழ் நாட்டில் விளங்கிய ஔவை பிராட்டியார் செய்தருளிய சிறிய செய்யுள் எனினும் பெரிய பொருள் பொதிந்த பொன்மொழியாகிய "சேராத இடந் தனிலே சேர வேண்டாம்" என்னும் அருள் வாக்கு அவனுக்குக் கவனம் வந்தது. அவன் பெருங்குணமும் நுட்ப அறிவும் தரும சிந்தனையும் நல்லொழுக்கமும் கனிந்த உள்ளமும் பெற்ற இளவலே என்பதில் ஐயமில்லை. அவன் கல்வி மாட்சிமையிலும் எல்லா மாணவர்களினும் சிறந்தவன் என்பதிலும் சந்தேகம் இல்லை. ஆயினும், அவன் இளமையின் காரணமாக அன்பற்ற நண்பனால் அவ்வப்போது தன் சுயபுத்தி மாறப்பெற்று மாணிக்கவாசகன் மாண்பற்ற துஷ்டச் செயல்களுக்குத் தானும் பாத்திரனானது பெரிதும் பரிதபிக்கத் தக்கதே. அவன் தன் திண்ணிய அறிவை இழந்து தன் கிராமத்தின் நல்லாசிரியர் தந்த நன்மதியையும் மறந்து தான் புதிதாகச் சேர்ந்த கல்லூரியில் கல்விச் சிறப்பிலும் குணச்சிறப்பிலும் தலை சிறந்து விளங்கும் தன்மைகள் பெற்றிருந்தும் தகுதி

யற்ற நண்பன் கூட்டுறவால் நல்ல நெறியினின்றும் வழுவி விட்டான்.

பரமசிவன் தான் கல்லூரிக்குக் குறித்த நேரங் கழித்துச் செல்லும் கெட்ட வழக்கத்தையும் சிற்சில வேளைகளில் கைக்கொண்டுவிட்டதையும் பாடங்களை ஒழுங்காகக் கற்காமல் முறைதவறி ஓதுகின்ற தீய வழக்கத்தைக் கைக்கொண்டுவிட்டதையும் சென்ற ஆண்டில் நிகழ்ந்த வருடாந்தரப் பரீட்சையில் முதல் பரிசு பெறுமல் அதைக் கோவிந்தசுவாமி அடைய இடங்கொடுத்துவிட்டதையும் தான் முன் கல்வியில் பெற்றிருந்த சிரிய ஊக்கத்தைக் கைவிட்டுவிட்ட இழ்வையும் நினைந்து நினைந்து மனமுருகினுன். அவன் இனி எவ்விதத்திலும் தன் கல்வியின் மாட்சிமையை மாத்திரம் ஒரு சிறிதும் இழக்கக் கூடாதென்றும் மாணிக்கவாசகன் நட்பை மெதுவாகத் துறந்துவிட வேண்டும் என்றும் மனத்திடம் செய்துகொண்டான். அவன் மாணிக்கவாசகன் நட்பு இன்னும் உரமாக வளர்ந்துவிட்டால் தான் வருடாந்தரப் பரீட்சையில் தவறிவிடவும் கூடும் என்றும் அச்சமுற்றுன். இன்னும் பல துஷ்டச் செயல்களும் செய்யத் துணிவும் வந்துவிடுமென்றும் அவன் எண்ணினுன். கடைசியாக அவன் எல்லாவற்றைக் காட்டிலும் பெரிய பாவம் தன் தாய் தந்தையருக்கு செய்துவிட்டதை எண்ணி மனம் துடி துடித்தான். அதாவது அவர்கள் வறுமை நோயை ஒரு சிறிதும் கருதாமல் மீண்டும் தன் பள்ளிச் சம்பளத்திற்கு தன் தந்தையைப் பணம் அனுப்புமாறு கடிதத்தில் எழுதிக் கேட்டதை நினைத்துத் தன் கைகளை நெறித்துக்கொண்டான்.

அதனினும் கொடிய பாவம் அவன் செய்துவிட்டதாக வும் அவன் கருதிக் கதறினன். அதாவது அவன் தான் வெட்கமும் மானமுமின்றி கனிவும் கருணையு மின்றி மிகவும் இழிவான பெரும் பொய்யைக் கடவு ளுக்குச் சமானமாகிய தன் தாய் தந்தையருக்கே ஏட் டில் எழுதி அனுப்பிய இழிந்த செயலேயாகும். கடைசியாக அவன் தன் தந்தையைத் தன் மனத்தில் வணங்கி வணங்கி அவர் மன்னிப்பைப் பித்தன் போல் தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டிருந்தான். சுருங்கச் சொல்லுமிடத்து அவன் பண்பற்ற நண்ப னகிய மாணிக்கவாசகன் கூட்டுறவை நாளடைவில் முற்றிலும் ஒழித்துவிடவேண்டும் என்று அவன் திட மாகத் தீர்மானித்துக்கொண்டான்.

பரமசிவன் தான் செய்த தகாத காரியங்களை எண்ணி மனம் வருந்தித் தீயவழியில் சென்ற தன் பேதை மனத்தை நல்வழிக்குத் திருப்பிக்கொண்டு தன் கல்வியில் முன்போல் தனி ஆர்வம் கொண்டு தளராத உழைப்பையும் கைக்கொண்டு ஒரு சிறந்த மாணவன்போல் தன் கல்லூரிக்கு மறுநாள் ஒன்பது மணிக்கே சென்றுவிட்டான். அவன் ஒரு மாணவ னையும் கண்ணெடுத்துப் பாராமல் கல்வியிலேயே தன் கருத்தை முற்றிலும் செலுத்தி தன் வகுப்பில் தான் வழக்கமாக அமரும் இடத்தில் அமர்ந்து ஒரு சித்திரப் பாவைபோல் ஆசிரியர் போதிக்கும் பொன் மொழிகளைச் செவிமடுத்து அன்று சிறந்து திகழ்ந் தான். ஆசிரியரும் அவனை அன்றையதினம் மிக வும் அன்போடு நடத்தி அவன் கல்வி வளத்தையும் ஒருவாறு மெச்சிப் புகழத் தொடங்கினர். மாண

வன் கோவிந்தசுவாமியும் அவன் கல்வித் திறமையை முன்போல் வியக்க ஆரம்பித்தான். மற்ற மாணவர்களும் பரமசிவன் தங்கள் வகுப்பில் முதல் மாணவனாக விரைவில் திகழ்வான் என்று எண்ணினர்கள். சுமார் ஒருவாரமாகப் பரமசிவன் கல்வியில் எல்லோரினும் சிறந்து விளங்கி துஷ்டமாணவர்கள் தீய நட்பில் கலவாமல் தனிமையாகக் காலங் கழித்து நல்ல பெயர் எடுத்துவந்தான்.

பரமசிவன் அவ்வாறு திருந்திய மனத்துடன் கல்வியினும் குணத்தினும் திகழ்ந்து வருகையில் ஒருநாள் அக்கல்லூரியின் தலைமை ஆசிரியர் அவன் வகுப்பிற்கு வந்து அவ்வகுப்பின் ஆசிரியரையும் மாணவர்களையும் நோக்கி "மாணவர்களே! நான் சொல்லுவதைச் சிறிது கவனியுங்கள். மாணவர்களுக்குக் கல்வி எவ்வளவு அவசியமோ அதுபோல் பற்பல பந்தாட்டங்களும் விளையாடல்களும் அவசியமேயாகும். அறிவை வளர்க்கக் கல்வி கற்பதுபோல் தேக வளத்தை வளர்க்க மாணவர்கள் பல ஆட்டங்கள் ஊக்கத்துடன் ஆடுதல் அவசியம். தேகத்திற்கு வேலை கொடுத்து மாணவர்கள் ஆடுகின்ற ஆட்டங்கள்தான் சிறந்தவை. கால் பந்தாட்டம் (Foot Ball) கிரிக்கட் பந்தாட்டம் (Cricket ball) ஓடும் பந்தயம் (Running Race) குதிக்கும் ஆட்டம் (Jumping) முதலிய ஆட்டங்கள் தகுதியுடையனவாம். இன்னும் ஒரு வாரத்தில் நம் கல்லூரியின் மைதானத்தில் பற்பல பந்தாட்டப் பந்தயங்களும் ஓடும் பந்தயமும் நடைபெறும். இந்நகரினுள்ள வாகீசர் உயர்தரப் பாடசாலை மாணவர்களும் வெளியூர்களினுமுள்ள மூன்று

பாடசாலை மாணவர்களும் பந்தயங்களில் கலந்துகொள் வார்கள். இந்நகரிலுள்ள வாகீசர் பாடசாலையின் பத்தாவது வகுப்பில் (Sixth Form) வாசிக்கும் பொன்னுசாமி என்னும் ஒரு மாணவன் சென்ற மூன்று வருடங்களாக ஓடும் பந்தயத்தில் முதன்மை பெற்று முப்பது ரூபாய் பரிசு தானே பெற்று வருவ தோடு தனது பாடசாலையின் பெருமையையும் விளக்கி வருகின்றான். அவன் அவ்வகுப்பில் மூன்று வருடகாலமாக வாசித்துவந்தபோதிலும் அவனை மூடனென்று மாணவர்கள் சொல்லாமல் அவன் ஓடும் பந்தயத்தில் பெற்றிருக்கும் பெருந் திறமையையே மெச்சி அவனை எல்லோரும் புகழ்ந்து வருகின்றனர். அவன் இவ்வருடமும் ஓடும் பந்தயத் தில் ஒருவனாக வருகின்றான். பந்தாட்டங்களின் பந்தயங்களுக்குப் பற்பல மாணவர்களை மேல் வகுப்புகளிலிருந்து தேர்ந்து எடுத்துவிட்டேன். ஓடும் பந்தயத்திற்கு மாத்திரம் இவ்வகுப்பில்தான் தகுந்த மாணவன் இருக்கின்றான். அவன்தான் நீங்கள் விரும்பும் பரமசிவன். அவன் நம் கல்லூரி மாணவர் கள் ஆடும் பந்தாட்டத்தில் எல்லோரிலும் மேலாக மான்போல் ஓடும் திறமை பெற்றிருப்பதை நான் கண்ணாரக் கண்டேன. ஆகையால் நான் இவ்வரு டம் ஓடும் பந்தயத்திற்கு அவனையே தேர்ந்தெடுத் தேன். அவன் இவ்வருடம் வாகீசர் பாடசாலையின் மாணவன் பொன்னுசாமியைத் தோற்கடிக்கவேண் டும். ஆகையால் பரமசிவன் இன்று மாலையிலிருந்து நம் கல்லூரியின் மைதானத்தில் தனியாக அமைக் கப்பட்டிருக்கின்ற கூடாரத்தில் வந்து என்னிடம் சில

போதனைகள் கேட்டுக்கொண்டு ஓடும் பந்தயத்தில் பழகவேண்டும்" என்று கூறி பரமசிவன் பெயரைக் குறித்துக்கொண்டார்.

பரமசிவன் தனக்குத் தலைமை ஆசிரியர் அளித்த தனி மதிப்பை மிகவும் வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு தலைமை ஆசிரியரை வணங்கினன். மற்ற மாணவர்கள் பரமசிவன் அடைந்த பெருமதிப்பை மெச்சிப் பேசிக்கொண்டனர். கோவிந்தசுவாமி பரமசிவனை வியந்து அவன் முகவொளியை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அவன் தன்னை அறியாமல் பரமசிவன் மீது பேரன்பு கொண்டுவிட்டான். ஆனல் பரமசிவன் மாத்திரம் சற்றும் கனிவும் கருணையுமின்றி கோவிந்தசுவாமியின் மேல் கோபமும் பொறுமையும் கொண்டான். மாணிக்கவாசகன் பரமசிவன் அடைந்த பெருமையை மிகவும் இழிவாக எண்ணிப் பலமாணவர்களிடம் அவனை இகழ்ந்து பேசினன். அன்று மாலையிலேயே அவன் பரமசிவனிடம் சென்று அவனைத் தலைமையாசிரியர் கூறிய கூடாரத்திற்குப் போகவிடாமல் பந்தாட்டத்திலேயே இருக்கும்படி செய்துவிட்டான். பரமசிவன் தான் கொண்ட வைராக்கியத்தை ஒரு நொடிப்பொழுதில் இழந்துவிட்டு மாணிக்கவாசகன் மாண்பற்ற நட்பை மறுபடியும் மகிழ்ந்து அவனேடு பந்தாட்டமே ஆடி அன்று மாலைப்பொழுதைக் கழித்துவிட்டான். அவன் பந்தாட்டத்தில் வைத்திருந்த ஆசைப்பெருக்கினலும் அதில் தான் காட்டிய ஊக்க மிகுதியாலும் அன்று காலை தலைமை ஆசிரியர் கூறிய அத்துணை சிறந்த உபதேச மொழிகளையும் மறந்தே போனன்.

பரமசிவன் அன்று இரவு பாடம் படிக்கையில் தலைமை ஆசிரியர் கூறிய கட்டளை அவன் கவனத் திற்கு வந்தது. அப்போது அவன் மனம் நடுங்கி ஞன். அவன் மறுநாள் தலைமை ஆசிரியருக்கு என்ன காரணம் காட்டி மன்னிப்பு பெறுவது என்று சிந்திக்கலானுன். தலைமை ஆசிரியர் உண் மையும் ஒழுங்கும் முறைதவருவன்மையும் கண்டிப் பும் உடையவராதலால் அவரிடத்தில் தான் கூறும் பொய்க் காரணங்கள் பலிக்கமாட்டா என்று அவ னுக்குத் தோன்றிற்று. அவன் முதலில் தனக்குத் தலைவலி வந்துவிட்டதென்றும் ஆகையால் வீட்டிற் குப் போய்விட்டேனென்றும் சொல்ல நினைத்தான். ஆனல் அவன் அன்று மாலையில் பகிரங்கமாகப் பந் தாட்டம் ஆடிக்கொண்டிருந்ததால் அக்காரணம் பொருந்தாது என்று தீர்மானித்தான். பின்னர் அவன் பற்பல பொய்க்காரணங்கள் சொல்ல எவ்வ ளவு எண்ணியும் அவை பயன்படா என்று முடிவு செய்துகொண்டு தான் தன் தலைமை ஆசிரியரிடம் உண்மையையே உரைத்துவிடவேண்டுமென்று எண்ணிக்கொண்டான். அவன் தன் பேதைமை தன்னை அவ்வப்போது அறநெறியினின்றும் வழு வச் செய்துவிடுகின்றதென எண்ணி மனம் வருந்தி ஞன். கடைசியாக அவன் தனக்கு உண்டாகிய எல்லாத் துன்பங்களுக்கும் யோக்கியதையற்ற மாணிக்கவாசகன் தீய நட்பே என்று உணர்ந்தான். அவன் அன்று இரவு நித்திரை போகுமுன்னர் கருணைக் கடலாகிய கடவுளையும் தன் அன்பின் கட லாகிய தந்தையையும், தன் மனத்தில் தொழுது

அவர்கள் இருவரும் தன் தலைமை ஆசிரியர் தன்னை மறுநாள் தண்டிக்காமல் இருக்கும் மனப்பான்மையை அவருக்கு அளிக்கவேண்டும் என்று அவர்களைவேண்டிக் கொண்டே தன்னை அறியாமல் நித்திரை போய் விட்டான்.

பரமசிவன் மறுநாட்காலை கல்லூரிக்குச் சென்றதும் அவனைத் தலைமை ஆசிரியர் அழைத்தார். அவன் அளவுகடந்த அச்சத்துடன் கடவுளை வணங்கிக் கொண்டு அவரிடம் ஒரு புலியினிடத்தில் ஒரு ஆட்டுக்குட்டி செல்வதுபோல் பயந்து சென்றான். தலைமை ஆசிரியர் அவனை ஏன் முன்னாள் மாலை தான் குறிப்பிட்ட இடத்திற்கு வரவில்லையென்றுசினத்துடன்.கேட்டபோது அவன்மிகுந்தஅச்சத்துடன்தான் அவர் கூறிய விஷயத்தையே அன்று மாலை மறந்து விட்டதாகவும் பந்தாட்டத்தில் தான் காட்டிய ஊக்கத்தினால் தன்னையே மறந்துவிட்டதாகவும் அவரிடம் உண்மையை உரைத்து விட்டான். தலைமை ஆசிரியர் பரமசிவன் உண்மையை ஒளிக்காமல் சொல்லி விட்டமையால் அவன் குணத்தை மெச்சி அவனை மன்னித்து விட்டார். பரமசிவன் தலைமை ஆசிரியரின் பெருந்தன்மையைத் தனக்குள் மெச்சி உண்மை உரைத்ததின் பயனையும் அறிந்து மகிழ்ந்து கடவுள் அருளும் தன் தந்தையின் அன்பும் தன்னைக் காப்பாற்றின என்று முற்றிலும் நம்பி மன அமைதியுடன் பரமசிவன் தன் வகுப்பிற்குச் சென்றான். அன்று மாலையிலிருந்து தலைமை ஆசிரியர் கட்டளை இட்டபடியே சில தினங்கள் ஓடும் பந்தயத்தில் பழகிப் பின்னர் ஓடும் பந்தயம் நிகழும் தினத்தை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதிகாரம் பதினொன்று

அம்பைநகர் கல்லூரித்தலைமை ஆசிரியர் மாணவர்களின் கல்வி மாட்சியில் எத்துணைய விழுமிய விருப்பம் கொண்டிருந்தனரோ அத்தன்மையைப்போலவே மாணவர்களின் பற்பல தேகவன்மை நல்கும் விளையாடல்களின் மாட்சிமையிலும் விருப்பம் கொண்டிருந்தார். அவர் தாமும் ஒரு மாணவன் போல் பற்பல ஆட்டங்களில் ஊக்கம் வைத்து அவைகளில் கலந்து கொண்டு இன்பம்அடையும் இயல்புடையவர். அவர் அவ்வாட்டங்களின் சம்பந்தமாகப் பொருட் செலவு செய்யவும் பின்வாங்கமாட்டார். அவர் இயற்கையிலேயே தாராளமாகச் செலவு செய்யும் தன்மையுடையவராதலால் அம்மாணவர்களின் மாண்புள்ள ஆட்டங்களின் சம்பந்தமாகப் பொருள் செலவு செய்வதற்கு அவர் சிறிதும் அஞ்சவில்லை. ஆதலால் அவர் தன் கல்லூரியின் மைதானத்தில் பல கூடாரங்களும் பந்தல்களும் பந்தல்களில் அலங்காரங்களும் பொருள் தாராளமாகச் செலவு செய்து அமைத்து மைதானத்தை அலங்கரித்தார். வெளி ஊர்களிலிருந்து மூன்று பாடசாலை மாணவர்களும் பந்தாட்டங்களின் பந்தயத்திற்கும் வேறு ஆட்டங்களின் பந்தயங்களுக்கும் அம்பைநகருக்கு வந்திருந்தனர். அம்பை நகரிலேயே இருந்த வேறு இரண்டு உயர்தரப் பாடசாலைகளின் மாணவர்களும் பந்தயங்களுக்கு வரவழைக்கப் பட்டனர். வெளியூர்களிலிருந்து வந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேண்டிய உணவு இருப்பிடம் மற்ற நலங்கள் எல்லாம் கல்லூரியின் தலைமை ஆசிரியரே செவ்வனம் ஏற்பாடு செய்

திருந்தனர். பந்தயங்கள் வைத்து மாணவர்களின் உள்ளங்களில் ஊக்கத்தைபிறப்பிவிக்கப்பற்பலஇன்பக் கிளர்ச்சிகள் தலைமைஆசிரியர் செய்தது பாராட்டத் தக்கதே. அப்பந்தயங்களின் நல்விழாவைக் கொண்டாடுவதற்குக் கல்லூரியின் மாணவர்களுக்கு இரண்டு தினங்கள் விடுமுறை அளிக்கப்பட்டது. அந்நகரத்திலுள்ள பொதுமக்களும் தங்கள் மனைவி மக்களோடு அவ்விழாவில் கலந்து கொள்ள உரிமை பெற்றனர். அவர்களுக் கென்று அலங்காரங்கள் நிறைந்த தனிப்பந்தலும் அமைக்கப்பட்டிருந்தது.

பந்தயத் திருவிழா நடக்கும் தினத்தை எதிர் பார்த்திருந்த பரமசிவன் மாணிக்கவாசகனோடு சேராமல் தந்திரமாகவே தனிமையாக இருந்து தலைமை ஆசிரியர் கட்டளையின்படி ஓடும் பந்தயத்தில் சீரிய திறமை பெற்று அப்பந்தய தினம் வந்தபோது பெரும் ஊக்கமும் பெருங்களிப்பும் கொண்டான். முதல் நாள் பந்தயத்தில் பற்பல பந்தாட்டங்கள் நடைபெற்றன. அவைகளில் எப். ஏ. வகுப்பு மாணவர்களும் பத்தாவது வகுப்பு மாணவர்களும் சேர்ந்திருந்தனர். அப்பந்தயங்களில் பரமசிவனுக்கு இடமில்லாமையால் அவன் அப்பந்தயங்கள் நடை பெற்ற போது அவைகளின் காட்சிகளைக் கண் குளிரக் கண்டு பெருங்களிப் படைந்தான். அவன் ஓடும் பந்தயம் நிகழும் தினம் வந்ததும் அவனைப் பற்பல மாணவர்கள் பலவாறு புகழத் தொடங்கினர்கள். பந்தயம் சரியாக மாலை நான்கு மணிக்கு ஆரம்பமாயிற்று. அவன் வயதுக்கு ஏற்ற மாணவர்கள் பலர் பற்பல பாடசாலைகளினின்றும் அப்பந்தயத்தில் சேர்க்கப்

பட்டனர். எல்லா மாணவர்களும் ஓடும் பந்தயத்தில் ஈடுபடத் தயாராக இருந்தனர். கல்லூரித்தலைமை ஆசிரியர் களிமுகத்துடனும் புன்னகையுடனும் பந்தயங்களை நடத்திவைக்க மைதானத்திற்கு வந்தார். ஆயிரக் கணக்கான மாணவர்களும் பொது மக்களும் பெண் மக்களும் குழந்தைகளும் அம்மைதானத்தில் கூடியிருந்தனர். சிற்சில சிறு பந்தயங்கள் முதலில் நடைபெற்றன. அன்று நிகழ்ந்த பந்தயங்களில் சாலச் சிறந்த பந்தயம் ஒரு மைல் ஓடும் பந்தயம் ஆகும். அப்பந்தயத்தில் பல மாணவர்கள் சேர்க்கப் பட்டிருந்தனர். சென்ற மூன்று ஆண்டுகளாகப் பொன்னுசாமி யென்னும் மாணவனே அப்பந்தயத்தில் பரிசு பெற்றுவந்தானென்று முன்னமே கூறப் பட்டது. அவன் பந்தயத்திற்கு வந்தபோது, பல மாணவர்கள் அவன் சார்பாக பொன்னுசாமி வெற்றி பெறுக வென்று ஆரவார்ரம் செய்து கரகோஷம் செய்தனர். கடைசியாக பரமசிவன் அப்பந்தயத்திற்குப் போகையில் அவன் வகுப்பின் மாணவர்கள் மாத்திரம் "பரமசிவன் வெற்றி பெறுக" என்று ஆரவாரம் செய்து கரகோஷம் செய்தனர். அப்போது பரமசிவனுக்கு நாணம் மிகுதியாக உண்டாயிற்று. அவன் தலைமை ஆசிரியரும் அவனைக் கண்டதும் அவனை அன்புடன் தட்டிக் கொடுத்து, "பரமசிவா, பயப்படாதே. நீ வெற்றி பெறுவாயாக" என்று கூறினர். அப்போது பல மாணவர்களும் கரகோஷம் செய்தனர்.

ஒருமைல் ஓடும் பந்தயம் வெகு பிரபலமாக நிகழ்த்தப் பெற்றது. எல்லா மக்களும் மாணவர்

களும் அப்பந்தயத்தின் காட்சியை மிகுந்த ஊக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். பந்தயத்தில் சேர்ந்த மாணவர்கள் சகோதரர்கள் போல் சந்தோஷமாகக் குறித்த நேரத்தில் குதிரைகள் போல் ஓட ஆரம்பித்தனர். எல்லோரும் மிகவும் ஊக்கத்துடன் ஓடுகையில் சிலமாணவர்கள் பின் தங்கிவிட்டனர். அவர்களைப் பல மாணவர்கள் பரிகாசம் செய்தனர். அரைமைல் தூரம் ஓடினதும் இன்னும் சில மாணவர்கள் தங்கிவிட்டனர். அப்போதும் அக்காட்சியைக் கண்ட பல பொதுமக்களும் நகைத்தனர். முக்கால் மைல் தூரம் போனதும் வேறு சில மாணவர்கள் பின் தங்கினர்கள். அப்போது அக்காட்சியைக் கண்டிருந்த மாணவர்கள் பெரும் சப்தம் செய்தனர். கடைசியாக, பொன்னுசாமியும் பரமசிவனும் மாத்திரம் முக்கால் மைல் ஆனதும் ஓடவேண்டியவர்களானர்கள். அவ்வமயம் பொன்னுசுவாமியின் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் அவனுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு "பொன்னுசுவாமி! ஆகட்டும் ஆகட்டும்; வெற்றி உனக்கே; வெற்றி உனக்கே" என்று ஆரவாரம் செய்தனர். பரமசிவன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், "பரமசிவா! பரமசிவா! ஆகட்டும், ஆகட்டும்;வெற்றி உனக்கே;வெற்றி உனக்கே." என்று ஆரவாரம் செய்தனர்.பொன்னுசுவாமி முன்னும், பரமசிவன் பின்னும், நித்திய கல்யாணி குதிரை போல் வெகு ஊக்கத்துடன் ஓட ஆரம்பித்தனர். சற்று தூரம் சென்றதும் பொன்னுசுவாமிக்குமேல் பரமசிவன் ஓட ஆரம்பித்தான்; பின்னர் சில நிமிடங்கள் கழிந்ததும்,

பொன்னுசுவாமி அவனுக்கு முன் ஓடினன். அவ் விருவரும் தங்களை முற்றிலும் மறந்து, வெகு ஊக்கத் துடன் ஓடினர்கள். சில வேளைகளில் பொன்னு சுவாமி முன்னும், பரமசிவன் பின்னும், சிலவேளை களில் பொன்னுசுவாமி பின்னும் பரமசிவன் முன் னும் ஓடலானர்கள். இறுதியில் "பொன்னுசுவாமி பரமசிவா" 'பொன்னுசுவாமி, பரமசிவா' என்ற மாணவர்களின் ஆரவாரங்கள் அதிகரித்தன. முடி வில் பரமசிவனே பந்தயத்தில் வெற்றி பெற்றுப் பூமியில் மூர்ச்சித்து விழுந்துவிட்டான். எல்லா மாண வர்களும் பொதுமக்களும், பரமசிவனுக்கு ஜே! பரமசிவனுக்கு ஜே! என்று ஆரவாரம் செய்தனர். அவன் கல்லூரியின் தலைமை ஆசிரியரே அவனைத் தன் மடியின் மேல் அமர்த்தி, அவனுக்கு ஒரு சோடா உடைத்துக் கொடுத்தார். பரமசிவன் மூச்சு தெளி யப் பெற்றதும், தன் கண்களைத் திறந்து பார்க்கை யில் அவனைப் பலபேர் சூழ்ந்துகொண்டிருந்ததைக் கண்டான். அப்போது அவன் நாணம் அடைந் தான். ஆனல், அவ்விடம் கூடியிருந்த அனைவரும் "பரமசிவனுக்கு ஜே!" என்று கூறி அவனை உற் சாகப் படுத்தினர்கள். அவன் தலைமை ஆசிரியரும் அவனைத் தட்டிக் கொடுத்து, "பரமசிவா! உன் செயல் நன்று நன்று" என்று கூறி அவனைப் புகழ்ந் தனர். பரமசிவன் அச்சமயம் அடைந்த சந்தோ ஷத்தை ஏட்டில் எழுத இயலாது.

அன்று மாலை பந்தயங்கள் அனைத்தும் நடை பெற்றதும் அங்கே விஜயம் செய்திருந்த நியாயாதி பதியின் மனைவி பற்பல பந்தயங்களில் வெற்றிபெற்ற

மாணவர்களுக்குப் பலதிறப்பட்ட பரிசுகளை அளித்தாள். அவள் பரமசிவனுக்குப் பரிசை புத்தம் புதிதாக மூன்று பத்து ரூபாய் நோட்டுகள் அவன் கையில் வைத்து அவன் பந்தயத்தில் காட்டிய பெருந்திறமையை இரண்டொரு வார்த்தைகளால் புகழ்ந்து கூறி அவனை ஆசீர்வதித்தாள். அவன் அவ்வம்மையாரை வணங்கிப் புன்னகையுடன் பரிசைப் பெற்றுக்கொண்டு தன் இருப்பிடம் சேர்ந்தான். அவனைச் சுற்றிக் கொண்டு பலமாணவர்கள் அவன் ஒப்பற்ற தன்மையைப் புகழ ஆரம்பித்தனர். அவர்களில் மாணிக்கவாசகனும் கோவிந்தசுவாமியும் சேர்ந்திருந்தனர். ஆனல், தலைமை ஆசிரியர் மாணவர்கள் எவ்வித சந்தடியும் செய்யாமல் அவரவர் வீடுகளுக்குத் தனிமையாகச் செல்லுதல் வேண்டுமென்று கட்டளை விதித்தார். ஆதலால் மாணிக்கவாசகன் பரமசிவனுடன் கலந்து பேசி அளவளாவ அன்று வழியில்லாமல் போயிற்று. பரமசிவன் மாணிக்கவாசகன் கூட்டுறவு அன்று தனக்கு இல்லாமல் இருந்ததே நலமென்று எண்ணிக் கொண்டு ஆனந்த பரவசத்துடன் முப்பது ரூபாயை பெற்றுக்கொண்டு தன்வீடு போய்ச் சேர்ந்தான். அன்று இரவு அவன் நித்திரை போகுமுன் தான் மாத்திரம் தன் தாய் தந்தையரை அன்றுமாலை நடந்த பந்தயத்தில் எண்ணுமல் இருந்தால் பந்தயத்தில் வெற்றி வந்திராது என்று எண்ணினன். அவர்களுக்குத் தான் பேதைமையால் இழைத்த தீமையை நினைந்து அவர்களுக்குக் கைம்மாறு காட்டவேண்டுமெனத் தீர்மானித்தான். அன்று இரவு அவர்களையே

மனத்தில் தியானம் செய்து கொண்டு நித்திரை போனுன்.

பரமசிவன் மறுநாட்காலேதான் பரிசாகப்பெற்ற முப்பது ரூபாயையும் தன் தந்தைக்கு மணியார்டர் செய்துவிட்டான். அவன் தன் தந்தைக்கு ஒரு அன்பு ததும்பிய கடிதமும் எழுதினுன். அவன் அதில் தான் பந்தயத்தில் காட்டிய ஊக்கத்தின் மாண்பையும் பரிசு பெற்ற வரலாற்றையும் தான் தன் தலைமை ஆசிரியரிடத்திலும் நியாயாதிபதி மனே வியினிடத்திலும் மாணவர்களிடத்திலும் அடைந்த கௌரவங்களையும் எழுதி இருந்தான். அவன் கடிதத்தைத் தபால்பெட்டியில் போட்டுவிட்டு அன்றைய தினம் விடுமுறை ஆனதால் சந்தோஷமாகத் தன் வீட்டில் போய்ச் சேர்ந்து ஏதேனும் ஒரு கதைப் புத்தகம் படிக்கலாமென்று எண்ணினுன். அவன் வீட்டிற்குப் போகும் வழியில் மாணிக்கவாசகன் அவனை வெகு அவசரமாக வந்து தட்டிக் கொடுத்து "பேஷ்! பரமசிவா! பேஷ்! நீயே வீரன்; நீயே சூரன்; நீயே தீரன்" என்று கூறி நகையாடி ஞன்.

பரமசிவன் பந்தயத்தில் காட்டிய பெருந்திற மையை மாணிக்கவாசகன் பலவாறு புகழ்ந்து அவனைத் தன்னேடு அவ்விடுமுறை நாளில் வெளியே அழைத்துக் கொண்டு போயினுன். பரமசிவனுக்கு மாணிக்கவாசகனை மறந்துவிட வேண்டுமென்ற எண்ணம் உரமாக இருந்த போதிலும், அவனை நேரில் கண்டுவிட்டால் அவனைவிட்டுப் பிரிய அவ னுக்கு மனம் வருவதில்லை. மாணிக்கவாசகன் மாண

வர்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் வசீகரமும், இன்பகரமான பேச்சும் விளங்கப் பெற்றவன். அவன் மாணிக்கவாசகனை அழைத்துக் கொண்டு, ஒரு தென்னஞ் சோலைக்குப் போனான். பரமசிவன் அவன் தனக்கு அளித்த புகழ்மாலையைப் புனைந்து கொண்டு தான் தன் தந்தைக்கு முப்பது ரூபாய் மணியார்டர் செய்து தன் தவறுக்குப் பிராயச் சித்தம் செய்ததையும் எண்ணிக்களித்துக் கொண்டு, அவனோடு சந்தோஷமாகக் கல்லூரியைப் பற்றிப் பேசத் தொடங்கினான். மாணிக்கவாசகன் கல்லூரி விஷயங்களில் சந்தோஷம் கொள்ளாமல் பரமசிவனை நோக்கி "பரமசிவா! நீ பரிசு பெற்ற முப்பது ரூபாயை என்ன செய்தாய்? நாம் இருவரும் இன்று மாலை ரயில் ஏறி நாளைக் காலை இந்திராபுரியை அடைந்து அவ்வழகிய நகரின் காட்சிகளைக் கண்டு அங்குள்ள பல இன்பக் கிளர்ச்சிகளையும் கண்ணுற்று நாளை இரவு மீண்டும் ரயில் ஏறி நாளைய மறுநாட் காலை இவ்விடம் வந்துவிடலாம். நாளைக்கு ஒரு நாள் கல்லூரிக்குச் செல்லாமல் இருந்தால் பரவாயில்லை. நீ முதல் பரிசு பெற்றமையால் தலைமை ஆசிரியர் உன்னை மன்னித்துவிடுவார். ரயில் கட்டணம் ஆள் ஒன்றுக்கு நாலு ரூபாய்தான் ஆகும். நீ விரைவாக இன்னமுது அருந்திவிட்டு மாலை நாலுமணிக்கு உன் வீட்டில் தயாராக இருந்தால் நான் உன்னை வந்து சந்திக்கிறேன். மாணவர்கள் அவ்வப்போது வெளியூர்களுக்குச் சென்று பற்பல காட்சிகளைக் கண்டு களித்தல் கல்விப் பகுதியில் சேர்ந்ததே ஆகும். உல்லாசப் பிரயாணம் செய்தலை நம் ஆசிரியர்களும்

மாணவர்களுக்கு அத்தியாவசியமென்று அடிக்கடி சொல்லுகிறார்கள். இந்திராபுரியின் கடற்காட்சி ஒப்பற்றதாகும். அங்கு மின்சார வண்டிகளும் மகத்தான கட்டடங்களும் உல்லாசமான நந்தவனங்களும் நாடக மேடைகளும் சினிமா படக் காட்சிகளும் நிரம்பி உள்ளன. பணம் வந்தால் அதைக் களிப்பாகச் செலவு செய்யவேண்டும். அதுதான் அறிவுடைய மாணவன் செயல் ஆகும். அறிவில்லா மாணவர்கள்தான் பணத்தைப் பத்திரமாக பெட்டியில் வைத்துக்கொள்ளுவார்கள். அவனைத்தான் உலோபி என்று சொல்லுவார்கள். பரமசிவா! பணத்தைக் கடவுள் ஏன் கொடுக்கிறார்? அதிலும் நீ பணம் பெற்றது எதிர்பாராத உன் அதிர்ஷ்ட வசம் ஆகும். அதிர்ஷ்டத்தில் வந்த பணத்தை ஆனந்தமாகச் செலவு செய்தல் வேண்டும். நீயும் தாராளமாக செலவு செய்யும் பெருந்தன்மையும் பெருங்குணமு முடையவன். என்ன யோசிக்கிறாய்? உன் தீர்மானத்தைச் சீக்கிரம் சொல்'' என்று கூறினான்.

பரமசிவன் நல்லறிவு இயற்கையிலேயே பெற்றவனாக இருந்தும், தன் பெற்றோரிடத்தில் பேரன்பு உடையவனாக இருந்தும், வெகுவிரைவில் மாணிக்கவாசகன் கூறிய யோசனையை அங்கீகரித்துவிட்டான். ஆனால் அவன் பரிசு பெற்ற பணத்தை முன்னமே மணியார்டர் செய்துவிட்டதால் மாணிக்கவாசகன் யோசனையை நிறைவேற்ற வழியில்லையே யென்று மனம் வருந்தி அவனை நோக்கி ''மாணிக்கவாசகா! நான் பெருந்தவறு செய்துவிட்டேன். முப்பது ரூபாயில் ஒரு ரூபாய்கூட என் கைச் செலவிற்கு வைத்

துக்கொள்ளாமல் இப்போதுதான் என் தந்தைக்கு மணியார்டர் செய்துவிட்டு வந்தேன். நீ சிறிது நேரம் முன்னே வந்திருந்தால் உன் யோசனை பலித்திருக்கும். இப்போது நான் என்ன செய்ய முடியும்" என்று சொன்னான்.

மாணிக்கவாசகன் மாண்பற்ற செயல்களைச் செய்வதில் நிபுணனுகையால் பரமசிவனைப் பார்த்து நகைத்து அவனை நோக்கி "பரமசிவா! இதற்காகவா வருந்துகிறாய். இப்போதே என்னுடன் வா. நாம் இருவரும் தபாலாபீஸிற்குப் போய் மணியார்டரை நிறுத்திவிடலாம். நீ ஒரு ரூபாய்கூட கைச்செலவிற்கு வைத்துக்கொள்ளவில்லையே என்று வருந்துகின்றாயல்லவா? உனக்கு முப்பது ரூபாயும் அப்படியே வந்துவிடும். வா, போகலாம். காலதாமதம் செய்யாதே" என்று கூறினான்.

பரமசிவன் அவ்வெம்மொழிகளைக் கேட்டதும் மனம் திடுக்கிடப் பெற்றான். அவன் அங்ஙனம் செய்வதால் தன் தந்தைக்கு எத்தகைய தீமை செய்ய நேரும் என்றும் அவர் கஷ்டப்பட்டு தேகம் மெலியப் பெற்று தனக்காகச் செய்யும் தியாகத்திற்கு அதுவா கைம்மாறு என்றும் நல்லெண்ணம் வரப்பெற்று தன்னையே நொந்துகொண்டு மாணிக்கவாசகனை எவ்விதத்திலும் மறந்து விடுவதே நலமென்று தீர்மானித்து அவன் கூறிய இழிவான யோசனையை வெறுத்து அவனை நோக்கி, "மாணிக்கவாசகா! உன்னை நான் சிறந்த புத்திமானென்று இதுவரையிலும் நம்பியிருந்தேன். உன் எண்ணங்களும் நல்லெண்ணங்கள் என்றே நம்பி இருந்தேன்; ஆனால்,

நீ தற்போது சொல்லிய யோசனை மிகவும் இழிவானது. தபாலாபீஸ் உத்தியோகஸ்தர் உன்னைப் போன்ற முழு மூடரல்லர். நான் செய்த மணியார்டரை நிறுத்த அவருக்கும் அதிகாரம் இல்லை; அவர் அங்ஙனம் செய்யவும் முன் வரார். அப்படி ஒரு வேளை அவர் முன் வந்தாலும் நான் அத்தகைய புன்செயலுக்கு முன் வரேன். நான் என் தந்தைக்கு இரவும் பகலும் ஆலயம் அமைத்து அவரை வழிபாடு செய்தாலும் அவர் எனக்குப் புரியும் ஒரு நன்மைக்கு அது இணையாகாது. அவர் திருஉருவமே என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. அவருக்குத் தீமை புரிவதைக் காட்டிலும் பாதகச் செயல் உலகில் எனக்கு வேறு இல்லை. உன்னைப்போன்ற நண்பர்களை நூற்றுக்கணக்காக நான் இழந்தாலும் கவலை அடையேன். ஆனல் நான் என் தாய் தந்தையருக்கு மாத்திரம் எத்தகைய நன்றிஅற்ற செயலும் செய்யத் துணியேன். நீ கூறிய யோசனையை முற்றிலும் வெறுத்து உதறித்தள்ளுகின்றேன்" என்று கூறி மாணிக்கவாசகனை வெறுப்புடன் விட்டகன்ருன்.

மாணிக்கவாசகன் பரமசிவன் கூறிய கோப மொழிகளைக் கேட்டு வெகுளாமல் சிரித்தவண்ணமே அவனை நோக்கிக்கொண்டிருந்து பின்னர் பரமசிவனை நோக்கி, "பரமசிவா! நீதான் முதல்தரப் பைத்தியக்காரன். உன்னைப்போல் வீதியில் திரியும் பண்டாரங்கள் கூட தத்துவம் பேசமாட்டார்கள். நீ கையில் காலணு இல்லாமல் ஆண்டியாக வாழ்ந்து கொண்டு இரு; உனக்குப் பரிசு வந்து என்ன பயன்? உனக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டது" என்று

கூறிப் பரமசிவனைப் புன்னகையுடன் தட்டி கொடுத்து தன் வீடுபோய்ச் சேர்ந்தான். தன்னை விட்டு அகன்றதே தனக்கு நலம் என்று பரமசிவன் எண்ணிக்கொண்டு, அவனை எவ்விதத்திலும் விட்டு முற்றிலும் நீங்கவேண்டும் என்று மனத்திடம் செய்து கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் அன்று இரவு தன் பாடங்களைப் படிக்க ஆரம்பிக்கை யில் தான் பல தினங்கள் படிக்காமல் விட்டு விட்ட பாடங்கள் பல இருக்கக் கண்டான். அவன் அவை களை எவ்வாறு படித்து முடிக்கமுடியும் என்று மனம் ஏங்கினன். வருடாந்தரப் பரீட்சை நிகழ நெடுநாட் கள் இல்லையே யென்று எண்ணினன்; தான் பெற் றுள்ள கல்வி ஞானம் சென்ற ஆண்டில் பெற்றிருந் ததைவிட மிகவும் குறைந்துள்ளதே என்றும் மருண் டான். இந்த ஆண்டில் தனக்குப் பரிசு வராமல் போனலும் பரவாயில்லை யென்றும் பரீட்சையில் தான் தேர்ச்சி அடைய அரிதாகிவிடு மென்றும் அஞ்சினன்; மாணிக்கவாசகன் மாசுபொதிந்த நட்பி னல் வந்த கேடு எத்துணைப் பெரிது என்று உணர்ந் தான். ஆதலால் பரமசிவன் தன் பாடங்களை அன்று இரவிலிருந்தே அதிக சிரத்தையுடனும் ஊக் கத்துடனும் படித்து பரிசு இல்லையானலும் பரீட்சை யில் தேர்ச்சி அடைதல் வேண்டு மென்று விடப்பட்ட பாடங்களைப் படிக்கத் துவங்கினன். வருடாந்தரப் பரீட்சை நிகழ இரண்டு வாரங்களே இருந்தன. அவன் அச்சுருங்கிய காலத்தையும் அவன் ஓதவேண் டிய பாடங்களின் அளவையும் நோக்குகையில் அவன் எவ்வளவு மிகுதியாக உழைத்தாலும் அப்பாடங்களை

முடிக்க இயலாது என்று தீர்மானித்தான். ஆதலால் அவனுக்கு அளவுகடந்த அச்சம் உண்டாயிற்று. இருப்பினும் அவன் தைரியத்தை முற்றிலும் விட்டுவிடாமல் மன ஊக்கத்துடன் தேகம் வருந்தப் படிக்க ஆரம்பித்தான். அவன் அவ்வண்ணமே இரவும் பகலும் பாடங்களை மிக வருந்தி ஓதி ஒரு மாணவன் நட்பையும் எண்ணுமல் குகைபோன்ற தன் சிற்றறையில் இரவும் பகலும் அமர்ந்து அமைதியுடன் பல பாடங்களைப் படித்து வந்தான்.

ஒருவாரம் கழிந்ததும் பரமசிவன் தன் தந்தையினிடமிருந்து ஒரு தபால் கடிதம் வரப்பெற்ருன். அவன் ஆர்வத்துடன் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்க்கையில் அவன் தன்னை அறியாமலேயே கண்ணீர் விட்டான். அவன் தந்தை அக்கடிதத்தில் கீழ் வருமாறு எழுதியிருந்த விஷயங்கள் மிகவும் பாராட்டத்தக்கன. "பரமசிவா! எங்கள் கண்மணியே! உன் மாசற்ற இன்ப அழகிய உருவம் எங்கள் கண்ணைவிட்டு அகலவில்லை. நீ எழுதிய கடிதத்தை நான் பன்முறை படித்துப்பரமசந்தோஷமடைந்தேன். உன் அன்னைக்கும் உன் அருமைத் தங்கைக்கும் பன்முறை படித்து அவர்களைப் பரவசம் பண்ணினேன். நாங்கள் மூவரும் உன்னை நினையாத நேரமில்லை. நாங்கள் உலகில் எதை மறந்தாலும் எங்கள் உயிரையே மறப்பதாயிருந்தாலும் உன்னை மறக்கமாட்டோம். உன்னை மாசில்லா மாணிக்கமென்றே எங்கள் மனத்தில் எண்ணி மகிழ்கின்ருேம். நீ அன்போடு அனுப்பிய முப்பது ரூபாய் வந்து சேர்ந்தது. நான் நீ அடைந்த பரிசை மெச்சுவதைக் காட்டிலும் நீ உன்

தாய் தந்தையருக்குப் புரிந்த இக்கனிந்த செயலை மெச்சுகின்றேன். இச்செயல் உன் பெருங் குணத்தையும் பெருந் தன்மையையும் வண்மையையும் எல்லாவற்றைக் காட்டிலும் மேலாக நீ உன் பெற்றோர்களிடத்தில் வைத்திருக்கின்ற பேரன்பையும் காட்டுகின்றது. நீ அனுப்பிய பணத்தைக்கொண்டு நான் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்ததுமன்றி வீட்டின் செலவிற்கும் சிறிது பணம் எங்கள் வாழ்க்கை நலத்தின் செலவிற்கும் பயன்படுத்துகின்றேன். நீ தளராமல் கல்வியில் உழைத்து தனிப் புகழ்பெற்று உயர்ந்த பதவி பெற்று உன்னையே முற்றிலும் நம்பியுள்ள உன் தாய் தந்தை தங்கை இம் மூவர் நலத்தையும் உன் நலத்தையும் பெருகச் செய்வாயாக. கடவுள் அருள் உன்னிடத்தில் தழைத்து வளருமாறு அவர் திருவடிகளை வணங்குகின்றேன்.”

பரமசிவன் மேற்கூறிய கடிதத்தில் எழுதி இருந்த விஷயங்களைத் திருப்பித் திருப்பி வாசித்து மனம் உருகி தான் புரிந்த நற்செயலை எண்ணி மகிழ்ந்து மாணிக்கவாசகன் நட்பை முற்றிலும் துறக்கவேண்டிய அவசியத்தை மனதில் உரமாக எண்ணினன். அவன் மாணிக்கவாசகன் யோசனையை அங்கீகரித்திருந்தால் தன் தந்தைக்கு எத்துணைய துன்பம் நேர்ந்திருக்கும் என்று எண்ணி மனம் வருந்தினன். அவன் எவ்வளவு வருந்தி உழைத்தும் வருடாந்தரப் பரீட்சை தினம் வந்ததும் பெரிதும் அச்சம் கொண்டான். அவன் தன்னைப்போல் பேதை மாணவன் மாணிக்கவாசகனைத் தவிர வேறொருவனும் இரான் என்றும் எண்ணினன். மாணிக்கவாசகனுக்குக்

கல்வி அவசியமில்லையென்றும் அவன் தந்தை வைத்துள்ள ஏராளமான சொத்தே போதுமென்றும் எண்ணி அவனைப்பற்றி ஒரு சிறிதும் கல்வி விஷயத்தில் கவலை உறாமல் தன் கல்வி விஷயத்தைப் பற்றி மாத்திரம் பெருங் கவலையுற்றுப் பரீட்சை தினத்தை அச்சத்துடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் தன் பற்பல பாடங்களையும் அவ்வப்போது முறைப்படி ஒழுங்காக வாசித்து வந்திருந்தால் வருடாந்தரப் பரீட்சைக்குப் பயப்படவேண்டிய அவசியமேயில்லையென்றும் தான் முன்னே சோம்பல் என்னும் பேய்க்கு அடிமைப்பட்டு வந்ததால் பரீட்சை நெருக்கத்தில் பத்து அல்லது பதினைந்து தினங்கள் மட்டும் இரவும் பகலுமாக உழைப்பதால் பயன் ஒன்றுமில்லை யென்றும் நன்கு அறிந்தான்.

இருப்பினும், அவன் அச்சமயம் தனக்கு வேறு வழி இன்மையால் எவ்விதத்திலும் தன்னால் கூடிய வரையில் உழைத்துப் பரீட்சையில் தேர்ச்சியாகிலும் பெறுதல் வேண்டுமென்று தீர்மானித்திருந்தான்.

வருடாந்தரப் பரீட்சை வந்து விட்டது; பரமசிவன் தனக்கு அமைக்கப்பட்டிருந்த இடத்தில் போய் அமர்ந்தான்; சரியாக மணி பத்து ஆயிற்று. கல்லூரி மணியின் அரவம் எழுந்தது; பரீட்சை வினைகள் அடங்கிய சிறு துண்டுக்கடிதம் கையில் கொடுக்கப்பட்டது. பரமசிவன் மனம் துடித்தது. அவன் கையில் வினைத்தாளை வாங்கியதும் வினைக்களைப் படித்துப்பார்த்தான். அவ்வினைக்கள் ஒன்றும் பரமசிவனுக்குப் புலனாகவில்லை. பரீட்சைக்கு நியமிக்கப்பட்ட பாடம் கணக்கின் பகுதியில் சேர்ந்த ஜியா

மட்ரி என்பதாகும். அப்பாடத்தில் பரமசிவனுக்கு ஞானமே இல்லை. அவன் அப்பாடத்தை முற்றிலும் வெறுத்து அசட்டை செய்திருந்தான். ஆதலால், அவன் அச்சமயம் ஒரு வினவுக்குக்கூட விடைஅளிக்கத்தெரியாமல், ஆந்தைபோல் விழித்துக் கொண்டிருந்தது ஆச்சரியம் அல்ல. அவன் பக்கத்தில் கோவிந்தசுவாமி என்னும் மாணவன் அமர்ந்திருந்தான்; அவன் பரீட்சை வினத்தாளை வாங்கியதும் சற்றும் கவலையின்றி நிதானமாக வினக்களை யெல்லாம் படித்து முடித்து ஒவ்வொரு வினவாக எடுத்துக் கொண்டு தன் காகிதத்தில் ஒழுங்காகத் தக்க விடை படத்தோடு அளித்துக்கொண்டு போனான். அவன் எழுத்துக்கள் மிகவும் தெளிவாகவும் பெரியனவாகவும் கொட்டை கொட்டையாகக் காணப்பட்டன. அவன் ஒரு கணிதம் எழுதி முடித்ததும் அதை எடுத்துத் தன் மேஜையின் ஓரத்தில் வைத்துவிட்டு மற்றொரு காகிதத்தில் எழுத ஆரம்பித்தான். பரமசிவன் அவனையே கள்ளத்தனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பரீட்சையின் மேல் பார்வைக்கு ஏற்படுத்தப்பட்ட ஆசிரியர் வந்தபோதெல்லாம் பரமசிவன் மிகவும் ஊக்கமாக எழுதுவதுபோல் தன் காகிதத்தில் பரீட்சை வினக்களையே எழுதிக் கொண்டிருந்தான். அவன் ஒரு கேள்விக்கும் விடை அளிக்க முடியாமல் இருந்ததை எண்ணித் தன்னையே தான் நொந்து கொண்டிருந்தான். அப்போது அவனுக்குஉண்டான அவமானத்திற்கும் அளவேயில்லை. அவனுக்குஅப்பாடத்தில் ஒரு அம்சம் கூட தனக்கு வராது என்றும் தனக்கு உண்மையில் வட்டம் தான் வருமென்றும்

பெரிதும் அஞ்சினன். அவனுக்கு அப்போது என்ன செய்வதென்று தோன்றவில்லை. கடைசியாக கோவிந்தசுவாமியின் விடைகளைக் கூடிய வரையில் பார்த்து எழுதிவிடுவதே தகுந்த யோசனையென்று தோன்றிற்று.

பரமசிவன் தன் மானத்தை விட்டு சுயமரியாதையையும் துறந்து ஒரு கள்வன்போல் கள்ளத்தனத்தைக் கைக்கொண்டு கோவிந்தசுவாமி எழுதிய விடைகளைத் தன்னுல் கூடியவரையில் பார்த்துத் தன் காகிதத்தில் எழுதி வந்தான். அவன் மனவருத்தத்துடன் அந்த இழிவான செயலைச் செய்துகொண்டு கோவிந்தசுவாமியை அவ்வப்போது கள்ளப்பார்வை பார்க்கவே கோவிந்தசுவாமி அவனை நோக்கினன். அவனுக்குப் பரமசிவன்மேல்சந்தேகம் உண்டாயிற்று. அவன் அளவில்லா ஆச்சரியமடைந்து, "என்ன அநியாயம்! அறிவில் தலைசிறந்த பரமசிவனும் இத்தகைய இழிவான செயலைச் செய்யத் துணிந்து விட்டான். இவன் சில மாதங்களாகத் தன் பாடங்களை ஒழுங்காகப் படிக்காமலும் மாணிக்கவாசகனைப் போன்ற தீய மாணவர்களோடு சேர்ந்துகொண்டு காலத்தை வீணுகக் கழித்துக்கொண்டுவந்ததாலும் இந்த இழிவுஇவனுக்கு வந்துவிட்டது. நல்லது, இவன் நம் விடைகளைப் பார்த்துத் தன் காகிதத்தில் எழுதிவிட்டால் இருவர்க்கும் தீமை வரும்" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு தான்விடைகள் எழுதிய காகிதங்களை வேறு பக்கத்தில் வைத்துக்கொண்டான். அப்போது பரமசிவனுக்குக் கோவிந்தசுவாமியின் மேல் உண்டான கோபத்திற்கு அளவில்லை. கோவிந்தசுவாமி செய்த

செயல் நியாயமுடைத்தே எனினும் பரமசிவனுக்கு அவன் மேல் அளவில்லாக் கோபம் பிறந்துவிட்டது. அவன் தலை குனிந்துகொண்டே "இந்தப் பயல் கோவிந்தன் எவ்வளவு பெரிய மூடன்! இவனும் சிறந்த மாணவனாய் விட்டானே! அந்தோ! என் மடமையினாலும் சோம்பலாலும் துஷ்ட மாணவர்களின் செயற்கையாலும் அல்லவோ நான் கெட்டுவிட்டேன். நானும் இந்த முட்டாள் கோவிந்தன் விடைகளைப் பார்த்து எழுதுவது என்றால் என்ன கேவலம்! என்ன அவமானம்! என்ன இழிவு! என்று தனக்குள் சொல்லிக்கொண்டு பரீட்சையில் தன் கதி என்ன வாகுமென்று எண்ணிக் கொண்டு சிறிது நேரம் ஒன்றுமே செய்யாமல் மேலே நோக்கிக் கொண்டிருந்தான். அச்சமயம் பரீட்சைக்கு வந்திருந்த மேற்பார்வையாளர் பரமசிவனைப் பார்த்து "பரமசிவா! என்ன செய்கிறாய்? உன் கேள்வித்தாளையே பார்ப்பாயாக" என்று கூறினார். பரமசிவன் அச்சமும் அவமானமும் அடைந்தான். மேற்பார்வையாளர் உள்ளபடியே பரமசிவனைச் சிறந்த கல்விமான் என்று எண்ணினரே அன்றி அவனைப்பக்கத்து மாணவன் விடைகளைப் பார்த்து எழுதுபவன் என்று எண்ணவில்லை. அவர் களங்கமில்லாமல் சொல்லிய வார்த்தைகளைப் பரமசிவன் மனத்தில் கள்ளம் உடையவனாதலால் தவறாக எண்ணிவிட்டான்.

பரமசிவன் நெடுநேரம் தன் குற்றத்தை எண்ணிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் கோவிந்தசுவாமி மறுபடியும் தான் விடைகள் எழுதிய காகிதமொன்றைப் பரமசிவன் பார்வைக்கு எட்டும்படி தன்னை அறியாமலேயே பரமசிவன் பக்கம் வைத்து

விட்டான். பரமசிவன் மிகுந்த களிப்புடன் தன் மானத்தைவிட்டு மீண்டும் விடைகளைத் தன் கடிதத்தில் கள்ளத்தனமாக எழுதிக்கொண்டான். சுமார் பன்னிரண்டு கேள்விகள் அப்பாடத்தில் கொடுக்கப் பட்டிருந்தன; அவைகளில் ஐந்து கேள்விகளுக்கு விடைகள் கோவிந்தசுவாமியின் விடைகளைப் பார்த்துப் பரமசிவன் எழுதிக்கொண்டான். அப்போது தான் அவனுக்குத் தைரியம் பிறந்தது. அவன் தன் மானம் பறந்து போனாலும் பரீட்சையில் தைரியம் பிறந்ததே போதுமென்று அது போழ்து எண்ணிக் கொண்டான். அவன் எப்படியும் அப்பாடத்தில் தன் தேர்ச்சிக்கு ஏற்ற அம்சங்கள் கிடைத்து விடுமென்று எண்ணி மனவமைதி அடைந்தான். அவன் தேச சரித்திரம் பூகோள சாஸ்திரம் ஆகிய இந்த இரண்டு பாடங்களிலுங் கூட நல்ல ஞானம் பெற்றில்லை. அவன் அப்பாடங்களையும் அசட்டை செய்திருந்ததால் கோவிந்தசுவாமியின் விடைகளில் அநேகம் கள்ளத் தனமாகப் பார்த்து எழுதிக்கொண்டான். அவன் மற்றப் பாடங்களில் தன் தேர்ச்சிக்கு ஏற்ற ஞானம் பெற்றிருந்ததால் பரீட்சை முடிந்ததும் தான் எவ்வி தத்திலும் மேல் வகுப்புக்கு போய்விடலாம் என்று திடமாக எண்ணிக்கொண்டான்.

அதிகாரம் பதின்மூன்று.

பரமசிவன் தன் தாய் தந்தையர் பொருட்டும் தன் தங்கையின் பொருட்டும் கோவிந்தசுவாமியின் விடைகளைப் பார்த்து எழுதவேண்டியதாக இருந்

ததை எண்ணி யெண்ணி மனம் வருந்தினன். அவனுக்குக் கோவிந்தசுவாமியின் மேல் பெருங் கோபம் அநியாயமாக வந்துவிட்டது. உண்மையில் அவன் கோவிந்தசுவாமிக்கு ஒருவிதத்தில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருந்தான். அப்படியிருக்க பரமசிவன் கோவிந்தசுவாமியை எவ்விதத்திலேனும் தண்டிக்க வேண்டும் என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். பரமசிவன் வருடாந்தரப் பரீட்சை முடிந்ததும் சில தினங்கள் பந்தாட்டத்திற்குப் போகாமலேயே தன் வீட்டிற்குப்போய் விட்டான். அவனுக்குப் பரீட்சையின் முடிவு என்னவாகுமோ என்ற பயம் அவன் உள்ளத்தில் குடிகொண்டு விட்டது. இருப்பினும் அவன் ஒரு நாள் தன் மனதைச் சரிப்படுத்திக் கொண்டு பந்தாட்டத்திற்குச் சென்று அன்றைய தினம் அவன் கோவிந்தசுவாமியும் பந்தாட்டத்தில் சேர்ந்து விளையாடியதைக் கண்டான். கோவிந்தசுவாமி தன் பாடங்களை எவ்வாறு முறைப்படி மெதுவாகவும் ஒழுங்காகவும் ஓதி வல்லவனுகத் திகழ்ந்தானே அவ்வாறே சில தினங்களில் பந்தாட்டத்தின் நுணுக்கங்களை உணர்ந்து அவ்வாட்டத்திலும் ஒரு சிறந்த ஆட்டக்காரனுகப் பொலிந்திருந்தான். அவன் பந்தாட்டத்தில் பற்று இல்லாதவனுக இருந்ததைக் கண்டு அவன் தலைமை ஆசிரியர் அவனுக்கு நன்மதிபுகட்டி பந்தாட்டத்தில் சில தினங்களுக்கு முன்னர் தான் அவனைச் சேர்ப்பித்தார். அவன் அவர் விருப்பத்திற்கிணங்கி அவர் நன் மொழியைப் பொன்மொழியாக ஏற்று பந்தாட்டத்தில் கலந்து கொண்டான்.

பரமசிவன் தன்னைக் காட்டிலும் பந்தாட்டத்தில் சிறந்தவன், அக்கல்லூரியில் வேறு மாணவன் இல்லை என்று செருக்கடைந்திருந்தான். அதிலும் கோவிந்தசுவாமி நற்பெயரெடுத்து விட்டால் தனக்கு இருக்கும் சிறு புகழும் மாய்ந்து விடுமென்று அவன் அஞ்சினன். ஆதலால் பரமசிவன் கோவிந்தசுவாமியை பந்தாட்டத்தில் முறியடிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு அன்று மாலை பந்தாட்டத்தில் என்றுங் காட்டாத ஊக்கத்தைக் காட்டலானன். கோவிந்தசுவாமி பந்தைக் காலில் உதைத்துக்கொண்டே ஊக்கத்துடன் ஓடி வருவதைப் பார்த்துப் பரமசிவன் எதிர்கட்சியில் இருந்ததால் அவனை முரட்டுத்தனமாக ஒரு மிருகம்போல் தாக்கினன். அவனைப் பலவாறு பந்தாட்டத்தில் கருணையும் நியாயமும் இன்றி மிருகத் தன்மையையே கைக் கொண்டு பந்தைப் பல சமயங்களில் உரப்பாக உதைத்து அவன் முகத்தில் படும்படி முயற்சி செய்தான். ஆனல் அவன் பந்தை உதைத்தபோதெல்லாம் அது அவன் குறிதப்பியே போயிற்று. கடைசியாகப் பரமசிவன் மிகவும் முரட்டுத் தனமாகப் பந்தாட்டத்தின் விதியையும் மீறி தான் கோவிந்தசுவாமியின் மேல் கொண்டிருந்த வெறுப்பால் அவனைத் தாக்கி அவனைக் கீழே தள்ளிவிட்டான். அவன் வேண்டுமென்றே அவ்வாறு கோவிந்தசுவாமிக்குத் தீமை புரிந்தபோதிலும் மாணவர்கள் அவன் அறியாமல் அத்தவறு செய்து விட்டானென்றே எண்ணினர்கள். கோவிந்தசுவாமி கீழே விழுந்ததும் அவன் நெற்றியில் கல்லடி பட்டதால் அவன் மூர்ச்சித்து விட்டான். அவன் நெற்றியிலும்

இரத்தம் மிகுதியாக வர ஆரம்பித்தது. அவன் செத்த பிணம் போல் தரையில் கிடந்தமையால் மாணவர்கள் பெரிதும் அஞ்சி ஆபத்து! ஆபத்து! என்று கூச்சலிட்டார்கள். சில மாணவர்கள் தலைமை ஆசிரியரிடம் ஓடி நிகழ்ந்த சம்பவத்தைக் கூறினார்கள்.

தலைமை ஆசிரியர் திடுக்கிட்டு கோவிந்தசுவாமியிடம் விரைந்துஓடிவந்து அவனைத்தூக்கித் தன்மடியில் வைத்துக்கொண்டு தன் கைக் குட்டையால் அவன் முகத்தைத் துடைத்து கண்ணீர் வரவழைத்துத் தானே கோவிந்தசுவாமியின் முகத்தில் தெளித்தார். சிறிது நேரங் கழிந்ததும் கோவிந்தசுவாமி தன் கண்களைத் திறந்தான். அப்பொழுதுதான் அவருக்கும் அவனைச் சுற்றியிருந்தமாணவர்களுக்கும்நல்லுயிர்வந்தது. பரமசிவன் தான் செய்த மன்னிக்க முடியாத தவறை எண்ணி மனம் நடுநடுங்கித் தனக்கு என்ன ஆபத்து வருமோ என்று சொல்ல வொண்ணா அச்சங்கொண்டிருந்தான். அவன் தன் இழிவான செய்கைக்கு தக்க தண்டனை தலைமை ஆசிரியர் தனக்கு அளிப்பாரென்று எதிர்பார்த்திருந்தான். ஆனால் கோவிந்தசுவாமி தன் கண்களைத் திறந்ததும் பரமசிவன் கொண்டிருந்த பெரும் பயம் நீங்கிற்று. அவன் கோவிந்தசுவாமி பிழைத்தால் போதுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். கோவிந்தசுவாமி கண்களைத் திறந்ததும் தலைமை ஆசிரியர்அவனுக்குச் சோடாத் தண்ணீர் அளித்து அவன்களைப்பைநீக்கினார். பின்னர்அவரே கோவிந்தசுவாமியை அழைத்துக்கொண்டு ஒரு வைத்தியரிடம்

சென்று அவனுக்குத் தக்க சிகிச்சை செய்வித்தார். கோவிந்தசுவாமி முற்றிலும் குணமடைந்ததும் தலைமை ஆசிரியருக்குத் தகுந்த நன்றி பாராட்டினன். அவன் பரமசிவன் மீது சிறிதும் கோபங் கொள்ளவில்லை. தலைமை ஆசிரியரும் பரமசிவனை குற்றவாளியாக எண்ணவேயில்லை. அவர் அவனை மன்னித்துவிட்டார். உண்மையில் அவர் அத்துன்பகரமான நிகழ்ச்சி எவரும் எதிர்பாராமல் நிகழ்ந்து விட்டதென்றே முற்றிலும் நம்பிவிட்டார். அப்போது பரமசிவனுக்குத் தலைமை ஆசிரியரிடம் பேரன்பும் கோவிந்தசுவாமியினிடம் பெருங் கருணையும் உண்டாய்விட்டன. அவன் தன் குற்றத்தைத் தலைமை ஆசிரியர் உணராமல் போனலும் கடவுள் தன் குற்றத்தை முற்றிலும் அறிவாரென்றும் அதற்காகக் கடவுள் தண்டனை தனக்கு அவசியம் உண்டாகும் என்றும் எண்ணினன். ஆதலால் அவன் தன் செருக்காலும் பொறாமையாலும் அடக்கமும் ஒழுக்கமும் கல்வி நலமும் ஒழுங்கு பெற்ற கோவிந்தசுவாமிக்குத் தான் செய்த பெருந் தீமையை இறைவன் மன்னிக்கவேண்டுமென்று அப்பெருமான் திருவடிகளைப் பன்முறை துதித்துவந்தான். எப்படியாகிலும் கோவிந்தசுவாமிக்குத் தன்னல் இயன்ற பெரிய நன்மையை எக்காலத்திலும் செய்தே தீரவேண்டுமென்று தீர்மானித்தான்; அவன் மீது கொண்டிருந்த வெறுப்பும் நீங்கிற்று; அவன்பால் அளவில்லா விருப்பே அவனுக்கு உண்டாயிற்று.

பரமசிவன் தான் கோவிந்தசுவாமிக்குச் செய்த பெருந்தீமையை நினைந்து வருந்திக்கொண்டிருக்கை

யில் அவன் தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவன் அதை ஆவலுடன் பிரித்துப் பார்க்கையில் அதில் கீழ்வருமாறு வரையப்பட்டிருந்தது. "என் அருமைச் செல்வா! கடவுள் அருளால் உன் அன்னையும் நானும் நலமாக இருக்கிறோம். ஆனால் உன் அருமைத் தங்கை பார்வதியின் தேக நலம் குறைந்துள்ளது. அதற்குக் காரணம் மிக எளிய உணவே ஆகும். இன்னும் ஒரு ஆண்டு சென்றால் நீ பத்தாவது வகுப்புப் பரீட்சையில் தேறிவிடுவாய். அப்போது தான் நம் துன்பங்கள் நீங்கும். இங்குள்ள உன் தலைமை ஆசிரியர் சங்கரய்யர் நீ பத்தாவது வகுப்பில் தேர்ச்சி அடைந்ததும் உன்னை அவர் அப்பாடசாலையிலேயே ஒரு ஆசிரியராக வைத்துக்கொள்வதாகச் சொல்லுகின்றார். அவர் மாதம் இருபது ரூபாய் உனக்குச் சம்பளம் அளிப்பதாகவும் கூறுகின்றார். அப்போது நமக்குச் சந்தோஷம் உண்டாகுமென்று நான் சொல்ல வேண்டியதில்லை. உன்னைப்போன்ற உத்தமபுத்திரன் நமது கிராமத்தில் ஒருவனும் இல்லையென்று எல்லோரும் சொல்லுகின்றார்கள். இன்னும் பணக்கஷ்டம் விட்டொழிந்த பாடில்லை. இன்னும் சிறிதுகாலம் நாங்கள் உழைத்தே தீரவேண்டும். நீயும் இன்னும் ஒரு ஆண்டுதான் கஷ்டப்பட வேண்டும். நீ இப்போது நிகழ்ந்த பரீட்சையில் தேர்ச்சியும் பரிசும் பெறுவாயென்று முற்றிலும் நம்பியிருக்கின்றேன். உன் பிரயாணத்திற்கு வேண்டிய சிறு தொகையை மணியார்டர் செய்திருக்கின்றேன். நீ இருக்கும் வீட்டிலுள்ள பெரியவர் உன் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்.

நீ விரைவில் நம் கிராமத்திற்கு வந்து எங்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பாயாக. கடவுள் கருணை உன்னிடத்தில் பெருகுமாறு அவரை வேண்டுகின்றேன்''

பரமசிவன் மேற் கூறப்பட்ட விஷயங்களை வாசித்ததும் பெரிதும் வருத்தமும் வெட்கமும் கொண்டான். அவன் தன் தந்தை தன்னைப்பற்றி எத்துணைய நல்ல அபிப்பிராயம் பெற்றுள்ளாரென்று எண்ணித் தன் குறையைத் தானே நொந்துகொண்டான். அவன் தன் தந்தை தனக்கு அவ்வருடமும் வகுப்பில் பரிசு கிடைக்கும் என்று எண்ணியதை நினைத்து தனக்குள் நகைத்துக்கொண்டான். அவன் தனக்கு மேல் வகுப்பிற்குச் செல்லும் அதிர்ஷ்டம் வந்தால் போதுமென்று எண்ணிக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். அன்று பிற்பகலில் கல்லூரியின் வருடாந்தரக் கொண்டாட்டம் நிகழ்ந்தது. பரமசிவனுக்கு அன்றையதினம் பெரும்பயம் உண்டாயிற்று. இருப்பினும் அவனும் பச்சிலைத் தோரணங்களும் கொடிகளும் கட்டுவதில் கலந்துகொண்டான்.

அன்று நிகழ்ந்த வருடாந்தரக் கொண்டாட்டத்தில் அக்கிராசனம் வகிக்க இராணுவத்தில் பெருமதிப்பும் சிறப்பும் பெற்ற ஒரு ஆங்கில உத்தியோகஸ்தர் இசைந்திருந்தார். குறித்த நேரத்தில் அக்கிராசனரைத் தலைமைஆசிரியர்கல்லூரிக்கு அழைத்துவந்தார். அவர் வந்ததும் அங்கு கூடியிருந்த மாணவர்களும் பொதுமக்களும் கரகோஷம் செய்தனர். பின்னர் விளம்பரத்தில் குறிப்பிட்டபடி பற்பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. தலைமை ஆசிரியர் வழக்கம்போல்

கல்லூரியின் வருடாந்தர அறிக்கைப் பத்திரத்தை வாசிக்கத் தொடங்கினர். அவர் அறிக்கையில் எழுதப்பட்ட எல்லா விஷயங்களையும் விடாமல் வாசித்துக்கொண்டு போகையில் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் உற்சாகம் என்பது சிறிதுமில்லாமல் இருந்தது. அவர்களுக்கு மிகுந்த வெறுப்பே உண்டாயிற்றென்றே சொல்லலாம். சபையோர் சற்றும் குதூகலமின்றி இருக்கையில் தலைவர் தாமும் சிறிதும் தம்மை அறியாமலே உறங்கிவிட்டார். அக்காட்சியைக் கண்ட சில மாணவர்கள் கொல்லென நகைத்துவிட்டார்கள். சில ஆசிரியர்கள் அம்மாணவர்களை அடக்கி தங்களுக்குள் உண்டாகிய நகைப்பை அடக்கிக்கொண்டார்கள். தலைமை ஆசிரியருக்கும் நகைப்பு வந்துவிட்டாலும் அதைப் பக்குவமாக அடக்கிக்கொண்டு அக்கிராசனரிடம் போய் அவர் கையை மெதுவாகத் தொட்டு இரகசியமாக ஏதோ இரண்டொரு மொழிகள் அவர் காதண்டை ஓதினர். அப்போதுதான் அக்கிராசனர் விழித்துக் கொண்டார். பின்னர் அவர் உரத்த குரலில் இரண்டொரு வாக்கியங்கள் பேசினர். அதன் பின்னர் வழக்கம்போல் சில நடிப்புகளும் சம்பாஷணைகளும் விளம்பரத்தில் குறிப்பித்தபடி மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. ஆனல் பரமசிவனுக்கு அந்நிகழ்ச்சிகளில் ஒன்றும் இடமில்லை.

பின்னர் தலைமை ஆசிரியர் மாணவர்கள் பரீட்சையின் முடிவுகளை எடுத்து வாசிக்கத் தொடங்கினர். அவர் ஒன்பதாவது வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பிற்கு மாற்றப்பட்ட மாணவர்களின் பெயர்களை

வாசிக்கத் தொடங்கினர். அப்போது பரமசிவன் அடைந்த அச்சத்தை ஏட்டில் எழுத முடியாது. அவர் முதலாகக் கோவிந்தசுவாமியின் பெயரைக் கூறினர். அவனே முதல் பரிசு பெற்றனென்றும் தெரிவித்தார். இரண்டாவது பரிசை வேறொரு சாதாரண மாணவன் தன் உழைப்பின் மாட்சியால் பெற்றனன். பரமசிவன் பெயர் மூன்ருவதாகவும் சொல்லப் படவில்லை. தலைமை ஆசிரியர் மேல் வகுப்பிற்கு மாற்றப்பட்ட மாணவர்களின் பெயர்களை சொல்லிக் கொண்டே வந்தார். பத்தொன்பது மாணவர்கள் பெயர்கள் சொல்லப்பட்டும் பரமசிவன் பெயர் சொல்லப்படாமையால் அவன் பரீட்சையில் தேர்ச்சி அடையவில்லை யென்றே தீர்மானித்துவிட்டான். ஆனல் கடைசியாக இருபதாவது பெயராகப் பரமசிவன் பெயர் சொல்லப்பட்டது. அதன் பின்னர் தலைமை ஆசிரியர் வேறு வகுப்பு மாணவர்களின் பெயர்களைச் சொல்லத் தொடங்கினர்.

பரமசிவன் தன் பெயருய் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்ட மாணவர்களின் பெயர்களோடு இருந்ததை எண்ணி ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருபுறத்தில் அடைந்தான்; மற்றொருபுறத்தில் தான் எல்லா மாணவர்களிலும் கடைசியாக இருந்ததை அறிந்து நாணமும் அவமானமும் அடைந்தான். சாதாரண மாணவனுக விளங்கிய கோவிந்தசுவாமியே தன் உழைப்பின் மாட்சியால் தலைசிறந்த மாணவனுகத் திகழ்ந்ததை எண்ணிவியந்தான்; சோம்பலென்பதை நீக்கி, உழைப்பு என்பதை உரமாகக் கைப்பற்றினல் எத்துணைய சாதா

ரண அறிவு பெற்ற மாணவனும் இந்நாளடைவில் சாலவும் சிறந்த மாணவன் ஆவான் என்ற உண்மையை உணர்ந்தான்; அந்த உண்மையைக் காட்டியஉத்தமமாணவன் கோவிந்தசுவாமி என்பதையும் கண்கூடாகக் கண்டான். எல்லா மாணவர்களும் கோவிந்தசுவாமியின்கல்வித்திறத்தைமெச்சிப்பேசிக் கொண்டனர். பரமசிவனைப் பற்றிய பேச்சு எங்கும் இல்லை; அவன் தான் சென்ற ஆண்டில் பெற்ற புகழை முற்றிலும் இழந்துவிட்டான்.

கல்லூரியில் குறித்தவண்ணம் பல நிகழ்ச்சிகள் நிகழப் பெற்றதும், அக்கிராசனர் மாணவர்களுக்குப் பற்பல பரிசுகள், சில நன் மொழிகளோடு கொடுக்க ஆரம்பித்தார். கோவிந்தசுவாமிக்குப் பரிசாக ஒரு பொன் பதக்கமும், பொன் எழுத்துக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு அழகான புத்தகமும் அளித்தனர். அவன் பெற்ற அவ்விரண்டு பரிசுகளையும் பல மாணவர்கள் பார்த்துக் கோவிந்த சுவாமியைப் புகழத்தொடங்கினர்கள். கடைசியாக, அக்கிராசனர் தம் முடிவுரையை சொல்லத் தொடங்கினர். அவர் "மாணவர்களே! இன்று நிகழக் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் முடிந்தன. உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்லவேண்டிய விஷயங்கள் இல்லை. நான் உங்களுக்கு அளிக்கும் நன்மதி ஒன்றே. அதாவது, நீங்கள் கடவுள் பக்தியும் இராஜ பக்தியும் சிறப்பாகப்பெற்று, உங்கள் கடமையைச் செய்தல்வேண்டும். இனி, நீங்கள் சந்தோஷமாக உங்கள் விடுமுறையைக் கழிக்கலாம். கடவுளை என்றும் மறக்கலாகாது" என்று சுருக்கமாகத் தன் முடிவுரையை

நிகழ்த்தினர். தலைமை ஆசிரியர் பின்னர் சபையோருக்கு வந்தனமளித்து, சிற்சில மொழிகள் பேசி, இறுதியாக அக்கிராசனருக்குத் தம் அன்பார்ந்த வந்தனங்களை அளித்தார். பின்னர் கூட்டம் கலைந்தது. கோவிந்தசுவாமியைச் சூழ்ந்து கொண்டு, பல மாணவர்கள் அவனுக்குப் புகழ்ச்சிமாலை சூட்டிக்கொண்டே போனார்கள். பரமசிவன் மாத்திரம் தனியே தன் வீட்டிற்குச் செல்லத்தொடங்கினன். அவனை வழியில் மாணிக்கவாசகன் சந்தித்து, அவனைத் தட்டிக் கொடுத்து, நகை பூத்து, "பரமசிவா! பார்த்தாயா? நானும் பரீட்சையில் தேர்ச்சி அடைந்தேன்; உனக்கு மேலேயும் போய்விட்டேன்; என் பெயர் பதினைந்தாவது பெயர் ஆகும்; உன் பெயரோ கடைசிப் பெயராகும். என்ன அவமானம் உனக்கு? நீ ஏன் கஷ்டப்பட்டுப் படித்தாய்? என்னுடன் வந்திருந்தால், நீ பரீட்சையில் சுலபமாகப் படிக்காமலேயே தேர்ச்சி அடையும் வழியைக் கற்றுக்கொடுத்திருப்பேன்" என்று சொல்லிப் பின்னர் பெருமகிழ்ச்சியுடன் தன் வீட்டிற்குச் சென்றான். பரமசிவன் ஒருவித உற்சாகமும் இல்லாமல் தன் வீடு போய்ச்சேர்ந்தான்.

— —

அதிகாரம் பதினான்கு.

பரமசிவன் மறுநாட்காலை தன் தந்தை ஏற்பாடு செய்தபடி தன் சொந்த ஊருக்குப் பிரயாணமானான். அவனுக்கு அச்சமயம் மகிழ்ச்சி யென்பதே இல்லை. அவன் மாட்டுவண்டியில் பிரயாணம் செய்கையில்,

அவனுடன் ஒருவரும் செல்லவில்லை. அவனுக்குத் தனிமை ஒருவித மனவமைதியைத் தந்தது. அவன் வண்டியில் வசதியாக அமர்ந்து போனபோதிலும் அவன் மனதில் சற்றேனும் உற்சாகமில்லை; வழிக் காட்சிகளிலும் அவனுக்கு வியப்பும் களிப்பும் உண்டாகவில்லை. அவன் தான் செய்தபிழையை எண்ணி எண்ணி மனம் புழுங்கினன். அவன் தன் பரீக்ஷையின் தேர்ச்சிக்கே இடையூறு வந்திருக்கும் என்று எண்ணியபோது, அவனுக்கு உண்டான மன வெறுப்பு இத்தன்மைத்து என்று சொல்ல இயலாது. அவன் பரீக்ஷையில் மற்றொரு மாணவனைப் பார்த்து விடைகள் எழுதிய கேவலத்தை எண்ணிய போது, அவனுக்கு உள்ளம் உடைந்தது. தன்னைக் காட்டிலும் அறிவில் சாலவும் குறைந்த கோவிந்த சுவாமியின் விடைகளைப் பார்த்தல்லவோ தான் பரீக்ஷையில் பிழைத்தேன் என்று அவன் மனத்துள் எண்ணித் "தான் தகுதியுள்ள மாணவன் அல்லன்" என்று மனம் நொந்தான். அவன் எத்துணைய நல்ல எண்ணங்களை அப்போது எண்ணியபோதிலும், அவன் கைக்கொண்ட சோம்பலையும் மாட்சிமையில்லா மாணவர்கள் நட்பையும் எவர் மன்னிக்க இயலுமென்று எண்ணினன்.

பரமசிவன் மேற்கூறியவாறு மனவருத்தம் அடைந்து தன் கிராமத்தின் எல்லையை அணுகினன். அப்போது அவன் தன் தாய் தந்தையரையும் தன் அருமைத் தங்கையையும் கண்டு களிக்க ஆவலுடன் அவர்கள் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் தங்கை முன் பிரயாணத்தில் வயலில்

இருந்து ஓடிவந்து தன்னைக் கண்டதுபோல் இப்பிர யாணத்தில் அவள் காணப்படவில்லை. மாணவர்களும் அவனிடம் அச்சமயம் வரவில்லை. அவன் தாய் தந்தையர்கள் மாத்திரம் பரமசிவன் வண்டியைத் தூரத்தினின்று பார்த்து, வீதியில் நின்று, தங்கள் செல்வ மைந்தனை அன்புடன் வரவேற்க ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். பரமசிவன் வண்டியை விட்டு இறங்கினதும், அவன் ஓட்டமாக ஓடித்தன் தாய் தந்தையர்களை நண்ணினன். அவன் பெற்றோர் கள் பெருங்களிப்புடன் அவனை அளவில்லா அன் புடன் அணைத்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

பரமசிவன் தன் பெற்றோர்களைக் கண்டு, பெருஞ் சந்தோஷமடைந்தபோதிலும், அவனுக்குத் தன்னை அறியாமலேயே ஒருவித சந்தேகம் உண்டாயிற்று. ஏனெனில் அவன் தங்கை பார்வதி தன் பெற்றோர்க ளுடன் காணப்படவில்லை. அவன் தன் அன்னையை வினவியபோது அவள் கண்ணீர் விட்டனள்.

பரமசிவன் தன் அன்னையை நோக்கி, "அம்மா! என்ன செய்தி? பார்வதி எங்கே? ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்?" என்று உரத்த குரலில் கேட்டனன். பரமசிவன் தந்தை அவனை நோக்கி, "சந்தடி செய்யாதே. பரமசிவா! பேசாமல் எங்களுடன் வா. பார்வதி கடுஞ்சுரத்தினல் பீடிக்கப்பட்டுப் பரிதாப மான நிலையில் இருந்து தவிக்கின்றாள். கடவுள்தான் அவளைக்காப்பாற்ற வேண்டும். இன்று காலையில் வந்த வைத்தியர் அவள் நிலைமை அபாயகரமானது என்று சொல்லிப்போனர்" என்று கூறினர்.

பரமசிவன் அன்னை அப்போது விம்மி அழுது பரமசிவனைப் பார்த்து, "அப்பா! உன் தங்கை பார்வதி நல்ல உணவு இன்மையால் சுகமிழந்தாள்; அதிக கடினமாக வேலை செய்ததால், தேகபலம் இழந்தாள். அவள் தன் வயதிற்கும் தேகவன்மைக்கும் ஏற்ற வேலை செய்திருந்தால் அவளுக்கு இப்பிணி வந்திராது. என்ன செய்யலாம்? வறுமை நோய் நம் வீட்டைவிட்டு இன்னும் அகலவில்லை. நீ பாடசாலையில் மிகவும் உழைத்துத் துன்புறும்போது தானும் உழைத்துக் கஷ்டப்படுவதுதான் நியாயமென்று பார்வதி சொன்னாள். கடவுள் என்ன செய்வாரோ தெரியவில்லை. அவள் பிழைப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை" என்று கூறிப் புலம்பினாள்.

பரமசிவன் மனம் திடுக்கிட்டுத் தானும் புலம்பினான். அவன் தந்தை அவன் அன்னையை நோக்கி, "பேதாய்! உன் அர்த்தமில்லா அழுகையை விடுவாயாக. குழந்தை பார்வதிக்குத் தைரியம் சொல்வாயாக. காலத்தைப் போக்காமல், பரமசிவனை அவளிடம் அழைத்துச் செல்வாயாக; அண்ணன் களிமுகத்தைக்கண்டு அவள் மனம் குளிரும்" என்று சொன்னார்.

பரமசிவன் அன்னை அவன் தந்தை சொல்லிய வண்ணம் அரவம் செய்யாமல் தன் மைந்தனை மெதுவாக அழைத்துக்கொண்டு பார்வதியினிடம் சென்றாள். பரமசிவன் பார்வதியைக் கண்டதும், திகிலடைந்தான். அவள் முகம் வெளுத்திருந்தது; கண்களின் பார்வை ஒளியின்றிக் காணப்பட்டது. அவளைப் பார்த்ததும் பரமசிவன் உள்ளம் உடைந்துவிட்

டது. அவள் பிழைக்கமாட்டாள் என்ற அச்சம் அவன் உள்ளத்தில் குடிகொண்டுவிட்டது.

பார்வதி தன் அருமை அண்ணனைக் கண்டதும், சிறு நகை பூத்தாள். அவள் தன் செல்வத்தமையனைத் தன் அன்பின் பார்வையால் அழைக்கலானாள். அவன் பார்வதியின் அருகில் சென்றதும், அவள் தன் கைகளைக் கஷ்டத்துடன் எடுத்து, தன் அருமை அண்ணன் கைகளின்மேல் வைத்தாள்.

பரமசிவன் அலறிப் புலம்பித் தன் தங்கையை நோக்கி, "ஐயோ! பார்வதி! நீ இந்நிலையில் இருக்க நாங்கள் என்ன பாவம் செய்தோம்? உனக்கு இவ்வளவு கடுமையான ஜுரம் ஏன் வந்தது? இருப்பினும், அஞ்சாதே, நான் உன்னை முன்போல் மாண்புள்ள மங்கையர்க்கரசியாகச் செய்கின்றேன். இதோ இப்போதே புறப்படுகின்றேன். உனக்கு என்ன வேண்டும்? தண்ணீர் வேண்டுமா? கஞ்சி வேண்டுமா? உனக்குக் கால்கள் நோகின்றனவா? நான் உன் கால்களைப் பிடிக்கின்றேன். உனக்கு பணிகளை எல்லாம் நானே செய்கின்றேன். அருமைத் தங்காய்! அஞ்சாதே" என்று கூறி அவள் அருகில் அமர்ந்தான். பரமசிவன் கூறியதைக் கேட்டுப் பார்வதி சந்தோஷமடைந்து அவனை நோக்கி "அண்ணா! உன் பரிசு எங்கே?" என்று மெதுவாகக் கேட்டாள்.

அப்போது பரமசிவனுக்கு உண்டாகிய அவமானத்திற்கும் மனத் துன்பத்திற்கும் அளவில்லை. அப்போது தான் அவன் தான் கொண்ட சோம்பலை மனமார வெறுத்தான்; மாண்பில்லா நண்பர்களையும்

மனத்தில் நிந்தித்தான். பின்னர் அவன் மெதுவான குரலில் தன் தங்கையை நோக்கி "கண்மணி பார்வதி! கலங்காதே. இவ்வருடம் அவர்கள் எனக்குப் பரிசு அளிக்கவில்லை" என்று கூறினன்.

பார்வதி சுவையற்ற அவ்வெம் மொழியைக் கேட்டதும் சொல்ல வொண்ணு மனத்துயரால் தன் கண்களை மூடிக்கொண்டாள். பரமசிவன் அதைக் கண்டு பெருந்துயர் அடைந்து அவளை நோக்கி "குழந்தாய்! பார்வதி! கவலைப் படாதே. நான் பரீட்சையில் தேறி விட்டேன். நான் இப்போது பத்தாவது வகுப்பிற்கு மாற்றப்பட்டேன். நான் அடுத்த ஆண்டில் மெட்ரிக் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ந்து பணம் சம்பாதித்து உன்னையும் நம் பெற்ருேரையும் மகிழ்விப்பேன்" என்று கூறினன்.

பார்வதி கடுஞ்சுரத்தின் தாக்குதலால் தன் தமையனையும் மறந்து பதில் ஒன்றும் பகராமல் உறங்குவது போல் காணப்பட்டாள்.

அப்போது அவள் அன்னை அச்சமுற்று தன் செல்வ மைந்தனை நோக்கி "பரமசிவா! பேசாதே. பார்வதி நிலைமை அபாயகரமாக காணப்படுகிறது. ஒன்றும் சந்தடி செய்யாமல் என் பக்கத்தில் நீயும் அமர்வாயாக" என்று கூறினள்.

பரமசிவன் அன்னை கூறியபடி தன் தங்கையின் பக்கம் அமர்ந்து அவள் நிலைமையை மனக்குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்நிலையில் அவர்கள் இருவரும் மூன்று மணிநேரம் மனக்குழப்பத்துடன் இருந்தனர். பரமசிவன் தந்தைமாத்திரம் அவ்வப்போது வந்து தன் புதல்வியின் நிலையை விசாரித்துக் கண்ணீர் உகுத்துச் சென்றனர்.

அன்று மாலை நான்கு மணிக்கு அவர்கள் வீட்டிற்கு வைத்தியர்வந்தார். அவர் தமிழ்வைத்தியர்;தமிழ் மருந்துகள் கொடுப்பதில் கை தேர்ந்தவர். அவர் மிகவும் சிறந்த வைத்தியர் எனப்பெயர் பெற்றிருந்தனர். அவரை அக்கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் முற்றும் துறந்த ஒரு சந்நியாசி என்றே சொல்லிக் கொண்டனர்.

அவர் ஒரு சிறிய ஒற்றைமாட்டுவண்டியில் வந்திறங்கினர். அவர் வயது சென்ற கிழவராகக் காணப்பட்டதால் அவர் கண்களில் கண்ணாடிகள் மிளிர்ந்தன. அவர் தலைப்பாகை பண்டைக் காலத்தின் தமிழ் வைத்தியரின் தோற்றத்தை விளக்கிற்று. பரமசிவன் தந்தை அவரை மிகுந்த மரியாதையுடன் வரவழைத்து தன் செல்வ மகளிடம் கொண்டுபோனர்.

வைத்தியர் பார்வதியின் கையைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தார். பார்வதி மிகுந்த அபாயகரமான நிலையில் இருந்ததை வைத்தியர் அறிந்து முகத்தைச் சுளித்துக்கொண்டார். அவர் பரமசிவன் தந்தையை நோக்கி "தங்கள் மகள் மிகுந்த அபாயகரமான நிலையில் இருக்கின்ருள். கடவுள்தான் காப்பாற்றவேண்டும்" என்று கூறினர்.

வைத்தியர் அவ்வாறு கூறியதைக்கேட்டதும் பரமசிவனும் அவன் பெற்ருேர்களும் கண்ணீர் விட்டனர். அவர்கள் பரிதாபமான நிலையைப் பார்த்து வைத்தியர் அவர்கள் மீது இரக்கங் கொண்டு கடவுளை மனத்தில் தொழுது ஒரு சிறிய தகரப்பெட்டியிலிருந்து வெண்ணிறமான ஒருவித பஸ்பத்தை எடுத்தார். அவர் அதைப் பார்வதியின் வாயில் மெதுவா

கப் போட்டார். பின்னர் அவர் ஒருவித கஷாயம் தயார் செய்து அதைப் பின்னர் அளிக்குமாறு பரமசிவன் தந்தையிடம் கூறினர்.

வைத்தியர் பரமசிவன் தந்தையை நோக்கி "பெரியவரே! அஞ்சவேண்டாம். கடவுள் கருணையை முற்றிலும் நம்பி நான் தயார் செய்துள்ள கஷாயத்தைத் தங்கள் மகளுக்கு வியர்வை உண்டாகும் போது கொடுங்கள். இது தான் தங்கள் மகளைக் காப்பாற்றக் கூடிய மருந்து. நீங்கள் அவளை விட்டு ஒரு நிமிடமும் பிரியவேண்டாம். நீங்கள் மிகவும் கவனத்தோடு அவளுக்கு வியர்வை உண்டாகும் சமயத்தை நோக்குதல் வேண்டும். உடனே இக்கஷாயத்தை அளித்தல் வேண்டும். அப்போது உங்கள் மகள் பிழைப்பாள். என்று கூறி கடவுளை மனத்தே தொழுது பரமசிவன் தந்தையிடம் விடை பெற்றுச்சென்றான்.

வைத்தியர் சென்றதும் பார்வதியின் பெற்றோர்களும் பரமசிவனும் மிகுந்த மன வருத்தத்துடன் பார்வதியின் அருகில் அமர்ந்திருந்தனர். பார்வதி தன் சுவாதீனம் இழந்திருந்தாள்; அவள் தேகத்தில் கடுஞ்சுரத்தினல் அனல் வீசிற்று. ஆனல் வியர்வை வந்தபாடில்லை. அம்மூவரும் எப்போது வியர்வை உண்டாகுமோ என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். பல மணிகள் கழிந்த போதிலும் வியர்வை உண்டாகவில்லை. சுமார் இரவு மணி பன்னிரண்டாயிற்று. பார்வதி தன் நோயின் கொடுமையால் தன்னை அறியாமல் தனது வலது கையை நீட்டியதால் அது கஷாயச் சட்டியின் மீது பட்டு அதனுள் இருந்த கஷாயம் தரையில் பாய்ந்துவிட்டது. அதைக்

கண்ட அவள் தாய் தந்தையரும் பரமசிவனும் கூக் குரலிட்டுப் புலம்பினார்கள். அவர்கள் "கடவுளே! எங் களுக்கிருந்த சிறு நம்பிக்கையும் போய்விட்டதே. இனிபார்வதி எவ்வாறுபிழைப்பாள்?" என்றுகூறிக் கதறினார்கள்.

பரமசிவன் நடந்த நிகழ்ச்சியை நினைந்து வருந் துவதில் பயனில்லை எனக்கருதி அந்நள்ளிரவில் சுமார் ஒருமைல்தூரத்திற்குமேல் இருந்த வைத்தியர் திருமனைக்குத்தானே போகத்துணிந்தான். வைத் தியர் மனை ஒரு பெரிய தோட்டத்தில் இருந்தது. அத் தோட்டத்தில் வாழைமரங்களும் தென்னை மரங்களும் பற்பல மருந்துச் செடிகளும் இருந்தன.

பரமசிவன் சற்றும் அஞ்சாமல் தன் அருமைத் தங்கையின் பொருட்டுத் தன் உயிரையே தத்தம் செய்யத்தயாரானன். அவன் தாய் தந்தையர் அவன் அந்நாளிரவில் தன்னந்தனியனகப் பாம்புகளும் நரி களும் புலிகளும் உலாவுகின்ற கொடிய வழியில் போதல் தகாதென்று சொன்னர்கள். ஆனல் பரம சிவன் அவர்கள் அச்சத்தைப் பொருட்படுத்தாமல் அப்போதே தனியாகக் கையில் விளக்குமில்லாமல் தன் வீட்டைவிட்டு அகன்றான். அன்று இரவு நிலவு வெளிச்சமும் இல்லை; எங்கும் இருள் மயமாக இருந் தது. மக்கள் சஞ்சாரமும் இல்லை. ஆனல் பரமசி வன் பயப்படாமல் தன் தங்கையைக் காப்பாற்ற வேண்டுமென்னும் ஒரே எண்ணத்தால் தனக்கு வரக் கூடிய எவ்வித அபாயங்களையும் பொருட்படுத்தாமல் இரவென்றும் பாராமல் ஓட்டமாக ஓட ஆரம்பித் தான். அவன் நிலங்களையும் புதர்களையும் கரடுமுர

டான இடங்களையும் கடந்து தன் தங்கையின் இன்னுயிரைப் பாதுகாக்கப் பல துன்பங்கள் அடைந்தான். அவன் சில இடங்களில் கற்களால் தடுக்கப் பட்டு விழுந்து கால்களிலும் சிறு காயமடைந்தான். சில இடங்களில் புதர்களில் இருந்த முட்களாலும் துன்பம் அடைந்தான்; ஓர் இடத்தில் சில நரிகள் அவனைத் துரத்திக்கொண்டுவந்தன; அவைகளினின்றும் தப்பி ஓடினன். ஓர் இடத்தில் ஒரு பெரும் புற்றிலிருந்த பாம்பு சீறிய சப்தமும் கேட்டான். பரமசிவன், மேற் கூறிய ஆபத்துக்களையெல்லாம் துரும்பாக மதித்துத்தன் தங்கையின் உயிரையே தன் உயிரினும் சிறந்ததாகக் கருதி எல்லா இன்னல்களையும் அனுபவித்து வைத்தியர் திருமனையை அந்நள்ளிரவில் அடைந்தான்.

பரமசிவன் வைத்தியரிடம் கஷாயம் பயனற்றுப் போன விஷயத்தை அறிவித்து அவரிடத்தில் வேறு கஷாயம் பெற்றுக்கொண்டு அவர் வியப்பையும் மதிப்பையும் பெற்றுத் தன் வீடு போய்ச்சேர்ந்தான். அவன் திரும்பிவரும் போதும் ஓட்டமும் நடையுமாகவே வீடு போய்ச்சேர்ந்தான். அவன் தான் வீடு சேர்வதற்குள் தன் தங்கையின் தேகத்தில் வியர்வை உண்டாய் விட்டதோ என்று மனம் நடுங்கினன். அவன் அத்துணைய அச்சத்துடன் வீடு வந்ததும் அவன் தாய் தந்தையர் பார்வதியின் அருகில் நித்திரை போய்விட்டதைக் கண்டான். அங்கு நிசப்தம் நிலவிற்று. பரமசிவன் தன் பெற்ரோர்களை எழுப்பாமல் தன் தங்கையின் தலையணையின் அருகே அமர்ந்து அவள் நெற்றியை மெதுவாகத் தொட்டுப்

பார்த்தான். அப்போதுதான் அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் தோன்றலாயின. அவன் தன் தங்கையின் முகத்தை உற்று நோக்கினன்; பார்வதி தன் கண்களைத் திறந்து தன் தமையனை வியப்புடன் நோக்கினள். பரமசிவன் தன் தங்கையை நோக்கி "என் செல்வச் சகோதரி! கண்ணே! பார்வதி! இந்தக் கஷாயத்தைக்குடி; உன் நோய் பறந்துபோம்" என்று கூறித்தான் கொண்டுவந்த கஷாயத்தைத் தன் செல்வத்தங்கைக்கு அளித்தான். அவள் அதைப் பருகிப் புன்னகை புரிந்து பின்னர் தன் கண்களை மூடிக் கொண்டு அமைதியாக நித்திரைபோனள்.

பரமசிவன் அன்று இரவு முழுவதும் கண் மூடாமல் தன் செல்வத் தங்கையின் நிலைமையையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அக்கொடிய இரவு கழிந்தது. காலைவந்தது. கதிரவன் தோன்றினன். பார்வதி பிழைத்தாள். அப்போதும் அவள் தாய் தந்தையர் நித்திரையில் இருந்தனர். வைத்தியர் வந்தனர்; அவர் வந்ததும் பார்வதியின் நெற்றியில் தன் கையை மெதுவாக வைத்ததும் அவள் விழித்துக் கொண்டாள். உடனே வைத்தியர் அவள் கை நாடியைப் பரிசோதித்துப் பார்க்கையில் அவள் ஆபத்தினின்றும் தப்பிவிட்டாள் என்று எண்ணினர். அவர் முகத்தில் மகிழ்ச்சிக் குறி மலர்ந்தது. பரமசிவன் முகம் மிளிர்ந்தது; அவன் தானே சமையல் அறைக்குச் சென்று தன் பெற்றோரை எழுப்பாமல் தன் தங்கைக்கு வேண்டிய கஞ்சி தயார் செய்தான். பின்னர் அவனே அக்கஞ்சியைக் கொண்டுவந்து தன் தங்கைக்குக் கொடுத்தான். அவள் கஞ்சி குடித்துக்

கொண்டிருக்கையில் அவள் தாய் தந்தையர் விழித்துக் கொண்டனர். அவர்கள் தங்கள் செல்வக்குமாரி கஞ்சி பருகுவதைக் கண்டு பேருவகை கொண்டனர். அவர்கள் பரமசிவன் ஒப்பற்ற பணிகளை வியந்து அவன் தன் தங்கையின் மீது கொண்டிருந்த தனி அன்பைக் கண்டு உள்ளம் பூரித்து அவனை வாயார வாழ்த்தினர்கள். அவர்கள் அன்றிரவு பரமசிவன் அடைந்த துன்பங்களைக் கேட்டு மனம் வருந்தினர்கள். வைத்தியர் பரமசிவன் புரிந்த செயற்கரிய செய்கையை மிகவும் வியந்து அவன் பெற்றோர்களிடம் கூறினர். பரமசிவன் நல்லன்னை தன் குணக்குன்றாகிய செல்வ மைந்தனை அளவுகடந்த அன்பால் அணைத்துக்கொண்டாள். அவன் தந்தை பல பொன் மொழிகள் தன் மைந்தனுக்கு வாழ்த்துரையாகக் கூறினர். பார்வதி தன் கனிவுள்ள தமையனை அருகில் அழைத்து அவன் கையில் அவன் புரிந்த நன்றிக்கு கைம்மாருக முத்தம் தந்தாள். பரமசிவன் புரிந்த செயற்கரிய செய்கையை அவன் பெற்றோர்கள் சதா நினைந்து அவனை வாழ்த்தியதோடு தங்கள் செல்வ மகளைக் காப்பாற்றிய கடவுளின் திருவடிகளையும் மனங்குளிர வழுத்தினர்கள்.

அதிகாரம் பதினைந்து.

பரமசிவன் தங்கை பார்வதி கடுஞ்சுரத்தினின்றும் தப்பி உயிர் பிழைத்தாள். அவள் குணமடைந்ததும் அவள் தாய் அவ்ளுக்குநல் லுணவும் நல்ல பண்

டங்களும் அளித்து அவள் தேக வன்மையை விரைவில் வளர்த்தாள். உலகில் அன்னையின் அன்புக்கு இணையான அன்பு ஒன்றுமில்லை என்னும் உண்மை பார்வதியின் அன்னையின் பால் விளங்கியது. அவள் தன் செல்வ மைந்தன் பரமசிவன் பார்வதியின் தேக நலத்தின் பொருட்டுச் செய்த ஒப்பில்லா நற்பணியை மிகவும் பாராட்டித் தன் மைந்தன் அருஞ்செயலை பன்முறை தன் கணவனிடம் சொல்லி மகிழ்ந்தாள். அவன் தந்தையும் தன் அருமை மைந்தன் இணையில்லா இன்பப் பணியைப் பெரிதும் வியந்து மகிழ்ந்தார்.

பார்வதி முற்றிலும் குணமடைந்ததும் அவள் திருமணத்தையும் பற்றி பரமசிவன் தந்தை பரஞ்சோதி பெரிதும் சிந்திக்கலானர். அவர் முன்னமே மகளின் திருமணத்தைப் பற்றி பல முயற்சிகள் புரிந்து வந்தார். ஆனல் அவர் அதைப்பற்றி பரமசிவனிடம் என்றைக்கும் பேசியதில்லை. அவர் பரமசிவன் கல்வியைப்பற்றியே பேசுவது வழக்கம்.

பரஞ்சோதி புரிந்த நன் முயற்சியின் பயனுகக் கோவிந்தசுவாமியையே தன் செல்வ மருமகனுக அடையும் புண்ணியம் வந்தது. கோவிந்தசுவாமி பரமசிவன் குலத்தைச் சார்ந்தவனென்றும் அவன் தன் சுற்றத்தானென்றும் பரமசிவன் அறியவில்லை. ஆனல் பரஞ்சோதி தனக்கு மருமகனுகக் கோவிந்த சுவாமி என்னும் மாணவனை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்ததைப் பரமசிவன் அறிந்தபோது பெரிதும் வியப்படைந்தான். அவனுக்குக் கோவிந்தசுவாமியின்மேல் அளவுகடந்த கோபமும் அழுக்காறும்

இருந்தபோதிலும் அவன் கல்வியில் எல்லா மாணவர்களிலும் சிறந்து விளங்கியதாலும் அவனே முதற் பரிசு பெற்றதாலும் அவனை மைத்துனனாக அடைவதில் பரமசிவனுக்கு விருப்பம் உண்டாயிற்று. அவன் குணவதியாகிய தன் தங்கைக்கு அடக்கமும் பொறுமையும் அணிகலன்களாக பூண்டிருந்த கோவிந்தசுவாமி என்னும் மாணவனே தகுந்த மணவாளன் என்று எண்ணினன். கோவிந்தசுவாமி சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் எனினும் பெருந்தன்மையும் பெருங்குணமும் பொலிந்து விளங்கினன்.

அவனுக்குப் பெருஞ்சொத்து இல்லையெனினும் தன் குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய பொருளை அளிக்கக்கூடிய நிலங்களும், தோட்டங்களும், ஒரு வீடும் அவனுக்கு இருந்தன. அவன் தாய் தந்தையர் சிறந்த குணமும், பணிவும், நல்லொழுக்கமும் வாய்ந்தவர்கள். அத்தகைய குடும்பத்தில் பார்வதி இல்லற வாழ்வு அடைதல் பெரிதும் பாராட்டத் தக்கது என்று பரமசிவன் எண்ணினன்.

பரஞ்சோதி தன் புதல்வியின் திருமணத்திற்காகத் தமக்கு இருந்த நிலத்தையும் வீட்டையும் ஒரு சௌகாரிடம் கொதுவை வைத்து விட்டார். ஆனல், அதைப்பற்றி அப்போது பரமசிவனிடம் ஒரு மொழியும் பகரவில்லை. அவர் ஏழையாக இருந்த போதிலும், தமது மகள் திருமணத்தில் தமது ஏழ்மையைக் காட்ட விரும்பாமல், பொருள் தாராளமாகச் செலவு செய்து, திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் ஒளிபெறச் செய்தனர். பரமசிவனும் தன் தங்கையின் திருமண விழாவை ஆவலுடன்

எதிர்பார்த்துக் கொண்டிருந்தனன். பின்னர் திரு மணவிழா நடைபெறும் தினம் தீர்மானிக்கப்பட்டது.

திருமணத்திற்கு முன்னாள் மாலையில் மணமகனை யும் அவன் சுற்றத்தாரையும் வரவேற்கும் பொருட்டு, வாத்திய கோஷத்துடன் பரமசிவன் தந்தை தம் சுற்றத்தாருடன் கிராமத்தில் அருகே யுள்ள ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். அன்றைய தினம் கிராமத்திலுள்ள அந்நதியில் அதற்கு முன் மூன்று தினங்களாகப் பொழிந்த மழையால் வெள் ளம் வர ஆரம்பித்தது. வரவேற்பு அளிக்கும் தினத் தில் வெள்ளம் மேலும் அதிகரித்தது. பரமசிவனும், அவன் தந்தையும், ஏனையோரும் ஆற்றங்கரையில் மணமகனையும் அவன் சுற்றத்தாரையும் எதிர்பார்த் துக் கொண்டிருக்கையில், நதியில் ஒரு படகில் ஆர வாரத்துடன் சில மக்கள் வருவதை அவர்கள் கண் டார்கள். அப்படகில் மணமகனாகிய கோவிந்தசுவாமி முதலில் நின்று கொண்டு, தன் கைகளை வீசிக் கொண்டு வந்ததைப் பரமசிவன் கண்டான். அவன் பக்கத்தில் வேறு ஒரு இளவல் கைதட்டிச்சிரித்துக் கொண்டு கோவிந்தசுவாமியோடு உல்லாசமாகபேசிக் கொண்டு வந்தனன். அவன் கோவிந்தசுவாமியோடு சில குறும்புகள் செய்துகொண்டு அப்படகில் வந்த போது, அவன் ஒரேபக்கமாகப் பேச்சின் சுவையில் மூழ்கிச்சாய்ந்து விட்டதால், கோவிந்தசுவாமி ஓரத் தில் நின்றிருந்தமையால், ஆற்றில் விழுந்துவிட் டான். படகிலுள்ள எல்லா மக்களும் தப்பித்துக் கொண்டனர். ஆனால், மணமகனாகிய கோவிந்தசுவாமி மாத்திரம் ஆற்று வெள்ளத்தில் போனான். அவன்

தாய், ஐயோ! ஐயோ! என்று அலறினாள். அவள் தன் மைந்தனுக்குத் தண்ணீரில் நீந்தத்தெரியாதென்றும் கூக்குரலிட்டுக் கதறினாள். எல்லா மக்களும் நீந்தும் பழக்கத்தைக் கைக்கொள்வது வாழ்க்கைக்கு அத்தியாவசியம் என்பதை கோவிந்தசுவாமி அறிந்தானில்லை. அந்தோ! பாவம்! அவன் தாய் தந்தையரும் அவ்விஷயத்தைக் கருதினார்கள் இல்லை, பரமசிவன் மாத்திரம் அவ்விஷயத்தை நன்கு உணர்ந்து இருந்தான்; நீந்துவதில் கைதேர்ந்தும் இருந்தான். முன்னமே கூறியபடி பரமசிவன் தினந்தோறும் தன் கிராமத்தில் கிணற்றில் குதித்து, ஸ்நானம் செய்து, நீந்துவதில் நிபுணன் எனப்பெயர் வாங்கிஇருந்தான். அவன் கோவிந்தசுவாமியை ஆறு அடித்துக் கொண்டு போவதைக் கண்டதும், சற்றும் அஞ்சாமல், தன் உயிரைத் துரும்பாக மதித்து, கோவிந்தசுவாமியின் உயிரையே தன்னுயிராகவும், தன் தங்கையின் பொன்னுயிராகவும் பாவித்து, ஆற்றில் விரைவாகக் குதித்தான். அவன் ஆற்றில் விரைவாக நீந்திச் சென்று, கோவிந்தசுவாமியைப் பிடித்து அவனைத் தைரியமாக ஒரு சிறந்த வீரன் போல் பக்குவமாக வலித்துக் கொண்டுஆற்றங்கரைக்குவந்தான். கோவிந்தசுவாமி உயிர் பிழைத்தான். வந்திருந்த மக்கள் அனைவரும் ஆனந்தமாரி பொழிந்தனர். கோவிந்தசுவாமியின் அன்னை பரமசிவனை அன்புடன் பலவாறு புகழ்ந்து, அவனைக் கைகூப்பி வணங்கி விட்டாள். பரமசிவன் அவ்வம்மையார்காட்டிய நன்றியை பெரிதும் வியந்து, அவ்வம்மையாரைத் தன் சொந்த அன்னை போல் எண்ணி, அவள் திருவடிகளில்விழுந்து வணங்கினான்.

அவ்வற்புதக் காட்சிகளைக்கண்ட எல்லாமக்களும்பெரு மகிழ்ச்சி அடைந்தனர். கோவிந்தசுவாமியின் தந்தை பரமசிவன் தந்தையினிடம் அவர் மைந்தன் புரிந்த இணையில்லாத் தீரச் செயலை மெச்சிப் பேசினர். பரஞ்சோதி எப்போதும்சிற்சிலமொழிகளே பேசும் இயல்புடையவர். இருப்பினும், அவர் அன்று மாத்திரம் தம்மையே மறந்து, தம் புதல்வன் செயற்கரிய செயலைப் பலமொழிகளால் நெடு நேரம் புகழத் தொடங்கினர். மாணிக்கவாசகனும் திருமண விழாவைக் காணவந்திருந்தான். குறும்பு செய்யும் குணமுடையவன் என்பது பரமசிவன் நன்குஅறிந்த விஷயமே. அத்தகைய குறும்புத்தனத்தைக்கைக்கொண்டமாணிக்கவாசகன் நட்பைக் கோவிந்தசுவாமி எப்படிப் பெற்று விட்டானென்று பரமசிவன் ஆச்சரிய மடைந்தான். மாணிக்கவாசகன் வசீகர தோற்றத்திலும் பேச்சிலும்பெருமகிழ்ச்சிகொண்டிருந்த பரமசிவனுக்கு அவன் வருகை இன்பத்தையே விளைவித்தது.

மறுநாட்காலை குறித்தநேரத்தில் திருமணம்நிகழ்ந்தது. பரமசிவன் பரமசந்தோஷத்துடன் கோவிந்தசுவாமியைத் தான் மைத்துனனுக ஏற்றுக் கொண்டு மாணிக்கவாசகனுடன் உல்லாசமாகப்பேசிக்கொன்டு திருமண விழாவில் திளைத்திருந்தான். கோவிந்தசுவாமியும் பார்வதியும் இல்லறவாசிகள் ஆனர்கள். அவர்கள் இருவரும் இணையில்லாக் களிப்புடன் மணம் புரிந்தனர். பெரியோர்கள் மணவாழ்த்துக்கள் கூறினர்கள். மாணிக்கவாசகன் ஒரு பொற்பதக்கமும் விலையுயர்ந்த ஒரு பூமாலையும் கோவிந்தசுவாமிக்குத் தன் அன்பின் அறிகுறியாக அளித்தனன். மாணிக்கவா

சகனும் பரமசிவன் சுற்றத்தாரில்சேர்ந்தவனென்றும் பரமசிவனுக்குத் தெரிந்ததும், அவன் பெரிதும்களிப் புற்ருன். அவனுக்கு மாணிக்கவாசகன் மீது ஒரு புறத்தில் வெறுப்பு இருந்தபோதிலும் மற்ருெரு புறத்தில் பெருங்களிப்பு உண்டு. திருமணம் முடிந்ததும் மணமகனும் மணமகளும் அரிபுறமென் னும் கிராமத்தைவிட்டு அம்பை நகருக்குச் சென்றனர். பார்வதி அப்போது நல்ல தேக வள மும் அழகும் பெற்றுச் சிறந்து பொலிந்தனள். அவள் அணிகலன்களும், ஆடைகளும், சீதனங்களும் கோவிந்தசுவாமிக்கு போகவில்லை யென்ருலும், அவள் எல்லாவற்றிலும் சிறந்த பணியையும், பொறையையும், தனி அன்பையும் உண்மைக் கலன் களாகக் கோவிந்தசுவாமிக்குக் கொண்டு போனுள். அவள் தாய் தந்தையரையும் தமையனையும் பிரிந்த போது அவளுக்கு உண்டாகிய வருத்தம் இத்தன் மைத்து என்று எழுத இயலாது. அவள் தன் தாய் தந்தையரின் தனி அன்பையும் தன் தமையன் தனி அன்பையும் வியந்து மகிழ்ந்து அவர்களுக்குத்தகுந்த கைம்மாறு யாதுசெய்வதென எண்ணி அவர்கள் ஆசிகளைப் பெற்றுக் கண்ணருவி பாய அவர்களை விட்டுப் பிரிந்தனள். பரமசிவன் தன் தங் கைக்கு தக்க தைரியம் சொல்லி, அவளைத்தான் தன் உயிரினும் மேலாகக் கருதுவதாக இயம்பி அவளை எக்காலத்திலும் தான் மறவேன் என்று உறுதியும் தந்து, கோவிந்தசுவாமியை மணவாளனுகப் பெற்றது அவள் புரிந்த பெரும் புண்ணியத்தின் பயனே என்று அவளுக்கு எடுத்து உரைத்து அவளைத் தன் கணவ

ளேடும் சுற்றத்தாரோடும் அம்பை நகருக்கு அனுப்பி ளுன். கோவிந்த சுவாமி தன் மைத்துனன் பரமசிவ ஃனப் பலவாறு புகழ்ந்து அவன் தனக்குப் புரிந்த அரும்பெருஞ் செயலே வியந்து அதற்குக் கைம்மா ருகப் பல நன்மொழிகள் பகர்ந்து, அவனிடம் விடை பெற்றுச் சென்ருன். மாணிக்கவாசகனும் அவ னுடன் போனன். பரமசிவன் தான் முன்னர்கோவிந் தசுவாமிக்குப் புரிந்த தீமைக்குப் பிராயச்சித்தமாகத் தன் உயிரையேமறந்து, அவன் உயிரைக்காப்பாற்றி அவன் பெற்ருேரை மகிழ்வித்ததை எண்ணி இன் புற்ருன்.

அதிகாரம் பதினுறு.

பார்வதிக்குத் திருமணம் நிகழ்ந்தபின்னர், அவள் கணவனும் ஏனையோரும் அரிபுறம் என்னும் கிரா மத்தைவிட்டு அம்பைநகருக்குச் சென்றதும், பரம சிவன் மீண்டும் பாடசாலேக்குச் செல்லவேண்டியவ ஞன். அவன் தன் கல்வி விஷயத்தில் மிகுந்த ஊக் கம் காட்டவேண்டுமென்றும் பழைய நண்பர்களிடம் சேருதல்கூடாது என்றும் எண்ணினன். அவன் சென்ற ஆண்டில் கல்வி விஷயமாக எய்திய கஷ்டங் களே மறக்கவில்லே. அவன் கடவுள் அருளால் தான் மேல்வகுப்பிற்கு மாற்றப்பட்டான் என்றும் நினேத்தான். அவன் முன்போல் சோம்பலுக்கு அடி மையானல், மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைதல் இயலாத காரியமென்று அஞ்சினன். அவன் தந்தை அவன் கல்வி மாட்சியைப்பற்றிக் கோவிந்தசுவாமி யின் தந்தையினிடம் மிகவும் அதிகமாகப் புகழ்ந்து விட்டதை நினேந்து, பரமசிவன் உள்ளுக்குள் வெட்க

மடைந்தான். அவன் அத்துணைய பெருமையை அடைவதற்கு யோக்கியதை அற்றவனென்றும் எண்ணினன். மாணிக்கவாசகனும், பரமசிவன் தந்தை தன் மைந்தன் கல்வி மாட்சியை மிகவும் சிறப்பாகப் பேசியபோது, பரமசிவன் முகத்தைப்பார்த்து நகைத்துக்கொண்டிருந்தான்.

பரமசிவன் மீண்டும் அம்பை நகருக்குச் செல்ல இரண்டு மூன்று தினங்கள் இருக்கையில், அவன் கிராமத்திலிருந்த பாடசாலையின் தலைமை ஆசிரியர் சங்கரய்யர் அவனைத் தன் பள்ளிக்கு வருமாறு ஒரு மாணவனிடம் சொல்லி அனுப்பினர். பரமசிவன் சங்கரய்யரைத் தான் கிராமத்திற்கு வந்து நெடுநாட்கள் ஆனபோதிலும் வேண்டுமென்றே பாராமல் இருந்தான். ஏனெனில் அவன் தலைமை ஆசிரியர் தன்னைக் கல்வி சம்பந்தமாகப் பல கேள்விகள் கேட்டாரென்றும் தாம் கல்வியில் ஊக்கமும் விருப்பமும் முன்னைய அளவு வைக்கவில்லை என்பதை அறிந்து கொண்டாரென்றும் எண்ணினன். அவர் தன் தங்கையின் திருமணத்திற்கு வந்தபோதிலும் அவரிடம் இரண்டொரு மொழிகளே பேசித் திருமணத்தின் சம்பந்தமாகப் பல பணிகளைக் கவனிப்பவன் போல் அவரை விட்டுப் பிரிந்தான். தலைமை ஆசிரியர் சங்கரய்யர் நல்ல அறிவாளியாதலால் பரமசிவன் தந்திரத்தை அறிந்து கொண்டார்.

பரமசிவன் சங்கரய்யரின் கட்டளையை மறுக்க முடியாதவனாய் அவர் பாடசாலைக்கு மிக்க வெறுப்புடன் சென்றான். சங்கரய்யர் அவனைத் கண்டதும் புன்னகை புரிந்து அவனைத் தன் அறையில் ஒரு

நாற்காலியில் அமரச் செய்து அவனிடம் தனிமையாகச் சில மொழிகள் சொல்லுவாராயினர். அவர் பரமசிவனை நோக்கி "பரமசிவா! நீ அரிபுரமென்னும் கிராமத்தில் தலை சிறந்த மாணவனென்று நான் நம்பி இருந்தேன். நீ புதிதாகச் சென்ற உன் கல்லூரியில் முதலாவது ஆண்டில் கல்வி நன்ருகக்கற்று ஆசிரியர்களிடம் நன் மதிப்புப் பெற்று இறுதியில் பரிசும் பெற்று பொலிவுற்ருய். ஆனல் நீ இரண்டாவது ஆண்டில் கல்வியில் முன்போல் சிறந்து விளங்கவில்லை. நீ சோம்பலென்னும் பேய்க்கு அடிமையாகிவிட்டாய் என்று எண்ணுகின்றேன்; துஷ்ட மாணவர்களோடும் சேர்ந்து விட்டாய் என்பதில் சந்தேகம் இல்லை. நான் கூறிய பொன் மொழிகளைப் புன் மொழிகளாக்கிவிட்டாய். நீ சிறந்த அறிவாளியென்பதில் இப்போதும் எனக்கு ஒரு சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனல் நீ தனிமையாகக் கல்வியைக் கற்ருல் உண்மையில் தனிச்சிறப்பை அடைவாய். தீய நட்பு உன் நற்குணத்தை அழிக்கும்; சோம்பலைப் பிறப்பிக்கும்; கல்வியை அடியோடு மாய்த்துவிடும். ஆதலால் நீ தீய மாணவர்களோடு சேராமல் சோம்பலையும் கைக்கொள்ளாமல் உன் பெற்ருேரின் வறுமையை மறவாமல் என் நன் மொழியை ஏற்றுக்கொண்டு தக்க உழைப்பும் ஊக்கமும் கல்வியில் காட்டி மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைவாயாக" என்றுகூறி அவனுக்கு எச்சரிக்கை செய்து அனுப்பினர். பரமசிவன் அவர் கூறிய விஷயங்களை உண்மைதான் என்று மனதில் ஏற்றுக்கொண்டு அவரிடம் விடை பெற்று தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

பரமசிவன் மூன்று தினங்கள் கழிந்ததும் தன் தாய் தந்தையரின் நல்லாசிகளைப் பெற்றுத் தன் கல்வியை மேலும் கற்க அம்பைநகருக்குச்சென்றான். அவன் அம்பை நகரை அடைந்ததும், தன் கல்வி விஷயத்தில் மிகுந்த ஊக்கம்கொண்டான். அவன் மாணிக்கவாசகனை மறந்தே விட்டான்; கோவிந்தசுவாமியைப் பற்றி மாத்திரம் மனத்தில் வியந்தவண்ணமாகவே இருந்தான். அவன் தான் கோவிந்தசுவாமியைக் காட்டிலும் அறிவில் சிறந்தவன் என்றும் தான்மாத்திரம் அவனைப்போல் உழைத்தால் அவனை வெல்வது வெகு எளிது என்றும் மெட்ரிக் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைதல் சுலபமான காரியம் என்றும் திடமாக எண்ணினான். அவன் ஊக்கமென்னும் வாளைக் கையில் வீரன்போல் ஏந்தி தன் கல்வி மாட்சியை வளர்க்கலானான். அவன் தன்கல்லூரிக்குச் சென்றதும் மெட்ரிக் வகுப்பில்பல வருடங்களாக அவ்வகுப்பில் தங்கியிருக்கும் இராமநாதன் என்னும் மாணவனைக் கண்டான். இராமநாதன் வயதில்முதிர்ந்தவனென்றும் குணத்தில் தாழ்ந்தவனென்றும் குறும்பில் திளைப்பவனென்றும் முன்னமே கூறியுள்ளோம். அவன் பரமசிவனைப் பார்த்ததும் கொல்லென நகைத்து அவனை நோக்கி “பரமசிவா! வருக வருக. என் அன்பே வருக. என் இன்பே வருக. நீயும் மெட்ரிக் வகுப்பு வந்து விட்டாய். நீ சென்ற ஆண்டில் படித்த தன்மைக்கு உனக்கும் மேல்வகுப்பு கிடைத்தது விந்தையே. இருப்பினும் நீ இங்குவந்தது எனக்கு நன்மையே. நீயும்நானும் இனி ஒன்று சேர்ந்து பந்தாடலாம்; பல இடங்களுக்குப்

போகலாம்; இனிமையாகக் காலத்தைக்கழிக்கலாம்" என்று கூறி அவனைத் தட்டிக் கொடுத்து அவன் பக்கத்தில் அமர்ந்தான்.

பரமசிவன் இராமநாதன் கூறிய வெம்மொழிகளைக்கேட்டு வெகுளி கொண்டு அவனை வெறுத்து "உன்நட்பு பொல்லாதது. நான் உன்னுடன் சேர மாட்டேன். உன்னைப்போன்றவர்களால்தான்கெட்டு சீர்குலைந்தேன். இனி நான் ஊக்கமும் உழைப்பும் உரமாகக் கொண்டு என் கல்வியை வளர்ப்பேன்" என்று சொல்லி அவனை விட்டுப்பிரிந்து வேறு ஓர் இடத்தில் போய் அமர்ந்து கொண்டான். இராமநாதன் மிகுந்த கோபத்துடன் பரமசிவனை நோக்கி "அடே முழு முட்டாளே! உனக்கும் படிப்பிற்கும் வெகு தூரம்; நீ இப்பிறப்பில் மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடையமாட்டாய். நீ உன் கல்வி விஷயமாக மனக்கோட்டைக் கட்டுகின்றாய். நீ பயனற்ற சுவையற்ற இன்பமற்ற பண்பற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிரு" என்று கூறி பல துஷ்ட மாணவர்களைப் பார்த்து நகைத்தான்.

அச்சமயம் கோவிந்தசுவாமி என்னும் மாணவனும் அவ்வகுப்பிற்கு வந்தான். அவனோடு மாணிக்கவாசகனும் வந்தான். அவர்கள் இருவரும் வகுப்பில் நுழைந்ததும் பரமசிவன் கோவிந்தசுவாமியின் மீது சிறிது கோபங்கொண்டான். ஏனெனில் அவன் தன் மைத்துனன் கோவிந்தசுவாமி மாணிக்கவாசகன் நட்பினால் கெட்டுவிடுவானென்று எண்ணினான். ஆனால் கோவிந்தசுவாமி என்பவன் தளராத ஊக்கமும் கோணாதமனமும் உரமான அறிவும்மாறாதமனத்

திடமும் உடையவன் என்பதைப் பரமசிவன் உணரவில்லை. கோவிந்தசுவாமி மெட்ரிக் வகுப்பில் புகுந்ததும் இராமநாதன் கரகோஷம் செய்து அவனை நோக்கி "மணியேவருக, கல்விக் கனியேவருக, முதல் பரிசு பெற்ற முதல்வா வருக!" என்று கூறித் தான் முன்னமே ஓர் இடத்தில் மறைவாக வைத்திருந்த பூமாலையை எடுத்துஅவன் கழுத்தில்சூட்டினன். எல்லா மாணவர்களும் அப்போது கரகோஷம் செய்தார்கள். கோவிந்தசுவாமி தனக்கு அத்துணைய மரியாதை இராமநாதன்உண்மையில் செய்தானென்றே நம்பி அவனை நோக்கி "நண்பரே! தங்கள்பெருங் குணத்தைப் பெரிதும் வியக்கின்றேன். தாங்கள் கல்வியில் வைத்த பெரியவிருப்பினல் எனக்குச் செய்த மரியாதைக்காக நான் தங்களுக்குஎன் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கின்றேன்" என்று கூறி இராமநாதனை வணங்கினன்.

இராமநாதன் புன்னகை புரிந்து அவனை நோக்கி "தலை சிறந்தமாணவரே! உனக்கு மரியாதை இது மட்டுமல்ல, இதோ அளிக்கும் இந்த மலரையும் நீர் பெற்று இதன் மணத்தை நுகர்தல் வேண்டும். நீர் பெற்ற கல்வி மணத்தை விளக்க இம்மலரின் மணம் வேண்டும்" என்று சொல்லி ஒருபெரிய சிறந்த ரோஜா மலரைக் கொண்டுபோய் அவன் கையில் கொடுத்தான். கோவிந்தசுவாமி களங்கமில்லாமல் அம்மலரை வாங்கி அதன் மணத்தை நுகர்ந்தான். இராமநாதன் அம்மலரில் கள்ளத்தனமாக மிளகாய்த் தூள் வைத்திருந்தான்.

கோவிந்தசுவாமி ரோஜா மலரை நுகர்ந்ததும் மிளகாய்ப் பொடியால் துன்புற்று தும்மல்கள் தும்ம ஆரம்பித்தான். அப்போது மாணவர்கள் எல்லோரும் ஒரே நகைப்பாக நகைத்தார்கள். மாணிக்கவாசகனும் மாண்பில்லாநகைப்பில்கலந்துகொண்டான். கோவிந்தசுவாமிக்கு அச்சமயம் உண்டான கோபத்திற்கு அளவில்லை. அவன் இராமநாதனை அயோக்கிய சிகாமணி யென்று அழைத்து மாலையை எடுத்து வீசி எறிந்தான். பரமசிவனுக்கும் இராமநாதன் மீது பெருங்கோபம் உண்டாயிற்று. அச்சமயம் ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்து விட்டார். அறிவற்ற மாணவர்கள் பலர் அப்போதும் நகையாடினர்கள். ஆசிரியர் வெகுண்டு அதன் காரணத்தை அறிந்ததும் இராமனதன் செய்கையைப் பற்றித் தலைமை ஆசிரியருக்குப் புகார் செய்தார். பின்னர் எல்லாமாணவர்களும் மௌனம் பூண்டு ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தில் கவனம் செலுத்துவராயினர்கள்.

தலைமை ஆசிரியர் இராமநாதன் என்னும் மாணவனை அன்று மாலை நான்கு மணிக்குத் தன் இருப்பிடத்திற்கு அழைத்து ஆறு பிரம்படிகள் இருகரங்களிலும் அளித்து அவனை நோக்கி "யோக்கியதையற்ற மாணவனே, உன்னை நான் இன்னும் இக்கல்லூரியில் வைத்திருப்பது என்னுடைய தவறேயாகும். உனக்கு மீசை முளைத்தும் இருபத்தைந்து வயதாகியும் உன்னை என் கருணைப் பெருக்கினல் இக்கல்லூரியில் வைத்திருக்கின்றேன். நீ மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைதல் இப்பிறவியில் இல்லை. நீ கல்லூரியை விட்டு வெளியே நாடோடியாகத் திரியாமல்

உன்னை மாணவர்களோடு மாண்புறக்கலந்து வாழச் செய்தமை எனது குற்றமே என்று எண்ணுகின்றேன். நீ பல மாணவர்களை உன் குறும்புத் தனத்தால் சீர்குலையச் செய்கின்றாய். இது உனக்கு நான் கொடுக்கும் கடைசி எச்சரிக்கையாகும். இனி நீ ஏதேனும் தகாத காரியம் வகுப்பில் செய்தால் இக்கல்லூரியினின்றும் விலக்கப்படுவாய். இது திண்ணம் ” என்று கூறி அவனை அனுப்பிவிட்டார்.

இராமநாதன் அத்துணைய கேவலமான தண்டனையை அடைந்தும் கல்லூரியின் வெளியே சென்றதும் மாணிக்கவாசகனுடன் விநோதமாகப் பேசிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். மாணிக்கவாசகனும் மாட்சியில்லா மாணவனுடன் கலந்து பொருளில்லா குறும்புத்தனத்தில் திளைத்து தன் வீடு போய்ச்சேர்ந்தான். பரமசிவன் மாத்திரம் ஒருவரிடமும் சேராமல் மாலையில் பந்தாட்டம் ஆடி முடிந்த பின்னர் தன் மனைக்கு நேரே சென்று மனக்களிப்புடனும் மனஎழுச்சியுடனும் மாண்புறு நூல்களைச் செம்மையுற வாசிக்கத் தொடங்கினன்.

பரமசிவன் கோவிந்தசுவாமியைப் போல் பணிவும் ஊக்கமும் கொண்டு படிப்பில் தன் சிந்தையை முற்றிலும் செலுத்துவானயினன். அவன் மாணிக்கவாசகனை மறந்தே போனன். அவன் இரண்டொரு மொழிகள் தன் மைத்துனன் கோவிந்தசுவாமியினிடம் பேசுவதைத் தவிர மற்ற மாணவர்களோடு ஒரு மொழியும் பேசாமல் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களைக் களிப்புடன் கூர்ந்து கவனித்துத் தன் வீட்டிலும் கசடறக் கற்று கல்வியில் முன்

போல் இரண்டு மாதங்களில் தலைசிறந்த மாணவனாக ஆய்விட்டான். அவனே தன் வகுப்பில் முதல் மாணவனென்றும் பெருஞ்சிறப்பையும் விரைவில் பெற்றுவிட்டான். கோவிந்தசுவாமியும் தான் முன்னர் அவனை வியந்ததைக் காட்டிலும் மிகுதியாக வியக்கலானான். அவன் பரமசிவன் கல்வி மாட்சிக்கு இணையாக அக்கல்லூரியில் வேறு எந்த மாணவனுக்கும் கல்வி மாட்சி இல்லையென்றே பல மாணவர்களிடம் பகிரங்கமாகவும் சொல்லத் தொடங்கினான். அவன் தன் மைத்துனன் பரமசிவன் கல்வி வளப்பத்தைப் பற்றி புகழாத நாளில்லை. பரமசிவனும் உண்மையில் கல்வி வளத்தில் சிறந்தே ஒளிர்ந்தான். அவன் சோம்பல் என்னும் பேயை அடியோடு ஒழித்து உழைப்பென்னும் உரைவாளைக் கையிலேந்தி அழியாக் கல்விப் பொருளை உண்மைப் பொருளாகக் கருதி அம்மெய்ப் பொருளையே மேலும் மேலும் பெருக்கிச்சென்றான். அவன் கல்வித்திறத்தைஎல்லா ஆசிரியர்களும் பலவாறு புகழத்தொடங்கினார்கள். தலைமை ஆசிரியரும் அவனை மெட்ரிக் மாணவர்களில் மாணிக்கத் தீபம் என்று கூறிப் புகழ்ந்தார்.

பரமசிவன் ஆங்கில மொழியில் பரந்த ஞானம் விரைவில் பெறுவானாயினான். அவனுக்கு ஆங்கில நூல்கள் வாசிப்பதில் அளவில்லா விருப்பமுண்டாயிற்று. அவன் அச்சிறுவயதிலேயே தன் கல்லூரியின் நூல் நிலையத்தில் இருக்கும் ஆங்கிலப் புத்தகங்களையும் பல ஆங்கிலக் கட்டுரைகளையும் வாங்கி வாசிக்கத் தொடங்கினான்.

பரமசிவன் ஆங்கில ஞானத்தில் சிறந்து விளங்கியதால் அவன் ஆங்கிலத்தில் சில சிறு பாடங்களும் எழுதத் தொடங்கினன். அவன் ஒரு நாள் தன் கல்லூரியின் சிறப்பைப் பற்றி ஒரு சிறு பாடல் எழுதி அந்நகரிலிருந்த ஒரு வாரப் பத்திரிகைக்கு அனுப்பினன். அவன் விரும்பியபடியே அவ்வாரப் பத்திரிகையில் அப்பாடல் வெளி வந்தது. அதை இயற்றினவன் பரமசிவன் என்றும் அவன் பெயர் அச்சில் மிளிர்ந்தது. அதைக் கண்டதும் பரமசிவன் தன் வாழ்க்கையில் என்றும் அடையாத பேரின்பத்தை அடையலானன். அவன் தன் கல்வியின் மாட்சிமையையும் சாலவும் பெரிதாக எண்ணிவிட்டான். அவன் தன்னை அறியாமல் ஒருவித கல்விச் செருக்கும் கொண்டுவிட்டான். அவன் தனக்கு இணையான மாணவன் எப். ஏ. வகுப்பிலும் இல்லை யென்று எண்ணி இறுமாந்தான். அவன் கல்வி வளத்தைச் சதா கோவிந்தசுவாமி புகழ்ந்தது போதாது என்று அவன் வகுப்பு மற்ற மாணவர்களும் மேற்கூறிய வாரப் பத்திரிகையில் அவன் எழுதிய பாடலை அச்சில் பார்த்ததும் அவன் கல்வி வளத்தை அளவு கடந்து புகழ்வாராயினர்கள். அவன் வகுப்பு மாணவர்கள் அவனை ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் என்று சொல்லி வகுப்பில் அவனுக்குப் புகழ்மாலை சூட்டினர்கள். மாணவர்கள் பரமசிவன் எழுதிய பாடல்கள் உள்ள வாரப் பத்திரிகையைக் கொண்டு போய்த் தலைமை ஆசிரியரிடம் காட்டிவிட்டார்கள்.

பரமசிவன், மாணவர்கள் தன் பாடலைப் புகழ்ந்தது போல் தலைமை ஆசிரியரும் தன் பாடலைப் புகழ்வா

ரெனத் திடமாக எண்ணிவிட்டான். அவன் தன்னை தலை சிறந்த மாணவன் என்று மதிப்பதோடு தான் எழுதிய அருமைப் பாடலையும் பெரிதும் புகழ்வாரென ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், தலைமை ஆசிரியர் பரமசிவன் செயலை அங்கீ கரிக்காமல், அவன் மீது குற்றம் சொல்லத் தொடங்கி னர். அவர் பரமசிவனை நோக்கி, "பரமசிவா! நீ இவ் வகுப்பிலேயே ஆங்கிலத்தில் செய்யுள் இயற்றியதை நான் உண்மையில் மெச்சுகின்றேன். ஆனால், நீ செய்த காரியம் தகாதகாரியமாகும். என் அனுமதி இல்லாமல், நீ நம் கல்லூரியைப் பற்றியாவது என் னைப் பற்றியாவது ஓர் எழுத்தும் எழுதி எப்பத்திரி கைக்கும் அனுப்ப உனக்கு உரிமையில்லை. இதை நீ உணராமல் இருந்தது வருந்தத் தக்கதே. இப்பா டலை நீ என்னிடம் காட்டியிருந்தால் இதிலுள்ள பல பிழைகளையும் திருத்தி இருப்பேன்" என்று கூறினர்.

பரமசிவன் எதிர்பாராவண்ணம் தலைமை ஆசிரி யர் தன்னை இகழ்ந்து மற்ற மாணவர்கள் முன் பேசிய போது அவனுக்கு அடக்க வொண்ணு வெகுளி உண் டாய் விட்டது. அவனுக்குத் தலைமை ஆசிரியர் காட் டிய வெறுப்பின் நுணுக்கம் விளங்கவில்லை. அவன் முகச்சுளிப்புடன் தலைமை ஆசிரியரை நோக்கி, "ஐயா! என் பாட்டில் என்ன குற்றங்கள் இருக்கின் றன? நான் நமதுகல்லூரி கல்வியில் தலைசிறந்து விளங்குகின்றதென்றும் நம் கல்லூரி மாணவர்கள் நல்லமாண்புள்ள கல்வி கற்கின்றார்கள் என்றும், தலை மை ஆசிரியராகிய தாங்கள் கருணையையும் அன்பையும் இருகண்களாகக்கொண்ட பெருந்தன்மையின் சிகரம்

என்று புகழொளி வீசத்தானே பாடி இருக்கின்றேன். இப்பாடலில் எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் ஒன்றும் இல்லையென்றே நான் திடமாக எண்ணுகின்றேன். பிழைகள் இருந்தால், தயை கூர்ந்து எடுத்துக் காட்டுங்கள்'' என்று கூறி அவரை நோக்கினன். அவர் மாணவர்கள் முன்னிலையில் பரமசிவனை நோக்கி "பரமசிவா! நீ எழுதின பாடலில் உள்ள சொற்குற்றம், பொருட்குற்றம், இலக்கணப் பிழை, பிரயோகப் பிழை முதலியவைகளைப் பற்றி இன்று மாலை ஐந்து மணிக்கு என் அறையில் உனக்குத் தனியாக எடுத்துக் காட்டுகின்றேன். நீ அதைக் குற்றமாகக் கொள்ளாமல் உன் நன்மைக்காகவே என்று எண்ண வேண்டும். நீ இன்று மாலை ஐந்து மணிக்குத் தனியே என் அறைக்கு வருவாயாக" என்று கூறி அவனைத் தன் வகுப்பிற்கு அனுப்பி விட்டார்.

பரமசிவன் தலைமை ஆசிரியர் கூறிய மொழிகளைக் கேட்டு கடுங்கோபம் கொண்டு அவர் கூறிய மொழிகளைப் பயனற்ற வெறும் மொழிகளே என்று எண்ணி அவரை வெறுப்புடன் நோக்கி தன் முகத்தைச் சுளித்துக் கொண்டே தன் வகுப்பிற்குச் சென்றான். மற்ற மாணவர்களும் தலைமை ஆசிரியர் பரமசிவன் மீது பொறாமை கொண்டு அவன் கல்விச் சிறப்பை வேண்டுமென்றே குறைத்துச் சொன்னார் என்றே எண்ணிக் கொண்டனர்.

பரமசிவன் அன்று மாலை ஐந்து மணிக்குத் தலைமை ஆசிரியரைப் பார்க்க விரும்பவில்லை. அவன் மனம் உடைந்து விட்டது; கல்வியில் வைத்த விருப்பம் மாய்ந்துவிட்டது; அவன் புகழொலி குன்றி விட்

டது. அந்நிலையில் அவன் மனம் மாறி விட்டபோது தலைமை ஆசிரியர் தாமே அவனை அழைத்தார். உண்மையில் தலைமை ஆசிரியர் பரமசிவன் செயலையும் பாடலையும் இகழவில்லை. அவர் பரமசிவனுக்குக் கல்வியின் நுட்பதிட்பங்களை அவன் பாடலிலிருந்து எடுத்து விளக்க வேண்டுமென்றே எண்ணினர். அவர் பரமசிவனைத் தனியாக தம் அறையில் அமர்த்தி அவன் இயற்றிய செய்யுளில் இருந்த சாதாரண மாணவர்களுக்கும் குறைந்த கல்வி அறிவுள்ள மக்களுக்கும் அறிய முடியாத குற்றங்களையும், தவருன சொற்பிரயோகங்களையும், ஓசைக் குறைகளையும், பொருந்தாத கற்பனைகளையும், சொற்களின் வழூக்களையும், பயனின்றி நிற்கும் சொற்களையும் எடுத்து ஒவ்வொன்ருக அவனுக்கு விளக்கிக் கொண்டே போனர். பரமசிவனுக்கு அப்போது நாராசத்தை காய்ச்சி நடுச்செவியில் விட்டது போலிருந்தது. அவர் கூறிய மொழிகள் அனைத்தும் வெம்மொழிகளாகவே அவனுக்குத் தோன்றின. அவனுக்கு அவர்மீது விளக்கவொண்ணு வெறுப்பு உண்டாயிற்று. அவன் அப்போதே அவரையும் கல்வியையும் வெறுக்கத்தொடங்கினன்; புத்தகத்தைப் பார்க்கவும் விரும்பவில்லை; படிப்பு என்பது கசப்பாகி விட்டது. அவன் கல்வியில் கொண்டிருந்த செருக்கும் சிறப்பும் அவனை விட்டு அகன்றன. அவன் தன் இளமையால் எதிர்பாராத தலைமை ஆசிரியரின் செய்கையை வெறுத்த மனம் உடைந்து தன் அறியாமையின் காரணமாக, முன்போல் கல்வியில் இருந்த ஊக்கத்தை முற்றிலும் இழந்து சோம்பலுக்குமறுபடியும் அடிமையானன். அவன் மனம் கொதித்துக்

கொண்டு இருந்தமையால், மாணிக்கவாசகன் வசீகர முகத்தையும் நகைச்சுவை ததும்பும் பேச்சையும் மீண்டும் விரும்புவானாயினன். அவன் வெறுப்புடன் அன்றுமாலை பந்தாட்டத்திற்கும் செல்லாமல் தன் வீட்டிற்கு தனியே போகையில் மாணிக்கவாசகன் அவன் மனம் உடைந்ததை அறிந்து கொண்டு அவனைப் பின் தொடர்ந்து வந்து, அவனைத் தட்டிக் கொடுத்தான். பரமசிவன் பலமாதங்களாகக் கண்ணெடுத்துப் பாராமல் இருந்த மாணிக்கவாசகனை அன்புடன் தழுவிக் கொண்டான். மாணிக்கவாசகன் மனமகிழ்ச்சியுடன் பரமசிவன் செய்கையை மெச்சி அவனை நோக்கி "பரமசிவா! பார்த்தாயா? கல்வியின் அழகே அழகு. பரிந்து பரிந்து கற்றாயே. உன் கல்வியின் பெருமையைத் தலைமை ஆசிரியர் ஒரே நாளில் அழித்து விட்டாரே. இன்னும் மேலே வாசிக்க வாசிக்கத் தலைமை ஆசிரியரும் பெரிய கல்விமான்களும் மேலும் மேலும் குற்றம் கூறிக் கொண்டே தான் செல்வார்கள். கல்வி நம்போன்ற உற்சாகமுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான பொருளல்ல. கல்வி என்றால் எனக்குத் தலைவலி உண்டாகிறது. எப்படியும் நாம் இருவரும் மெட்ரிக் வகுப்பிற்கு வந்து விட்டோம். இதுபோதும். நமக்கும் பரீட்சையின் தேர்ச்சிக்கும் வெகு தூரம்; ஏதேனும் தந்திரத்தால்தான் தேர்ச்சியடைதல் கூடும். பரமசிவா! அஞ்சாதே. ஏன் மனம் வருந்துகின்றாய்? நீ மேன்மைத்தனமுள்ள கோவிந்தசுவாமியைப் போலல்லாமல் வீரத் தன்மையுள்ள இராமநாதனைப் போல் இன்பவாழ்க்கையை அடைவாயாக. இன்று இரவு ஒன்பது மணிக்கு நானும் இராமநாதனும் ஒரு

நாடகத்திற்கு செல்கின்றோம். நீயும் வந்தால் நான் உன்னை அழைத்துக் கொண்டு போகின்றேன். உனக்குக் கட்டவேண்டிய பணத்தை நான் கட்டுகின்றேன். நம் இன்ப வாழ்க்கைக்கு வேண்டிய பணச் செலவை நானே பார்த்துக் கொள்ளுகின்றேன். நீ மாத்திரம் என்னுடன் இருந்தால் போதும். உன் அறிவிற்கும் உன் குணத்திற்கும் நான் உன்னை என் ஆப்தநண்பனாக வைத்துக்கொள்ளவிரும்புகின்றேன். உனக்கு விருப்பம் இருந்தால் மெட்ரிக் பரீட்சையில் கடைசியில் பத்துநாளில் படித்துத் தேர்ந்துவிடுவாய். இது பிரமாதமான காரியமல்ல. பொறுமை நிறைந்த நம் தலைமை ஆசிரியர் சொற்களை எடுத்துக் கொள்ளாதே. உன் உண்மைப் பெருமையை அறிய அவருக்குச்சக்தி இல்லை" என்று கூறி பரமசிவன் மனத்தை மயக்கி அவனைத் தன் வசமாக்கிக் கொண்டு அவனை அன்று இரவே ஒன்பதுமணிக்கு ஒரு நாடகத்திற்குத் தகுதியற்ற நண்பனாகிய இராமநாதனுடன் அழைத்துக் கொண்டுபோனான்.

இராமநாதன் பரமசிவனைப் பார்த்ததும் பெரு நகை நகைத்து அவனை நோக்கி "பரமசிவா! வழிக்கு வந்து விட்டாயா? இப்போது தான் நான் உனக்குக் கொடுத்த புத்திமதி பலித்தது. நல்லது நீயும் என் அருமை நண்பனானாய். கல்லூரியில் என்ன இருக்கிறது? நம் கர்ம வினைதான் இருக்கிறது. அங்கே ஓர் அணுவளவு சந்தோஷமும் இல்லை உலகில் ஆண் மகனாகப் பிறந்தவர்கள் பற்பல இன்பக் கிளர்ச்சிகளில் திளைக்க வேண்டும். பணத்தை வைத்துக் கொண்டு சந்தோஷத்தை அநுபவிக்கத் தெரியாத

மூடர்களைப் போல் நாம் இருக்கக் கூடாது. நீ எவ்வளவோ கஷ்டப்பட்டு அல்லும் பகலும் வாசித்து ஆங்கிலத்தில் பாடலும் இயற்றினாய். உனக்குத் தலைமை ஆசிரியர் அதற்கு என்ன பரிசு கொடுத்தார்? பாழும் படிப்பினால் நம் தேகந்தான் கெட்டுவிடும். நீ படித்தது போதும். எங்களோடு சந்தோஷமாக உன் காலத்தைக் கழிப்பாயாக என்று கூறி பரமசிவன் மனப்பான்மையை மாற்றினான்.

பரமசிவன் நல்லறிவு பெற்றவனாக இருந்த போதிலும் தனக்கு மதிப்பு தன் தலைமை ஆசிரியரிடமிருந்து தான் இயற்றிய பாடலுக்குத் தகுந்தபடி வராமையால் தன் பேதைமையால் தலைமை ஆசிரியர் மீது வெறுப்புற்று இராமநாதன் சொல்லை முற்றிலும் அங்கீகரித்து விட்டான். அவன் அவ்விரு நண்பர்களோடும் நாடகத்தைக் கண்டு களிபூத்தான். அப்போதுதான் அவன் மனம் ஒருவாறு அமைதி அடைந்தது.

நாடகம் முடிந்ததும் இராமநாதன் மாணிக்கவாசகனையும் பரமசிவனையும் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான். இராமநாதன் இளவயதிலேயே தன் தாயை இழந்து விட்டமையால். அவனுக்கென்று தனியாக ஓர் அழகிய விசாலமான அறையை மெத்தை மீது அவன் தந்தை அவனுக்கு அளித்திருந்தார். அவன் அங்குத் தனிமையாக வாசிப்பதும் வசிப்பதுமாக இருந்தான். அவன் பல தீய பழக்கங்களைக் கைக்கொண்டு அவைகளில் தன் தந்தை அளித்த பணத்தைச் செலவு செய்து கொண்டு இருந்தான். அவன் பற்பல பொய்கள் புகன்று தன்

தந்தையினிடத்தில் அவ்வப்போது புத்தகங்களுக்கு வேண்டும் என்று பணம் வாங்கித் தீய வழிகளில் செலவு செய்து வந்தான். அவன் தந்தை அவனை உத்தமனென்று முற்றிலும் நம்பி அவன் கேட்டபோதெல்லாம் அவனுக்குப் பணம் அளித்து வந்தார். அவருக்குக் கல்வி மிகவும் குறைவாக இருந்தமையால், அவர் அவன் செய்த தந்திரங்களை அறியவில்லை. அவர் அல்லும் பகலும் பணம் வட்டிக்குக் கொடுத்து ஏராளமாக வட்டி வாங்கித் தம் பொருளை விருத்தி செய்து வந்தார். அவர் சிந்தையெல்லாம் பணத்தைச் சம்பாதிப்பதிலேயே சென்றிருந்ததால் தம் மைந்தன் கல்வி விஷயத்தை அவர் பெரிதாக நினைக்கவேயில்லை. ஆதலால் இராமநாதனுக்கு தன் மனம் போனபடி சிகரெட் பிடிப்பதும், கடிதம் ஆடுவதும், சிற்றுண்டிகள் அருந்துவதும், காப்பி ஹோட்டல்களுக்குச் செல்வதும் இன்ப விளையாடல்களாக இருந்தன.

பரமசிவன் இராமநாதன் அறையில் நுழைந்ததும், அதற்குள் காணப்பட்ட அழகான மேஜையையும், நாற்காலிகளையும், படங்களையும், கட்டில் மெத்தையும், வேறு அணிகளையும் கண்டு மயங்கி விட்டான். அவ்வறையில் மின்சார விளக்கு போடப் பட்டதும், பரமசிவன் பஞ்சணை மெத்தை அமைக்கப்பட்ட ஓர் அழகிய நாற்காலியில் அமர்ந்தான். மாணிக்கவாசகன் புன்னகையுடன் பங்காவைத் திருப்பினான். பரமசிவன் பெருங்களிப்புற்று மாணிக்கவாசகனைப் பார்த்து “மாணிக்கவாசகா! இவ்வறை எனக்குப் பெரிய உற்சாகத்தை அளிக்கின்றது. இதில் அல்லவோ நாம் வாசித்தல் தகுதியுடையதாகும்; இத்த

கைய அறையில் நாம் இருந்தால் எவ்வளவோ அதிக மாகப் படிப்போம்" என்று கூறினன்.

இராமநாதன் பரமசிவன் கூறியதைக் கேட்டு நகைத்து அவனை நோக்கி, "பைத்தியக்காரா! படித்து தலைவலியை அழைப்பதற்காகவா இவ்வழகான அறை? பொருத்தமின்றிச் சொல்கின்றாயே. படித்த வர்கள் எல்லாம் பணக்காரர்ராய்ப் பிரகாசிக்கின் றனரா? எல்லாவற்றிற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். அதிர்ஷ்டம் இருந்தால கல்வியும் வேண்டாம். வீண் உழைப்பும் வேண்டாம். பணம் தானகவேவரும். இந்த அறையில் ஆனந்தம் ஆட்சி செய்ய வேண்டும். இன்று இரவு நாம் மூவரும் பெரிய தனவந்தன் மக் கள் போல் பாவித்துக் கொள்வோம். இன்று ஒரு நாளாகிலும் ஆனந்த பரவசம் அடைவோம். நான் அளிக்கும் மணமுள்ள ரூலர் சிகரெட்டை ஒரு கன வான் போல் கம்பீரமாகப் பிடிப்பாயாக. மாணிக்க வாசகனும் ஒன்று வாயில் வைத்திருக்கின்றான். நான் தான் அவனை அத்துறையில் பழக்கி விட்டேன். நீயும் ஒன்று பிடி. ஜீரண சக்தியாகும்; உல்லாசம் தரும். இந்த உளவை அறிந்த அறிவாளிகள் தான் இப்பழக்கத்தைக் கைக்கொண்டிருக்கின்றனர்" என்று கூறி ஒரு சிகரெட்டைப் பரமசிவனிடம் அளித்தான்.

பரமசிவன் இராமநாதன் விருப்பத்தை மறுக்க அஞ்சி தன் மனச்சாட்சிக்கு விரோதமாக மனக்கவலை யுடன் அச்சிகரெட்டை வாங்கி வாயில் வைத்தான்; இராமநாதனே அதைக் கொளுத்தினன். பரமசிவன் அதை வெறுப்புடன் பிடித்ததும் அதிலிருந்து உண்

டாகிய புகையால் மூச்சு திணரப் பெற்று தும்மலா னன். அப்போது இராமநாதனும் மாணிக்கவாசகனும் கை கொட்டி நகைத்தார்கள். பரமசிவன் வெறுப் புடன் இராமநாதனை நோக்கி, "அண்ணு எனக்கு சிகரெட் வேண்டாம். அது எனக்குப் பொருத்த முடையதல்ல. எனக்குக் குடிக்க சிறிது தண்ணீர் கொடு" என்று கூறினன்.

இராமநாதன் பரமசிவனை நோக்கி, "அருங்குண நண்பா! நான் உனக்கு வெறுந் தண்ணீர் கொடுக்க மாட்டேன். மணமுள்ள சுகந்த தண்ணீர் அளிக்கின் றேன் என்று கூறி, மூன்று லெமனெட் புட்டிகளைஉடைத்து, மறைவாக அவற்றில் உஸ்கி என்னும் ஒரு சாராயத்தை கலந்து, மூன்று பளிங்கு கோப்பைகளில் கொண்டு வந்து அலங்கார மானமேஜையின் மேல் வைத்தான். பின்னர் அவன் தன்நண்பர் இருவரையும் நோக்கி, "நண்பர்களே! நல்ல மணமுள்ள சுவையான இப்பானத்தைப் பருகுவீர்க ளாக, உங்கள் களை தீரும் களிப்பு உண்டாகும்" என்று கூறி தான் ஒரு கோப்பையிலிருந்த மது பானத்தை அருந்தினன்.

பரமசிவனும் மாணிக்கவாசகனும் பளிங்கு கோப்பைகளில் இருந்த லெமனட்பானமே என்று உண்மையில் நம்பி அதை அருந்தினர்கள். சிறிதுநேரம் கழிந்ததும் பரமசிவனுக்கும் மாணிக்க வாசகனுக்கும் ஒருவித மயக்கமும் மனவுல்லாசமும் ஏற்பட்டு சந்தோஷ மொழிகள் சொல்லத் தொடங்கி னர்கள். இராமநாதன் பெரிதும் சந்தோஷமடைந்து தன் நண்பர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் இரு

வரும் இப்போது இவ்வுலகத்தில் இல்லை; மேல் உலகத்தில் மிளிர்கிறீர்கள்; மனவுல்லாசத்தில் அழுந்தினீர்கள்; நான் கொடுத்த பானத்தில் உஸ்க்கி சாராயம் கலந்திருக்கிறது; உங்களைக் குடியர்களாகவும் மாற்றிவிட்டேன்'' என்று கூறி நகைத்தான்.

பரமசிவன் அப்போதுதான் இராமநாதன் யோக்கியதையைச் செவ்வனே அறிந்தான். அவன் மாணிக்கவாசகன் தூண்டுதலால் மாண்பில்லா இராமநாதனுடன் சேர்ந்து மானம் இழந்தேனென்று தன்னையே நொந்துகொண்டு அம்மயக்கமான நிலையிலும் தன் நல்லுணர்ச்சியைப் பெற்று அவ்வறையை விட்டு அவர்கள் இருவரிடமும் ஒரு மொழியும் பகராமல் புறப்பட்டான்.

பரமசிவன் அறையைவிட்டு வெளியே வந்ததும் மதுபானத்தின் மயக்கத்தால் கீழே விழுந்துவிட்டான். இராமநாதனும் மாணிக்கவாசகனும் அவனைத் தூக்கிக் கொண்டுபோய்ப் பஞ்சணைமெத்தையில் படுக்கவைத்தனர். பரமசிவன் அப்படுக்கையிலேயே அயர்ந்து நித்திரை போய்விட்டான். இராமநாதனும் மாணிக்கவாசகனும் அவன் இருபக்கங்களிலும் படுத்துத் தாங்களும் நித்திரை போனார்கள்.

மறுநாள் விடியற்காலை ஐந்து மணிக்குக் கோழி கூவும் சப்தம் கேட்டதும் பரமசிவன் வழக்கம்போல் விழித்துக் கொண்டான். அவன் விழித்துப் பார்க்கையில் அப்போதும் மின்சார விளக்கு அவ்வறையில் எரிந்துகொண்டிருந்ததைக் கண்டான். அவன் அன்று இரவு நிகழ்ந்த இழிவான நிகழ்ச்சியை எண்ணி மனம் புழுங்கி அவ்விடத்தைவிட்டு அவன்

தன் நண்பர்கள் இருவரிடமும் ஒருமொழியும் சொல் லாமல் தன் வீடு போய்ச்சேர்ந்தான். அவன் தகுதி யற்ற இராமநாதன் நட்பினல் தான் தன் கல்வியை இழப்பதோடு தன்ஒழுக்கத்தையும் முற்றிலும்இழக்க நேரிடுமென்று அஞ்சி அவனிடம் இனி நட்பு வைக்க லாகாது என்று தீர்மானித்துக்கொண்டான். இருப் பினும் அவன் மாணிக்கவாசகன் நட்பை மாத்திரம் நீக்க முடியாதென்று எண்ணிக்கொண்டான். அவன் மாணிக்கவாசகன் உண்மையில் நல்லவனென்றும் தீய நண்பர்களால் கெட்டு வருகின்ருன் என்றும் நினைந்து அவன் மீது பரிதாபம் கொண்டான். மாணிக்கவாசகன் வள்ளல் குணத்தையும் நகைச் சுவை ததும்பும் இன் மொழிகளையும் பரமசிவனல் மறக்க முடியவில்லை. அவன் மாணிக்கவாசகனை மாத்திரம் நண்பனுக வைத்துக் கொள்ளவேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டான்.

அதிகாரம் பதினேழு

பரமசிவன் தன் தகுதியற்ற நண்பனுகிய இராம நாதன் செய்கையால் தான் எத்தகைய இழிவான துறையில் முன்னுள் இரவில் இறங்கிவிட்டதைப்பற்றி மனம் நொந்தான். இராமநாதன் எல்லாவித இழி வான பழக்கங்களையும் கையாண்டு வருகின்ரு னென்று அவன் அறிந்தபோது அவனை மறு முறை யும் கண்களால் பார்ப்பதும் பாவமென்று எண்ணி னன். அவன் மாணிக்கவாசகன் அநியாயமாக இரா

மநாதன் தகுதியற்ற நட்பினுல் ஒழுக்கத்தில் இழிவு அடைந்து வருகின்ருனென்று அவன் மீது பரிதாபங் கொண்டான். அவன் கூடுமானல் மாணிக்கவாச கனையும் இராமநாதனிடம் சேர வொட்டாமல் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தான். பரமசிவன் எவ் விதத்திலும் மாணிக்கவாசகனை மாத்திரம் மறக்க முடியாதென்று நினைந்து அவன் தனக்குத் தன் தலைமை ஆசிரியரால் உண்டான மனவருத்தத்தை ஒருவாறு மறக்கச் செய்தானென்று எண்ணி அவன் மீது முன்னினும் அதிக அன்பு பூண்டான். மாணிக் கவாசகன் பரமசிவனிடம் தன் மனத்துக்குள் அளவு கடந்த அன்பு வைத்திருந்தான்.

மறுநாட்காலை பரமசிவன் கல்லூரிக்குச் சென் றதும் மாணவர்கள் பலர் அவன் ஆங்கிலத்தில் இயற் றிய செய்யுளைச் சொல்லிக் கொண்டு பரமசிவனைப் புலவர்மணி என்றும் புகழ்ந்தனர். கோவிந்தசுவாமி யும் அப்புகழ்ச்சியில் கலந்து தன் மைத்துனன் பரம சிவன் பெற்றுள்ள ஆங்கில ஞானத்தின் மாண்பினை வியந்தான். எவர் எவ்வளவு வியந்தும் பரமசிவன் தன் தலைமை ஆசிரியர் தான் செய்த பாடலைப்பற்றிச் சொல்லியகுற்றங்கள் தான் அவன் மனத்தில் பதிந் துவிட்டன. அவன் இனி எத்துணைய மிகுதியாக கல்வியைக் கற்ருலும் தன் தலைமை ஆசிரியர் தன் மீது குற்றமேதான் கூறுவாரென்று அஞ்சினன். அவன் தன்னை எப்போதும் கல்வி விஷயமாக அவர் புகழவேமாட்டாரென்று தன் அறியாமையால் எண் ணிக்கொண்டான். அவன் மனம் உடைந்து விட்ட மையால் அவன் தன் கல்வியில் புதிதாகக் கொண்ட

ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அறவே கைவிட்டான். அவனுக்குக் கல்வியில் களிப்பென்பதே காணப்பட வில்லை. மாணிக்கவாசகன் சுவையுள்ள பேச்சில் தான் மகிழ்ச்சியும் மனவமைதியும் கொண்டான். அவன் கோவிந்தசுவாமியின் பக்கத்தில் அமராமல் கல்வியில் சற்றும் விருப்பமில்லாத மாணிக்கவாசகன் பக்கத்தில் அமர்ந்துகொண்டான். மாணிக்கவாசகன் செய்யும் சிறு குறும்புகளையும் நகைச்சுவை ததும் பிய கேலிப்பேச்சுகளையும் அவன் தன் மனத்திற்கு ஆறுதல்அளிக்கும் இன்னமுதெனக்கருதிவிட்டான்.

பரமசிவன் ஆசிரியர்கள் கற்பிக்கும் விஷயங் களைக் களிப்புடனும் கருத்துடனும் செவிமடுக்கும் வழக்கத்தைக் கைவிட்டான். அவன் கல்வி மண மில்லா மாணவர்களில் ஒருவனாக விரைவில் மாறிவிட் டான். அவன் தினந்தோறும் மாலையில் மாணிக்க வாசகனுடன் பந்தாடுதலையும் இராக்காலங்களில் வாரத்திற்கு இருமுறை படக் காட்சிகளுக்கு அவன் பணச்செலவில் செல்லுதலையும் விடுமுறை நாட்க ளில் அவன் வீட்டிலேயே அவன் படிக்கும் அறையில் காலத்தைக் கழித்தலையும் அவனோடு மற்றவேளைகளில் நகர் சுற்றுதலையுந் தான் இன்பச் செயல்களாக எண்ணிவிட்டான். மாணிக்கவாசகன் பரமசிவன் விரும்பியவண்ணம் பலவித பந்தாட்டங்களை ஆடுவதும் அவனோடு உலாவுவதுமே தன் இன்பச் செயல்களாக எண்ணிவிட்டான்.

சிற்சில வேளைகளில் இராககாலங்களில் இராம நாதனும் அவனோடு படக்காட்சிக்குச் செல்வான். மாணிக்கவாசகன் அவனையும் தடுக்காமல் தன்னோடு

அழைத்து வந்தமையால், பரமசிவன் இராமநாதனோடு அவ்வேளைகளில் சேர்ந்து இருக்கவேண்டியதாயிற்று. ஆனால் பரமசிவன் இராமநாதன் கைக்கொண்ட துர்ப் பழக்கங்களை ஏற்றுக்கொள்ளவுமில்லை. அனுசரிக்கவு மில்லை. மாணிக்கவாசகனும் பரமசிவன் கூறிய நன் மதியால் சிகரெட்பிடிக்கும் பழக்கத்தை ஒழித்து விட்டான். பரமசிவன் தன்னால் கூடுமானால் இராம நாதனையும் தன் அறியாமையால் கைக்கொண்ட தீய பழக்கங்களை ஒழிக்குமாறு செய்தல் வேண்டும் என்று எண்ணினன். ஆனால் அவன் முயற்சிகள் அவ்விஷயத்தில் ஒரு சிறிதும் பலிக்கவில்லை.

பரமசிவன் ஒழுக்கத்தில் எத்துணைய சிறப்புடை யவனாக இலங்கியபோதிலும் அவன் வீண் செருக்கின லும் பேதைமையாலும் இளமைப் பருவத்தின் பிடிவா தத்தாலும் கல்வியில் கொண்டிருந்த விருப்பத்தை முற்றிலும் இழந்துவிட்டான். அவன் தான் தினந் தோறும் சற்றுநேரம் இரண்டொரு பாடங்களை மாத் திரம் படித்தால் போது மென்றும் தனக்கு ஆங்கி லத்தில் இருந்த சிறந்த ஞானத்தால் தான் எப். ஏ. பரீட்சையிலும் ஆங்கிலத்தில் தேர்ச்சியடைந்து விடக் கூடு மென்றும் கர்வம் கொண்டான். அவன் எண் ணியபடி அவன் அதிகமாக வாசிக்காமலேயே ஆங்கி லப் பாடத்தில் மாத்திரம் தன் வகுப்பில் முதன்மை மாணவனாகவே அங்கிலையிலும் பொலிந்தான். கோவிந்தசுவாமி எவ்வளவு முயன்றும் பரமசிவனை ஆங்கிலப் பாடத்தில் மாத்திரம் வெல்ல முடியவில்லை. பரமசிவன் பூகோளப் பாடத்தையும் தேச சரித்திரப் பாடத்தையும் விஞ்ஞான கலையையும் மதிப்பதே

யில்லை. அவன் சிற்சில தினங்களில் அப்பாடங்களைப் படிப்பதுண்டு; அத்தினங்களில் அவன் எல்லா மாணவர்களைக் காட்டிலும் மேலாக ஆசிரியர் வினுக்களுக்கு விடை அளிப்பான். அவன் ஜியாமட்ரி மாத்திரம் தொட்டும் பார்க்கமாட்டான். ஆனல் சில கடினமான கணக்குகளை எளிதாகப் போட்டுவிடுவான். அவன் அப்பாடங்களில்அத்துணைய ஞானத்தைக்கொண்டே மெட்ரிக் பரீட்சையில் தேர்ந்து விடக்கூடுமென்றும் மூடத்தனமாக எண்ணிக் கொண்டான்.

பரமசிவன் மெட்ரிக் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கும் வகுப்புப் பரீட்சை (Selection Examination) நிகழ்ந்தபோது, பெரிதும் அச்சமடைந்தான். அவன் அப்பரீட்சையில் கோவிந்தசுவாமியின் உதவியைக் கொண்டே ஜியாமட்ரி கணிதத்தில் இரண்டு மூன்று கேள்விகளுக்குச் சரியான விடைகள் அளித்தான்; பூகோள சாஸ்திரத்திலும், தேச சரித்திரத்திலும், விஞ்ஞான கலையிலும், அவன் மிகுந்த குறைவாகப் புள்ளிகள் (Marks) வாங்கினன். ஆனல், அவன் ஆங்கிலத்திலும், தமிழிலும், பரீட்சையில் நன்ருக விடைகள் அளித்திருந்தமையாலும், கணக்குகள் சரியாகப் போட்டமையாலும், தலைமை ஆசிரியர் அவனை மெட்ரிக் பரீட்சைக்கு அனுப்பத் துணிந்தார். ஆனல், அவருக்கு அவன் மீதிருந்த நம்பிக்கை பெரிதும் குன்றிவிட்டது. பரமசிவன் ஆசிரியர்களும் அவனைப் பற்றி சிறந்த அபிப்பிராயம் தலைமை ஆசிரியரிடம் அளிக்க வில்லை. ஆங்கில ஆசிரியர் ஒருவர் மாத்திரம் அவனைப்பற்றி அவரிடம் புகழ்ந்து

பேசினர். ஆனால், எல்லா ஆசிரியர்களும் கோவிந்த சுவாமியின் கல்விச் சிறப்பைப்பற்றி ஒரே மனதாகப் புகழ்ந்தனர். அவர்கள் கோவிந்த சுவாமி மெட்ரிக் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்வானென்றும், பரமசிவன் தேர்ச்சி அடைதல் சந்தேகமென்றும், மாணிக்கவாசகன் தவறி விடுதல் திண்ணமென்றும் தலைமை ஆசிரியரிடம் கூறினர்கள்.

தலைமை ஆசிரியர் பரமசிவன் மீது சிறந்த அபிமானமும் பரிதாபமும் காருண்யமும் கொண்டிருந்தமையால், அவன் அநியாயமாக இராமநாதன் தகுதியற்ற நட்பினல் கெட்டுவிட்டானென்று தீர்மானித்து, ஒரு நாள் பரமசிவனை அழைத்து, அவனுக்குமெட்ரிக் பரீட்சையின் சம்பந்தமாகத் தக்க எச்சரிக்கை தந்தருளினர். அவர் பரமசிவனை நோக்கி, "பரமசிவா! நான் உன்னை அழைத்தமைக்குத் தக்க காரணம் உண்டு. நீ உன் ஆசிரியர்கள் நம்பிக்கையை முற்றிலும் இழந்து விட்டாய்; கல்வியில் கொண்டிருந்த ஊக்கத்தையும் துறந்து விட்டாய்; நீ உன்னையே வஞ்சித்துக் கொண்டாய்;உன் மனச் சாட்சிக்கு விரோதமாக நடக்கின்றாய். உன் பரீட்சை நிகழ இன்னும் ஒரு மாதங் கூட சரியாக இல்லை. நீ முன் போல் உன் வகுப்பில் ஆசிரியர்கள் சொல்லும் போதனையைச் செவிமடுத்துக் கேட்பதில்லை. நீ இந்நிலையில் உன் கல்வியை நிறுத்தினல், நீ பரீட்சையில் தவறுதல் திண்ணம். நீ சில மாதங்களுக்கு முன்னர் உன் வகுப்பில் முதன்மைமாணவனென்று பேர் எடுத்திருந்தாய். இப்போது உன்னைக் காட்டிலும் சோம்பேறி வேறெந்த மாணவனும் இல்லை யென்று இழி

வான பெயரைப் பூண்டாய். இதற்குக் காரணம் என்ன?'' என்று பரமசிவனை நயமாக வினவினார்.

பரமசிவன் அவரைச் சினத்துடன் நோக்கி, "ஐயா! தாங்கள் சொல்வது உண்மையல்ல; தாங்கள் கேட்கும் கேள்விக்கு பதிலளிக்க என்னால் முடிய வில்லை'' என்று அலட்சியமாகப் பதில் சொன்னான்.

தலைமை ஆசிரியர் சற்றும் அவன் மீது வெகுளி கொள்ளாமல், அவன் அறியாமைக்கு இரங்கி, அவனை அன்புடன் நோக்கி, "பரமசிவா! பதறாதே. உனக் குக் காரணம் சொல்லத் தெரியவில்லை யென்றால், நானே சொல்லுகின்றேன். நீ நெறிவழுவிய மாண வர்களால் தான் கெட்டுவிட்டாய்; அவர்கள் உன் வாழ்க்கையை முற்றிலும் பாழாக்கி விடுவார்கள்'' என்று இயம்பினார்.

பரமசிவன் மீண்டும் அவரைச் சினத்துடன் நோக்கி, "ஐயா! எந்த மாணவர்கள் நெறி வழுவினார் கள்? எந்த மாணவர்கள் என்னைக் கெடுத்து விட்டார் கள்?'' என்று சற்றும் மரியாதையின்றிக் கூறினான்.

தலைமை ஆசிரியர் அப்போதும் அவன் மீது கோபங்கொள்ளாமல், "பரமசிவா! முன்னிருந்த உன் முக வொளி இப்போது மறைந்து விட்டதே; முன்னி ருந்த உன் தெளிவு இப்போது அகன்று விட்டதே; நெறிதவறிய மாணவர்கள் யாவரென்று உனக்கே நன்றாகத் தெரியுமே. நீ நல்லறிவு உண்மையில் பெற் றிருத்தலால், நீ அவர்கள் நட்பை விட்டு விடுதல் உனது இன்றியமையாக் கடமையாகும். நான் இராம நாதனை இன்னும் கல்லூரியில் வைத்திருப்பதே என் னுடைய தவறே. அது நான் அவன் மீது கொண்ட

காருண்யத்தின் விளைவேயாகும். நான் அவனுக்குக் காட்டிய இரக்கம் உனக்குத் தீமையை விளைவித்தது. நான் இன்னும் உனக்கு அதிகமாகச் சொல்லவேண்டியது இல்லை. நீ தகுதியற்ற மாணவர்கள் நட்பை இன்றே விடுவாயாக. நீ உன் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் செம்மையுறச் செய்வாயாக. உன் பெற்றோர்கள் வறுமை பிணியால் வருந்துகின்றார்களென்று எனக்கு நன்றாகத் தெரியும். உன் தந்தை கள்ளம் கபடம் அறியாத பெருந்தகை; உன் தாய் உன் பொருட்டுத்தன் இரத்தத்தைச் சிந்துகின்றாளென்றும் உணர்வேன். நீ அவர்களுக்கு ஆற்றும் கடமையின் அழகு இது தானா? நீ அவர்கள் பொருட்டும் உன் பொருட்டும் உனது இரத்தத்தைச் சிந்திக் கல்வியில் மாணிக்க தீபமாகப் பிரகாசிக்க வேண்டியது உன் கடமை அல்லவா? அறிவிலும் கல்வியிலும் நீ உண்மையில் சிறந்தமாணவனே. ஆனால், நீ பொருள் இல்லாமல் கொண்ட கல்விச் செருக்கினாலும் ஆணவத்திலும் சீரும்சிறப்பும் இழந்து சோம்பேறி மாணவர்களுள் ஒருவனாகத் தற்போது விளங்குகின்றாய். நீ வேண்டுமென்று மதியற்ற மாணவர்களோடு சேர்ந்து, உன் கல்வியை அலட்சியம் செய்தாய். நீ உன் பெற்றோர்களின் நலத்தையும் உன் நலத்தையும் அலட்சியம் செய்தவனாவாய். உண்மையில், உனக்கு உன் பெற்றோர்களிடத்தில் அன்பிருந்தால், உன் சுயநலத்தைக்கருதி, உன் சிற்றின்ப விளையாடல்களில்நீ தலையிடமாட்டாய்'' என்றுசொல்லியதும்,பரமசிவன்மனம் தீயிலிட்டமெழுகு போல் உருகி விட்டது. அவன் அடக்க வொண்ணா வருத்தம் கொண்டான்;

தலைமை ஆசிரியரின் பெருங்குணத்தைக் கண்டு வெட்கமடைந்தான்; கண்ணீர் விட்டுப் புலம்பி விட்டான்.

தலைமை ஆசிரியர் பரமசிவன் மனப்பான்மை மாறியதைக் கண்டு பேரானந்தம் கொண்டு, அவனை மீண்டும் நோக்கி, "பரமசிவா! வருந்தாதே. நீயே உத்தமன்; உண்மை அறிவாளி; நற் குணச்சீலன்; நன்றியுள்ள பெருந்தகை; உன் பெற்றோர்கள் பெற்ற பெரும் புண்ணியத்தின் பயன். உன் அன்பும் பணிவும் புகழத்தக்கவை. இப்போது உனக்குள்ள கல்வியறிவு மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைவதற்குப் போதியது அன்று. இருப்பினும், நீ இன்றைய தினத்திலிருந்து ஊக்கத்தையும் உழைப்பையும்கைக்கொண்டு உன் பாடங்களை அல்லும் பகலும்ஆர்வத்துடன் ஓதுவாயானால், மெட்ரிக் பரீட்சையில் கோவிந்தசுவாமியைப் போல் நீ தேர்ச்சி அடையக்கூடும். இப்பொழுதும் பரவாயில்லை. நீ மாத்திரம் மாண்பில்லா மாணவர்களை மறந்தால், சிறு இன்ப நிகழ்ச்சிகளில் நீகொண்டுள்ள ஆவல் ஆசைஅழிந்து விடும்; உன்னைப் பிடித்து ஆட்சி செய்யும் சோம்பல் பேயும் உன்னை விட்டுப் பறக்கும். பரமசிவா! மனம் வருந்தாதே; போனது போகட்டும்; இனி, நடக்கவேண்டியதை நினை. உன் தந்தையின் தேக உழைப்பின் வியர்வையைக் கண்களால் காண்பாயாக. உன் அன்னை சிந்தும் இரத்தத்தையும் சிந்திப்பாயாக. நான் இதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை" என்று இயம்பினர்.

பரமசிவன் தலைமை ஆசிரியர் கூறிய மொழிகளை இணையற்ற மணிமொழிகளாகக் கொண்டு, தன்முகத்

தில் முறுவல் மிளிர, அவரைக் கைகூப்பி வணங்கி "என் கண்கண்ட தெய்வமே தங்களைப்போல் எனக்கு நன்மதி புகட்டுவார் உலகில் யாவர் உளர்? உங்கள் பொன் மொழிகள் என் உள்ளத்தை உருக்கி விட்டன; என் குற்றத்தைச் செவ்வனே உணர்ந் தேன். நான் இனி மதியற்ற மாணவர்களோடு சேராமல், எனக்கு இருக்கும் இன்னும் சில தினங்களைக் கல்வி வளர்ச்சியிலேயே முற்றிலும் கழிப்பேன்; கடை மாணவர்களோடு காலத்தைக் கழிக்க மாட்டேன். நான் இனி ஒரு விநாடியையும் வீணாக்காமல், குறைந்த ஞானம் கொண்டுள்ள பாடங் களை இன்றே கற்க முயல்கின்றேன். அண்ணலே! தங்கள் அருங்குணத்தையும் பெருங் குணத்தையும் இச்சிறியேன் என்றும் மறவேன். தாங்கள் காட்டிய வழியையே பின் பற்றுவேன். என் குற்றங்களைத் தயை கூர்ந்து மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கின் றேன்" என்று கூறி அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

தலைமை ஆசிரியர் அவன் மீது பேரன்பு கொண்டு அவனை அன்புடன் தட்டி எழுப்பி ஆசீர் வதித்து அவன் வகுப்பிற்கு அனுப்பி விட்டார்.

அதிகாரம் பதினெட்டு.

பரமசிவன் தலைமை ஆசிரியர் கூறிய நன் மொழி களையும் எச்சரிக்கையையும் களிப்புடன் ஏற்றுக் கொண்டு அவர் காட்டிய காருண்யத்தின் அழகை விய

ந்து, துஷ்டநண்பர்களைமுற்றிலும் மறந்து, தன் கல்வியில் கண்ணுங் கருத்து மானன். அவன் அன்று தொட்டு ஒரு நிமிடத்தையும் வீணுக்காமல், தன் தீய நண்பர்களின் கூட்டுறவால் அலட்சியம் செய்துவிடப் பட்ட பாடங்களையெல்லாம் ஒவ்வொன்ருகப் படித்து முடிக்கத் தீர்மானித்துக் கொண்டான். அவன் இனி தனித்து வாழ்தலே தகுதியுடைத்து என்று அறிந்து மாணிக்கவாசகனையும் மறந்து, தன் கல்வியையே தன் ஒப்புயர்வில்லா நண்பனெனக்கருதி, அந்நண்பன்தான் தன்னைக் கைவிடமாட்டானென்றும்நம்பி, தீய நண்பர் கூட்டுறவின்றித் தனியே காலத்தைக் கழிப்பாளுயினன்.

பரமசிவன் பூகோள சாஸ்திரத்திலும், தேசசரித்திரத்திலும், விஞ்ஞானக் கலையிலும் மிகுந்த குறைவான ஞானத்தைப் பெற்றிருந்தான். அவன் பூகோள சாஸ்திரத்தை முதலில் எடுத்து அதைச் செவ்வனம் படித்து முடித்து, அதில் பூரண ஞானம் அடைய விரும்பினன். ஆனல், அவன் எண்ணியதற்கு மாருக அவ்வொரு புத்தகத்தை சரிவர முடிப்பதற்கே ஒரு வாரம் ஆய் விட்டது. அவ்வாறு சிரத்தையுடன் படித்த போதிலும், அவன் படித்த விஷயங்களில் பலவற்றை மறந்து கொண்டே போனன். அதன் காரணம் யாதெனில், அவன் அப்பாடம் வகுப்பில் நிகழ்கையில் முறைப்படி அதை கற்காமல் இருந்ததேயாகும். அக் குற்றத்தை அவன் பரீட்சை சமீபத்தில் உணர்ந்ததில் பயனில்லை. அவன் முன்னதாகவே முறைப்படி அப்பாடத்தைப் படித்திருந்தால்

அப்பாடத்திலும் அவன் முதன்மை பெற்று விளங்கி யிருக்கக் கூடு மென்று எண்ணினன்.

பரமசிவன் தகுதியற்ற நபர்களாலும், தன் பேதைமையாலும், பிடிவாதத்தாலும், அருமையான காலத்தை வீணாகக் கழித்து விட்டுப் பரீட்சை நெருக்கத்தில் பற்பல பாடங்களைச் சிற் சில நாட்களில் படித்து முடித்துப் பூரண ஞானம் பெற எண்ணியது தன் அறியாமையே என்று மனம் வருந்தினன். மெட்ரிக் பரீட்சை நடக்க இன்னும் பத்தே தினங்கள் இருந்தன. அவன் எத்துணைய சிறந்த அறிவாளியாக இருந்த போதிலும் ஒரு வருடத்தில் படித்து முடிக்கவேண்டிய பாடத்தை ஒரு வாரத்தில் படித்து முடிக்க எண்ணிய தன்னைப்போல் மூடன் வேறு ஒருவனும் இரான் என்று மனம் வருந்தினன். பரீட்சை நெருக்கத்தில் பயத்துடன் பாடங்களைப் படிப்பதால் பயன் ஒன்றுமில்லையென்று பரமசிவன் அறிந்து, தான் செய்த மன்னிக்கத்தகாத குற்றத்தை நினைந்து வருந்தி, பரீட்சையில் தேர்ச்சி அடைதல் முடியாத காரியமென்று தீர்மானித்தான். இருப்பினும், அவன் ஊக்கத்தை இன்னும் உரமாகக் கொண்டு தேச சரித்திரத்தைச் சீராகப் படிக்கத் தொடங்கினன். அவன் அல்லும் பகலும் உண்மைச் சிரத்தையுடன் அதைப் படித்தபோதிலும், படித்த விஷயங்களில் பலவற்றை பின்னர் மறந்து போயினன். அவன் மனம் கலங்கி, பெருங் கவலையுடன் கடைசியாக விஞ்ஞானக்கலையை எடுத்து வாசிக்கத் தொடங்கினன். அதில் அவனுக்கு அநேக இடங்களில் பொருள் விளங்காமல் தடுமாற்றம் அடைந்தான். அவ்வளவு பரீட்சை நெருக்கமான

சமயத்தில் ஆசிரியரைப் பல சந்தேகங்களை நீக்கு மாறு கேட்பது தகாதென்றும் முடியாத காரிய மென்றும் அவன் பெரிதும் வருந்தினன்.

பரமசிவன் தனிமையாகக் கல்வி கற்று வருங்காலத்தில் பரீட்சை வரும் தினங்களைப் பரமா னந்தத்துடன் எதிர் பார்த்திருப்பான். ஏனெனில், அவனே எல்லா பரீட்சைகளிலும் தலை சிறந்து விளங் கினமையால், அவன் புகழொளியில் இன்பும் செருக் கும் வைத்திருந்தான். ஆனல், தற்போது அவனுக் குப் பரீட்சையென்ற பதத்தை நினைக்கவும் அச்ச முண்டாயிற்று. பரீட்சையிலிருந்த பரமானந்தம் போய் பெரும் பயம் அவனுக்கு உண்டாய்விட்டது. தான்மாத்திரம் அப்போது எடுத்துக்கொண்ட கஷ்டத்தைப் போல் முன்னமே கஷ்டம் பற்பல பாடங்களிலும் அவன் எடுத்திருந்தால், மெட்ரிக் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி அடையலாம் என்று எண்ணிக் கலங்கினன். அவன் எவ்வளவுமுயற்சி புரிந்து இன்னும் இருந்த சிலதினங் களில் எல்லாப் பாடங்களையும் படித்து முடித்தாலும், பரீட்சையில் தேர்ச்சி அடைதல் திண்ணமென்று அவனல் நம்ப முடியவில்லை. அவன் எவ்விதத்திலும் விஞ்ஞான கலையிலும், கணித சாஸ்திரத்திலும் மெட்ரிக்பரீட்சையில் தவறி விடுதல் திண்ணமென்றே அஞ்சினன். அவன் எவ்விதத்திலும் ஆங்கிலத் திலும், தமிழிலும், தேசசரித்திரத்திலும் தேர்ச்சி அடைதல் திண்ணமென்று நம்பினன். அவன் எவ்வளவு சிறந்த ஞானம் ஆங்கிலத்திலும் தமிழிலும் பெற்றிருந்த போதிலும் துன்பகரமான மெட்ரிக்

பரீட்சையில் ஒரு பாடத்தில் தவறி விட்டாலும், தேர்ச்சி கிடையாதென்று அப்பரீட்சையை அறவே வெறுத்தான். எது எவ்வாருயினும் அவன் எல்லாப் பாடங்களிலும் குறிப்பிட்ட புள்ளிகளை (Marks) வாங்கியே தீரவேண்டும் என்று தீர்மானித்துத் தன் தலைமை ஆசிரியர் கூறிய பொன்மதியையும் எச்சரிக்கையையும் உள்ளத்தில் உரமாகக் கொண்டு, தன் தேக நலத்தை இழந்து, அடிக்கடி அளவு கடந்த உழைப்பால் உண்டாகிய தலைவலியையும் பொருட்படுத்தாமல், காலத்தின் அருமையை அறிந்து தளராமல் படித்து வந்தான். அவ்வளவு படித்தும், அவன் நுணுக்கமான அறிவுடையவனுதலால், தன் படிப்பின் ஞானம் பரீட்சைக்குப் போதாதென்று முன்னமே அறியலானுன். அவன் தன் தாய் தந்தையருக்கும் தனக்கும் பெருந்துரோகம் செய்து விட்டதாகவும் எண்ணிவிட்டான். அவன் பரீட்சை தினத்தை மிகுந்த அச்சத்துடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு மெட்ரிக் பரீட்சை கொடுங் கூற்றுவனுகக் காணப்பட்டது.

பரமசிவன் உழைப்பின் மாட்சியையும் உண்மை நோக்கத்தையும் தலைமை ஆசிரியர் மகிழ்ந்து, அவன் மெட்ரிக் பரீட்சையில் எப்படியும் தேர்ந்து விடுவானென்று நம்பினர். பரமசிவன் பெரிதும் பயந்திருந்த மெட்ரிக் பரீட்சை வந்து விட்டது. அவன் முதல் நாள் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் வந்த வினுக்களுக்குத் தக்க விடைகளைத் தனக்கு ஆங்கிலத்தில் இயற்கையாக இருந்த ஞானத்தால் அணிபெற அளித்து விட்டான். அன்றைய தினம் ஆங்கிலச் சம்

பந்தமான பாடங்கள் எல்லா வற்றிலும் சரியாக விடைகள் எழுதித் தப்பித்துக் கொண்டான். மறு நாள் நிகழ்ந்த தமிழ் பரீட்சையிலும் தேர்ச்சிக்கு வேண்டிய அளவுக்கு மேல் புள்ளிகள் கிடைக்குமாறு (Marks) விடைகள் எழுதி விட்டான். மூன்ரும் நாள் நடந்த கணக்குப் பரீட்சையில் அவன் விரும்பியபடி விடைகள் அளிக்க இயலாமல் மனம் நொந்தான். கணிதப் பரீட்சையில் தேர்ச்சி அடைதல் சந்தேக மென்று அவன் தீர்மானித்தான். பூகோள சாஸ் திரத்திலும், தேச சரித்திரத்திலும் நல்ல விடைகள் அளித்தான். ஆனல் விஞ்ஞான கலேயில் தேர்ச் சிக்கு வேண்டிய அளவு புள்ளிகள் வருதல் சந்தேக மென்று நினைத்தான். கடைசியாக, அவன் மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைய வேண்டுமானல், தன் அதிர்ஷ்ட வசத்தால் தான் ஆக வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டான். அவன் பரீட்சை பரிசோதகர் மனத்தைக் கடவுள் மாற்றி தனக்குப் புள்ளிகள் வேண்டிய அளவு அவர்களேப் போடும் படி செய்ய வேண்டு மென்று அவரைப் பிரார்த்தித்தான்.

மெட்ரிக் பரீட்சை முடிந்ததும், கோவிந்தசுவாமி சற்றும் கவலேயின்றி மலர்ந்த முகத்தோடும், குளிர்ந்தபுன்முறுவலோடும் பரமசிவனேப்பார்த்தான். அவன் தன் மைத்துனன் பரமசிவன் முகம்வாடி இருந் ததைக் கண்டு, அவன் மீது பரிதாபங் கொண்டு, அவனே மெட்ரிக் பரீட்சையில் பற்பல பாடங்களிலும் எவ்வாறு பதில் அளித்தானென்று வினவினன். பரமசிவன் சுளித்த முகத்துடன் தன் மைத்துனனே

நோக்கி, "மைத்துன! நான் மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைவேன். அவ்வளவு தான் சொல்ல முடியும். நான் விரும்பியபடி விடைகள் அளிக்க வில்லை; இது தான் என் மனக்குறை" என்று கூறி ஞன். கோவிந்தசுவாமி மெட்ரிக் பரீட்சையில் வந்த கேள்விகளெல்லாம் வெகு சுலபமானவை என்றும், தான் அப்பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைதல் திண்ணமென்றும் தைரியமாகக் கூறினன். அப்போது பரமசிவனுக்கு ஒரு புறத்தில் நாணமும், ஒரு புறத்தில் பொருமையும் உண்டாயின. அவன் தன்னைக் காட்டிலும் அறிவிலும் உணர்விலும் மிகவும் குறைந்த கோவிந்தசுவாமி தன் உழைப் பாலும் முறைப்படி வாசித்த மாண்பாலும் அல்லவா அத்துணைச் சிறந்தவனுகக் கல்வியில் மிளிர்கின்றான் என்று எண்ணி, அவனை மனத்துக்குள் வியந்து, தன்னை இகழ்வானுயினன். கோவிந்தசுவாமி கடைசி யாகத் தன் மைத்துனனை நோக்கி, "மைத்துன! நீ அஞ்ச வேண்டாம். நீயே மெட்ரிக் பரீட்சையில் என்னைக் காட்டிலும் சிறந்து விளங்குவாய்; உன் ஆங்கில ஞானத்திற்கும் தமிழ் ஞானத்திற்கும் என் ஆங்கில ஞானமும் தமிழ் ஞானமும் எவ்வளவு? நீ முதல் வகுப்பிலும் தேர்ச்சி அடைவாய். நீ வீணுக அஞ்சுகின்றாய். உன் அச்சத்திற்கு அர்த்தமில்லை" என்று கூறித் தன் மைத்துனனுக்குத் தைரியம் அளித்தான்.

பரமசிவன் மெட்ரிக் பரீட்சை முடிந்ததும், அரி புர மென்னும் தன் கிராமத்திற்குச் சென்றான். அவன் தங்கை பார்வதி ஒரு மாதத்திற்கு முன்னரே

அவ்வூருக்குப் போய் விட்டாள். அவன் தாய் தந்தையர் தங்கள் செல்வ மைந்தன் பரமசிவன் மெட்ரிக் பரீட்சையில் தேர்ந்து, தன் கிராமத்திற்கு வந்து, தங்களோடு சில மாதங்கள் களிப்புடன் கழிக்கையில், தங்கள் அருமைச் செல்வி பார்வதியும் உடன் இருத்தல் அவசியமெனக் கருதி, அவளை முன்னதாகவே அழைத்துக் கொண்டனர். பார்வதியும் தன் தமையன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தாய் தந்தையரும் தங்கள் தவ மைந்தன் எப்போது வருவானே என்று அவன் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தனர்.

பரமசிவன் அரிபுறமென்னும் தன் கிராமத்தை அடைந்தான். அவனைக் கண்டதும் அவன் தாய் தந்தையர்களும் தங்கையும் அடைந்த மகிழ்ச்சி எத்தன்மைத்து என்று சொல்ல இயலாது. அவர்கள் பரமசிவன் மெட்ரிக் பரீட்சைக்குப் போனதையே தேர்ச்சி என்று தவருக எண்ணிக்கொண்டனர். பார்வதி தங்கள் எளிய மனையில் தோரணமும் சிற்சில அலங்காரங்களும் தன் தமையன் நல்வரவுக்கு மங்கலக் குறிகளாகச் செய்து அதை அழகிய மனையாகப் பொலியச் செய்தாள். அவள் தன் தமையன் பரீட்சையில் தேர்ச்சி அடைந்து விட்டதாகவே தீர்மானித்துக்கொண்டு தங்கள் தோட்டத்திலிருந்த மல்லிகை மலர்களைக்கொண்டு ஓர் அழகான மாலையைத் தொடுத்துத் தன் தமையன் தங்கள் பொன் மனையை அடைந்ததும் அவன் கழுத்தில் களிப்புடன் சூட்டினுள். பரமசிவனுக்கு அவ்வின்ப நிகழ்ச்சியில் உண்மையில் சிறிதும் விருப்பமில்லை யென்ருலும் தன் தங்கையின்

கனிவுள்ள செயலைக் கண்டு களிபூத்து புன்முறுவல் கொண்டான். அவன் நல்லன்னை அவனைக் கட்டி அணைத்து, "கண்மணீ, வந்துவிட்டாயா? என் கவலை நீங்கிற்று. இனி வறுமையும் நீங்கும். இனி உன்னை விட்டுப் பிரியாமல் நாங்கள் உன்னோடு களித்துவாழ் வோம்" என்று கூறிப் பெரிதும் மகிழ்ந்தாள். அவன் தந்தை பரமசிவனைப் பேரன்புடன் நோக்கி, "அருமைச் செல்வா! உனக்குக் கடவுள் செல்வமும் தீர்க்காயுளும் கொடுப்பார். உன்னைப்போல் உயர்குண மைந்தன் உலகில் இருத்தல் அரிது. நீ கல்விச் சம்பந்தமாகப் பெரிதும் உழைத்தாய்; தேக நலமும் இழந்தாய்; ஆனாலும் நீ உன் மெட்ரிக் பரீட்சையில் தேர்ந்தாய். இதுவே போதும். எங்களுக்கு எல்லாச் செல்வங்களும் வந்துவிட்டன. நீ இனி இக்கிராமத்திலேயே எங்களுடன் சந்தோஷமாக வாழலாம். உன் தலைமை ஆசிரியர் சங்கரய்யர் உன்னைத் தம் பாடசாலையிலேயே ஓர் ஆசிரியனாக வைத்துக்கொள்வதாக என்னிடம் கூறினார். உனக்கு மாதம் இருபது ரூபாய் சம்பளம் அளிப்பதாகவும் எனக்கு வாக்களித்தார். இதைவிட நமக்கு என்ன சிறந்த செல்வம் வேண்டும்? இனி நாம் சந்தோஷமாகச் சேர்ந்து வாழ்வோம். உன்னை மகனாகப் பெற்ற நாங்கள் செய்த புண்ணியம் பெரியதே. இனி நீ நல்ல உணவு அருந்தி உன் தேகத்தை வளர்ப்பாயாக. உன் கல்வியின் அழகே அழகு" என்று கூறித் தம் செல்வ மைந்தன் கல்வியின் மாட்சியை வியந்து பேசினார். பரமசிவன் தன் பெற்றோரும் தன் தங்கையும் தன் கல்வியின் மாட்சியைப் பற்றி அத்துணைய சிறந்த

அபிப்பிராயம் கொண்டிருந்ததைத் தன் மனத்திற் குள்இகழ்ந்து கொண்டான். அவன் தன் பரீட்சை யின் தேர்ச்சியை அவ்வளவு உறுதியாக எண்ணிக் கொண்டிருப்பதற்குப்பயனுக என்ன முடிவு வருமோ என்று அளவில்லா அச்சம் கொண்டான்.

அதிகாரம் பத்தொன்பது

பரமசிவன் தன் கல்லூரியின் கணக்குப்பிள்ளை யினிடம் (Clerk) தன் பரீட்சையின் முடிவைத் தந்தி மூலமாகத் தன் கிராமத்தின் அருகாமையில் இருந்த தந்தி ஆபீஸ் உள்ள பேட்டை என்னும் சிறு நக ருக்கு அனுப்புவதற்கு இரண்டு ரூபாய் பணம்கொடுத் துவிட்டு வந்தான். அவன் மெட்ரிக் பரீட்சையின் முடிவு இரண்டு மாதங்கள் கழிந்த பிறகுதான் தெரியு மென்று அறியலானுன். அவனுக்கு அந்த இரண்டு மாதங்களையும் எவ்வாறு கழிப்பதென்று தோன்ற வில்லை. ஒவ்வொரு தினமும் அவன் பரீட்சையின் முடிவு தெரியாத நிலையில் பெரிதும் துன்பகரமாகவே இருந்தது. அவன் ஒருநாளை ஒருயுகமாக அளவில்லா மனக்கவலையுடன் கழிப்பானுயினுன். அவன் தான் பரீட்சை சமீபத்தில் கொண்டவிழுமிய நோக்கத்தை முன்னமே கோவிந்தசுவாமியைப்போல் கொண்டிருந் தால் அந்த இரண்டு மாதங்களையும் எவ்வளவு சந்தோ ஷமாகக் கழிக்கலாமென்று எண்ணி மனம் வருந்தி னுன். அவன் பெற்ருேர்களும் தங்கையும் மாத்திரம்

அவன் தேர்ச்சியைப் பற்றி தினைத்துணையும் சந்தேகம் கொள்ளாமல் அவனோடு சந்தோஷமாகக் காலங் கழித்து வந்தனர். அவனும் சந்தோஷங் கொண்டவன் போல் அவர்கள் பொருட்டு வெளிக்கு நடித்து வந்தான். அவன் உள்ளம் ஒவ்வொரு நிமிடமும் மெட்ரிக் பரீட்சையின் முடிவை நினைந்து துடித்தது. அவன் பரீட்சை பரிசோதகர் மனம் கடவுள் அருளால் மாற்றப்பட்டுத் தனக்குப் பல பாடங்களிலும் புள்ளிகள் (Marks) அவர்கள் மிகுதியாகப் போட்டு விடவேண்டும் என்று அக்கடவுளை அல்லும் பகலும் பிரார்த்தித்தான்.

பரமசிவன் மெட்ரிக் பரீட்சைக்குச் சென்றதையே தேர்ச்சியென எண்ணிக் கொண்டிருந்த அவன் தாய் ஒருநாள் சந்தோஷ மேலிட்டால் அவனுக்கு ஒரு விருந்து வைத்தனர். அவன் விரும்பிய பல பண்டங்களையும் அவள் அன்புடன் செய்து அவனுக்கு ஆர்வத்துடன் ஊட்டினாள். அவள் அன்புடன் ஊட்டிய தான் உண்மையில் விரும்பிய இன்சுவை மிகுந்த பண்டங்கள் அவன் மனம் துன்பநிலையிலிருந்தமையால் எட்டிக்காய்களாகவே விளங்கின. அவன் தன் உள்ளத்தில்கொண்ட சந்தேகத்தைத் தன் கல்வி மாட்சியில் முழு நம்பிக்கை வைத்த தன் தாய் தந்தையரிடம் சொல்ல மனம் துணியவில்லை.

ஒருநாள் பரமசிவன் தந்தை அவனோடு வயல்களில் உலாவச் சென்றனர். அவர் அவனிடம் குடும்பத்தின் ஒரு பெரிய இரகசியத்தைச் சொல்ல வேண்டும் என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். அச்சமயம் அவர் எண்ணத்திற்கு ஏற்றதாக

இருந்தமையால் அவர் பரமசிவனிடம் பேசிக் கொண்டே தம் வயலிலுள்ள ஒரு கிணற்றின் கரையில் அன்று மாலைப்போதில் அமர்வாராயினர். அவர் தம் செல்வ மைந்தனை அருகே அழைத்து, அவனை உட்காரச் சொல்லி அவனை நோக்கி "பரமசிவா! நான் உனக்கு நம் குடும்பச் சம்பந்தமான பெரியதோர் இரகசியத்தைச் சொல்ல இப்போது துணிந்துவிட்டேன். நீ மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைந்தபிறகு உன்னை நம் கிராமத்துப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் சங்கரய்யர் தம் பாடசாலையில் ஒரு ஆசிரியனாக மாதம் இருபது ரூபாய் சம்பளத்திற்கு வைத்துக்கொள்வதாக என்னிடம் கூறியுள்ளார். இதை முன்னமே கூறினேன். அவர் நம்மீது கொண்டுள்ள பெருங்கருணைக்கும் பேரன்பிற்கும் நாம் அவருக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றோம். உன் தங்கையின் திருமணத்திற்கு நாம் தாராளமாகப் பணம் செலவு செய்தோம். இவ்விஷயம் உனக்கு நன்றாகத் தெரியும். நமக்குள்ள வீடு நிலம் தோட்டம் முதலிய எல்லாம் உன் கல்வியின் பொருட்டும் உன் தங்கையின் திருமணத்தின் பொருட்டும்கொதுவையில் மூழ்கியிருக்கின்றன. நான் சௌகாருக்கு மூன்று மாதங்களாக வட்டி கட்டவில்லை. அவர் அடுத்தமாதம் வட்டி கட்டவில்லை என்றால் தமக்குச் சேரவேண்டிய பணத்தைக் கோர்ட் மூலமாக வசூல் செய்வேனென்று பயமுறுத்துகிறார். நம்மை விட்டு இன்னும் கொடிய வறுமை நோய் அகன்றபாடில்லை. எல்லாவற்றிற்கும் நாங்கள் உன்னையேதான் முற்றிலும் நம்

பியிருக்கின்ருேம். உன் அருமைக் குணத்தையும் உன் கல்வியின் சிறப்பையும் நான் எல்லோரிடத்தி லும் சதா புகழ்ந்தபடியே இருக்கின்றேன். நான் உனக்காகப் பணம் செலவு செய்ததைப்பற்றிச் சிறி தும் மனம் வருந்தவில்லை. ஏனெனில் அப்பணம் உன் நலத்தின் பொருட்டுச் செலவு செய்யப்பட்டது. என்னைப்போல் கடினமான வேலை நீ செய்து உன் வாழ்க்கையில் துன்புறுதல் கூடாது என்பது என் னுடைய நோக்கம். எங்கள் வயோதிகக் காலத்தில் நீயே எங்களைக் காப்பாற்றி மன அமைதியும் அளிப் பாயென்று நானும் உன் அன்னையும் முற்றிலும் உன்னை நம்பியிருக்கின்ருேம். உன் கல்வி விஷயம் முடிந்துவிட்டபடியால் இனி நீ உத்தியோகம் தேட வேண்டியவனுக இருத்தலால் நான் நம் குடும்பத்தின் இரகசியத்தை இப்போது உனக்குச் சொல்லத் துணிந்தேன். நான் வட்டி கொடுக்காமையின் கார ணம், உன் மெட்ரிக் பரீட்சைக்கும் இடையில் உனக்கு வேண்டிய புத்தகச் செலவிற்கும் நான் பணம் அனுப்பியதேயாகும். அடுத்தமாதம் நாம் வட்டி அனுப்பவில்லையென்ருல் சௌகார் நம் வீட் டையும் நிலத்தையும் ஏலத்திற்குக் கொண்டு வந்து விடுவான். இது திண்ணம்'' என்று மனவருத்தத் துடன் கூறினர்.

பரமசிவன் புனிதமே வடிவாய் விளங்கிய தன் தந்தை கூறிய துன்ப மொழிகளைக் கேட்டு மனம் உடைந்து பெரிதும் திகிலடைந்து தன் தந்தையை நோக்கி "அப்பா! தாங்கள் கூறியமொழிகள் என் உள்ளத்தை உடைத்து விட்டன. நான் என் செய்

வது என்றே எனக்குத் தெரியவில்லை. இத்துணைய கொடிய வறுமைப் பிணியை உத்தமராகிய தங்களுக்கு ஈசன் ஏன் தந்தானே என்று தெரியவில்லை. இவ்விஷயம் என் அன்னைக்குத் தெரிந்தால் அவள் உயிரே போய்விடும். இத்துணைய இழிவான நிலையில் நாம் என்ன செய்வதென்று எனக்குப் புலனாகவில்லை. கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறி கண்ணீர் விட்டனன்.

பரமசிவன் தந்தை தன்செல்வ மைந்தன் துயருற்றதைக் கண்டு, மனம் நொந்து, அவனை நோக்கி, "பரமசிவா, பயப்படாதே. நமக்கு நல்லகாலம் உன் பரீட்சையின் தேர்ச்சியில் உளது. நான் நேற்று சௌகாரிடம் சென்று நீ மெட்ரிக் பரீட்சையில் தேர்ந்துவிட்டாய் என்றும், இக்கிராமத்துப் பாடசாலையில் ஓர் ஆசிரியராக அமரலாம் என்றும், அவருக்குப் பத்து ரூபாய் வட்டி தவறுமல்மாதாமாதம் இனிஅளித்துவிடுவேன் என்றும் வாக்குறுதி தந்துவிட்டேன். என் வாக்குறுதியை நம்பி, அவர் ஒன்றும் நடவடிக்கை தற்போது எடுப்பதாக இல்லை. நீ நம் கிராமத்தின் பாடசாலையில் ஓர் ஆசிரியனாக அமர்ந்துவிட்டால், மாதா மாதம் சௌகாருக்குப் பத்து ரூபாய் வட்டி சுலபமாகக் கொடுத்து விடலாம். மீதி பத்து ரூபாயும், என் உழைப்பால் நமக்குக் கிடைக்கும் நெல்லும், வேறு தானியங்களும் நம் குடும்பத்திற்குப் போதுமானவை. அவற்றைக் கொண்டு நாம் என்றும் சந்தோஷமாகப் பிரிவென்னும் துயருக்கு மீண்டும் ஆளாகாமல், ஒரே ஊரில், ஒரே மனையில், பெருங்களிப்புடன் வாழலாம். நீ எப்படியும் மெட்ரிக் பரீட்

சையில் தேர்ந்து விட்டாய். இனி நமக்கு என்ன பயம் ?" என்று இயம்பினர்.

பரமசிவன் தன் தந்தையின் முழுநம்பிக்கையை அறிந்து பெரிதும் மனம் கவன்றான். அவர் தான் பரீட்சையில் தேறவில்லை என்று தெரிந்து கொண்டால், எவ்வித மனத்துயரை அடைவாரோ என்று அவன் பெரிதும் அஞ்சினன். அவன் தன் பரீட்சையின் சம்பந்தமாக அல்லும் பகலுமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில், தன் தந்தை கூறிய தன் குடும்ப இரகசியத்தை அறிந்தபோது, தலையில் இடியேறு விழுந்தது எனத் துன்புற்றான். அவ்விடியேற்றைத் தன்னல் தாங்க முடியாது என்றும் மனம் தத்தளித்தான். இருப்பினும், அவன் தன் பரீட்சையின் இரகசியத்தைத் தன் தந்தையினிடம் சொல்லத் துணியவில்லை. அவன் தன் தந்தைக்குப் பொய் சொல்லவும் விரும்பவில்லை; மெய் சொல்லவும் துணியவில்லை. அவன் தைரியத்துடன் தன்மனக்கலக்கத்தை தன் தந்தைக்குக் காட்டாமல், அவரை நோக்கி, "அப்பா! அஞ்சாதீர்கள். நான் உள்ளவரையில், உங்களுக்கு ஒரு குறைவுமில்லை; உங்கள் வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாகச்செய்வதுதான் எனது கடமை. கடவுள் இவ்விஷயத்தில் நமக்குக் கருணை புரிவது திண்ணம்" என்று ஆண்மை மிக்க ஓர் வீரன்போல் இயம்பினன்.

பரமசிவன் தந்தை தன் புதல்வன் கூறிய வீர மொழிகளைக் கேட்டுக் களிபபுற்றுத் தன் வறுமைப் பிணியைப் பொருட்படுத்தாமல், அவனேடு வீடு போய்ச் சேர்ந்தார். அவர் தன் மைந்தனேடு மனவ

மைதி பெற்று, மனைவாழ்க்கையில் சில நாட்கள் கவலையின்றி வாழ்ந்தார். அவர் மனைவியும் புதல்வியும் பரமசிவன் அன்பிலும் கனிவிலும் திளைத்து வாழ்ந்தனர். ஆனல், பரமசிவன் மாத்திரம் தன் அன்னையின் அன்பையும் கனிவையும், தன் தங்கையின் அன்பையும் கனிவையும் எத்துணைய் சீரிய நிலையில் எய்திய போதிலும், தன் பரீட்சையின் முடிவு விளங்காமையால், மனம் தத்தளித்தவண்ணமாகவே அந் நாட்களையெல்லாம் கழித்து வந்தான். அவனுக்குப் பாலும், தயிரும், நெய்யும், பருப்பும் கலந்த இன்ப அடிசில் தன் அன்னை ஆர்வத்துடன் ஊட்டியபோதிலும், மனக்கவலைக்கு மருந்தில்லை யென்பதுபோல், பரீட்சையின் தேர்ச்சியின் சம்பந்தமாகக் கொண்ட மனக்கவலையால் துன்பமே எய்தி வந்தான். மேலும், அவன் தேகச் செழுமையும் அவன் முகப்பொலிவும் மறையலாயிற்று. வளமையும் குன்றியதோடு, பரமசிவன் தன் பரீட்சையின் தேர்ச்சி விஷயம் இன்னும் இரண்டு தினங்களில் வெளியாகும் என்பதை அறிந்ததும், மனம் திடுக்குற்று, அவ்விஷயத்தைத் தன் பெற்றோர்க்கு அறிவிக்காமல் தன் கிராமத்திற்கு அருகேயுள்ள ஓர் ஆலயத்திற்குச் சென்று வருவதாகத் தன் அன்னையிடம் கூறினன். அக்கோயில் அடுத்த கிராமத்தில் சுமார் ஐந்து மைல் தூரத்தில் இருந்தது. பரமசிவன் திடீரென அக் கோயிலுக்கு மறுதினமே தான் போய் வரவேண்டும் என்று விரும்பியதால் தன் செல்வ மைந்தனுக்கு, அவன் நனி விரும்பிய நெய்யும் இனிப்பும் கலந்த அரிசி அப்பங்கள் சுமார் பத்து வழிக்குத் தயார் செய்து கொடுத்த

னள். அவ்வப்பங்கள் பெரியவையாகவும், தடித்த வையாகவும், பசு நெய் மிகுதியாக கலந்தவையாகவும் இருந்தமை, அவன் அன்னை அவன் பால் கொண்டிருந்த அளவில்லா அன்பை விளக்கியது. அவன் தான் கட்டிய ஒரே வஸ்திரத்தோடும், தரித்திருந்த ஒரே சொக்காயோடும், போட்டிருந்த ஒரே குட்டையோடும், கையில் ஒரு தமிழ் புத்தகத்தையும் தன் அன்னை தந்த சிறு அப்பமூட்டையையும் ஏந்தி தன் அன்னையின் ஆசியையும், தங்கையின் வாழ்த்தையும் பெற்றுக்கொண்டு, அவர்களிடம் விடைபெற்றுத்தன் தந்தைக்குத் தெரியாமல், தன் இன்பச்சிறு மனையை விட்டகன்றான்.

பரமசிவன் பேட்டைக்கு நேராகக் கால் நடையாகவே பிரயாணம் செய்தான். பேட்டைக்கும் அவன் கிராமத்திற்கும் சுமார் எட்டு மைல் தூரம் இருந்தது. அவன் அன்று மாலையில் பேட்டையை அடைந்து, அங்கு இருந்த ஓர் சிற்றோடையின் கரையில் அமர்ந்து,தன் அன்னை தந்த அப்பங்களில் இரண்டை புசித்து,ஓடையின் தெளிந்த நீரைப்பருகிக் கடவுளின் கருணையை நம்பி, சிறிது நேரம் அவ்வோடையின் கரையிலேயே ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்தான். அவனுக்கு அவன் மருங்கேயுள்ள இயற்கைக் காட்சிகளும் அப்போது இன்பத்தை ஊட்டவில்லை. அவன் சிந்தனை முழுவதும் தன் பரீட்சையின் தேர்ச்சியிலேயே அழுந்தி விட்டமையால், அவன் எவ்வித இன்ப உணர்ச்சியையும் அடையமுடியவில்லை. அவன் அன்று மாலைப்போது கழிந்து, இராப்பொழுது வந்ததும், தன் பரீட்சை முடிவை அறியும் வேட்கையால்,

அவ்வூரிலுள்ள தபாலாபீசிற்கு அன்று இரவு பத்து மணிக்குப் போய்ச் சேர்ந்தான். தபாலாபீசின் ஒரு பகுதியாகிய தந்தி ஆபீசில் தந்திகள் இரவிலும் வாங்கப்படும் என்ற விஷயத்தை அவன் அறிந்திருந்தான்.

பரமசிவன் தந்தி ஆபீசில் தந்தி வாங்கும் உத்தியோகஸ்தரிடம் சென்று, அவருக்கு வணக்கம் செய்து, தன் தந்தி வந்து விட்டதா என்று அவரை வினவினன். அவர் அத்தகைய வினவைக் கேட்டு, கோபம் கொண்டு அவனை நோக்கி, "இளைஞனே! நீ யார்? இரவு பத்து மணிக்கு வந்து, உன் தந்தி வந்து விட்டதா என்று பொருளற்ற கேள்வியைக் கேட்கின்ருய். உன் தந்தி என்ருல் அர்த்தமென்ன?" என்று வினவினர். பரமசிவன் பயந்து, பணிவுடன் அவரை நோக்கி, "ஐயா! மன்னிக்க வேண்டும் நான் சொல்லியது தவறே. அரிபுற மென்னும் கிராமத்திற்குப் பரமசிவன் என்னும் பேருக்கு அம்பைநகர் என்னும் நகரிலிருந்து அந்நகரின் கல்லூரியின் கணக்கரிடம் (Writer) இருந்து ஒரு தந்தி வந்து விட்டதா என்று தங்களை ஆவலுடன் கேட்கின்றேன். தயை கூர்ந்து சொல்லுங்கள்" என்று கூறினன்.

தந்தி ஆபீஸ் உத்தியோகஸ்தர் முகத்தைச் சுளித்துக் கொண்டு தனக்குள் எழுந்த கோபத்தை அடக்கச் சக்தியற்று, அவ்விதத் தந்தி ஒன்றும் வரவில்லையென்று கடுமையாக மறுமொழி கூறினர். பரமசிவன் அவர் கோபத்தைப் பொருட்படுத்தாமல், மீண்டும் அவரை நோக்கி, "ஐயா! என் தந்தி எப்

போது வரும்? அதில் வரும் விஷயம் மிகவும் முக்கிய மானது. என் வாழ்க்கைக்கே அதுதான் முக்கிய கருவியாகும்" என்று கூறினன். தந்தி ஆபீஸ் உத்தியோகஸ்தர், "என்ன அப்பா! நீ உளருகின்ருய்? நீ பித்தம் பிடித்தவன் போல் காணப்படுகின்ருய். உன் தாய்க்கோ தந்தைக்கோ ஆபத்து வந்து விட்டதா? இந்நள்ளிரவில் இவ்வித கேள்வியைக் கேட்கக் காரணம் என்ன? உண்மையில், எனக்கு உன் மீது கோபந்தான் உண்டாகிறது" என்ருர்.

பரமசிவன், அவரை நோக்கி "ஐயா! கோபங் கொள்ளாதீர்கள். என் மன வேட்கை அவ்வளவு பெரியதாக இருக்கின்றது. அது என் பரீட்சையின் விஷயமாகும். நான் இவ்வருடம் மெட்ரிக் பரீட்சைக்குப் போயிருக்கின்றேன். அதன் முடிவைத் தான் தந்தியில் எதிர் பார்க்கின்றேன். அது விஷயமாக நான் கொண்டுள்ள மனத்துடிப்பு எத்தன்மைத்து என்று நான் சொல்லாமலேயே நீங்கள் அறிந்து கொள்ளலாம். ஏனெனில், நீங்களும் இளைஞராகக் காணப்படுகின்றமையால், மெட்ரிக் பரீட்சைக்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தான் நீங்கள் சென்றிருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். அப்பரீட்சையின் தேர்ச்சி எத்தகைய அரும் பொருளென்பது உமக்குத்தெரியும். என் வாழ்க்கைக்கு அத்தேர்ச்சியே உயிர்நாடியாக இருக்கின்றது. ஆகையால், நான் தங்களுக்கு இக்கஷ்டத்தை இந்நள்ளிரவில் கொடுக்கின்றேன். மன்னிக்கவேண்டும்" என்று மிகவும் பரிதாபமாகக் கூறினன்.

தந்தி ஆபீஸ் உத்தியோகஸ்தர் பரமசிவன் கூறிய பரிதபிக்கத்தக்க மொழிகளைக் கேட்டு மனம் இரங்கி, தாம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அப் பரீட்சையின் தேர்ச்சி விஷயமாகக் கொண்டிருந்த மனக்கவலை புத்தம் புதிதாக வரப்பெற்று, மனம் வருந்தி அவனை நோக்கி, ''நண்பா! மனம் கலங்காதே. உனக்கு நல்ல சேதியே வரும். எதிரே அமைக்கப்பட்டுள்ள பலகையின் மீது படுத்துக்கொண்டிரு. உன் பெயருக்குத் தந்தி வந்ததும், நானே வந்து உன்னை எழுப்புகின்றேன். உன் மீது எனக்குப் பெருங் கருணை உண்டாய்விட்டது. நானும் உன்னைப் போல் ஒரு காலத்தில் அப்பரீட்சையின் முடிவை அறிய பெரியதோர் மனக்கவலை கொண்டிருந்தேன். இது துன்பகரமான நிலைமை என்பதில் ஐயமில்லை. ஆனல் எல்லாப் பாடங்களிலும் சிறந்த ஞானம் பெற்ற ஒரு மாணவனுக்கு அச்சமிராது. உனக்கு இரண்டொரு பாடங்களிலாகிலும் ஞானக் குறைவு ஏற்பட்டிருக்கும் என்று ஊகிக்கின்றேன். இருந்தாலும், கவலையுறாதே, சுகமாக அப் பலகையின் மீது நித்திரைபோ. தந்தி வரும் நேரம் எவருக்கும் தெரியாது'' என்று மன இரக்கத்துடன் கூறினர்.

பரமசிவன் அவர் கூறிய அறிவுள்ள மொழிகளைக் கேட்டுத் திருப்தி அடைந்து, அவரை நோக்கி, "ஐயா தாங்கள் கூறிய விஷயங்கள் மிகவும் உண்மையானவை. என் அறியாமையால் சிலதகுதியற்ற மாணவர்களோடு நட்புகொண்டு, இரண்டு பாடங்களில் போதிய ஞானம் பெருமல் பொலிவழிந்தேன்; அக்காரணத்தால் தான் நான் இத்தகைய துன்பத்தை அடைகின்றேன்

தாங்கள் கூறியபடி நான் அப்பலகையின் மீது அமர்கின்றேன். அன்புகூர்ந்து தந்தி வந்ததும் எனக்கு அறிவியுங்கள்" என்று கூறி, அவர் சம்மதத்தைப் பெற்று, அருகேயிருந்த பலகையின் மீது அமர்ந்தான். அவன் அன்று இரவெல்லாம் நித்திரை இன்றிப் பற்பல பயங்கர கனுக்களைக் கண்டு துன்புற்று, அவ்வப்போது எழுந்து எழுந்து, தந்தி ஆபீஸ் உத்தியோகஸ்தரை தந்தி வந்து விட்டதா தந்திவந்து விட்டதா என்று வினவிய வண்ணம், விடியற் காலை ஐந்து மணி வரையில் எமவேதனைபட்டுக்கொண்டிருந்தான்.

பரமசிவன் மனம் சற்று அமைதி அடையும் சமயம், விடியற்காலை மணி ஐந்து ஆனதும், தந்தி ஆபீஸ் உத்தியோகஸ்தர் பரமசிவனை அழைத்து, "வாலிபரே, வந்துவிட்டது. வாரும் வாரும்" என்றார்.

பரமசிவன் திடுக்கிட்டெழுந்து விரைவுடன் ஓடி, தந்தி ஆபீஸ் உத்தியோகஸ்தரை ஆவலுடன் அத்தந்தியைக் கேட்டான். அவர் அவனைப் பார்த்துப் பெரிதும் பரிதாபம் கொண்டு, "அந்தோ! பாவம்! நீ தவறி விட்டாய். அழாதே. அஞ்சாமல் வீடு போய்ச் சேர்வாயாக" என்று கூறி, அவன் கையில் அவன் உயிரை வாட்டும் துன்பச் செய்தியைக் கொண்டு வந்த தந்தியைக் கொடுத்தார். தந்தியில் தவறி விட்டாய் (Failed) என்று குறிப்பிட்டிருந்ததைக் கண்டு அவன் கதறி அழுதான். அச்சமயம் அவன் மானத்தையும் வெட்கத்தையும் மறந்து, பெற்றோரை இழந்த ஓர் மைந்தன் போல் புலம்பினன். தந்தி

ஆபீஸ் உத்தியோகஸ்தர் அவனைத் தேற்றி, "தவறி விட்டாலென்ன? அடுத்த ஆண்டில் தேர்ச்சி பெற லாம். ஆயிரக் கணக்கான மாணவர்கள் உன்னைப் போல்பரீட்சையில் தவறி இருக்கிறார்கள். நூற்றுக்கு ஐந்து ஆறு மாணவர்கள் தான் அக்கடுமையான பரீட்சையில்தேர்ச்சி அடைவார்கள். தேர்ச்சி இல்லை யென்றால் இவ்வாறு புலம்புவதா? இது பெண்மக்கள் செயல், நானும் இரண்டாவது ஆண்டில் தான் மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடைந்தேன். நீ நம் பிக்கையை இழக்காமல் ஊக்கத்தை இன்னும் மிகுதி யாகக் கொண்டு, அடுத்த ஆண்டில் அப்பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறு'' என்று கூறி அவனைத் தேற்றினார்.

பரமசிவன் அத்துன்பகரமான நிலையிலும் சீரிய உணர்ச்சியைப்பெற்றான். அவன் தைரியத்தை முன்னிலும் மிகுதியாகக் கொண்டான்; ஊக்கத்தை உரமாகக் கைப் பற்றினான்; மனக்கலக்கம் அந்நிலை யில் அடைதல் பேடித்தனமென்று எண்ணினான். பரீட்சையில் தேர்ச்சி அடைதலும் தவறுதலும் இய ற்கையே என்று எண்ணினான். அதில் அதிர்ஷ்டமும் துர் அதிர்ஷ்டமும் உண்டு என்று கருதினான். தேர்ந்தவன் உயர்ந்தவன் என்றும் தேராதவன் தாழ்ந்தவன் என்றும் எண்ணுதல் தவறென்றும் நினைத்தான். தேர்ந்தவர்களில் எத்துணைய மக்கள் துர் அதிர்ஷ்டத்தால் தாழ்ந்த நிலையை அடைந்தி ருக்கிறார்களென்றும் தேராதவர்களில் எத்துணைய மக்கள் உயர்ந்த நிலையில் வாழ்கின்றார்களென்றும் எண்ணினான். வியாபாரஸ்தர்களும் கைத்தொழிலா

ளர்களும் பரீட்சையின் மணமே இல்லாமல் பெரும் பொருள் ஈட்டி உயர்ந்த இன்பகரமான வாழ்வை வாழவில்லையா என்று தானே கேட்டுக்கொண்டான். கல்விமான்கள் குறைந்த சம்பளத்தில் ஏழ்மையான வாழ்வைப் பெற்று வருந்தவில்லையா என்றும் தனக்குள் வினு எழுப்பிக்கொண்டான். எப்படியேனும் பரீட்சையில் தேர்ச்சி இல்லை யென்று அறியாமையாலும் பேதைமையாலும் சிற்சில மாணவர்கள் மனம் உடைந்து தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்ளும் செய்கை மிகுந்த இழிவான பொருளற்ற ஆண்மையற்ற அறிவற்ற தகுதியற்ற செய்கையாகும் என்று திடமாக எண்ணினன். அந்நிலையில் ஒரு மாணவன் மனம் உடைந்து போவதும் ஊக்கத்தில் குறைவதும் அறிவற்ற செயல்களென்றும் நினைந்தான். கையில் பொருள் இருந்தால் ஒருமுறை அல்ல பன்முறையும் பரீட்சைக்குச் சென்று தேர்ச்சி அடைதலே அறிவுடைச் செயலென்றும் கருதினன். தன்னைப்போல் வறுமைப் பணியில் உழல்கின்ற மாணவர்கள் ஏதேனும் ஒரு கைத்தொழிலைக் களிப்புடன் தேடிக் கொள்வதும் அல்லது தனக்கேற்ற ஒரு உத்தியோகத்தை அடைவதும் தான் அறிவுள்ள செய்கைகள் என்று தீர்மானித்தான். கடந்தவற்றை நினைந்து மனம் வருந்துவதும் பேதைமையென்று உணர்ந்தான். அத்தகைய இடையூறு வருகின்ற காலத்தில் தான் ஒருவன் தன் ஊக்கத்தையும் தைரியத்தையும் கைவிடக் கூடாதென்றும் தன்பாடசாலையின் தலைமை ஆசிரியர் சங்கரய்யர் பன்முறை எடுத்து விளக்கிக் காட்டிய

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்"

என்ற திருக்குறளின் அரும் பொருள் சாரத்தை நன்கு நுகர்ந்து தைரியத்தையும் ஊக்கத்தையும் தன் இரண்டு வாள்களாக வன்மையுடையவன் ஏந்தி தன் பெற்றோர்களின் நலத்தைத் தன் மனத்தில் வன்மையுடன் எண்ணி மனக்கலக்கத்தை அகற்றி உண்மையையும் திண்மையையும் உறவுகொண்டு தன் தாய் தந்தையரின் எளிய வாழ்க்கையை மேதகு இன்ப வாழ்க்கையாகஎண்ணித் தன் இரத்தத்தை எவ்வளவு வேண்டுமானாலும் தன் பெற்றோர்கள் பொருட்டுச் சிந்தத் துணிந்து அவர்களைக் களிப்புறச் செய்வதே தன் கடமை எனத்தேர்ந்து மனம் வருந்துவதை அறவே விட்டான்.

பரமசிவன் மேற்கூறிய சிறந்த எண்ணத்தைத் தன் உள்ளத்தில் உரமாகக் கொண்டு அன்றைய தினமே தபாலாபீசில் ஓர் கடிதம் வாங்கி அதில் கீழ் வருமாறு தன் அருமைத் தந்தைக்குத் தன் பரீட்சையின் முடிவையும் அதன் காரணமாகத் தான் கொண்ட தீர்மானத்தையும் எழுதி அனுப்பினான். "அன்புருவாய அண்ணலே! நான் மெட்ரிக் பரீட்சையில் தேறவில்லை; தற்போது சிறப்பழிந்த துன்பகரமான நிலையில் இருக்கின்றேன். தங்களுக்கு இன்னும் துன்பமளிக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. தாங்கள் எனக்காக எய்திய துன்பங்களையும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் அல்லும் பகலும் உழைத்த உழைப்புகளையும் என்றும் மறவேன்.

நான் பேட்டை தபாலாபீசிலிருந்து தங்களுக்கு இக்கடிதம் வரைந்தேன். மெட்ரிக் பரீட்சையில் தேறவில்லையென்றாலும் நான் பணம் சம்பாதிக்கும் முயற்சியில் தோல்வி அடையேன். என் வைராக்கியத்தாலும் ஊக்கத்தின் மாண்பாலும் நெல்லையில் ஏதேனும் ஓர் உத்தியோகத்தைப் பெற்றுத் தங்களுக்கு மாதாமாதம் தவறாமல் பத்து ரூபாய் மணி ஆர்டர் செய்து விடுகின்றேன்; சௌக்காருக்கு அதை வட்டியாக அளித்து விடுங்கள். முதல் பணத்தைச் சில மாதங்கள் கழித்துத் தந்துவிடலாம்; கவலைவேண்டாம். சிறியேன் சொல்லை முற்றிலும் நம்புங்கள். என் அன்புள்ள அன்னைக்கும் கனிவுள்ள தங்கைக்கும் என் வணக்கத்தையும் ஆசியையும் சொல்லுங்கள். என்னைப் பற்றி நீங்கள் ஒருவரும் எவ்வித கவலையும் உறவேண்டாம்; என்னை எங்கும் தேடவும் வேண்டாம்; நான் நெல்லையிலேதான் இருப்பேன். ஆனால் விலாசம் எதுவாகுமோ தெரியாது; நானே பின்னர் அதைத் தெரிவிக்கின்றேன்.

இங்ஙனம்
தங்கள் பணிவுள்ள மைந்தன்
பரமசிவன்.''

பரமசிவன் மேற்கூறியவாறு கடிதம் எழுதித் தன் தந்தைக்கு அனுப்பிவிட்டுத் தான் அன்றே தைரியமாக அம்பைநகருக்கு அங்கிருந்தே கால் நடையாகச் சென்றான். அவன் மூன்று நாட்கள் கால் நடையாகவும் இடையே சிற்சில இடங்களில்

தனக்குக் கிடைத்த மாட்டுவண்டிகளில் பணச்செல வில்லாமல் ஏறிக்கொண்டு தன் அன்னை அன்புடன் அளித்த அரிசி அப்பங்களையே வழியில் உண வாக உண்டு அவள் அளித்த எட்டணவைப் பத்திர மாக வைத்துக்கொண்டு அம்பைநகர் போய்ச்சேர்ந் தான். அவன் வாடிய முகத்தோடும் தளர்ந்த தேகத்தோடும் இராமநாதனைப் போய்ப்பார்த்தான். இராமநாதன் அவனைக் கண்டதும் தன் இயற்கைக் குறும்புத்தனத்தை மறந்து அவன் மீது கருணை கொண்டு அவனை நோக்கி "பரமசிவா! நீயும் தவறி விட்டாய்; நானும் தவறிவிட்டேன்; மாணிக்கவாசக னும் தவறி விட்டான்; கோவிந்தசுவாமி மாத்திரம் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ருன். நமக்கு இனி கல்வி வராது. நான் இனி வாசிக்க விரும்பவில்லை. என் தந்தையும் என்னை ஏதேனும் வேலை பார்க் கும்படி கூறினர். நான் என்ன வேலை பார்க்க முடியும்? நான் என் தந்தையின் வேலைதான் உடன் இருந்து பார்க்கவேண்டும். உன் கதி என்ன" என்று கூறினன்.

பரமசிவன் மனம் வருந்தாமல் முகத்தில் உல்லா சம் மிளிர அவனை நோக்கி ''நண்பனே! நான் பரீட் சையில் வெற்றி பெருமைக்கு வருந்தவில்லை; அது என் குற்றமே. ஆனல் என் பெற்ருேர் பொருட்டு மனம் வருந்துகின்றேன். அவர்களுக்கு என் கட மையைச் செய்யும் பொருட்டு நான் இன்றே நெல் லைக்குப் பிரயாணமாக வேண்டும். நீ தயை கூர்ந்து பத்து ரூபாய் கடன் அளித்தால் நான் உனக்குப்பின்

னர் அதற்குரிய வட்டியுடன் அதைத்திருப்பி அளிக்கின்றேன்" என்று கூறினன்.

இராமநாதன் அவன் கூறியதைக் கேட்டு மனம் வருந்தித் தன்னிடத்தில் அப்போது பணம் ஒன்றுமில்லை என்றும் ஆனல் தன் தந்தையினிடம் கடன் கேட்டால் வட்டிக்குப் பணம் கிடைக்குமென்றும் கூறினன். ஆனல் அவன் தான் கொண்டுவந்த பணம் வழியில் தொலைந்து விட்டதென்று பொய் சொல்ல வேண்டுமென்றும் பத்து ரூபாய்க்குப் பதிலாக இருபது ரூபாய் கடன் கேட்க வேண்டுமென்றும் அந்த இருபது ரூபாயில் தனக்குப் பத்து ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் அவனிடம் சொன்னன். பரமசிவன் அப்போதிருந்த உதவியற்ற நிலையில் இராமநாதன் தந்தையையும் கடன் கேட்கத் துணிந்தான். ஆனல் அவன் இராமநாதன் கூறியபடி பொய் சொல்லாமல் உண்மையையே உரைத்துக் கடன் கேட்டதால் இராமநாதன் தந்தை அச்சிறுவன் வேண்டுகோளை இகழ்ந்து எவ்வித பொறுப்பும் இல்லாமல் எவ்வித கடனும் கொடுக்க முடியாதென்று அவனை விரட்டி அனுப்பி விட்டார்.

இராமநாதன் பரமசிவன் மெய்யுரையே அவன் முயற்சியைப் பாழாக்கிவிட்டதென்று அவன் செய்கையை வெறுத்து சமயத்துக்கேற்ற பொய் சொல்லாமையால் வந்த தீமையை அவனுக்கு அறிவித்து அவனை மனவருத்தத்துடன் ஒரு காபி ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றன். அவன் பரமசிவனுக்கு வேண்டிய அளவு சிற்றுண்டியும் இரண்டு கோப்பைகள் காப்பியும் வாங்கிக்கொடுத்து அவனைத்

தான் செய்த குறும்புகளை எல்லாம் மறந்து தன்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டு, அவனுக்கு விடை கொடுத்தான். பரமசிவன் அவன் செய்கையைக் கண்டு மகிழ்ந்து, அவன் குறும்புத்தனமுள்ளவனாக இருந்த போதிலும் தன்னிடத்தில் அவன் உள்ளத்தில் இருந்த அன்பை வியந்து, அவன் அப்போது செய்த பேருதவிக்கு நன்றி பாராட்டி அவனை விட்டு மன வருத்தத்துடன் பிரிந்தான்.

பரமசிவன் நெல்லைக்குச் செல்ல பத்து ரூபாய் எவ்வாறு பெறுவது என்று ஏங்கிக்கொண்டு, தன் கல்லூரியின் பக்கமாகத் தனியே பெருஞ்சிந்தனையுடன் செல்லுகையில் வழியில் தன் மைத்துனன் கோவிந்தசுவாமியைக் கண்டான். கோவிந்த சுவாமி தன் மைத்துனனைப் பார்த்து சந்தோஷமடைந்து அவனை நோக்கி, "மைத்துனரே! நீர் ஏன் இப்போது தனியாக வந்தீர்? நான் மெட்ரிக் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ந்தேன். என் தந்தை என் கல்விச் சிறப்பை மெச்சி எனக்குப் பத்து ரூபாய் இனாம் அளித்தார்; நான் இன்று சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கவே இப்பணத்தை எனக்குத் தந்தார். நாம் இருவரும் இப்போது காப்பி ஹோட்டலுக்குச் செல்லலாம். நீர் மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி அடையாதது எல்லோருக்கும் வியப்பாகவே இருக்கின்றது. உமக்குள்ள கல்வி ஞானத்தில் உண்மையில் எனக்குக் கால் பங்கு கூட இல்லை. பரிசோதகர்கள் உமக்குத் தவறாகவே புள்ளிகள் (Marks) போட்டிருப்பார்களென்று எண்ணுகின்றேன். உமக்கு அதிர்ஷ்டம் இல்லையென்றுதான் நான்

வெளிப்படையாகச் சொல்லுகின்றேன்" என்று மொழிந்தான்.

பரமசிவன் தன் மைத்துனன் கூறிய மொழிகளைக் கேட்டுப் புன்னகை புரிந்து, அவனை நோக்கி "கோவிந்தசுவாமி! உனக்கு என்ன பைத்தியம்? நான் தவறியது நியாயமே; சிற்சில பாடங்களில் எனக்குப் போதிய ஞானம் இல்லை என்பது உண்மையே. உன் கல்விச் சிறப்பு ஒப்பற்றதே. உனக்கு இணையாக நம் கல்லூரியில் ஒரு மாணவனும் இல்லை. அத்தகைய சிறந்த கல்விமானை நான் மைத்துனனைப் பெற்ற என் புண்ணியம் பெரியதே; உன் கல்விச் சிறப்பை அறிந்து, நான் உள்ளம் பூரிக்கின்றேன்; என்னைப் பற்றி வருந்தாதே. நான் இன்றே நெல்லைக்குச் செல்கின்றேன். ஆதலால், எனக்கு தற்போது பத்து ரூபாய் கடன் எவரேனும் அளிப்பரோ என்று மனம் கலங்குகின்றேன்" என்று சொன்னான்.

கோவிந்தசுவாமி உடனே தன்னிடம் இருந்த புதிய பத்து ரூபாய் நோட்டை எடுத்து தன் மைத்துனன் ஜோபியில் போட்டான். பரமசிவன் தன் மைத்துனன் அரும் பெருஞ் செயலை வியந்து மகிழ்ந்து அவ்வன் காலத்தில் செய்த நன்றியைத் தான் என்றும் மறவேன் என்று கூறி, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு அன்று இரவே நெல்லைக்கு ரயிலேறிச் சென்றான். ரயில்வே ஸ்டேஷனில் கோவிந்தசுவாமியும் மாணிக்கவாசகனும் பரமசிவனை வந்து கண்டனர். அவர்கள் அவனுடன் ஆவலோடு புகை வண்டி புறப்படும் வரையில்அன்புடன் பல இன்மொ

ழிகள்பேசிப் பின்னர் சில நறுங்கனிகள் வழிக்குக் கொடுத்து அனுப்பினர்கள். மாணிக்கவாசகன் பரமசிவன் ஜேபியில் ஒரு புதிய பத்து ரூபாய் நோட்டைப் புன்னகையுடன் போட்டான். பரமசிவன் அதைக் கண்டு அளவில்லா சந்தோஷம் கொண்டு மாணிக்கவாசகன் பொற்குணத்தையும் மெச்சி அவன் கொடுத்த பத்து ரூபாயையும் பின்னர் திருப்பி அனுப்பி விடுவதாகக் கூறி அவர்களிடம் வருத்தத்துடன் விடைபெற்று நெல்லைக்குச் சென்ருன்.

——

அதிகாரம் இருபது

பரமசிவன் மறுநாட்காலை ஏழு மணிக்குச் சரியாக நெல்லை போய்ச்சேர்ந்தான். அவன் தன்ன தனியனுய் உதவி அற்றவனுய் நல்ல உடையையும் உணவையும் நீங்கப் பெற்றவனுய் கையில் சிறு தொகைப் பணமே தனக்கு ஆதரவாகக் கொண்டு கடவுள் அருள் ஒன்றையே உறு துணையாக நம்பி முன்பின் தெரியாத அந்நகருக்குள் தன் பெற்ருேர் வாழ்க்கை நலத்தை மாட்சிமைப் படுத்தப் புகுந்தனன். அவன் அன்று காலையில் அந்நகர் ரயில்வே ஸ்டேஷன் அருகேயிருந்த ஒரு நந்தவனத்தில் அப்போதே ஸ்நானம் செய்து தன் அன்னையார் அளித்த இன்சுவை அரிசி அப்பம் இரண்டையும் தன் அன்னையின் கனிவை நினைந்து மகிழ்வாகப் புசித்தான். அப்போது அவன் தன் தாராளமனமுடைய

தந்தையின் குணத்தை நினைந்து, அவர் திருவடிகளை மனத்தே தொழுதான். "தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே முந்தையோர் கண்ட முறை" என்ற ஆன்றோர் வாக்கின்படி அவன் காலையில் அவ்விரு வரையுமே தன் மனத்திற்குள் தொழுதான்; தன் செல்வத் தங்கை பார்வதியின் அன்பு கனிந்த செயல் களையும் நினைந்தான். பின்னர் அவன் தன் உள் ளத்தே குடி கொண்டுள்ள கடவுள் அருளை உரமாக நம்பி தன் விழுமிய நோக்கத்தை நிறைவேற்ற பரந்து விரிந்த பல அழகிய காட்சிகளைத் தன்ன கத்தே கொண்ட மின்சார வண்டிகளின் தனி அழ கையும் உடன் கொண்ட நெல்லையில் தனக்கு ஒரு உத்தியோகம் தேடப் புறப்பட்டான். பரமசிவன் தன் வழிச் செலவுகளுக்குச் செலவாகிய பணம்போக மீதி பதின்மூன்று ரூபாயைத்தன்னிடம் வைத்திருந்தான். அவன் தன்னலத்தைச் சிறிதும் கருதாமல் தன் தந்தையின் கவலையைப் பெரிதும் கருதி அப்போதே தபாலாபீசுக்குச் சென்று தன் தந்தைக்குப் பத்து ரூபாய் மணியார்டர் செய்து பெருமகிழ்ச்சி பூத்தான். பின்னர் இருந்த மூன்று ரூபாய்களையும் மூன்று சவரன்களாகக் கருதி அவன் வீண் செலவு ஒன்றும் செய்யாமல் ஒரு கோப்பைக் காப்பியே அருந்தி களங்கமற்ற முகத்தில் தூய்மை ஒன்றே மிளிர கையில் கவின்மிகு "திருக்குறள்" என்னும் தனித்தமிழ்நூல் ஒளிர இன்முறுவலுடன் தைரியவாளைக் கையிலேந்தி அவன் ஒவ்வொரு ஆபீ சிலும் நுழைந்து தனக்கு உத்தியோகம் கேட்டுக் கொண்டே போனான். எந்த ஆபீசிலும், "வேலை

காலி இல்லை" என்ற விளம்பரந்தான் ஆங்கிலத்தி லும் தமிழிலும் காணப்பட்டது. எந்த ஆபீசிலும் காவற்காரர்கள் ஆர்ப்பாட்டமும் பணியாட்கள் தொந் தரவும் ஆட்சிசெய்தன. சின்னஞ் சிறுவனாகிய பரம சிவன் ஒவ்வொரு ஆபீசிலும் காவற்காரர்களுக்கும் பணியாட்களுக்கும் பணிவுள்ள இன்மொழிகள் பகர்ந்து உள்ளிருந்த காரியஸ்தர்களையும் துரைகளை யும் கண்டு வணக்கம் செய்து தன் குறையை சொல்லி ஒரு குமஸ்தா உத்தியோகத்தைப் பணிவுடன் கேட் டுக்கொண்டு போனான். ஆனால், வெற்றி இல்லை. கேட்டுக்கேட்டு இளைத்து ஒருவித வேலையும் பெறாமல் மனம் உடைந்து ஆபீஸ் உத்தியோகத்தின் மீதுகொண்டிருந்த விருப்பத்தை மறந்து சில சிறு கம்பெனிகளில் ஏதேனும் ஒரு வேலை சம்பாதிக்கத் தீர்மானித்தான்.

பரமசிவன் சிறு கம்பெனிகளிலும் சில கிடங்கு களிலும் கடைகளிலுங்கூட மாதம் பத்து ரூபாய் சம்பளத்திற்கு ஏதேனும் ஒரு வேலை சம்பாதிக்க எவ் வளவு முயன்றும் பயனில்லை. அவன் ஏறக்குறைய எல்லா இடங்களிலும் இழிவும் அவமானமுமே அடைந் தானேயன்றிக் கனிவுள்ள நன்மொழியோ அல்லது ஒரு தினைத்துணைக் கருணையோ ஒருவரிடத்தும் அடை யவில்லை. அவன் உத்தியோகத்தின்மேல் உரமாக வைத்திருந்த ஆசையை அறவே மறந்து நெல்லை நகரில் பற்பல இடங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த் தான். அவன் அத்துணைய பரந்து விரிந்த பற்பல கைத்தொழிற் சாலைகள் ஒளிர்ந்த நகரில் தனக்கு ஒரு சிறு வேலையும் கிடைக்கவில்லையே என்று வியப்

பும் வெறுப்பும் கொண்டான். பரமசிவன் அத்தகைய துன்பகரமான நிலையில் மூன்று தினங்களைத் தக்க உணவின்றி தங்க இடமுமின்றி மனவருத்தத்துடன் கழித்தான். அவன் ஒரு சத்திரத்தின் தெருத்திண்ணையிலேயே மூன்று இரவுகளையும் வெறுப்புடன் கழித்தான். அவன் கையிலிருந்த மூன்று ரூபாயில் இரண்டு ரூபாய்க்கு மேல் செலவாய் விட்டது. அப்போது அவன் கையில் இருந்த தொகை எட்டணுவே யாகும். அந்த எட்டு அணுவும் அவனுக்கு அன்புடன் அவன் அன்னை அளித்த சிறு தொகையேயாகு;ர். அவன் அத்தொகையை ஆதரவாகக் கொண்டு தன் பெற்றோரின் அருளையும் க ட வு ள் கருணையையும் வேண்டி மறுபடியும் நெல்லையிலுள்ள பற்பல கம்பெனிகளுக்கு வேலை தேடத் திரிந்தான். அவனுக்குத்தகுந்த இடம் ஒன்றும் கிடைக்கவில்லை. அவன் கடைசியாக அந்நகரின் ஒரு பெரிய மைதானத்தில் மாபெருங் கட்டடம் ஒன்று கட்டப்படுவதைக் கண்டான். அக்கட்டடத்தில் அநேக விதமான வேலைக்காரர்கள் பற்பல வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். அதில் ஓவர்சியர்களும் கிளார்க்குகளும் மேஸ்திரிகளும் தச்சர்களும் கொல்லர்களும் கூலி ஆட்களும் வேலை செய்தனர். அதில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களும் சிலர் வேலை செய்து ொகண்டிருந்தர்ன .ஓர் ஆங்கிலப் பெரிய உத்தியோகஸ்தர் அப்பெருங் கட்டடத்தில் கட்டட வேலையைப் பார்வை இட்டுக் கொண்டு இருந்தனர். பரமசிவன் அத்தனை மக்கள் வேலை செய்கின்ற ஓர் இடத்தில் தனக்கும் ஒரு வேலை அவசியம் கிடைக்கும் என்று எண்ணி தன் தந்தையின்

பணக்கவலையை மனத்தில் சிந்தித்து அக்கட்டடத்தில் தைரியமாக நுழைந்தான். அவன் அங்கு தனக்குக் காணப்பட்ட ஒரு உத்தியோகஸ்தரைக் கண்டு, ஏதேனும் வேலை காலி உண்டோ என்று வினவினன். அந்த உத்தியோகஸ்தர் அவனை நோக்கி, "ஆம்! வேலை காலி இருக்கிறது. பிள்ளைகள் பலர் வேண்டும். உனக்கு வேண்டுமானலும் ஒரு வேலை வாங்கித் தருகிறேன்" என்று கூறினர். பரமசிவன் அதைக் கேட்டுப் பெரிதும் சந்தோஷமடைந்து அவருக்கு வணக்கம் புரிந்து "உங்களுக்குப் பெரும்புண்ணியம் உண்டு. நான் எந்த வேலை வேண்டுமானலும் செய்யத் தயாராக இருக்கின்றேன்" என்று கூறினன்.

அவ்வுத்தியோகஸ்தர் பரமசிவன் சம்மதத்தைப் பெற்றதும் தன் மேல் உத்தியோகஸ்தரிடம் சென்று வெகு சீக்கிரத்தில் அவனுக்கு உத்தியோகக் கட்டளை வாங்கிக் கொண்டு வந்தார். அவர் அதைப் பரமசிவனிடம் அளித்து அவனை நோக்கி "வாலிபனே! இதோ உனக்கு வேலை வந்து விட்டது. போய் வேலையைப் பார். நீ நன்ருக உழைத்து உண்மையோடு வேலை செய்தால் உனக்குச் சம்பளம் ஏறும்; வேலையின் நுட்ப திட்பங்களைக் கருத்துடன் கற்றுக் கொண்டால் மேலும் மேலும் உனக்குத் தின சம்பளம் ஏறுவதோடு நீ ஒரு மேஸ்திரியாகவும் ஆய்விடலாம் என்று சொல்லி, அவனுக்கு ஒரு தொப்பியை அவன் வேலையில் அமர்த்தப்பட்டதற்கு அறிகுறியாகக் கொண்டு

வந்து கொடுத்தார். பரமசிவன் அத் தொப்பியை வாங்கிப் பார்த்ததும் வியப்பும் திகிலும் கொண் டான். அத் தொப்பியில் "கூலிக்காரன்" என்று எழுதப் பட்டிருந்தது. அவன் அதைக் கண்ணுற்ற தும் கண்ணீர் விட்டான்; தன் கல்வி ஒரு கூலிக் காரன் வேலையைத்தான் கொடுத்ததோ என்று அக் கல்வியை வெறுத்தான். தான் ஆங்கிலத்தில் கொண்ட சிறந்த ஞானம் அத் தொப்பியைத் தான் அளித்ததோ என்று ஆங்கிலத்தையும் வெறுத்தான். இருப்பினும், அவன் அப்போதிருந்த நிலையில் பட் டினி கிடந்து உயிர் நீத்து பெற்றோர்க்குப் பெருந் துயரை அளிப்பதை விட தாழ்மை உள்ளதாக இருப்பினும் யோக்கியதையும் தூய்மையும் செறிந்த பாவமில்லா அச்சிறு பணியை ஏற்றுக் கொள்ளுதலே ஓர் உத்தம இளவனுக்குத் தான் இருந்த உதவியற்ற நிலையில் அறிவுடைச் செயல் என்று எண்ணித் துன்பகரமான தொப்பியைத் தலையில் தரித்துக்கொண்டான். அப்போது அவ்வுத்தி யோகஸ்தர் அவனை நோக்கி, "இளைஞனே! உனக் குத் தினக் கூலி எட்டணா. ஒரு கூடையைத் தூக் கிக் கொண்டு கற்களும் சுண்ணம்பும் கொண்டு போய்க் கொத்தர்களுக்குக் கொடு" என்று கூறினர்.

பரமசிவன் மனம் பதை பதைத்தது; கண்ணீர் அருவியாக ஓடிற்று; பேச்சு தடுமாறிற்று. அத்தடு மாற்றத்துடன் மேற்கூறிய உத்தியோகஸ்தரை அவன் நோக்கி, "ஐயா! அப்படியே செய்கின்றேன்" என்று சொல்லி, கூலிக்காரன் கூடையை மனவன் மையுடன் ஒரு வீரன் போல் கையில் ஏந்திக் கொண்

டான். அவன் வீதி வீதியாய் பிச்சை எடுத்துப் பிழைப்பதைக் காட்டிலும் சுயமரியாதையுடன் தேகம் வருந்த உழைத்து நாலணுக் கூலியாகிலும் பெற்று வாழ்வதே விழுமிய செயலென்றும் உத்தி யோகம் பெறத் திறமையற்று கல்லூரியில் தனக்கு கல்விமாட்சி இன்மையால் சம்பாதிக்க வகை யற்று அக்காரணத்தால் தன் தாய் தந்தையரைக் காப்பாற்ற யோக்கியதையற்று தற்கொலை புரிந்து உயிர் இழந்தான் என்று பிறர் சொல்லும் வசை மொழிக்குக் காரணமாக இருப்பதைவிட அக் கூலி யாள் வேலையே சிறந்த வேலை யென்று உறுதியாக நம்பி உற்சாகத்துடன் அக் கூலி வேலையைச்செய் யத் தொடங்கினன்.

பரமசிவன் கூலிப் பிள்ளைகளோடு ஒருவனுக வேலை செய்து நாளொன்றுக்கு எட்டணு சம்பா தித்தான். அன்று மாலையே அவன் கையில் எட் டணு கொடுத்து விட்டனர். அவன் அப்போதுதான் தன்னை ஒரு ஆண்மகனென்று எண்ணி இன்ப மடைந்தான். அவன் தன் தேக உழைப்பால் தேடிய எட்டணுவில் நாலணு தன் உணவுக்கும் ஏனைய செலவுகளுக்கும் வைத்துக் கொண்டு மீதி நாலணு வைத் தன் தந்தைக்கு அனுப்பும் பொருட்டுச் சேமித்து வைத்தான். தினம் நாலணு வீதம் ஒரு வாரத்திற்குச்சேர்த்தால் ஞாயிற்றுக்கிழமையில்வேலை இல்லையாதலால் ஒன்றரைரூபாய் ஆயிற்றென்றும், அவ்வாறு ஒரு மாதம் சேமித்த பணம் ஆறு ரூபாயா கும் என்றும், ஆனல், தன் தந்தைக்கு மாதம் பத்து ரூபாய் மணியார்டர் செய்ய வேண்டுமே என்றும்

சிறிது வருந்தினன். இருப்பினும், தான் எடுத்துக் கொண்ட தொழிலை உண்மையாகவும் திண்மையாக வும் செய்து வந்தமையால் ஒரே வாரத்தில் அவனைக் கூலிப்பிள்ளைகளுக்கெல்லாம் தலைவனாக ஓவர் சியர் நியமித்தார். அப்போது அவனுக்குக் கூலி முக்கால் ரூபாய் ஆயிற்று. பரமசிவன் பெரிதும் சந்தோஷமடைந்து தன் வேலையில் கடவுள் காட்டிய கருணையை வியந்து முன்னினும் மிகுந்த ஊக்கத்து டன் தன் வேலையைச் சிறப்புடன் செய்தனன். அவன் தலைமையை ஏனைய கூலிப்பிள்ளைகள் களிப்பு டன் அங்கீகரித்தனர். ஏனெனில், அவன் அவர் களுக்கு இடையிடையே வேலையில் ஒருவன் காட்ட வேண்டிய உண்மையையும் கள்ளமிலா உழைப்பையும் எஜமானனிடத்தில் இருக்கவேண்டிய விசுவாசத்தை யும் அன்புடன் எடுத்துவிளக்கி அவர்களைத் தன் உடன் பிறந்த சகோதரர்களைப் போல் அன்புடன் நடத்தி வந்தான். அவன் மற்றப் பிள்ளைகளுக்கு உபதேசித்த வண்ணம் தானும் தன்வேலையை மிகஊக்கத்துடன் மேன்மையுறச் செய்தால் இரண்டு வாரங்களில் அவ னுக்கு மேல் உத்தியோகஸ்தராக விளங்கிய ஓவர்சி யர் அவன் வேலையின் மாண்பை வியந்து மகிழ்ந்து தமக்கு மேலதிகாரியாகிய ஓர் ஆங்கிலேய உத்தியோ கஸ்தரை அவனுக்குத் தினம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கூலி கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்தார். ஆங்கிலேய உத்தியோகஸ்தர் அவ்வேண்டுகோ ளுக்கு இணங்கினர். பரமசிவன் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கிற்று; அவனுக்கு அப் போதே தன் பெற்றோர்களை நெடுங்காலமாகப் பிடித்

திருந்த வறுமைப் பேய் அகன்றது என்று தோன் றிற்று.

பரமசிவன் பேருவகையுடன் மாதக் கடைசியில் தன் தந்தைக்குப் பத்து ரூபாய் மணியார்டர் செய்த துமன்றி, தன் அன்னைக்கும் மூன்று ரூபாய் தனி யாக அவள் பேருக்கும் மணியார்டர் செய்தான். அவன் அவர்கள் இருவருக்கும் தனித்தனியே அன்பு ததும்பிய, அறிவு செறிந்த, உண்மை மிளிர்ந்த, அழ கிய கடிதங்கள் தன் மணி எழுத்துக்களில் எழுதி அனுப்பினன். அவன் அவைகளில் தன் கூலி வேலையைப் பற்றி ஓர் எழுத்தும் எழுதாமல் தனக்கு வேலை கிடைத்து விட்டது என்றும் மாதம் இருபத் தைந்து ரூபாய் சம்பள மென்றும், தான் சுகமாக வாழ்கின்றேன் என்றும் மாத்திரம் எழுதி யிருந்தான். அவன் முனிசிபல் குழாயில் ஸ்நானம் செய்து விட்டு சத்திரத்தில் சாதாரண உணவு அருந்தி அச்சத்திரத் தின் தெருத் திண்ணையிலேயே படுத்து உறங்கித் தன் காலத்தைக் கழித்தபோதிலும், அவன் தன் பெற்றோர்க்கு உண்மை தவருமல் தான் ஆற்றும் கடமையை நினைந்து, மகிழ்ச்சியுடனிருந்தான்.

பரமசிவன் உத்தியோகம் செய்து வந்த தொழிற்சாலையில் ஒரு நாள் அத்தொழிற் சாலை யின் தலைவராக இருந்த ஆங்கிலேய உத்தியோகஸ் தர் அவசரமாக ஓவர்சியரைத் தேடிக் கொண்டு கூலி ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு வந்தார். அப்போது ஓவர்சியர் அங்கு இல்லை; அவர் சற்று நேரத்திற்கு முன்னர் ஏதோ வேலையாக வெளியே போய்விட்டார். ஆங்கிலேய உத்தியோ

கஸ்தர் வெகு அவசரமாகத் தொழிற் சாலையில் இருந்த ஒரு யந்திரத்தைத் திருத்தி ஒழுங்கு படுத்தி ஓடும்படி செய்வதற்கு ஓவர்சியர் மூலமாக சில கட்டளைகள் கொடுக்க விரும்பினர். அந்த யந்திரம் அப்போதே திருத்தப் படவில்லையென்றால் தொழிற்சாலையின் முழு வேலையும் நின்று விடும். ஆதலால் ஓவர்சியரின் உதவி ஆங்கிலேய உத்தியோகஸ்தருக்கு அது போழ்து அத்தியாவசியமாக இருந்தது. அவருக்குத் தமிழ் தெரியாது; வேலை ஆட்களுக்கு ஆங்கிலம் தெரியாது. அந்நிலையில் ஓவர்சியர் இல்லாமல் அவர் தவிக்கையில், பரமசிவன் தைரியத்துடன் அவர் விரும்புவது என்ன என்று பொருள் படும்படி ஆங்கில மொழியில் தெளிவாகக் கேட்டான். ஆங்கிலேய உத்தியோகஸ்தர் அச்சிறுவன் முகப்பொலிவிலிருந்தும் ஆங்கிலப்பேச்சின் திறத்திலிருந்தும் அவன் ஒரு உண்மைக்கூலிக்காரன் அல்லன் என்று தம் நுட்ப அறிவினல் அறிந்து அவனுக்கு ஆங்கிலம் நன்கு பேசத் தெரியுமா என்று அவனை வினவினர். அவன் தான் ஆங்கிலம் மெட்ரிக் வகுப்பு வரையில் வாசித்திருப்பதாகவும் ஆங்கில மொழியில் தனக்குத் தனித் திறமை இருப்பதாகவும் அவரிடம் தைரியமாகக்கூறினன். அவர் அவன் ஆங்கிலப் பேச்சைக் கண்டு பெரிதும் வியந்து அவன் பரிதாப நிலையைப் பார்த்து மனம் இரங்கி அவன் மூலமாக வேலை ஆட்களுக்குப் பழுதடைந்த யந்திரத்தின் சம்பந்தமாகக் கொடுக்கவேண்டிய கட்டளைகளையெல்லாம் பரமசிவன் மூலமாகவே ஆங்கிலத்தில் கொடுத்தார். பரமசிவன் அக்கட்டளைகளின் நுணுக்கங்களை

நன்கு அறிந்து வேலை ஆட்களுக்கு அவற்றைத் தமிழில் தெளிவுற மொழி பெயர்த்து யந்திரத்தை அப்போதே ஓடும்படி செய்துவிட்டான். ஓவர்சியர் உதவியில்லாமல் சிக்கலான வேலை மிகவும் எளிதாகப் பரமசிவன் ஆங்கில ஞானத்தால் முடிந்து விட்டமையால் ஆங்கிலேய உத்தியோகஸ்தர் அன்றைய தினமே பரமசிவனைக் கூலி வேலையிலிருந்து நீக்கி அவனை ஒரு கணக்குப்பிள்ளை வேலையில் மாதம் முப்பது ரூபாய் சம்பளத்திற்கு அமர்த்திவிட்டார்.

பரமசிவன் ஒரு கணக்குப்பிள்ளையாக நியமிக்கப் பட்டபோது அவன் அடைந்த சந்தோஷம் எத்தன்மைத்து என்று ஏட்டில் எழுதிவிளக்க முடியாது. அச் சந்தோஷத்தின் தன்மையை அவன் உள்ளந்தான் அறியும். பரமசிவன் குமஸ்தாவேலையில் மாற்றப்பட்டதும் தன் உணவிலும் இடத்திலும் உடையிலும் திருத்தமும் சிறப்பும் அடைந்தான். அவன் தனக்கென்று ஒரு அழகிய புனிதமான அறையைக் காற்றும் வெளிச்சமும் உள்ள இடத்தில் வாடகைக்கு எடுத்துக்கொண்டு புனிதமான சிறந்த உணவுச்சாலையில் இன்னமுது அருந்தி ஆடம்பரம் இல்லாத தூய்மை நிறைந்த வெள்ளை உடை உடுத்தி நல்ல தோற்றத்தையுடைய ஒரு நகரவாசியாக பிரகாசித்தான். அவன்தளராமல் தன்வேலையில் உழைத்ததாலும் உண்மையையும் பணிவையும் ஆங்கிலேயஉத்தியோகஸ்தருக்குக் காட்டினமையாலும். அவனுக்கு இயற்கையாக அமைந்திருந்த பெருங்குணத்தாலும் பெருந்தன்மையினாலும் எவ்வேலையைத் தந்தாலும் அதனை ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் செய்து

இனிது முடித்தமையாலும் அவர் அவனை ஆறுமாதத் திற்குள் வேறு ஒரு ஓவர்சியராக நியமித்துவிட்டார்.

பரமசிவன் உத்தியோக வாழ்க்கை ஆறுமாதத் திற்குள் எதிர்பாராத நிலையை அடைந்தது. அவன் தனக்கு வெகு விரைவில் மேற்பதவி வந்து விட்ட போதிலும் தன் பொறையையும் பணிவையும் அன்பையும் எல்லோரிடத்திலும் முன்னினும் அதிக மாகவே காட்டினமையால் அவன் மீது எந்த உத்தி யோகஸ்தரும் பொறாமையும் தீய எண்ணமும் கொள்ளவில்லை. ஒரே வருடத்தில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர் அவனைத் தன் உதவி உத்தியோ கஸ்தனாக (Personal Assistant) நியமித்தார். அப் போது அவனுக்கு மாதச் சம்பளம் நூற்று ஐம்பது ஆயிற்று. பரமசிவன் பழைய எளிய மக்களில் ஒரு வனாக இருந்த தோற்றம் நீங்கப் பெற்று நாகரிக நக கரவாசி இளைஞர்களில் ஒருவனாக அழகான உடையுட னும் தலைப்பாகையுடனும் காணப்பட்டான். ஆங்கி லேய உத்தியோகஸ்தர் அவன் ஆங்கில ஞானத்தை யும் அறிவின் நுட்பத்தையும் குணத்தின் மாண்பினை யும் வியந்து அவனை இன்னும் மேல் பதவிக்குக் கொண்டுபோக எண்ணி அவனுக்குக் கட்டடங்கள் அமைக்கும் ஒரு இன்ஜினியருக்கு (Engineer) வேண் டிய நுட்ப திட்பங்களை எவ்வளவு கற்பிக்கக் கூடுமோ அவ்வளவும் அவனுக்குத் தம் அன்பின் பெருக்கால் கற்பித்து வந்தார். பரமசிவன் அந்நுட்ப திட்பங் களை நன்கு அறிந்து கொண்டு கட்டடம் அமைப்பதில் ஒரு நிபுணனாகத் திகழ்ந்தான். சுருக்கிச் சொல்லு மிடத்து அவன் நுண்ணறிவையும் கைத்திறமையை

யும் இனிது பற்ற ஒரு இன்ஜினியராகவே விளங்கி னன் என்பது மிகையாகாது.

அவன் ஐந்து வருடங்களில் பெரிய பதவியைப் பெற்று ஐந்நூறு ரூபாய் மாதச் சம்பளம் வாங்கினன். அவன் மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்த ஆங் கிலேய உத்தியோகஸ்தர் அவனை இன்னும் மேல் நிலைக்குக் கொண்டுவர விரும்பி சில சர்க்கார் கட்டடங்களை அவன் மூலமாகவே கட்டுவதற்கு ஏற் பாடு செய்தார். பரமசிவனுக்கு அக்கட்டடங்களுக்கு வேண்டிய முதல் பணத்தையும் அன்பின் உருவாகிய அந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தரே அவனுக்குவட்டி இன்றிக்கொடுத்தார். பரமசிவன் அப்பணத்தைக் கொண்டு சிற்சில சர்க்கார் கட்டடங்கள் நெல்லையி லேயே கட்டுவித்து ஒரே வருடத்தில் ஐம்பது ஆயி ரம் ரூபாய்க்குமேல் சம்பாதித்து விட்டான். அவன் தன் தளரா உழைப்பினலும் ஊக்கத்தினலும் தான் கைக்கொண்ட கான்டிராக்ட் வேலையில் பெருங்கீர்த்தி பெற்று யோக்கியதையுள்ளவன் என்னும் பெருமை யும் அடைந்து லெக்ஷ்மி கருணைப்பொலிவும் திகழப் பெற்றான்.

பரமசிவன் தன் சொந்த கிராமத்திலேயே இருப் புப்பாதை போட சர்க்கார் ஏற்பாடு செய்தபோது அப்பணியையும் மேற்கூறிய ஆங்கிலேய உத்தியோ கஸ்தர் உதவியால் தானே கான்டிராக்ட் பெற்றான். அக்கிராமத்திலேயே புதிதாக சில சர்க் கார் கட்டடங்களும் தோன்றின. அக்கட்டடங் களின் வேலையையும் பரமசிவனே பார்த்தான். அம் பை நகரிலும் சில புதிய கட்டடங்கள் சர்க்கார் கட்ட

முன் வந்தனர். அவைகளையும் பரமசிவன் காண்டிராக்ட் எடுத்துக்கொண்டான். அவன் ஐந்து வருடங்களில் ஒரு பெரிய செல்வந்தனாகத் திகழ்ந்தான்.

பரமசிவன் தன் பழைய எளிய மனையைப் பற்பல நவீனங்கள் அமைந்த அழகு மிகுந்த பொன் மனையாகக் கட்டிக்கொண்டான். அவன் அருமைத் தந்தை அம்மனையிலேயே தம் வாழ்நாட்களைத் தம் வாய்மையும் பொறையும் மிகுந்த கற்புடைத் தேவியோடு காலத்தைக் கழிக்க விரும்பினர். அவர் அத்தகைய சிறந்த நிலையிலும் தம் வயல்களில் சில பணியாட்களை வைத்து வேலை வாங்கித் தம் உழவுத்தொழிலின் சிறப்பை உலகுக்குக் காட்டினர்.

பரமசிவன் மெட்ரிக் பரீட்சையில் தேர்ச்சி பெறவில்லையென்றாலும் தன் சொந்தஉழைப்பாலும் படிப்பாலும் பி. ஏ. எம். ஏ. பட்டங்களைப் பெற்றவர்கள் போல் தன் சுய முயற்சிகளால் சிறந்த கல்வி ஞானம் பெற்று காண்டிராக்ட் வேலையில் தனி ஞானம் பெற்று பெரிய செல்வந்தனானன். அவன் அம்பைநகரில் மன்னன் மாளிகை போன்ற பேரழகு வாய்ந்த ஓர் அழகிய திருமனையைத் தனக்கு அமைத்துக் கொண்டான். அவன் நண்பர்கள் மாணிக்கவாசகனும் இராமநாதனும் அவனால் பெருஞ்செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர். இராமநாதன் தன் தந்தை இறந்ததும் திரண்ட சொத்து வரப் பெற்றான். பரமசிவன் அவன் பணத்தையும் வாங்கிக் கூட்டுக் காண்டிராக்ட் வேலை செய்து அவன் நிலையையும் சிறந்த நிலையாக மிளிரச் செய்தான். மாணிக்கவாசகனும் பரமசிவனும் காண்டிராக்ட் வேலையில் கூட்

ளியானர்கன். அவனும் ஒரு பெரிய செல்வந்தன் மகனுதலால் பரமசிவனுக்கு முதல் பணம் அவ்வப்போது கொடுத்து நல்ல லாபம் அடைந்தான். மாணிக்கவாசகனும் பரமசிவன் குலத்தையே சேர்ந்தவனுக இருந்தமையால் ஒன்றே தங்கையைப் பரமசிவனுக்கே திருமணம் செய்து கொடுத்தான். அவன் தங்கை சுந்தரி என்னும் பெயரையுடைய பேரழகு வாய்ந்த இந்திராணிபோல் திகழ்ந்தாள். பரமசிவன் அவளைக் காதல் திருமணம் புரிந்து அளவிலா இன்பம் அடைந்து அறிவுள்ள ஓர் புதல்வனையும் ஓர் புதல்வியையும் பெற்று இன்புற்று வாழ்ந்தான்.

கோவிந்தசுவாமி பி. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ந்து கல்விக் களஞ்சியம் என்று அவன் உற்றூர் உறவினர்களால் புகழப் பெற்று அரசாங்கத்தில் மாதம் நூறு ரூபாய் வேலையில் அம்பைநகரிலேயே அமர்ந்தான். அவன் இல்லற மாட்சியை அன்போடு வளர்த்து அவனுக்கு இன்பமும் புகழும் அளித்தாள் பார்வதி. தன் தமையன் பரமசிவனைப்புகழாதநாளில்லை; அவள்கணவன்கோவிந்தசுவாமியும் பரமசிவனைப்போற்றுத நாளில்லை. ஏனெனில், பரமசிவன் தன் கனிவுள்ள தங்கைக்கும் கல்விச்சிறப்பு பெரிதும் பெற்ற மைத்துனனுக்கும் தன் பணத்தைக் கொண்டே பொற்பு மிகுந்த ஒரு பொன்மனை அம்பைநகரில் கட்டிக் கொடுத்தான் அவன்தன் மைத்துனனுக்குத்தலைசிறந்த கல்விஅறிவும் பட்டமும் இருந்த போதிலும், ஒரு மாதத்தில் அவன்நூறுரூபாய் சம்பளமே பெற்றுவந்ததால், அவனுக்கு அத்தொகை இல்லறவாழ்க்கைக்குப் போதா

தென்று, மாதம் ஐந்நூறு ரூபாய் தன் அன்பின் சின்னமாக இனமாகக் கொடுத்து வந்தான். அவன் தன் மைத்துனனை எம். ஏ. பட்டமும் பெறும் படி செய்து அம்பை நகரிலுள்ள கல்லூரியிலேயே அவனைப் பி. ஏ. வகுப்புப் பேராசிரியராகத் தனக் கிருந்த செல்வாக்கால் மாதம் 400 ரூபாய் சம்பளத் திற்கு நியமித்தான்.

பரமசிவன் தன் சொந்த கிராமத்திலும் தலை சிறந்த செல்வந்தன் என்ற நாமமும் அம்பை நகரிலும் தலைசிறந்த தனவான் என்ற நாமமும் பெற்றான். அவன் ஏழை மாணவர்களுக்கும் உதவியற்ற விதவை களுக்கும் பொருள் உதவி செய்து அவர்கள் வாழ்க் கையை இன்ப வாழ்க்கையாக ஒளிரச் செய்தான். அவன் பொதுமக்கள் நலத்திலும் தலை இட்டு பல வித சீர்திருத்தச் சங்கங்களிலும் அங்கத்தினனாகிப் பற்பல நலங்கள் பொது மக்கட்குச் செய்துவந்தான். இறுதியில் பரமசிவன் அம்பைநகர் தாலுக்கா போர்ட் தலைவராகும் புண்ணியமும் பெற்றான். எல்லோரும் பரமசிவன் கோடீஸ்வரன் என்னும் பொது நல வள்ளல் என்றும் கல்விக்களஞ்சியம் என்றும் கூறிப் புகழ்ந்தார்கள்.

பரமசிவன் தான் வாசித்த அம்பை நகரிலுள்ள கல்லூரியின் வருடாந்தரக் கொண்டாட்டத்தில் அக் கிராசனராகப் பழைய ஆங்கிலத் தலைமை ஆசிரிய ரால் அழைக்கப்பட்டான். அவர், பரமசிவன் வியக்கத் தக்க செல்வத்தையும் அறச்செயல்களையும் கல்விச் சிறப்பையும் பேசும் திறத்தையும் மெச்சி, அவனைத் தன்பிரிய சீடனெனவே நினைந்துசெருக்கும் மகிழ்வும்

அடைந்து அவனுக்கு அத்தகைய மதிப்பை தானே காட்டி அவன் கல்விப் பெருமையை உலகுக்கு விளக்கினர். பரமசிவன் அவ்வருடாந்தரக் கொண்டாட்டத்தில் அக்கிராசனராக வகித்தபோது மாணவர்கள் உள்ளம் உருகும்படி சொன்மாரி பொழிந்தான். அவன் ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்பொழிவு செய்வதில் மிகுந்த வல்லவன் ஆனன். அவன் தலைமை வகுத்ததின் ஞாபகார்த்தமாக அம்பை நகர் கல்லூரிக்கு அதன் அபிவிருத்தியின் பொருட்டு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தான். இன்னும் சில பெண் பாடசாலைகளுக்கும் சிறு பாடசாலைகளுக்கும் ஆயிரக்கணக்காகப் பணம் நன் கொடையாக அளித்தான். அவன் தன் சொந்த கிராமத்தில் இருந்த சங்கரய்யர் பாடசாலைக்கும் ஒரு வருடாந்தரக் கொண்டாட்டத்தில் தலைமை வகித்து சொற்பொழிவு செய்து ஐம்பது ஆயிரம் ரூபாய் அப்பாடசாலையின் அபிவிருத்திக்காகக் கொடுத்தான். மேலும், அவன் அப்பாடசாலையில் மெட்ரிக் வகுப்பு வரையிலும் உயர்தர பாடசாலையாகவும் தன் பணத்தைக் கொண்டே பின்னர் ஒளிரச் செய்தான். சங்கரய்யர் அவ்வுயர்தரப் பாடசாலைக்குப் பரமசிவன் பெயரையே சூட்டித் தம் நன்றியைக் காட்டினர்.

பரமசிவன் தன் சகோதரியின் கணவன் கோவிந்தசுவாமியுடனும் தன் மனைவியின் சகோதரன் மாணிக்கவாசகனுடனும் அளவளாவி அன்பு பாராட்டி இன்பகரமாக வாழ்ந்து வந்தான். அவன் தன் தங்கை பார்வதியின் கனிவையும் அன்பையும்

05-3 NV13;P
N52

எப்போதும் மறக்கவில்லை. அவள் மூன்று புதல்வர்களையும் இரண்டு புதல்விகளையும் பெற்று இல்லற வாழ்வில் பெருங்கிளையுடன் இனிதுவாழ்ந்தாள். அவள் மக்களுக்கு வேண்டிய பொருள்களையும் கலன்களையும் பரமசிவனே கொடுத்து வந்தான். அவன் பழைய தீய நண்பன் இராமநாதன் புதிய நற்குணம் வாய்ந்த நண்பனாக மாறி அவன் பெரிய ஆப்தநண்பனாயினன். பரமசிவன் தந்தையும் தாயும் மாத்திரம் தங்கள் கிராமத்திலுள்ள புதிதாக அமைக்கப் பட்டுள்ள பொன் மனையிலேயே காலத்தைப்பெரிதும் கழிப்பாராயினர். பரமசிவன் தன் மனைவி மக்களோடு மாதத்திற்கு இருமுறை தன் கிராமத்திலுள்ள தன் சொந்த மனைக்குச்சென்றுதன் பெற்றோர்களுடன் காலத்தை இன்பமாகக் கழித்துத் தன் அன்னையின் கனிவையும் தந்தையின் அன்பையும் அவ்வயதிலும் பெற்று வாழ்ந்தான்.

முற்றிற்று

Commercial Syndicate Press, Madras—7.

100 நகைச்சுவை கதைகள்

"ஒற்றுமை"
தியாகராயநகர் மதராஸ்

விலை ரூபாய் 1—0—0